34 ௨௨
VIII D. ௨35

ஸ்ரீலக்ஷ்மீஹயவதன பரப்பிரம்மணேநம:.

ஸ்ரீ

பிருகந்நாரதீயபுராணம்

(பூர்வபாகம்.)

இஃது,

வித்துவான்

ஸ்ரீமத். உ. வே. வேலாமூர் வகுளாபரணம்

ஸோமயாஜி - இராகவாசாரியரால்

ஸம்ஸ்கிருதத்தினின்று மொழிபெயர்ப்பித்து

களக்காட்டூர்

தூப்புல் - ஸ்ரீநிவாஸராகவாசாரியரால்

தெளிவியதமிழில் வசனரூபமாக எழுதப்பட்டு

சென்னை:

வெ. நா. ஜூபிலி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாதி ௪௯௯௪-வதான விஜய௵.

1893.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை 20.

Copyright Registered.

இதன் விலை அணா 12.

GF
Q823.38 Bri:v
c3

ஸ்ரீலக்ஷ்மீஹயவதன பரப்பிரம்மணேநம

நான்முகம்.

அகில மங்கள குணஸ்வரூபனுன சர்வேசுவரன், "மாயவன் றன்னை வணங்கவைத்த கரணமிவை" என்கிற பெரியாரருளிச் செயல்படி தன்னது சரணகமல சமாசரயணத்துக்கு உறுப்பாகத் தான் தந்தருளிய கரசரணுதி அவயவ சகிதமான சரீரத்தைக் கொண்டு அப்படி செய்யாமல் சப்தாதிவிஷயங்களிலேயே மூழ்கிக் கருமத்தால மேன்மேலும் பிறவிகளையடையும் ஜீவாத்துமாக்கள் நலவழிகண்டு நடக்கைக்கு வேதமெனனும் சாஸ்திரத்தைத்தந் தருளி அதுவும மறையாகையால அதாவது தனதுபொருளைத் தெள்ளென விளக்காது உள்ளே மறைத்துக்கொண்டிருப்பதால் வியாசாதிகளான பரமரிஷிகளுக்குள் அந்தர்யாமியாயிருந்து வேதார்த்தங்களைத் தெளிவாயறிவிக்கும ஸ்மிருதீதிஹாஸ புராணங்களை பிரவாததிப்பித்தருளினுன்.

இவற்றுள் புராணங்கள்

సర్గశ్చ ప్రతిసర్గశ్చ వంశమన్వంతరాణిచ ।
వంశానుచరితంచేతి లక్షణాంతుపంచకం ॥

சர்க்கச்ச பிரதிசர்க்கச்ச வம்சமன்வந்தராணிச
வம்சானுசரிதம்சேதி லக்ஷணாந்துபஞ்சகம.

என்றபடி சிருஷ்டிசம்ஹாரம வமிசங்கள மனுவந்தரங்கள் வமிசங்களின் சரித்திரங்கள் என்னும பஞ்சலக்ஷணங்களையுடையன வாம. இவை அப்புராணங்களின பொதுவிஷயமாயினும ஒவ்வொருபுராணத்துக்கும பிரத்தியேகமானவிஷயமுண்டு. இவ்விஷயங்களைப்பற்றி தொகுத்தும விரித்தும செய்யப்பட்டிருக்கும. மானிடர்களுக்கு நற்காரியங்களில் மனம் பற்றும்பொருட்டு சிலவிஷயங்களை விசேஷப்படுத்திச் சொல்லியுமிருக்கும். இதற்கு அர்த்தவாதமென்று பெயராகும. இவ்விஷயத்தை நன்குணராதார் அவற்றைப் பொய்யெனத் திகைப்பர். புராணமென்பது மகாசாஸ்திரமாதலால் பெரியோரிடத்துக்கேட்டறிவதே தக்கதாகும்.

நான்முகம்.

புராணங்கள் பதினெட்டும் உபபுராணங்கள் பதினெட்டுமே உள்ளன.

இவற்றுள் இது பிருகந்நாரதீயமென்னும் உபபுராணத்தின் பூர்வபாகமாகும். இப்பிருகந்நாரதீயம் முதலிற்குறித்த புராணம் பதினெட்டில் ஒன்றென்று கூறுவதுமுண்டு. இதற்கு நாரதீயமென மற்றொருபெயருளது. இப்பாகத்தில் நாரதபகவான் ஸநத்குமாரயோகிக்கு நிகிலவேதாந்த தாத்பரிய பூமியான சர்வேசுவரனிடத்துச் செய்யவேண்டிய பக்திமார்க்கத்தைச் செவ்வே யுரைப்பான்றொடங்கி பிரபஞ்சவுற்பத்தியும், அதிஅற்புதமான மார்க்கண்டேயசரிதையும், கங்காமாகாத்மியமும், தருமப்பிரவர்த்தகர்களான சகரபகீரதாதி மகாராஜாக்களுடைய சரித்திரங்களும், பகவானுடைய திரிவிக்கிரமாவதார வைபவமுமாகியவிவைகளைப் பெரும்பான்மையும் உணர்த்துகிறார்.

இது ஸம்ஸ்கிருதபாஷையிலிருப்பதால் அப்பாஷை கற்றோர்க்கேயன்றி ஏனையோர்க்குப் பயன்படாமை நோக்கி யாவரும் எளிதில் அறியும்வண்ணம் வித்துவான் ஸ்ரீமத்-உபய-வே-வேலாமூர் வகுளாபரணம் ஸோமயாஜி இராகவாசாரியரால் மொழிபெயர்ப்பித்து, தெள்ளியநடையில் வசனரூபமாக மிகவும் சுருக்கமின்றி எழுதி பிரசுரம்செய்தனன். குற்றம்நோக்காது குணம்நோக்குவது சான்றோர் இயற்கையாதலால், இதில் சொற்குற்றமுதலியவுளவேல் விஷயகௌரவத்தால் அவைகளைப் புலவர் பாராட்டாது திருத்திக்கொள்வார்களென்று நம்புகிறேன்.

மஞ்சக்குப்பம்,
விஜய௵
ஆனிமீ

இங்ஙனம்,
க. தா. ஸ்ரீநி.

சிறப்புப்பாயிரம்

திருவனந்தபுரத்து மஹாராஜா கலீஜ்

பிரதம திரவிட பண்டிதரான

ம-ள-ள-ஸ்ரீ

வ. கணபதிப்பிள்ளையவர்கள் இயற்றியது.

பொன்னுறும் புண்டரிகப் பூந்தவிசி லுறைபவனைப் புவன மல்கத்
தன்னுரு மருளதனு லளித்தபரா பரமுதல்வன சலசைகாந்தன
மின்னுரு மைமபடைகளை வித்தகனு ராயாணனமுன் வியாத னுகிக்
கொன்னுரு மறைப்பொருளைப் புராணமெனப பலவகையாற் கூறி னனே ()

புராணமிவை யீரொன்பான் ஞெலைகயன வீங்கிவற்றி னுளீணைந்து போந்த
சராசரமு மகிலபுவ னகருமுழுவுந் தனதருளாஞ் சத்தி தனனுல
விராவுமுறை யளித்தபரா பரமுதல்வன விடமபருகி வினனோக் காத்த
தராதரகோ தணடகரன றனமகிமை யுரைத்திமொற் றகைமை யோர்க்கே. ()

புண்டரிகா சனன்மகிமை யிரணடுனுக்கு மொவ்வொன்று புகலு மங்கி
விணடகம விளிகாந்த னென்றிவாத மேனமைதனை விணணி னேக்கு
கொணடனிறப பகவனது மகிமையுரைத திடுமானகு குறிகொள் வோர்கள்
அண்டாமுனி வரர்பரச வைகுண்ட பதமருவி யமாவரனறே. (௩)

மூலமே யென்றரற்று மதாவளத்தைப் புரந்திடுவான் முன்னி முன்னா
நீலமே கம்போல நின்றவருட் பரனமகிமை நிகழ்த்து நாலு
சீலமார் புராணத்து ளாரதி யமமென்னச செப்பு காதை
கோலமா வடமொழியின றின்மொழியார் தெனமொழியிற் குலவு மாறே. ()

கதியரு பம்தாக வியற்றியுல கோரகளிதது கற்று மேலாஞ்
சிததியடைந் தெம்பெருமான் றிருவடித்தா மரையுறுவான் செய்ய நெஞ்சில்
உத்திசெழு வியந்திரத்தி லங்கிதனுசெய் வித்தனனு லுலகோர் போற்று
சத்தியமா ரந்தணர்தங் குலததுதித்தோன் யசுர்வேதத தனிச்சாரா புன்னோன்.

ஆரணியென் னுன்கறமும் புரிந்துறையுங் காஞ்சிநகர்க் கணித்தான
சீரணியாம் பானதியின் றென்கூலந் திகழ்ந்தோங்கிச் செமமை சேரூப
பேரணிபுங் கலவகல சகலதல வலமலக பேர வோக்
காரணியென றுமாதருமா கிடசமுகக களக்காடாங் கவினூருள்ளான். (௬)

நாபபுலெனு நாகரிக நாலசர வரலமென நல்லோர் கூறுந்
தாப்புலெனுங் குடிபபிறந்தான றய்யதிரி ருதிரமாா துகளர் மார்பன்
சேப்புலசே ஷாத்திரியாம் வரமறையோ னருள்புதல்வன் றேசு மிக்கோன

பாபபொலிவிஶ வாமித்ர கோத்திரத்தோன் கோத்திரதோன் பணபு மிக்
கோன. (௭)

சாகரசங் கடவிகட தகடவிய லமைபகட சால சில
வேகரவங் கரவகட வேதாந்த தேசிகனும் வியன்பே ரோனை
ஆகரவங் காகுலறக் கதிபதியாப் பெற்றவனல லறிவின் மிககோா
சேகரமா மணிசிறிநி வாசரா கவனென்னுந திகழ்பே ரோனே. (௮)

திருப்பாதிரிப்புலியூர் இயற்றமிழாசிரியர்

ம - ள - ள - ஸ்ரீ

சிவசிதம்பரமுதலியார் அவர்கள் இயற்றியது

சீரோங்கு மொருபிரகந் நார தீயச்
 சிறககுமவட மொழியதனைத் தென்சொ லாலே
நீரோங்கு மறிஞரெலா மெளிதிற றோந்து
 நிலைமைகொள வசனமதா நிலவச் செய்தான்
பாரோங்கு களககாட்டூ ரெசுாவே ததகின்
 பகாகாதி மரபினிலவே தாநத வாசான்
நாரோங்கு வழியுதித்தோன சீநி வாச
 ராகவபபேர் படைத்தவின்சொ னலத்தோன் ருனே.

ம - ள - ள - ஸ்ரீ

ப ர ங் கி ப் பே ட் டை

லட்சுமணப்பிள்ளையவர்கள் இயற்றியது.

சீருறுமிக்க குடிதழீஇச் செல்வம் சிறந்து
 பல்வளங் களு நிறைந்த
பாருறுங் களக்காட்டூ ரெசுர் வேத
 பாரகா குலத்திலுற் பவித்தோன்
வாருறு மலங்கற் பசுநதுழா யமலன்
 மலாப்பத மலாமனத தடத்தோன
ஏருறுஞ் சீநி வாசரா கவனென
 றியம்புசத் துவகுணத துரவோன். (௧)

பாதுகை மிசையோ ராயிரந் தெய்வப
 பாசுரம் விளைந்து தோன்றியதும்
சாதுகை போல வரு பிரபோத
 சந்திரோ தயநனி மழுங்க
ஓதுகைக் கினிய சங்கற்ப சூரி
 யோதய முதித்தது நோக்கி
மீதுகை முகிழ்த்துப் பூசுரா தொழும்
 வேதாந்த தேசிகன்வழித் தோன்றல். (௨)

சிறப்புப்பாயிரம்

ஒன்பதிற் றிரட்டி யுப புராணத்து
ஞவண கேதனன் புகழ் விரித்து
மன்பதைக் கெல்லாந் துன்பினை யொழித்து
மருவுமீ ளாநெறி யருளும்
இனபமார் பிரகந் நார தீயத்தை
யின்றமிழ் வசனமா வெளிதில்
அன்பினி னளிததா னளித்தவற் கொருகைம்
மாறு நாமியற்று மாறெவனே.

திருப்பாதிரிப்புலியூர் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமத் உபய - வே - மேட்டுப்பாளையம்

நடாதூர் - ஸ்ரீநிவாஸ வரதாசாரியர் இயற்றியது.

தூபபுலென றெவரும் புகழ்தரு வளமார
தொலபதி யுதிதது வைணவத்தைக்
காப்புறு வேலியாய தேசிகாதங் கருதரு
மரபி லுற்பவித தோன
மாயபுகழ்ச் சீநிவாச ராகவ நனமகிமை
சோ பிரக நாரதியம
தூபபொலி தமிழில வசநமா யெவரும்
சுகமுறச சொறறனன் மாதோ.

ம - ள - ள - ஸ்ரீ தஞ்சைமாநகரம்

கி. சுப்பராயலுநாயடு அவர்கள் இயற்றியது

ஆரியத் தவிர்பிரக நாரதீய மாம்புராண
வோரியல மணியளித்தான் உறுதமிழால்—பாரதறகு
சீநிவாச ராகவப்போ சோதூபபுல் களக்காட்டூ
ஆசிவர் தேசிகனு ருன்

கூடலூர் ரேஞ்சு
பள்ளிக்கூடங்களின் சப் அஸிஸ்டண்டு இன்ஸ்பெக்டராகிய
ம - ள - ள - ஸ்ரீ

பு. தெய்வசிகாமணிமுதலியாரவர்கள் இயற்றியது.

விண்ணவரு மண்ணவரு மேவும வியாசமுனி
பணணோ வடமொழியிற பனனியநூல—எணணுறும்
பிருகநார தியம் பலரும படித்துப
பரகதி நணணப பரிகது. (க)

பத்திநெறி முத்திநெறி பாலிக்கும் பாகமதாய்
கத்திய ரூபமாய்க் கண்டெனவே—தித்திக்கும்
செந்தமிழாற் செபபினன் சீநிவாச ராகவபபேர்
அந்தமிகு நூலதனை யாய்ந்து (உ)

பாராசரஸ்மிருதியை மாதவிய வியாக்கியானத்துடன்
தமிழில் மொழிபெயர்த்த
ஸ்ரீமத் - உ - வே - களக்காட்டூர்—கருணு
வரதாச்சாரியார் இயற்றியது.

பொன்னோடை யாம்பன்முனம் போயருள்செய் செம்மற்
பொற்சரிதம விரிகுநா ரதீயமெனும் புராணம்
என்னோக ளுமமெளிதி லுணர்ந்திடுவான றமிழி
லெழிலமையக் கத்தியமா யிசைதகிட்டா னியங்கப்
பின்னோடு முன்னறியா மதங்களல மந்து
பெயர்ந்திடவந் தருள்தேசி கன்மரபில் வந்தோன்
தென்னோடு விளங்குகளக் காட்டூரின் மேய
சீநிவா சாரகவனெ னுந்தெள்ளி யோனே.

சிதம்பரம ராசாளியமடம
ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிகளவர்கள் மாணுக்கர்களில் ஒருவராகிய
ம - ா - ா - ஸ்ரீ
க, வ. திருவேங்கடநாயடவர்கள் இயற்றியது.

பொற்றூது பொதிந்த நற்றளக் கமல்
மலாமேன மங்கை வதிவுறூஉந திருமறு
நிறத்தோன் சீரதி லிலவுமீ ரிரணடெனு
மாபுரா ணஙகளுண மன்னிய நார
தீய மென்னும் போயசீாப புராணஞ்
சொற்றெருடு மினிமை சொரிந்திடத தென்மொழி
தன்னிற் கத்திய மாகத் தந்தனன்
புன்மதக் களிறு புலங்கெடந் தொளிக்க
விந்நிலத் தவமா யெழுந்தருள் தேசிகச்
சிஙக மரபிற றிகழ்ந்திட வுதித்தோன்
முகமதற் குடைநத முழுமதி யீதெனக்
குறிபொறித தாங்குக் கோவிலுக கிட்டிடு
மஞ்சனந் தீட்டி மஞ்சினி னிலவென
விடுத்திடு கல்லார் விளங்கிடு மேனிலை
மாட நிரையொளிர் பாடமை களக்காட்
டூர்வயின் வந்த சீரபெறந் தகையோன்
சேஷாத் திரியெனுந் தெய்விக மறையோன்
முற்பெருந் தவத்தா லிபபுவி யுதித்தோன்
தூப்பு லென்னுவ கோப்பமை குடிமையில்
விழுமிய ஞானி விளங்கிடுஞ் சீநி
வாசரா கவனெனும் வண்புல வோனே.

ஸ்ரீ பிருகந்நாரதீயபுராணத்தின்

(பூர்வபாகம்.)

அட்டவணை.

அத்.	விஷயம்.	பக்கம்.
	மங்களசுலோகங்கள்	௧
௧	புராணவரலாறு	௩
௨	ஸ்ரீமந்நாராயணமகாத்மியகீர்த்தனம்	௮
,,	சுவாமியின் தசாவதாரஸ்துதி	௧0
௩	பகவத்பக்தியும் பிரபஞ்சவுற்பத்தியும்	௧௨
,,	பாரதவருஷச்சிறப்பு	௧௫
௪	பக்தியின் சிறப்பும் பாகவத லக்ஷணமும்	௧௭
,,	மிருகண்டுமகரிஷியின் தவப்பெருமை	௨0
௫	மார்க்கண்டேய சரிதையும் பாகவத லக்ஷணமும்	௨௪
௬	கங்கையின் பிரபாவம்	௨௭
௭	பாகு உபாக்கியானம்	௩௨
௮	சகர சரித்திரமும் சாகரர் கடல்தோண்டியதும்	௩௭
௯	சௌதாச உபாக்கியானம்	௪௫
௧0	தேவாசுரயுத்தமும் அதிதிதேவியின் தவமும்	௫௪
,,	அதிதிதேவியின் தவப்பெருமை	௫௬
௧௧	பகவானுடைய திரிவிக்கிரமாவதார சரித்திரம்	௫௮
,,	அதிதிதேவிக்கு பகவான் பிரத்தியக்ஷமாய் வரமீதல், பகவத் ஸ்தோத்திரம்	௫௯
௧[illegible]	வாமனஸ்தோத்திரம்	௬௩
,,	பூதான மகிமை	௬௬
,,	பத்திரமதி சரித்திரம்	௬௭
,,	பிரமருதியின் பிரார்த்தனை	௭0
௧௨	தானப் பிரகரணம்	௭௧
௧௩	புண்ணியபலன்கள், தருமராஜ பகீரதசம்வாதம்	௭௨
௧௪	பாபபலன்கள், ஷை (தொடர்ச்சி)	௮௪
௧௫	பகீரதர் கங்கையைக்கொண்டுவருதல்	௯௫
,,	பிருகுமகரிஷி ஆசிரமவர்ணனை	,,
,,	பகீரத தவச்சிறப்பு	௯௮
,,	பகவத் தோத்திரம்	,,
,,	சிவஸ்தோத்திரம்	௧00
,,	தபசித்தி	௧0௧

அட்டவணை முற்றிற்று.



ஸ்ரீரஸ்து.

ஸ்ரீலக்ஷ்மீஹயவதனபரப்பிரமமணேநம:

ஸ்ரீபிருகந்நாரதீயபுராணம்.

மங்களசுலோகங்கள்.

నారాయణం నమస్కృత్య నరం చైవ నరోత్తమమ్ ।
దేవీం సరస్వతీం చైవ తతో జయముదీరయేత్ ॥

நாராயணமநமஸ்கிருதயநரஞ்சைவநரோததமம
தேவீமசரஸவதீமசைவததோஜயமுதீரயேத

(இ-ள்) சேதனவாக்கஙகளுக்குப் பயனும பதியுமான ஸ்ரீமந்நாராயணனையும், அந்த நாராயணன அருமறைப்பொருளை வெளியிட்டருளும்படி அவரிடத்தில் வினவி, அவரருளிய சாஸ்திரஙகளால சேதனாகளுககு உய்வுபாயம் உண்டாககுவித்தவிஞல சிறபபுறற நரனையும் அந்த பொருள்களுக கெலலாம் மூலமாய் அறுதியாயுள்ள வேதத்தையும தொழுது, பின்பு பிறவியைவெலலும வகையை பேசககடவது

వందే బృందావనాసీన మిందిరానందమందిరమ్
ఉపేంద్రం సాంద్రకారుణ్యం పరానందం విభుం పరమ్

வந்தேபிருந்தாவனுசீனமிந்திராநந்தமந்திரம
உபேந்திரம்சாந்தரகாருணயமபராநந்தமவிபுமபரம.

(இ-ள்.) மறைமுடிகளாலும் உணரலறிய ஆனந்தமுதலிய கலலி யாணகுணஙகள் உளளவனும, தனது கருணையினல தேவலோகததிலும மனுஷியலோகத்திலும பல அவதாரஙகள செய்பவனும், அதிலும மடமை

யாராத கோபிகைகளுக்கும் எளியவனாய் பிருந்தாவனத்தில் வீற்றிருப்பவனும், பெரியபிராட்டியார் இறைப்பொழுதும் அகலகில்லாது இனிதுவீற்றிருக்கும் திருமார்புடையவனும், அதனால் பிறாக்கரிய மேன்பாடுபெற்றவனுமான பரமபுருஷனை வணங்குகிறேன்.

బ్రహ్మవిష్ణు మహేశాద్యా యస్యాంశా లోకసాధకాః
తమాదిదేవం చిద్రూపం విశుద్ధం పరమం భజే

பிரம்மவிஷ்ணுமகேசாத்தியாயஸ்யாம்சாலோகசாதகா:
தமாதிதேவம்சித்ரூபம்விசுத்தம்பரமம்பஜே

(இ - ள்) உலகங்களை அமைக்கவும் அளிக்கவும் அழிக்கவும் பிரமன் விஷ்ணு ருத்திரன்முதலிய வடிவங்களாய இருக்கும் ஞானரூபியாய், குற்றமற்றவனாய், நற்குணங்களால் சிறப்புற்ற ஆதிமூலப்பொருளான எம்பெருமானை ஸேவிக்கிறேன்.

இங்கு பிரமனும் ருத்திரனும் எம்பெருமானுக்கு அம்சபூதர்களென்றும், விஷ்ணுமூர்த்தியென்பது எம்பெருமானுடைய சுவரூபமென்றும் உணரற்பாற்று. எங்ஙனேயெனில், ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் —

బ్రహ్మత్వే సృజతే లోకాన్ స్థితౌ పాలయతే ప్రజాః ।
రుద్రరూపాయ కల్పాంతే నమస్తుభ్యం త్రిమూర్తయే ॥

பிரம்மத்வேஸ்ருஜதேலோகாந்ஸ்திதௌபாலயதேபிரஜா:
ருத்ரரூபாயகல்பாந்தேநமஸ்துப்யம்திரிமூர்த்தயே

பிரமன்வடிவமாகி உலகங்களைப் படைப்பவனும், சுயரூபத்தில் பிரஜைகளை ரக்ஷிப்பவனும், அவைகளை அழிக்கவேண்டுங்காலத்தில் ருத்திரவடிவமாகுவனுமாய், மும்மூர்த்தியாய் விளங்கும் உனக்கு தெண்டனிடுகிறேன் என்று தெளிவாய் கூறியபடியாலும், அந்த விஷ்ணுபுராண கர்த்தாவான ஸ்ரீபராசரபகவானுக்கு உண்மைப்பொருள் தவறாதுவிளங்கும்படி புலஸ்தியர் வசிஷ்டர் என்னும் மகான்களால் அனுக்கிரகம்செய்யப்பட்டிருக்கிறபடியாலும், அந்தபுராணத்தை புராணரத்னமென்றும் அந்த பராசரபகவானை மகாபிராமாணிகர்களில் தலைவராகவும், பெரியோர்களால் பலவிடங்களில் கூறப்பட்டிருப்பதாலும், அதற்கிணங்கவே பொருள்கொள்ளுவது தகுதியாகும்.

இந்த மூன்றுசுலோகத்தாலும் தாம் சொல்லப்புகுந்த நூல் இடையூறின்றி முடிவுபெறவேண்டி தமது இஷ்டதெய்வத்தையும் மூன்னோர்களையும் துதித்தாரென்பது.

ஸ்ரீலக்ஷ்மீஹயவதனபரப்பிரம்மணே நம:

ஸ்ரீ பிருகந்நாரதீய புராணம்.

க-வது அத்தியாயம்.

புராண வரலாறு.

மகாத்துமாக்களும் பிரமவாதிகளுமான சௌனகாதிரிஷிகள் நைமிசமென்னும் மகாரண்ணியத்தில், மோக்ஷத்தை உத்தேசித்தவர்களாய், தவம்புரிந்துவந்தனர். ஐம்புலன்களை அவித்து ஆகாரத்தை ஒழித்து சத்தியத்தையே முக்கியவிரதமாகக்கொண்டவர்களும், சாதுக்களும், பொறாமையில்லாதவர்களும், சகல தருமங்களையும் அறிந்தவர்களும், உலகானுக்கிரகத்தில் இச்சையுடையவர்களும், அகங்காரமமகாரங்களைவிட்டவர்களும், ஸ்ரீமந்நாராயணனிடத்திலேயே சித்தத்தைச்செலுத்தினவர்களும், காமக்குரோத முதலிய குற்றமற்றவர்களும், பொறுமைமுதலிய குணமுற்றவர்களும், கிருஷ்ணாஜினதாரிகளும், ஜடாபூஷிதர்களும், பிரமசாரிகளும், சகலசாஸ்திர சம்பன்னர்களுமான அந்த சௌனகாதிகள், அந்நைமிசவனத்தில், யக்கியநாதனை ஸ்ரீஹரியை சிலர் யக்கியத்தினாலும், ஞானரூபியானபரப்பிரமத்தை சிலர் ஞானயோகத்தாலும், சிலர் பரமபக்திமார்க்கத்தாலும் ஸ்ரீமந்நாராயணனை ஆராதித்துவந்தார்கள். இம்மகரிஷிகள் ஓர்காலவிசேஷத்தில், அறம் பொருளின்பம் வீடென்னும் நான்கின் சொரூபத்தையும், அவற்றைப்பயக்கத்தக்க உபாயத்தையும் அறியவேண்டி ஓர் சபைகூடினார்கள் அந்த சபையில் இருபத்தாறாயிரம் *ஊர்த்துவரேதசுக்களான மகரிஷிகளும் அவர்களுடைய சிஷ்ய பிரசிஷ்யர்களும் சேர்ந்திருந்தார்கள். மாசற்ற மனத்தினரும் திவ்விய தேஜஸ்விகளும் விருப்பு வெறுப்பற்றவர்களுமான அம்மகரிஷிகள், உலக சம்ரக்ஷணார்த்தமாக ஒருங்குசேர்ந்து, தங்களுள் சிரேஷ்டராகிய சௌனகரிஷியைநோக்கி ஓ சுவாமி! இப்புவியின்கணுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களியாவை? புண்ணியதீர்த்தங்களியாவை? பாவிகளான ஜனங்கள் நிரதிசயானந்தமாகிய மோக்ஷத்தை எவ்விதம்பெறுவர்? ஸ்ரீமந்நாராயணனிடத்து பரமபக்தி எவ்விதம் உண்டாகும்? காயிகவாசிகமானஸிகமென்னும் முக்கருமங்களின் பலன் எவற்றால் சித்திக்கும்? என்று இத்தன்மையான பிரச்னம் செய்தார்கள். அப்போது மகா புத்திமானான அச்சௌனகரிஷி எழுந்து நின்று, மிகவும் வணக்கத்துடன் அஞ்சலியஸ்தராய், ஓ மகரிஷி

---

* ஊர்த்துவரேதசுக்கள்=ரேதசை கீழ்விடாதவர்கள்

களே! சித்தாசிரமமென்னும் ஓர் புண்ணியக்ஷேத்திரமுள்ளது அவ்வாசிரமத்தில், பௌராணிகர்களுள் சிரேஷ்டரான சூதர், அனேகவித யக்ஞங்களால் ஜகத்ரூபியான ஜநார்த்தனனை ஆராதித்துவருகிறார் இப்போது நீங்கள் பிரசனம் செய்தவிஷயங்களுக்கு அவரே உத்தரம் அளிக்கத்தக்கவர். ஏனெனில், அவர் பராசர புத்திரனான வியாசபகவானுடைய சிஷியர், சாந்தர், புராணார்த்தங்களை ஆராய்ந்தறிந்தவர் அவ்வியாசபகவான் ஸ்ரீமந்நாராயணனும்சம். ஸ்ரீமந்நாராயணன் யுகங்கடோறும் வேதவியாசரூபமாய் அவதரித்து மானிடர் உஜ்ஜீவிக்கும்பொருட்டு வேதத்தைப்பிரித்து நன்குவிளக்குகின்றனர். லோமஹர்ஷண புத்திரனான சூதபௌராணிகர் அவ்வியாசமகரிஷியினிடத்தில் சகல சாஸ்திரங்களையும் ஓதியுணர்ந்தவர் ஆகையால் உலகத்தில் சகல புராணங்களிலும் சிறந்த ஞானமுள்ளவர், அச்சூதமகரிஷியையன்றி வேறொருவர் உளரோ? உலகத்தில் எவன் புராணார்த்தங்களை அறிந்தவனோ அவன்தான், எல்லாமறிந்தவன், அவனே மிகுந்த புத்திமான், சாஸ்த்ரஞன், மோக்ஷதருமங்களை அறிந்தவன், கருமம் பக்தி இவைகளின் பேதங்களை நன்குணர்ந்தவன். ஏனெனில், அப்புராணங்களுள் வேதங்கள், வேதாங்கங்கள், இவை முதலியவைகளின் சாரங்களை அவ்வியாசபகவான் உலகஹிதார்த்தமாக நன்குவிளக்கியிருக்கின்றனர் சூதபௌராணிகர் எல்லா தத்துவங்களையும் ஐயந்திரிபற உணர்ந்தவர், ஞானசாகரம், ஆகையால் இவ்விஷயங்களை அவரையே நாம் கேட்போம், என்று சௌனகரிஷிசொல்ல, அம்மகரிஷிகள்சந்தோஷமுற்றவராய் வித்துவசிரேஷ்டரான சௌனகரை ஆலிங்கனம்செய்து, நன்று! நன்று! என்று துதித்தார்கள் பின்னர், அம்மகரிஷிகள், அதிக பரிசுத்தமுடையதும், மிருககூட்டங்களாலும் முனிகணங்களாலும் நிறையப்பெற்றதும், பார்க்கப்பார்க்க மனோரம்மியமான பழங்கள் புஷ்பங்களோடுகூடின பல விருக்ஷங்களாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டதும், திவ்விய தீர்த்தங்களால் நிறையப்பெற்றதும், அதிதிபூஜைக்கு ஓர் வைப்பென்றும் சொல்லும்படியான அந்த சித்தாசிரமத்தையடைந்தனர் அங்கு அனந்தனும் தன்னை ஒருவராலும் ஜயிக்கப்படாதவனும் ஆதிதேவனுமான ஸ்ரீமந்நாராயணனை *அக்கினிஷ்டோமத்தினால் ஆராதித்துக்கொண்டிருந்த சூதரை சேவித்து அவரால் அனுகுணமாக ஆராதிக்கப்பட்ட அதிதேஜஸ்விகளான அம்மகரிஷிகள், அம்மகத்தின் அவபிருதத்தை எதிர்பார்த்துக்கொண்டு அவ்யாகசாலையிலேயே வீற்றிருந்தார்கள் பின்னர், †அவபிருதஸ்நானம்செய்து சுகமாய் உட்கார்ந்தவுடன், சூதரைநோக்கி நைமிசாரண்ணியவாசிகளான ரிஷிகள் பிரச்னம் செய்தார்கள்

வாரும் எங்கள் சூதபௌராணிகரே, அதிதிப்பிரியரான தேவரீர் அதிதிகளாய்வந்த எங்களுக்கு தத்துவஞானங்களை உபகரித்து கிரமமாக ஆதரிக்கவேண்டும். அமரர்கள் சந்திரகலையாகிற அமிருதத்தைப்புசித்து ஜீவிக்கின்

---

* அக்கினிஷ்டோமம்—ஓர்வியாகம்.

† அவபிருதஸ்நானம்—யாகத்தின்முடிவில்செய்யும்ஸ்நானம்.

ரூர்கள். அடியோங்கள் தேவரீருடைய முகாரவிந்தத்தினின்று பெருகும் ஞானாமிருதத்தைப் புசித்து ஜீவிக்கக்கடவோம். சராசரங்களான சமஸ்தமும் எவரிடத்திலிருந்து உண்டாயிற்றோ, எவரை ஆதாரமாகப்பெற்றிருக்கிறதோ, எவரால் குடிகொள்ளப்பட்டிருக்கிறதோ, எவரிடத்தில் லயிக்கப்போகிறதோ அத்தகைய மகாவிஷ்ணுவை எவ்விதம் ஆராதிக்கவேண்டும்? அவர் எதனால் பிரசன்னமாகுவர்? வர்ணாசிரமங்களின் ஆசாரங்கள் எத்தன்மையானவை? அதிதிபூஜை எத்தன்மையது? கருமங்கள் எவ்விதம் செய்யப்பட்டால் ஸபலமாகும்? மானிடர் மோக்ஷமடையும் மார்க்கமெது? பக்தியால் அடையக்கூடியதெது? அப்பக்தி எவ்விதமானது? இவையெல்லாவற்றையும் சந்தேகமற அடியோங்களுக்குப் பிரசாதித்தல்வேண்டும். எவனுக்குத்தான் தேவரீருடைய வாக்காகிற அமிருதத்தைப் பானம்செய்ய ஆவல்கொள்ளாது? என்றார்கள். அவைகளைச் செவியுற்ற சூதபௌராணிகர் பின்வருமாறு உரைப்பாராயினார்: வாருங்கள் மகரிஷிகளே, நீங்கள் எவற்றைக் கேட்கவேண்டுமென்று ஆவல்கொள்ளுகின்றீர்களோ அவற்றைச்சொல்லுகிறேன். அதைச் சாவதானமாகக் கேளுங்கள். நீங்கள் இப்போது பிரச்னம் செய்தவிஷயங்களையே பூர்வம் ஸநத்குமாரருக்கு நாரதபகவான் உரைத்திருக்கின்றனர். அதிக பெரியதும், வேதார்த்தங்களால் நிரம்பப்பெற்றதும், பாவங்களெல்லாவற்றையும் நாசஞ்செய்யவல்லதும், கிரகசாரபீடையை நிவர்த்திப்பதும், கெட்ட கனவுகளை நசிக்கச்செய்வதும், பக்தி முக்திகளைக் கொடுப்பதும், செல்வமீவதும், ஸ்ரீபகவச்சரித்திரங்களையுடையதும், சமஸ்தமங்களங்களைக் கொடுப்பதும், சதுர்வித புருஷார்த்தங்களுக்குக் காரணமும், மகாபலனுள்ளதும், சிலாக்கியமான புண்ணியபலத்தைக் கொடுப்பதுமான இந்த நாரதீயபுராணத்தைச் சாவதானமாகக் கேளுங்கள். இந்த தீர்க்கமான புராணத்தை மகா பாவஞ்செய்தவனாயினும், சமஸ்த பாதகங்களைச்செய்தவனாயினும், ஒருதரம் கேட்பானானால் எவ்விதபாவங்களும் நிவர்த்தியாய் மோக்ஷமடைவன். இப்புராணத்தின் ஒரு அத்தியாயத்தைப் படித்தால் வாஜபேயயாகத்தின் பலத்தை அடைகின்றான். இரண்டத்தியாயமோ, அக்கினிஷ்டோமபலத்தைக்கொடுக்கும். ஓ மகரிஷிகளே! ஜ்யேஷ்டமாதத்தில், பௌர்ணமிதிதியில், மூலநக்ஷத்திரத்தில் பரிசுத்தனாக யமுனாநதியில் தீர்த்தமாடி, மதுரையில் உபவாசமிருந்து, யதாவிதியாக ஸ்ரீமகாவிஷ்ணுவை ஆராதித்தாலடையும் பெரும்பேறாகிய பதினாயிரம் ஜன்மங்களில் செய்யப்பட்ட பாவங்கள் எல்லாம் நாசமடைந்து தன் முன்பின் கோடிதலைமுறையுடன் சேர்ந்து பிரமலோகத்தையடைந்து அவ்விடத்திலிருந்து மோக்ஷமடையும் பலத்தை இப்புராணத்தின் பத்து அத்தியாயம் பக்தியுடன் கேட்பவன் அடைகின்றான். ஸ்ரீமந்நாராயணனை ஸ்துதிப்பதால் சந்தேகமில்லாமல் இப்புராணசிரவணம் செய்கிறவன் அந்த பலத்தை அடைகிறான். ஆதலின், மனிதன்கேட்கவேண்டியதில் உத்தமமானதாயும், பரிசுத்தகரங்களில் மேன்மைபொருந்தியதாயும், கெட்ட கனவுகளை நிவர்த்திப்பதுமான இப்புராணத்தைப் பிரயத்தன பூர்வகமாகக் கேட்கக்கடவன். இதில் மனிதன் ஒரு சுலோகத்தையா

வது அரைசுலோகத்தையாவது சிரத்தையுடன் கேட்பானானால், அவன் உபபாதகங்கள் பலசெய்திருப்பினும் அவைகளினின்று விடுபடுகிறவனாகிறான். இப்புராணம் பரமரகசியமானதால் விஷ்ணுவாலயத்திலும், புண்ணியக்ஷேத்திரத்திலும், புண்ணிய சபையிலும், ஸாதுக்களுக்கே சொல்லவேண்டும். பிரமத்துவேஷிகளுக்கும், டம்பமான ஆசாரம் அதாவது கள்ளாசாரம் உடையவர்களுக்கும், பிறர் தன்னைப் புகழவேண்டிக் கருமானுஷ்டானம் செய்பவர்களுக்கும் சொல்லலாகாது. மேலும் மோக்ஷப்பிரதமான இதைக் காமமுதலிய அறுகுற்றங்கடிந்தோரும், விஷ்ணுபக்தியில் ஆவலுள்ள மனத்தினரும், ஆசாரியபக்தியுள்ளவருமான ஸாதுக்களுக்கே சொல்லவேண்டும். சமஸ்த தேவதாஸ்வரூபியான ஸ்ரீமந்நாராயணன் பக்தவற்சலனானமையால் பக்தியினாலன்றி வேறுவிதத்தால் சந்தோஷமடைவதில்லை. எவனாலாகிலும் அந்தப்பகவானுடைய திருநாமமானது தற்செயலாய்ச் சொல்லப்பட்டாலும் துதிக்கப்பட்டாலும் அவன் பாபரகிதனாகி பரமபதத்தையடைகின்றான்.

ஓ ஸாதுக்களே! சம்சாரமாகிய பயங்கரமான காட்டுக்குப் பெருந்தீயான இந்த மதுசூதனனானவர் நினைக்கிறவர்களுடைய எல்லாபாவங்களையும் உருவற நாசஞ்செய்கிறார். அந்தப் பகவானுக்குப் பிரீதியையுண்டுபண்ணுவதான புண்ணியபலனுள்ள இப்புராணமானது அவசியம் சிரவணம் செய்யப்படவேண்டிய புராணங்களுள் சிறந்தது. இதனைக் கேட்கினும் படிக்கினும் சர்வபாவங்களும் நாசமாகும். எவனுக்கு இப்புராணத்தைக் கேட்கப் பக்திபூர்வகமான சிரத்தையுண்டாகிறதோ, அவனே மகாசுகிருதியும் சமஸ்த சாஸ்திரார்த்தங்களை தெரிந்தவனுமாகிறான். அவனால் செய்யப்படும் தவம் உடனே பலத்தைக் கொடுக்கும். அப்படி இல்லாவிடின், இதைக் கேட்க எண்ணமுண்டாகாது. லோகஹிதார்த்திகளான சாதுக்களத்தாம் ஸத்கதாசிரவணஞ்செய்ய விரும்புவர். பாபபுத்திகளான துஷ்டர்களுக்கோ, நிந்தனை கலகமுதலிய துர்வியாபாரசிந்தனையே உண்டாகும். புராணங்களை அர்த்தவாதங்களென்று (அதாவது கேவலம் ஸ்துதிபரங்களென்று), எவர்கள் சொல்லுகிறார்களோ அவர்கள் செய்த புண்ணியமனைத்தும் தாங்கள் சொல்வதுபோலவே பயனற்ற அர்த்தவாதங்களாய்விடும். சமஸ்த கருமபாசங்களையும் அறுவிழச்செய்யும் புராணங்களை அர்த்தவாதங்களென்றுசொல்லும் நராதமன் ரௌரவமுதலிய நரகத்தையடைந்து, அந்நரகாக்கினியால் பிரமகல்பபரியந்தம் தகிக்கப்படுகின்றனன். ஆச்சரியம்! புண்ணியபாபமென்கிற இரண்டிற்கும் ஹேதுக்களான நான்கு அக்ஷரங்களையுடைய இரண்டு பதங்களைச் சொல்லுகிறேன் அதாவது புண்ணியஹேது நாராயணவென்பதும், பாபஹேது அர்த்தவாதமென்பதுமாம். ஆதலால், சகலதருமங்களையும் சொல்லும் புராணங்களை அர்த்தவாதங்களென்று சொல்லுகிறவர்கள் நரகமெய்துபவரென்பது திண்ணமன்றோ? எவன் அதிக பிரயாசையின்றி புண்ணியங்களை சம்பாதிக்க விரும்புகின்றானோ அவன் புண்ணியாம்சமான புராணசிரவணம் செய்யவேண்டும். அதினாலேயே அவன் விரும்பியவற்றை அடைகிறானென்பதில் சம்சயமில்லை. எவனுக்கு ஜன்மாந்தரபாபங்கள் நசிக்கின்றன

வோ அவனுக்கே புராணங்கேட்பதில் உண்மையான புத்தி உண்டாகும். சர்வபாபஹரங்களான புராணங்களிருந்தும் பாபமெனும் பாசத்தால் கட்டுண்டவனது புத்தியானது வீண்கதைகளில் பிரவர்த்திக்கின்றது. ஸாதுசங்கம், தேவதாராதனம், ஸத்கதாசிரவணம், பிறனுக்கு ஹிதோபதேசம், இவைகளில் ஆவல்கொண்டமனிதன் தேகவியோககாலத்து விஷ்ணு தேஜோமயனாகி அமானவனது பரமபதத்தை அடைகின்றான். ஆகையால், பிரமரிஷியாகிய நாரதபகவானால் உபதேசிக்கப்பெற்று அக்காரணத்தைக்கொண்டே நாரதீயமென்று பெயர்வாய்ந்த உத்தமமான இப்புராணத்தைக் கேளுங்கள். இதைக்கேட்டால், ஜன்மம் ஜராமுதலியன நாசமுற்று நித்தோஷியாய் மோக்ஷமடைகின்றான். சர்வசிரேஷ்டனும், வரதனும், அநாதியும், தமது தேஜஸ்ஸினால் சமஸ்தலோகங்களையும் பிரகாசிக்கச்செய்கிறவனும், சமஸ்தத்தையும் தனது சங்கற்பமாத்திரத்தில்செய்கிறவனும், ஆதிதேவனுமான ஸ்ரீமந்நாராயணனை ஸ்மரித்தால் முக்தி கைகூடாதுவிடுமோ? எவன் பிரமரூபியாகி சிருஷ்டித்தும், விஷ்ணுவாய் ரக்ஷித்தும், ருத்திரரூபியாகி சம்ஹரித்தும் வருகின்றானோ, எவனுக்கு ஜாதிமுதலிய விகாரங்களில்லையோ, எவன் சிரேஷ்டர்களான தேவர்களுக்கும் சிரேஷ்டனோ, எவன் பிரகிருதியைக் கடந்தவனோ, எவன் வேதாந்தங்களால் அறியத்தக்கவனோ, எவன் ஸ்வயம்பிரகாசனோ, அவனைத்தான் சமஸ்தபுராணங்களும் வேதங்களும் புகழுகின்றன. 'அந்த பகவானை பஜிப்பவர்களுக்கே, மோக்ஷம் மோக்ஷத்தை இச்சிப்பவர்க்கு, அந்த ஸ்ரீமந்நாராயணனே, உபாசனதேவதை' என்னும் இந்த புருஷார்த்த சாதகமாகிய பரமரகசியத்தை அறிபவர்கள், பரமபதநாதனை அடைகின்றனர். இப்புராணத்தை தார்மீகனும், சிரத்தையுடையவனும், மோக்ஷாபிலாஷையுடையவனும், ஜிதேந்திரியனும், துராசையற்றவனும், சுபுத்தியுள்ளவனுமான ஸாதுவுக்கே சொல்லவேண்டும். புண்ணியபூமியிலும், சபையிலும், தேவாலயத்திலும், புண்ணியதீர்த்தத்திலும், சந்தியாகாலந்தவிர மற்றையகாலத்திலும் சொல்லவேண்டும். இந்த உத்தமமான புராணத்தை அசுத்தமானதேசத்தில் படிப்பவர்களும், டம்பத்தினால் அதாவது பக்தியின்றி கேட்பவர்களும், இந்த ஸத்கதாபாராயணகாலத்தில் வீண்வார்த்தை பேசுகின்றவர்களும், சந்திர நக்ஷத்திரங்களுள்ளவரையில் நரகவேதனைக் குட்படுகிறார்கள். ஆகையால் படிப்போரும், கேட்போரும், சாவதானசித்தர்களாய் இருத்தல்வேண்டும். அவ்விதமில்லாவிடின், இதில் விவரிக்கும் விஷயங்களில் சற்றேனும் தெரியாது. இந்த பகவத்சரிதையாகிற அமிருதத்தை மனிதன் சாவதானசித்தனாக பானம்செய்தல்வேண்டும். மனோசஞ்சலமுள்ளவனுக்கு ருசிதெரியுமோ? அலைபோன்ற மனமுடையோனுக்கு சுகமுண்டோ? ஆகையால், ஏகாக்கிரசித்தனாய் பகவத்ஸ்மரணை செய்யவேண்டும். மனக்கலக்கமுற்றவனுக்கு விஷயசுகமே உணரல் அரிதெனின் யோகம் எவ்வாறு கைகூடும்? ஆகையால், துக்கஹேதுவான காமத்தை வேர்களைந்து சாவதானசித்தனாய் பகவானை ஸ்மரிக்கவேண்டும். எவ்வித உபாயத்தாலாகிலும் பாவியும் சாவதானமாய் சிந்தித்தா

னாகில், அவனுக்கு பகவான் பிரசன்னனாகின்றாரென்பதில் சந்தேகமில்லை. விபுவாயும், பரனாயும், தேவாதிதேவனாயுமிருக்கிற ஸ்ரீமந்நாராயணனிடம் பரமபக்தி எவனுக்கிருக்கிறதோ, அவனுடைய ஜன்மமே ஸபலமானது. மோக்ஷமும் அவனதே சதுர்வித புருஷார்த்தங்களும் அத்தகைய விஷ்ணு பக்தர்களுக்கே உண்டாகின்றன.

உ-வது அத்தியாயம்.

நாரதபகவானால் செய்யப்பட்ட

ஸ்ரீமந்நாராயணமகாத்மிய கீர்த்தனம்.

சௌனகாதிரிஷிகள் சூதபௌராணிகரைநோக்கி, வாரும் எங்கள் சூதபௌராணிகரே! தேவரிஷியான நாரதர் எந்தக்ஷேத்திரத்தில் ஸநத்குமாரரை சந்தித்தார்? அந்த இரண்டு பிரமமவாதிகளும் எப்படி, ஒன்றுகூடினார்கள். எவ்விதமாய் ஸநத்குமாரருக்கு நாரதபகவான் சகலதருமங்களையும் உபதேசித்தார் அப்படி நாரதபகவான் உபதேசித்த விஷயங்களை தயாநிதியான தேவரீர் அடியேங்களுக்கு திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் அப்போது சூதபௌராணிகர் பின்வருமாறு விளம்பலாயினர். சிருஷ்டிகர்த்தாவான பிரமதேவனுக்கு அகங்காரமமகாரமில்லாதவர்களும், ஊர்த்துவரேதசுக்களும், விஷ்ணுபக்தர்களும், நல்ல சுபாவமுள்ளவர்களும், பிரமத்தியானத்தையே முக்கிய தருமமாகக்கொள்பவர்களும், ஆயிரம் சூரியர் சேரஉதித்தாற்போல காந்தியையுடையவர்களும், சத்தியப் பிரதிஞ்ஞையுள்ளவர்களும், முமுக்ஷுக்களுமான ஸநகர், ஸநந்தனர், ஸநத்குமாரர், ஸநாதனர் என்னும் நான்கு குமாரர்களுண்டு. ஓர்காலத்தில் பிரமசபையைப்பார்க்க விரும்பினவர்களாய், மகமேருவின் சிகரத்தையடைந்து, அச்சிகரத்தில் ஸ்ரீவிஷ்ணுபகவானுடைய திருவடிகளிலிருந்து உற்பத்தியானதும், மகா புண்ணியபலனைக்கொடுப்பதும், சீதையென்னும் பெயர்கொண்டதுமான கங்காநதியைக்கண்டு, மகா தேஜஸ்விகளான அம்மகரிஷிகள் ஸ்நானஞ்செய்யத்தொடங்கினர். ஓ சௌனகாதிரிஷிகளே அந்தசமயத்தில்,

பரமபாகவதசிகாமணியான நாரதபகவான் ஹரே நாராயணா, அச்சுதா, அநந்தா, வாசுதேவா, ஜநார்த்தனா, யக்ஞநாதா, யக்ஞபுருஷா, கிருஷ்ணா, விஷ்ணோ, உம்மை தெண்டனசமர்ப்பிக்கின்றேன். அரவிந்தலோசனா, லக்ஷ்மீகாந்தா, கருடோத்பாதகா, கேசவா, பாற்கடற்றுயிலும்பரமனே, உம்மை பிரணாமம் செய்கின்றேன். தேவதேவனே, கிருஷ்ணா, எங்கும் வியாபித்திருக்கின்றமையால் விஷ்ணுவென்னும் திருநாமமுடையவனே, நரசிம்மமூர்த்தி, முராரே, பிரத்யும்னன் சங்கருஷணன் வாசுதேவன் அநிருத்தனென்னும் திருவம்சங்களையுடையவனே, உற்பத்தியும் நாசமுமில்லாதவனே, விஸ்வரூபியான

வனே, அடியேனை எவ்வித ஆபத்தினின்றும் நீக்கியருளவேண்டுமென்று இவ்விதமாய் பகவந்நாமசங்கீர்த்தனம் செய்துகொண்டு, சமஸ்தலோகங்களையும் பரிசுத்தம்செய்யாநின்ற கங்காநதியையடைந்தார். அப்போது ஸநகாதிகள், எழுந்தருளிய நாரதபகவானை யதாவிதியாக பூஜித்தார்கள். நாரதமகரிஷியும் ஸநகாதிகளை வந்தித்தார். பின்னர் எல்லோரும் நித்தியானுஷ்டானங்களை முடித்து ரமணீயமான கங்கைக்கரையில் உட்கார்ந்தார்கள். அப்போது நாரதபகவான் மீண்டும் பகவந்நாமசங்கீர்த்தனம் செய்யவாரம்பித்தார். ஸ்ரீபரந்தாமனையே முக்கியகதியாகக்கருதிய முனிசிரேஷ்டரான நாரதரைப் பார்த்து சபைநடுவிலிருந்த ஸனத்குமாரர் பிரசனஞ்செய்கிறார். மிகுந்த ஞானவானும், முனிவர்களின் மகிமைக்கு காரணமாயுமிருக்கிற நாரதரே! தேவரீர் ஸ்ரீஹரியினுடைய சரணாரவிந்தபக்திபாவனையால் சகலமுமறிந்தவர். தேவரீரையன்றி வேறொருவருமில்லை. எவனால் ஸதாவரஜங்கமரூபமான இந்த உலகம் படைக்கப்பட்டதோ, இங்கு பிரவகிக்கின்ற கங்கையானது எவனுடைய சரணாரவிந்தத்தினின்றுமுண்டானதோ அந்த ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை எவ்விதமறியலாம்? முக்கருமங்களும் எவ்விதம் ஸபலமாகும்? மனிதர்களுக்கு ஞானம் எவ்விதம் உண்டாகும்? தவத்தின் இலக்ஷணம் என்ன? அதிதிபூஜை எவ்விதமானது? எதனால் ஸ்ரீமகாவிஷ்ணு பிரசன்னனாகிறார்? இவைமுதலான விஷ்ணு பக்திக்குக்காரணமான இரகசிய தருமங்களை அடியேன் தேவரீர் அநுக்கிரகத்துக்குப் பாத்திரனாயிருந்தால் உண்மையாய் சாதித்தருளவேண்டுமென்கிற ஸனத்குமாரரைப் பார்த்து நாரதபகவான் சொல்லலுற்றார். சர்வசிரேஷ்டனாய் விளங்காநின்றும், பரமான பிரமருத்திராதிகளுக்கும் பரமானவனும், சிலாக்கியமான சுவர்க்காதிலோகங்களுக்கும் அதிக சிலாக்கியமான ஸ்ரீவைகுண்ட நிவாசியாயும், கல்யாணகுண பரிபூரணனும், ஹேயகுணரகிதனுமாயும், ஜடரூபியாயும், தருமாதரும விதயாவிதயரூபியாயும், சுயம்பிரகாசனுமாயும், மாயாரகிதனுமாயும், ஆத்மாவென்றுபெயர்கொண்டவனும், விசித்திரசக்தியுள்ளவனும், யோகஸ்வரூபியும், யாவனிடத்திலும் அந்தர்யாமியும், யோகத்தியானத்தாலடையக்கூடியவனும், ஞானரூபியும், ஞானமார்க்கத்தாலறியத்தகுந்தவனும், எல்லாஞானங்களுக்கும் காரணனும், ஞானநாதனும், தேஜோரூபியும், தியானரூபியும், தியானத்தினாலறியக்கூடியவனுமான பரப்பிரமத்தை நமஸ்கரிக்கின்றேன். நினைத்தமாத்திரத்திலேயே பாவத்தைப் போக்குகிறவனும், சுத்தஸ்வரூபியும், சுத்தஞானவானுமான ஸ்ரீஹரிக்கு தெண்டனசமர்ப்பிக்கின்றேன். சூரியன், சந்திரன், அக்கினி, பிரமன் முதலான தேவர்களும், சித்தர், யக்ஷர், அசுரர், நாகர் முதலான தேவயோனி விசேஷங்களும் எவனை தத்தம் காரியநிமித்தம் சரணாகதியடைகின்றனரோ அந்த அனாதியானவனும், உற்பத்திரகிதனும், ஸ்துதிக்கு நாதனுமான ஸ்ரீமந்நாராயணனை எப்போதும் வணங்குகிறேன். யாதொரு பகவானுடைய திவ்விய திருநாமங்களை கீர்த்தனம்பண்ணுபவர்களான பரிசுத்தசுபாவமுடைய முனிசிரேஷ்டர்களும் ஸ்வப்பனத்திலும் எவனைக்காணக்கூடாதவர்களாயிருக்கின

கரு தனது பதத்தை தநதருள்கின்ற்றோ அந்த புருஷோத்தமனுக்கு வந்தனம் புரிகின்றேன். இவ்விதமாய் சர்வேசுவரனை ஸ்ரீயஃபதியை ஸ்தோத்திரம செய்யும் நாரதமகரிஷியைபபார்தது ஆனநதக்கண்ணீரததுமபும நேததிரங களையுடையவாகளாய் ஸநகாதிமகரிஷிகள கைகூபபிககொணடு வந்தனமபுரிந் தாரகள். இந்த நாரதமகரிஷியால சொலலபபட்ட ஸதோத்திரததை பிரா தககாலையிலெழுந்து எவன படிககிறறோ அவன சமஸ்தபாபரகிதனுகி ஸ்ரீ வைகுணடத்தை அடைகிறறெனனறு, அந்நாரதமகரிஷிககு வரமளிதது அந்த ஸநகாதிகள் ஸ்ரீ ஹரியின திருநாமஙகளைச சொலலிக்கொணடே நாரதமக ரிஷியை சிலாகித்தார்கள்.

௩-வது அத்தியாயம்

பகவத்வைபவமும் பிரபஞ்சவுற்பத்தியும்.

ஸ்ரீமந்நாராயணன குறைவிலலாதவா, அநதமிலலாதவா, எஙகும் நிறைந்தவா, ஸ்வயமபிரகாசா, பாபரகிதா சராசராதமகமான இவ்வுலகம அவராலே வியாபிககபபட்டிருககிறது ஸ்வயமபிரகாசியும ஜகதரூபியுமான இநத ஸ்ரீமகாவிஷ்ணுவானவா ஸதவரஜஸதமஸ்ஸுககள எனனும மூககுண ஙகளால சிருஷ்டிககாக வலபபுறததில பிரமதேகததையும, ரக்ஷணததுககாக இடபபுறததில விஷ்ணுதேகததையும, சமஹாரததுககாக இடையில ருததிர தேகததையும ஆகிய மூனறு உருவஙகளை ஆதி சிருஷ்டியிலகொணடார அபபடிபபட்ட ஆதிதேவனைததான சிலா ருததிரனெனறும, சிலா விஷ்ணு வென்றும், வேறுசிலா பிரமனென்றும, மற்றும்சிலா பரபிரமமமெனறும சொல்லுகிறாகள. அந்த ஸ்ரீமந்நாராயணனுககு உலகசிருஷ்டியை யனு சரித்து சிலாக்கியமான ஓா சக்தி இருககிறது அந்தசக்தி பாவரூபமாயும் அபாவரூபமாயுமிருந்து எலலோராலும வித்தையெனறும், அவித்தையென் றும் சொலலபபடுகிறது. விஷ்ணுவின் சரீரமாகிய உலகத்தை விஷ்ணு வுக்குப புறம்பாக தானென்றும தனதெனறும எண்ணும்போது, சகலதுக் கஙகளையும் விளைக்கும அவிததைக்கு உளளாகிறான். எபபோது அறிபவன் அறியபபடவேணடியது என்கிற உபாதிகள் நசிதது ஆத்துமஸ்வரூப அபேத* புத்தி உணடாகிறதோ அபபோது விதயையென்னும் பெயராகிறது • பேத புததியானது பநததையும், அபேதபுத்தியானது சமுசாரக்ஷயத்தையும் கொடுக்கிறது. இவ்விதமாய் ஸ்ரீமகாவிஷ்ணுவை விட்டுப்பிரியாத இவ்வுல கம் யாவும் அவருடைய சக்தியினுலேயே உண்டாயிருக்கிறது ஆகாயம

---

* பிரகிருதிஜீவன இவைகளை சரீரமாகவுடைய ஈசுவரன் ஒருவனே என் கிறபுத்தி அபேதபுததி

அபின்னமாயிருந்தாலும் உபாதிகளால் எப்படி வேருகததெரிகிறதோ அப்படியே அவித்தையயாகிற காரணத்தால் பிரம்மமும் வேறேயாகத தெரிகிறது. ஓ மகரிஷிகளே ! ஸ்ரீ ஹரி எபபடி சாவவியாபியோ அபபடியே அவருடைய சகதியும எங்கும வியாபிததிருககிறது. அகனியின சகதி அககினியின் ஆதாரததை வியாபிததிருபபதுபோல அந்த பிரமமமும அதின ஆதாரமான ஜகத்தை வியாபிததிருக்கிறது. அநத சகதியை சிலா லக்ஷமியெனறும, சிலா உமையெனறும, சிலா சாஸவதியெனறும, பலா கிரிஜை, அமபிகை, துாககை, பததிரகாளி, சணடிகை, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, ஐநதரி, பிராம்ஹி, விதயாவிதயை, மாயை, பிரகிருதி, பராசததியென்றும பலவிதமாய்க கூறுகினறனா உலகசிருஷடி முதலானவறறிறகுக காரணமாயிருககிற இநத பராசததியானது வியகதமாயும அவியக்தமாயும உலகததை வியாபிததிருககிறது இநத ஒரே சகதியானது பிரகிருதி, புருஷன, காலமெனறு மூனறுவிதமாய் சிருஷடி, ஸ்திதி, லயஙகளுககுக காரணமாயிருககிறது. இநத சமஸ்தமும எநத பிரமதேவனிடததிலிருநது உணடாயிறதோ அவனிலும மேலானவனை ஸ்ரீமநநாராயணனதான நிததியனுன தேவனெனறு சொலலபபடுகிறுன ஜகததை ரக்ஷிககுந தேவனே பரமபுருஷன ஆதலால நானமுகனுலகமிருகவுள்ள புணணிய லோகஙகளினுஞ் சிறந்து அழிவறறிருபபது அததேவன வீறறிருககுமி-ம அதுவே பெறறகுரியது காலருததிரரூபஙகொளளும அநத பரமபுருஷனே அழிவறறவன, ஹேயகுண ரகிதன, விமலன, எஙகும நிறைநதுளளவன, யோகிகளுக்கு விஷயமானவன, பராதபரன, ஞானனநத ஸவரூபி, ஞானககணணுலேயே பாககததகுநதவன, எவவித உபாதியுமறறவன. பரிசுததனும பரமனுமான இநத ஸ்ரீ ஹரி, மூடாகளால அகஙகாரமுடையவனெனறும, தேகியெனறும, சொலலபபடுகிறுன. ஆசசரியம ! அவாகளுடைய ஞானம விபரீதமானது நிஷகளஙக தேஜோரூபமாய், வாககுககும மனததிறகும எட்டாததாய், பரபபிரமமமாயிருககிற ஸ்ரீமநநாராயணனே ஸததவாதிகுணபேதஙகளால மூனறு மூாததிகளாய் சிருஷடிமுதலான மூனறுககும காரணமாயிருககிறுன எவனுடைய ஒரு கோடியின கோடியில ஒரு அமசததவரெனறு பிரமாதிதேவாகள சொலலபபடுகிறாகளோ அநத பரமபுருஷனுலேயே ஸதாவர ஜஙகமரூபமான இந்த உலகம வியாபிககபபட்டிருககிறது ஸ்ரீமநநாராயணனுடைய திருநாபிககமலததினினறு அவதரிதத சிருஷடிகாத்தாவாகிய பிரமாவும ஆனநதரூபியான பரமாதமாதான, வேறன்று. நிஷகளஙகராயும் ஜகதரூபியாயுமிருக்கிற ஸ்ரீபரமாதமாவானவா சாவசாக்ஷியாய் பினனரூபியாயும், அந்தாயாமியாய் அபினனரூபியாயும விளங்காநிற்கிறுா பகவத சகதியாகிற மகாமாயையானது உலகோற்பததிக்குக காரணமாயிருபபதால ஞானிகளால பிரகிருதியெனறு சொலலபபடுகிறது. ஆதிசிருஷடியில ஸ்ரீமந்நாராயணன உலகஙகளை சிருஷ்டிக்குமபொருட்டு மூலப் பிரகிருதியென்றும, புருஷனென்றும, காலமென்றும் மூன்றுவிதமாக ஆனுா. அபபடிப்பட்ட பரபபிரம்மமாயும, தேஜோ ரூபியாயுமிராநின்ற ஸ்ரீ மகா

விஷ்ணுவையும், அவருடைய அதிபரிசுத்தகரமான பரமபதத்தையும், நிர்மல சித்தமுடைய யோகீசுவரர்கள்தாம் அறிவார்கள். எந்த ஹேயகுணரகித மான தேஜஸ்ஸை பரப்பிரம்மமென்று சொல்லுகிறோமோ அதுதான ஞான மார்க்கத்தாலறியப்படவேண்டிய ஸ்ரீமகாவிஷ்ணுவாயிருக்கிறது அந்த பரப் பிரம்மமான ஸ்ரீ மகாவிஷ்ணு தூய்மையுடையவர், குறைவற்றவர், முடிவில் லாதவர், காலரூபமானவர், குணஸ்வரூபமானவர், குணாதாரமானவர், ஜகத் துக்கு ஆதிகாரணமானவர், எங்கும் பரந்தவர்

மூலப்பிரகிருதி பிரம்மத்திலிருந்து விகிருதியடைந்தபின்னர் மஹத்தத் துவமும், அந்த மஹத்தத்துவத்திலிருந்து அஹங்காரமும், அஹங்காரத்திலிருந்து சூக்ஷ்மேந்திரியமாகிய தன்மாத்திரைகளும், தன்மாத்திரைகளிலிருந்து பஞ்சபூதங்களும் உலக சிருஷ்டியினிமித்தம் உண்டாயின ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், பூமியாகிய பூதங்களைந்தும் முறையே பிந்தியதற்கு முந்தியது காரணமாகின்றன

பின்னர் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவன் மரம் முதலான ஸ்தாவ ரங்களைப்படைத்தார் இத்தன்மையான அபுத்திபூர்வகமான சிருஷ்டியா னது தாமச சிருஷ்டியென்று சொல்லப்படுகிறது இந்த சிருஷ்டி சாதக மாகமாட்டாதென்று பசு பக்ஷி மிருகம் முதலான திரியக்கு ஜந்துக்களைப் படைத்தார். அதுவும் அசாதகமென்று தேவர்களை சிருஷ்டித்தார். பின்பு மனிதர்களை உண்டாக்கினார் பின்னர் சிருஷ்டிகாரணர்களான தக்ஷர் முத லான பிரஜாபதிகளை மனதினால் சிருஷ்டிசெய்தார் அவர்களால் தாம தேவாசுரமனிதர்களால் நிறைந்த இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்டது. பூ லோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், ஜனோலோகம், தபோ லோகம், சத்தியலோகம் என்று மேலுலகம் ஏழும், அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், ரசாதலம், பாதாலம் என்றும் கீழுலகம் ஏழும் ஆகிய பதினான்கையும், அவைகளுக்கு அதிபதிகளையும் சிருஷ்டித்தார் அந்தந்த உலகங்களில் வசிப்பவர்களுக்கு குலாசலங்களையும், நதிகளையும், அந்தந்த லோகத்துக்குத்தக்க விருத்திகளையும் உண்டாக்கினார். பூலோகத்தின் மத்திய பாகத்தில் சகல தேவர்களுக்கும் வாசஸ்தானமான மேருபர்வதத்தையும், பூமியின் கடையில் லோகாலோகமலையையும், அதினிடையில் ஏழுகடல்களை யும், அக்கடற்களினடுவில் ஏழுதீவுகளையும், தீவுகடோறும் குலவரைகளையும், ஆங்காங்கு பற்பல நதிகளையும், தேவர்களைப்போன்ற மனிதர்களையும் சிருஷ் டித்தார். ஜம்பூதத்வீபம், பிலக்ஷத்வீபம், சால்மலித்வீபம், குசத்வீபம், கிரௌஞ்சத்வீபம், சாகத்வீபம், புஷ்கரத்வீபம் என்று பெயர்வாய்ந்த ஏழுத்வீபங்களும் தேவர்களுக்கு வாசயோக்கியமான ஸ்தானங்கள். இந்த ஏழுத்வீபங்களும் உப்பு, கருப்பஞ்சாறு, கள், நெய், தயிர், பால், சுத்தநீர் என்கிற ஏழுசமுத்திரங்களால் சூழப்பெற்றிருக்கின்றன. லோகாலோக மென்கிற சக்கரவாளபர்வதத்திற்கு உள்ளிட்டிருக்கிற இந்த த்வீபங்களும், சமுத்திரங்களும், முந்தியதற்குப் பிந்தியது ஒவ்வொன்றும் இருமடங்கு விசால முள்ளது.

பாரதவருஷச்சிறப்பு.

க்ஷீரசாகரத்துக்கு உத்தரதிசையிலும் ஹிமாசலத்துக்கு தக்ஷிணதிசையிலுமுள்ள பூமியானது, சமஸ்தகருமங்களுக்கும் பலத்தைக்கொடுக்கும்படியான பாரதவருஷமென்று கூறப்படுகிறது. ஓ பிரமபுத்திரரான ஸநத்குமாரபகவானே! இங்கு மூவகையான கருமங்களைச்செய்பவர்கள் முறையே அக்கருமபயன்களை போகபூமிகளையடைந்து அனுபவிக்கின்றனர். பாரதவருஷத்திலசெய்த சுபாசுபகருமங்களை யாவும், நசிக்கிறவரையில் பிராணிகளால் மற்றையவிடங்களில் அனுபவிக்கப்படுகின்றன. நாசமற்ற மகாபுண்ணியங்களை சம்பாதிக்கிறதினிமித்தம், தேவர்கள் இப்போதும் இப்பாரதபூமியில் ஜனிக்க விரும்புகின்றனர் "நாம் என்றைக்கு பரதபூமியில் ஜனிக்கப்போகிறோம், அங்கு எப்போது மகா புண்ணியத்தை சம்பாதித்து தானங்களாலும் யாகங்களாலும் க்ஷீரசாகரசயனனான எம்பெருமானுக்கு திருவாராதனம்செய்து, நித்தியசூரிகளாலும் முக்த புருஷர்களாலும் அனுபவிக்கப்படாநின்ற அதியானந்தமயமான பரமபதத்தை எப்போது அடைவோம், பக்தி கருமம் ஞானம் ஆகிய மூன்றுமார்க்கத்தாலாகிலும் ஏனைய மார்க்கத்தாலாகிலும் சச்சிதானந்தரூபியான ஜகதீசனை எப்போது அடையப்போகிறோம், கதிரொளிக்கு எப்படி ஒப்பில்லையோ அப்படியே இப்பாரதகண்டத்தில் பிறந்து ஸ்ரீவிஷ்ணுவினுடைய பாதாம்புஜசேவைசெய்கிறவனுக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை. ஸ்ரீஹரிபஜனை செய்பவர்களும், ஸ்ரீஹரிபக்தரான பாகவதர்களுக்குப் பிரியமானவர்களும், மகான்களுக்குப் பணிவிடைசெய்பவர்களும், நம்மால் வணங்கத்தகுந்தவர்கள். ஏனெனில் அவர்களே உத்தமர்கள். எவர்கள் ஹரிபூஜையை விரும்பியமனத்தினரோ, எவர்கள் ஹரிபூஜைபுரிந்துகொண்டு வருபவர்களோ, எவர்கள் எம்பெருமானை நாராயண கிருஷ்ண வாசுதேவேத்தியாதி திவ்விய திருநாமங்களால் கீர்த்தனம் செய்கின்றார்களோ, அஹிம்சை முதலான தருமபரர்களும் சாந்தியுள்ளவர்களும் உத்தமர்களுமான அவர்கள் நம்மால் பூஜிக்கத்தகுந்தவர்கள். எவன் சிவ, நீலகண்ட, சங்கர என்று சொல்லிக்கொண்டு சர்வபூதங்களுக்கும் ஹிதனாயிருக்கின்றானோ, எவன் ஆசாரியபக்தியுள்ளவனாயும், சிவத்தியானம் செய்பவனாயும், வருணாசிரமாசாரவிதிகளை வழுவாது செய்பவனாயும், பொறுமையுடையவனாயும், பொறாமையில்லாதவனாயும் இருக்கின்றானோ அந்த உத்தமனும் நமஸ்கரிக்கத் தகுந்தவனாகின்றான். சமஸ்த ஸத்கருமங்களிலும் விருப்பமுடையவனாயும், பிராமணர்களுக்கு ஹிதத்தையே கோருபவனாயும், வேதாத்தியயனபரனாயும், பரமாத்மாவினிடம் பேதபுத்தியில்லாதவனும்,* உத்தமனுமான பிராமணன் நம்மால் எப்போதும் பூஜிக்கத்தகுந்தவன். கோக்களிடத்தில் விசுவாசமுள்ளவனும், பிரமசாரியாயிருப்பவனும், பரநிந்தைசெய்யாதவனும், அன்னியனுடைய திரவியங்களை அபகரிக்காதவனும், செய்ந்நன்றிகுன்றாதவனும், உண்மைபகர்வோனும், தூய்மையுடையோனும், பரோபகாரசிந்தை மேற்கொண்டானும், தடாகங்கள், நந்தவனங்கள், தோப்புகள் முதலான தருமங்களைச் செய்கிறவனும்,

வேதார்த்தங்களை அறிந்தவனும், புராணசிரவணம் செய்கிறவனும், ஸத்சகவாசம் செய்பவனும், இன்னும் இத்தன்மையான தருமங்களை இப்பாரதவருஷத்தில் செய்பவர்களும் எப்போதும் எவராலும் பூஜிக்கத்தகுந்தவராகின்றனர். இந்த தருமங்களில் ஒன்றையாவது செய்து அதனால் தன்னுடைய ஆத்துமாவை புனிதப்படுத்தாதவர் மூடர்களும் பாவிகளுமாகின்றனர் அவர்களினும் அஞ்ஞானிகள் யாரிருக்கின்றனர்? மகா புண்ணியகரமான இப்பரதபூமியில் ஜன்மத்தை யடைந்து புண்ணியம்செய்யாதவர்கள் நல்ல அமிருதகலசத்தை யடைந்தும் அதை புசியாது விஷகலசத்தைத் தேடுவார்போலும். வேதப்பிரதிபாதிதமான தருமங்களால் எவன் தனதாத்துமாவை புனிதஞ்செய்து கொள்ளவில்லையோ அவனே பாவிகளுக்குள் பெரும்பாவியான ஆத்துமஹத்திபாவம் செய்தவனாகிறான் புண்ணியம் சம்பாதித்துக்கொள்ளவேண்டிய பூமியாகிய இப்பாரதபூமியையடைந்தும், எந்த மனிதன் தருமத்தைச்செய்கிறானில்லையோ அவனே எப்போதும் நரகவேதனையை அனுபவிப்பவன். அவனிலும் ஹீனபுத்தியுடையவன் வேறில்லை. நன்மை தின்மையாகிய எக்கருமஞ்செய்யினும் அக்கருமபலனைத்தரும் இப்பாரதகண்டத்தில் இருந்து பாவங்களைச் செய்பவன் க்ஷீரத்துக்காக பிரயாசைப்படும்போது காமதேனுவை விட்டு எருக்கஞ்செடியைத்தேடுவான்போலும்" என்று இவ்விதமாக, ஓ ஸநத்குமாரரிஷியே, தங்களுடைய போகங்களின் முடிவினால் பயந்த பிரமன் முதலிய தேவர்கள் இப்பாரதவருஷத்தை சிலாகிக்கின்றனர்.

வாருமையா மகாபாகவதரான ஸநத்குமாரரே! சகல கருமங்களுக்கும் பலத்தைக் கொடுப்பதான இந்த பாரதவருஷமானது தேவர்களுக்கும் கிடைப்பதற்கருமையான மகா புண்ணியபூமி இப்புண்ணியபூமியில் எவன் ஸத்கருமங்களைச் செய்கிறானோ அவனுக்குச் சமானமானவன் மூவுலகங்களிலுமில்லை. எவன் தனது கருமத்தின்முடிவை விரும்புகின்றானோ அவன் நரரூபத்தையுடைய ஹரியென்றே எண்ணத்தக்கவன். பரலோகத்தை யடையவேண்டுமென்கிற எண்ணங்கொண்ட ஒவ்வொருவனும் சோம்பலின்றி புண்ணியங்களைச்செய்து அக்கருமபலன்களை ஸ்ரீமந்நாராயணனுக்கு சமர்ப்பித்துவிடுவானேல், பலாபேக்ஷயில்லாமல்செய்த அக்கருமங்களின் பலன் ஒருபோதும் குறையாது. ஆசையில்லாதவனென்றால் பலாபேக்ஷயுடன் செய்யாதவனே. தான்செய்யும் ஒவ்வொரு கருமத்தையும் 'என்கருமத்தினால் ஸ்ரீமந்நாராயணன் பிரீதனாகவேண்டும்' என்று பகவதர்ப்பணம் செய்யவேண்டும் பிரமலோக பரியந்தமான சமஸ்த உலகங்களும் புனர்ஜன்மத்தைத் தரத்தக்கவைகள் ஆகையால் அவைகளில் பற்றற்று நிஷ்காமனாயிருந்தால் பரமபதத்தையடைகிறான் சமுசாரபந்தத்தை விடவேண்டுமென்கிற எண்ணங்கொண்டவன் வேதப்பிரதிபாதிதமானதாயும், தன்னாசிரமத்துக்குரியதாயுமுள்ள கருமங்களை ஈசுவரமுகோல்லாசமாகச்செய்தால் பரமபதமெய்துகிறான் பலத்தை உத்தேசித்தாகிலும் உத்தேசியாமலாகிலும் சாஸ்திரவிதிப்படி கருமங்களைப் புரியவேண்டும் தனக்குரிய *வருணாசிரமாசாரங்களை விட்டவன்

* இதனை மன்வாதிஸ்மிருதிகள் செவ்வே உணர்த்தற்பாலன.

பதிதனாகிறான் என்று பெரியோர்களால் கூறப்படுகிறது. எந்த பிராமணன் நல்ல ஆசாரசீலனாயிருக்கின்றானோ அவனே நல்ல பிரமதேஜஸ்ஸுடையவனாயிருக்கிறான். அவனிடத்திலேயே பகவான் சந்துஷ்டனாயிருக்கிறார். அவனே இகபரலோகங்களில் சுகத்தையடைகிறான். தருமம், தவம், ஞானம் ஆகிய மூன்றும் ஸ்ரீமந்நாராயணனையேபற்றியவை. அவரிலும இவற்றிற்கு விஷயமானது வேறொன்றுமில்லை. பிரமன்முதல அணுபரியந்தமான ஸ்தாவர ஜங்கமங்கள் யாவும வாசுதேவனாலேயே வியாபிக்கப்பட்டிருக்கிறது. அவரிலலாதது யாதொன்றுமில்லை. திரிமூர்த்திகளும் அவரே. தேவாசுரர் சித்தர் யக்ஷர்கள் எல்லாம அவரே. அவரைவிட வேறாகவொன்றுமில்லை. அந்த சர்வசிரேஷ்டரும், அணுரூபியாயும் மகத்ரூபியாயும் விளங்குகின்றவரும், சமஸ்தவியாபியாயுமிருக்கிற சர்வேசுவரனை மோக்ஷாபிலாஷையுள்ளவன நமஸ்கரிக்கக்கடவன்

ச-வது அத்தியாயம்.

பக்தியின்சிறப்பும் பாகவதலக்ஷணமும்.

சகலதருமங்களையும் சிரத்தையுடனே செய்தால்தான் கோரிய பலனைக்கொடுக்கும். எல்லாக்காரியங்களும சிரத்தையால் சாதித்துக்கொள்ளத் தக்கனவே. சிரத்தையினாலேயே பகவான திருப்தியடைகின்றார். பக்தியும் கருமமும் சிரத்தையுடனேதான் செய்யவேண்டும். (ஓ பிராமணோத்தமர்களே) சிரத்தையின்றி செய்யுங்காரியங்கள் நிஷ்பலமாகும் எம்மாதிரியாக சகல பிராணிகளுடைய வியாபாரத்துக்கும் உலகம ஆதாரமோ அம்மாதிரியாகவே எந்த காரியங்களின் பலனகளுக்கும பக்திதான் முக்கியகாரணம். சமஸ்த லோகங்களுடைய ஜீவனத்திற்கு ஜலம் எப்படி முக்கியாதாரமாயிருக்கிறதோ அப்படியே சமஸ்த பலன்களுக்கும் பக்திதான காரணம். பூமியை ஆதாரமாகவைத்துக்கொண்டு எல்லாப்பிராணிகளும் ஜீவித்துக்கொண்டுவருவதுபோலவே, பக்தியை ஆதாரமாக வைத்துக்கொண்டு சமஸ்த தருமங்களையும் சாதித்துக்கொள்ளவேண்டும். சிரத்தையுள்ளவனுக்கே அறம்பொருளின்பம் வீடாகிய நான்கு புருஷார்த்தங்களும் சித்திக்கின்றன. தானங்கள், தவங்கள், பூர்ண தக்ஷிணைகளுடன்கூடிய யாகங்கள் இவைகள் எல்லாம் பக்தியின்றிச் செய்யப்பட்டால் ஸ்ரீமந்நாராயணன் திருப்தியடைகிறானில்லை. கோடிகோடிகணக்கான மேருமலைப்பிரமாணமுள்ள சுவர்ணங்களை பக்தியில்லாமல் தானம் செய்யினும் அது வியர்த்தமேயன்றி பயனைத்தரத்தக்கதன்று. பக்தியில்லாமல் மிகுந்த கடினமான தவம்புரிந்தாலும் அது கேவலம் தேகத்தை சோஷிக்குமேயன்றி இச்சித்தபலனைத் தரமாட்டாது. அதுபோலவே பக்தியில்லாமல் செய்யப்பட்ட யாகமும் சாம்பரிற்செய்த ஆகுதிக்கொப்

பாகும். சிரத்தாபக்திகளுடன் கிஞ்சித்தேனும் ஒரு கருமம் செய்யினும் அது சாசுவதமான சுகத்தைக் கொடுக்கும். வேதவிதிப்படி அசுவமேதயாகம் ஆயிரங்கணக்காகச்செய்யினும் பக்தியில்லையாயின் பயனுடைத்தன்று. ஸ்ரீ ஹரி பக்தியாகிற ஸௌபாக்கியமான காமதேனு பலனைக்கொடுக்கக் காத்துக்கொண்டிருந்தும், ஞானமில்லாத மூடர்கள் அதை அடுத்து மோக்ஷமாகிற பாலைக் குடிக்காமல் சமுசாரமாகிற விஷத்தைப் புசிக்கிறார்கள். அஸாரமான இந்த சமுசாரத்தில் ஹரிபக்தியும், பாகவதசங்கமும் பொறுமையுமாகிய மூன்றும் ஸாரமுள்ளவை. ஓ பிரமபுத்திரரான ஸநத்குமாரரே! பிறர்சுகமுதலியவற்றை சகியாமையாகிற பொறாமையுடையவர்கள்செய்யும் பக்தி, தானமுதலிய கருமம் பயனற்றவையென்றறியற்பாலன. ஏனெனில், அவர்களுக்கு ஸ்ரீ ஹரி, அதிக தூரத்திலிருக்கிறார். (என்றால் பொறாமையுடையவர்களுக்கு பகவான் அனுகூலம் செய்யாரென்பது கருத்து.) பிறர்செல்வத்தைக்கண்டு மனவருத்தமடைகிறவர்களுக்கும், டம்பாசாரமுள்ளவர்களுக்கும், சிரத்தையின்றிக் கருமங்களைச் செய்பவர்களுக்கும், சிரேஷ்டமான தருமங்களைக்கேட்டும் அவ்வுண்மையை உணராதவர்களுக்கும், சாக்ஷாத் நாராயணரூபமான வேதப் பிரதிபாத்தியமான தருமங்களில் அசிரத்தையுடையவர்களுக்கும் ஸ்ரீமந்நாராயணன் பராமுகமாகவேயிருக்கிறான். எவனுக்குக் காலங்கள் ஸத்கருமமின்றி வீணாக கழிகின்றனவோ அவன், கருமான் துருத்தியைப்போல மூச்சுவிடுகிற பிரேதமாகிறான். தருமாதி சதுர்வித புருஷார்த்தங்களும் சிரத்தையுள்ளவர்களுக்கே பலிக்குமேயன்றி ஏனையோர்க்குப் பலியாது. எவன் தன் வருணாசிரமாசாரத்தைவிடாமல் ஹரிபக்திசெய்கிறானோ அவனே நித்திய சூரிகளால்* ஸேவிக்கப்படும் பரமபதத்தையடைகிறான் ஆசாரத்திலிருந்து தருமம் உண்டாகிறது. அந்த தருமத்துக்கு ஸ்ரீமந்நாராயணன் அதிபதி. ஆகையால் ஆசிரமத்துக்குரிய ஆசாரத்துடன் புரியும் பூஜையானது பகவானுக்கு பிரீதியை உண்டுபண்ணுகிறது. வேதவேதாங்கங்களை அறிந்தோனாயினும், எவன் தனக்குரிய வருணாசிரமாசாரங்களை விட்டுவிடுகிறானோ அவன் சர்வ கருமஹீனனானதால் பதிதனாகிறான். ஆசாரமில்லாத மூடனை வேதமும், ஹரிபக்தியும், சிவபக்தியும் பரிசுத்தப்படுத்தமாட்டா. மேலும் ஆசிரமாசாரஹீனனை புண்ணியக்ஷேத்திர யாத்திரையும், புண்ணியதீர்த்த ஸ்நாநமும், நாநாவித மகங்களும் ரக்ஷிக்கமாட்டா. ஆசாரத்தினாலேயே ஸ்வர்க்கசுகமும் மோக்ஷமும் உண்டாகின்றனவென்றால் ஆசாரத்தினால் அடையப்படாதன எவை? அத்தன்மையான சமஸ்தாசாரங்களுக்கும் யோகங்களுக்கும் பக்திதான் முதற்காரணம். ஆசிரயித்தவர்களின் மனோரதத்தை பரிபூர்த்திசெய்யும் ஸ்ரீ விஷ்ணுவும் பக்தியினாலேயே பூஜிக்கப்படுகிறார். ஆகையால் இந்த பக்திதான் லோகமாதாவென்று சொல்லப்படுகிறது. சமஸ்த பிராணிகளையும் தத்தம் தாய்கள் போஷிப்பதுபோல சமஸ்த தார்மிகர்களையும் பக்தியே போஷிக்கிறது. தனது ஆசிர

* அனந்தகருட விஷ்வக்சேனாதிகள்.

மாசாரத்துடன்கூடியவனுக்கு ஸ்ரீ விஷ்ணுபக்தியுமிருந்தால் அவனை ஒப்பார் மூவுலகத்தினுமுளரோ? பக்தியினாலேயே கருமங்கள் பலனைத் தருகின்றன. அக்கருமங்களினாலேயே ஸ்ரீ ஹரி சந்துஷ்டனாகின்றார். அந்த சந்தோஷத்தினால் ஞானமும், ஞானத்தினால் மோக்ஷமுமுண்டாகிறது. இவைகளுக்குக் காரணமான பக்தியோ பாகவதசங்கத்தால் உண்டாகிறது. அந்த சங்கமும் ஜன்மாந்தரங்களில் சம்பாதித்த புண்ணியங்களாலேயேயுண்டாகிறது. வருணாசிரம தருமசீலர்களும், பகவத் பக்தி உள்ளவர்களும், காமக்குரோதமுதலிய தோஷமற்றவர்களும், உலகங்களுக்குத் தமது நன்னடத்தைகளால தருமோபதேசம் செய்பவர்களும பாகவதராவார்கள். ஆகையினால் ஸாதுசங்கமானது பாவியினால் அடையத்தகுந்ததன்று. இந்த சிரேஷ்டமான சங்கமானது ஜன்மாந்தர சுகிருதிகளுக்கே கிடைக்கும். ஜன்மாந்தர பாவங்கள் எவனுக்கு நசிக்கின்றனவோ அவனுக்கே நல்லோர்சேர்க்கை உண்டாகிறது. தனது கிரணங்களால் பிராகிருதமான இருளை பகலில் நாசஞ்செய்யும் சூரியனினும் தமது வாக்குகளால் உள்ளிருக்கும் அஞ்ஞான விருளை எப்போதும் நாசம்செய்யும் ஸாதுக்களே அதிக ஒளிபொருந்தியவர்கள். பகவத் பக்தியுள்ள தெள்ளியமனமுடையவர்கள் கிடைப்பது அருமை. அவர்களுடைய சங்கம் எவனுக்குக் கிடைக்கிறதோ அவனுக்கே ஸ்திரமான சாந்தியுண்டாகிறது.

இவ்வாறு சொல்லிக்கொண்டுவந்த நாரதபகவானைநோக்கி ஸநத்குமாரர் உரைப்பாராயினர். ஓ நாரதபகவானே! பாகவதர்கள் எவ்விதமானவர்கள்? என்ன லக்ஷணமுள்ளவர்கள்? அவர்கள் யாதுகருமம் புரிகின்றனர்? அவர்கள் அடையும் உலகமெது? இவைகளை அடியேனுக்குத் தேவரீர பிரசாதித்தருளவேண்டும். தேவதேவனும் சர்வேசுவரனுமான ஸ்ரீ சக்கிரபாணியினுடைய பக்தராதலால் தேவரீரே சொல்லத்தக்கவர் என்று, இவ்விதம் பிரார்த்தியாநின்ற ஸநத்குமாரரைநோக்கி, நாரதபகவான் விளம்பலாயினர். வாரும் பிராமணோத்தமரே! பரமரகசியமான இந்தவிஷயத்தை பூர்வம் மார்க்கண்டேய மகரிஷிக்கு யோகநித்திரையைவிட்ட ஜகந்நாதனான ஸ்ரீ விஷ்ணு திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார் பரஞ்சோதியாய், தேவதேவனாய், அநாதியாய், உலகரூபியாய், உலககர்த்தாவாய், பிரமருத்திர ரூபியாய் உலகங்களை சிருஷ்டித்தும் யுகாந்தத்தில பிரமாண்டங்களை சம்ஹரிப்பவனுமாய், ஸ்தாவர ஜங்கமரூபமான யாவும் நசித்தபின்னர் எங்கும் ஜலரூபமான உலகத்தில் தானொருவனே சேஷனாய் வடபத்திரத்தில் சயனிப்பவனாய், எண்ணிறந்த பிரமாண்டங்களினால் நிறைந்த உரோமங்களையுடையவனாய், தனது பாதத்தின் கட்டைவிரலுனியில் கங்கையையுண்டுபண்ணி சமஸ்தத்தையும் பரிசுத்தி செய்தவனாய், சூக்ஷுமத்திலும் சூக்ஷுமரூபியாய், பிரமாண்டங்களை பக்ஷித்து ஆலிலைத்தளிரில் அறிதுயில் அமரும் சர்வசக்தனான ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்விய லீலைகளை மகாபாக்கியசாலியான மார்க்கண்டேயர் ஸேவித்துக்கொண்டிருந்தார். சௌனகாதிரிஷிகள் இவ்வாறு புராணம் சொல்லிக்கொண்டுவந்த சூதபௌராணிகரைநோக்கி ஓ ஸ்வாமி, மகா கோரமான அந்தகாரத்தில்

சராசரங்களான யாவும் நசித்தபின்னர் ஹரி ஒருவரே யிருந்து ஆலிலையில் துயில்வளர்த்தாரென்று தேவரீர் திருவாய்மலர்ந்தருளியதை யாம் செவியுற்றனம். அப்படி சராசராத்மகமான சமஸ்தமும் பகவானால் பக்ஷிக்கப்பட்டு ஜலப்பிரளயத்தில் நசித்தபிறகு மார்க்கண்டேயர் ஒருவரமாத்திரம் இருந்ததற்குக் காரணமென்ன? தேவரீர் அந்த அதி அற்புத அருத்தத்தை அன்போடு அறைய அடியோங்கள் அதி அவா அடைகின்றோம். ஹரிகதையாகிற அமிருதத்தை பானஞ்செய்ய யாருக்குத்தான் சோம்பலுண்டாகும்? என்று பிரச்னம் செய்யாநின்ற சௌனகாதிகளைநோக்கி சூதபௌராணிகர் பின்வருமாறு உரைப்பாராயினர்.

மிருகண்டுமகரிஷியின் தவப்பெருமை.

கேளுங்கள் சௌனகாதிகளே! மிருகண்டு என்று நாமதேயமுடைய மகத்தான மகிமைபொருந்திய ஓர் மகரிஷியிருந்தார். அவர் சாளக்கிராமம் என்னும் புண்ணியதீர்த்தத்தில் பதினாயிரயுககாலம் ஆகாரமில்லாமல பொறுமையுடன் ஐம்புலன்களையுமடக்கி சத்தியப பிரதிஞ்ஞையுடன் தன்னைப்போலவே பிறரையும் பாவித்து சமுசார சுகத்திலும் சாதனாதிபோகங்களிலும் ஆசையிலலாதவராய், சாவபிராணிகளிடத்திலும் ஹிதபுத்தியுடன் சுகதுக்கங்களை சகித்து, அறுதியான பிரம்மதலைத்தியானித்துக்கொண்டு அதி உக்கிரமான தவம்புரிந்தார. அத்தனமைவாய்ந்த தவத்தினால் நடுக்கமுற்ற இந்திராதிதேவர்கள், க்ஷீரசாகரத்தின் உத்தரதீரத்தை யடைந்து, சர்வேசுவரனாய், சர்வோபத்திரவநிவாரணனாய், தேவதேவனாய், ஜகத்குருவாய் விளங்காநின்ற பத்மநாபனைச் சரணமடைந்து துதித்தார்கள். நாராயணா, குறைவற்றவனே, நாசமற்றவனே, சரணமென்றடைந்தோரைக் காக்கும் பெருமானே, மிருகண்டு மகரிஷியின் உக்கிரமானதவத்தால பயந்து தேவரீரைச் சரணமடைந்த அடியோங்களை ரக்ஷித்தருளவேண்டும். தேவர்களுக்கும அதிதேவர்களான பிரமருத்திராதிகளுக்கும் ஈசனே, சங்கசக்கர கதாபாணியான சுவாமி, உலகரூபியாயும், பிரமாண்டங்களுக்குக் காரணனாகியும், உலகங்களைப் பரிசுத்தி செய்பவனாகியும், உலகநாதனாகியும், உலகங்களுக்கு சாக்ஷியாயும் ஞானமார்க்கத்தாலறியத்தகுந்தவனாகியும், அதற்கு தானே காரணமும் சாக்ஷியுமாய் அதுவே தன் வடிவமாயிருப்பவனாகியும், கேசி என்னும் அசுரனைக் கொன்றவனாகியும், மது என்னும் தைத்தியனை சம்ஹரித்தவனாகியும், பஞ்சபூதஸ்வரூபியாகியும், ஞானரூபியாகியும் இராநின்ற உமக்கு தெண்டனிடுகிறோம். எல்லாவற்றிற்கும் மூதன்மையராய், தூய்மையராய், நேயகுணாதிதனாய் ஸத்வகுணஸ்வரூபமாய், ரூபமற்றதாய், பக்தர்களை ரக்ஷிக்கும்பொருட்டு நல்ல ரூபமுடையதாய், ஏகரூபியாய், நித்தியமான தேவஸ்வரூபமாய், கோபிராமணர்களுக்கு ஹிதம்விளைப்பதாய், ஜகத்ஹிதமாய் விளங்கும் உமது ஸ்வரூபத்துக்கு பிரணாமம்செய்கின்றோம்.

பக்திபொருந்திய மனதை அக்கிரஹிக்கின்றனையும், வேதப்பிரதிபாத்தியனாயிருக்கின்ற தேவரீரை நமஸ்கரிக்கிறோம். ஸ்வர்க்கஞ்சயபவர்க்கப்ப

தேவஸ்வரூபியாயும், சூரியாதி தேஜஸ்வரூபியாயும், ஹவ்ய* கௌவியங்களைப† புசிக்கும் அக்கினிஸ்வரூபியாயும், நித்தியனாயும், ஸமஸ்தர்களாலும் வந்திக்கப்படுபவனாயும், சராசரரூபியாயும், ஸ்மரிப்பவர்களின் கஷ்டத்தை நாசம்செய்பவனாயுமிருக்கிற தேவரீரை அடிக்கடி தெண்டம்சமர்ப்பிக்கிறோம், என்று இவ்வாறு தேவர்களால் செய்யப்படும் தோத்திரங்களை ஏற்று ஸ்ரீமகாலக்ஷ்மீகாந்தனான பதுமநாபன் சங்கசக்கரகதாதரனாய் அத்தேவர்களுக்குப் பிரத்தியக்ஷமானார். மலர்ந்த செந்தாமரையிதழ்போன்ற திருக்கண்களையுடையவராயும், கோடிசூரியபிரகாசமபொருந்திய திருமேனியுடையவராயும், சமஸ்தாலங்காரவஸ்துக்களால் அலங்கரிக்கப்பட்டவராயும், ஸ்ரீவற்சமெனுமறுவார்ந்த திருமார்பையுடையவராயும, தாம் தரிக்கும் சுவர்ணமயமான பீதாம்பரம் அதிசுந்தர சுவர்ணயக்ஞோபவீதம் முதலான ஆடையாபரணங்களுக்கும் அழகிடும் திருமேனியுள்ளவராயும், பொற்றாமரைமலர்போன்ற திருவடியையுடையவராயும் ரிஷீசுவரர்களால ஸ்துதிக்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணனைத் தரிசித்து பக்திரசப்பெருக்கால் அவர் உபயசரணாரவிந்தங்களைத் தஞ்சமென்றடைந்தார்கள். அப்படி சரணடைந்த தேவர்களைக் கடாக்ஷித்து தயாநிதியான பகவான் மேககர்ச்சனம்போன்ற கம்பீரமான தமது சப்தத்தால் சமுத்திர ஒலியை அடக்கி ஆர்த்தகாம்பீரியமான வசனங்களை வசனிக்கிறார். ஓ தேவதைகளே, மிருகண்டு மகரிஷியின் தவத்தாலுண்டாகிய உங்களுடைய மனோதுக்கத்தை நான் நன்கறிவேன. அம்மிருகண்டுமகரிஷி சஜ்ஜனராதலால் உங்களுக்கு ஓர் பாதகமும் செய்யார். சம்பத்துள்ளவர்களாயினும் ஆபத்துள்ளவர்களாயினும் தங்கள் தங்களால் பரிசுத்தர்களான ஸாதுக்கள் எவ்விதத்திலும் இதரருக்கு பாதகம் விளைக்கார்கள். விஷயங்களாகிற சத்துருக்களால் எப்போதும் உபத்திரவிக்கப்பட்டவன் அவ்வுபத்திரவங்கள் தன்னை அணுகாவண்ணம் காத்துக்கொள்ளாது பிறர்களிடம் துவேஷம்செய்கிறானே அவன மூடனாகிறான். ‡ஆத்தியாத்துமிக ஆதிபௌதிக ஆதிதெய்விகமென்கிற தாபத்திரயங்களாகிற சத்துருக்களால் உபத்திரவிக்கப்பட்டவன் இதரனை உபத்திரவிக்க சக்தியுள்ளவனாய் எவ்விதம் ஆகுவன் ? இப்படி மனோவாக்குக் காயங்களால் பிறருக்கு உபத்திரவம் விளைவிப்பவன் தான் ஒருகாலும் சுகத்தை அடைவதில்லை. ஏனெனில் தன்னால் உபத்திரவிக்கப்பட்டவர்கள் தன்னையும் தொக்

---

* ஹவ்யம் என்பது தேவர்களை உத்தேசித்துச்செய்வது.

† கௌவியம் என்பது பிதுர்க்களை உத்தேசித்துச்செய்வது.

‡ ஆத்தியாத்துமிகம் - தன்னால் உண்டாவது, அதாவது ராக துவேஷ லோப மோக மத மாச்சரியாதிகளாலுண்டாவது.

ஆதிபௌதிகம் - பூதங்களாலுண்டாவது; அதாவது தேவாசுரயக்ஷராக்ஷஸ [illegible] மனுஷ்ய பசு பக்ஷி மிருகங்களாலும் உண்டாவது.

ஆதிதெய்விகம் - தெய்வத்தாலுண்டாவது; அதாவது [illegible], மழை, இடி முதலியவற்றாலுண்டாவது

திரவு செய்வார்களென்கிற சங்கை அவனுக்கிருக்குமன்றோ? அதிக லோபமான மனதுடையவராய் அதனால் தமது செல்வம் குன்றியவராய் பகவதமாயையால் மோகிக்கப்பட்டவர்களுக்குப் பயமென்பது ஸ்திரமாகவேயிருக்கிறது. பயத்த மனமுடையவர்கள் எப்போதும் துக்கத்தையேயடைகிறார்கள். சங்கையில்லாதவர்கள் எப்போதும் சுகத்தையேயடைகிறார்கள். சமஸ்தபிராணிகளிடத்திலும் ஹிதபுத்தியுள்ளவனும் பொறுமையுள்ளவனும் எப்போதும் சங்கையில்லாதவனுதலால சுகத்தையேயடைகிறான் எந்தமனிதன் பொறாமை த்வேஷம் இவ்விரண்டையும்விட்டு உலகங்களுக்கு ஹிதத்தைச்செய்கிறானோ அவனே சாதுக்களால் இகலோக பரலோகங்களில் பயஹேதுவில்லாதவனென்று சொல்லபபடுகிறான். ஓ தேவர்களே, மிருகண்டுமகாரிஷி உங்களை பாதிக்கார், நீங்கள் சுகமாய்பபோகலாம்; நான் உங்களுக்கு சமரக்ஷணத்தைசசெய்கிறேன்; விசனத்தை விட்டுவிடுங்கள். காயாம்பூவண்ணனை திருமால இவ்விதமாக தேவர்களுககு வரமளித்து அவாகள ஸேவித்துககொணடிருககுமபோதே அந்தர்த்தானமாயினா. சந்தோஷமடைந்த மனமுடையோர்களான அமரர்களும் சுவர்க்கலோகததை யடைந்தாகள். ஸ்ரீபகவானும் திருப்தராய் மிருகண்டுமகரிஷிக்கு பிரத்தியக்ஷமாயினர். தவநிலையிலிருந்த மிருகண்டுமகரிஷியும் திடமான ஸமாதியில ஸவயமபிரகாசமாயும் நித்தோஷமாயுமிராநின்ற பிரம்மஸவரூபத்தை முதலில தரிசிதது காயாம்பூபோன்ற நிறமுடையவராயும் திவ்வியபீதாமபரத்துடன தோன்றிய பகவானைக் கண்ணாரக்கண்டு மகத்தான குதூகலத்தையடைந்தார் பிறகு சமாதியிலிருந்து கண்களைவிழித்துக்கொண்டு தெளிந்துவிளங்கும் திருமுகத்துடன் சாந்தமூர்த்தியாய், சிருஷ்டிகாததாவாய், நாசமற்றவனாய், தேவதேவனாய் விளங்காநின்ற சக்கரபாணியாகிய ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடித்தாமரைகளில் ஆனந்தபாஷ்பம் பெருக, தேகமெங்கும மயிாக்கூச்செறிய தெண்டம்சமர்ப்பித்து தமது ஆனந்தக்கண்ணீரால அவனது திருவடிகளை அலம்பி மிருகண்டுவானவர் கைகளைக்கூபபி சிரததில்வைதது ஸதுதிசெய்ய வாரம்பிததாா. பராசத்திக்கு அதிபதியும், பரப்பிரம்மரூபியும், பக்த முக்த நித்தியரென மூவகைப்பட்ட சேதனாகளுக்கும் பரனும், கரையில்லாத சமுசாரசாகரத்துக்குக் கரையயடைதற்குக் காரணனும், சுத்தஞானத்தை உண்டுபண்ணுபவனும், மேலான பிராயச்சித்தங்களிலும் தோஷமனுகாவண்ணம்செய்யும் பரிசுத்தஸ்வரூபனும், பெயர் ஜாதி முதலான குறிப்பற்றவனாயும், அனேக ஸ்வரூபமுள்ளவனாயும், நிஷ்களங்கனாயும், ஆதிகாரணனாயும், ஸர்வேசுரவனுமாய் வேதாந்தங்களால் அறியக்கூடியவனும், சிருஷ்டிக்கு முந்தியுமிருக்கும் அனாதிபுருஷனும், பிரமாதி சகலஜகத்ரூபியும், தம் ஸ்வரூபத்தில் இறையும் அகலாத பெரியபிராட்டியார் சேர்த்தியுடையவனும், சர்வேசுரனுமான தேவரீரை நமஸ்கரிக்கிறேன். தியானசீலர்களும், ஆசையற்றவர்களும், விஷயசுகத்தை விட்டவர்களும், சமஸ்ததோஷத்தின் அகற்றினவர்களுமான யோகேசுவரர்களுக்கு ஞானதிருஷ்டியில் ஸேவைசாதித்து பரிசுத்தனாய், சர்வோத்கிருஷ்டனாய், சம்சாரநிவர்த்திக்குக் காச

னுமாய் விளங்காநின்ற தேவரீரை நமஸ்கரிக்கிறேன். ஸ்மரிக்கிறவர்களுடைய ஆர்த்தியை நாசம்செய்கிறவனும், சர்வவியாபியும், சரணமடைந்தோரை ரக்ஷிப்பவனும், யாவராலும் ஸேவிக்கத்தகுந்தவனும், லோகாதாரனும், தயாரூபியுமான தேவரீரை ஸேவிக்கிறேன். நாசமற்றவனும், அனேக திருமேனிகளையுடையவனும், அனேக திருவடி திருக்கண் திருமுடி திருத்துடை திருக்கைகளையுடையவனும், அனேகந் திருநாமமுடையவனும், நித்திய புருஷனும், அனேககோடி யுகரூபியாயுமிருக்கிற தேவரீருக்கு தெண்டம்சமர்ப்பிக்கிறேன், என்றிவ்வாறு ஸ்தோத்திரஞ்செய்யாநின்ற மிருகண்டுமகரிஷியைக் கடாக்ஷித்து சங்கசக்கரகதாபாணியான ஸ்ரீபகவான் அதிசந்துஷ்டனாய் நீண்ட தனது நான்கு திருக்கைகளாலும் ரிஷியை ஆலிங்கனஞ்செய்து மிகுந்த பிரீதியுடன் "நீர் வேண்டியவரங்களைக் கேளும், உம்முடைய இந்த உக்கிரமான தவத்தினாலும் ஸ்தோத்திரத்தினாலும் சந்தோஷமடைந்தேன்," என்று திருவாய்மலர்ந்தருளின பகவானைப்பார்த்து மிருகண்டு சொல்லுகிறார்.

ஓ தேவதேவனே, லோகநாதனே, சந்தேகமில்லாமல் அடியேன் தன்னியனானேன். ஏனெனில் தேவரீருடைய சேவையானது பாவிகளுக்குக் கிடைப்பதருமை. பிரமாதிதேவர்களாலும் வேதங்களாலும் இன்னும் காணப்படாத தேவரீரை அடியேன் கண்ணாரக்காண்கிறேனென்றால் இதைவிட விசேஷமென்ன இருக்கின்றது? யாதொரு பரப்பிரம்மரூபியான தேவரீரை சமதரிசிகளாயும் சாதுக்களாயுமிராநின்ற பாகவதர்களும் காணவில்லையோ அப்படிப்பட்ட தேவரீரை நான் பார்க்கிறேனென்றால் இதைவிட விசேஷம் என்னசொல்லப்போகிறேன்? ஞானிகளும், யோகிகளும் எந்த தேஜஸ்ஸைக்காணவில்லையோ, பரோபகாரஞ்செய்பவர்களும், க்ரூரஸ்வபாவமில்லாதவர்களும் இன்னும் எந்த பிரம்மத்தையறியவில்லையோ அந்த ஸ்ரீமந்நாராயணனான தேவரீரை அடியேன் ஸேவித்தேன், ஓ ஜகத்குருவான ஜனார்த்தனா, இந்த ஸேவையினாலேயே பரிபூரண மனோரதனாயினேன். தேவரீருடைய சேவை பாவிகளுக்கு சுவப்பனத்திலும் கிடைக்காது. தேவரீருடைய திருநாமத்தை நினைத்தமாத்திரத்திலேயே மகாபாவிகளும் பரமபதத்தை யடைகிறார்களென்றால் ஸேவித்தவர்களுக்குக் கேட்கவேண்டியதென்னவென்றிவ்வாறு பகவத்குணானுபவம் செய்யாநின்ற மிருகண்டுமகரிஷியைப்பார்த்து பகவான் திருவாய்மலர்ந்தருளுகிறார். ஓ பிராம்மணோத்தமரே நீர்சொன்னது சத்தியந்தான்; இதனாலேயே சந்தோஷித்தேன்; என்னுடைய ஸேவை ஒருகாலும் வீணாகாது; ரிஷிகள் விஷ்ணுபக்திசெய்தவன் குடும்பியாகிறானென்று சொல்லுகிறார்கள். ஸாதுக்கள் வசனம் பொய்யாகமாட்டாதாகையால் அவர்கள்வார்த்தையை உண்மையாகச் செய்கிறதின்பொருட்டு உமக்கு புத்திரனாக அவதரிக்கிறேன். அப்புத்திரன் சகல ஸத்குணநிதியாயும், தீர்க்காயுளுள்ளவனாயும், சர்வலக்ஷணசம்பன்னனாயும் இருப்பான். நான் எந்தகுலத்தில் அவதரிக்கிறேனோ அந்த ஸத்குலமானது மோக்ஷத்தையடைகிறது. நான் சந்துஷ்டனாயிருக்கும்போது உமக்கு எதுதான் அசாத்தியம்? எவன் என்னிடத்தில் பக்தியுள்ளவனும், என்னை உத்தே

சித்து யாகம்செய்கிறவனும், என்னையே கதியாய் எண்ணினவனும், என்னையே தியானம்செய்கிறவனுமாயிருக்கிறானோ அவனும், இன்னும் என் பிரீதிக்காகவே சகலகருமங்களையுஞ் செய்கிறவனும் தன் குலமுழுமையும் பகவத்சாரூபத்தை அடைவிக்கிறான் ஓ பிராமணசிரேஷ்டரே, உம்முடைய இந்த ஸ்தோத்திரத்தினாலும், தவத்தினாலும் சந்தோஷித்தேன். ஆதலால் உமக்குப் புத்திரனாய் உதித்து கைம்மாறுதவுவேன்; சந்தேகமின்று, என்று மிருகண்டு மகரிஷியைப்பார்த்துச் சொல்லி தமது திவ்விய திருக்கையை அவர் சிரசின் மேல்வைத்து அவருடைய சரீரத்தைத் தடவிக்கொடுத்து அப்போதே அந்தர்த்தானமாயினார். மிருகண்டுமகரிஷியும் மிகுந்த ஆனந்தபரிதராய்த் தன்னைப் புண்ணியவானென்று நினைத்துக்கொண்டே ஆசிரமஞ்சென்றனர்.

ரு-வது அத்தியாயம்.

மார்க்கண்டேயசரிதையும் பாகவதலக்ஷணமும்.

பகவானிடமிருந்து வரத்தைப்பெற்ற விஷ்ணுபூஜாபரனான மிருகண்டு மகரிஷி பகவானைப்போல்விளங்கும் மார்க்கண்டேயனென்னும் புத்திரனைப் பெற்றார். அம்மார்க்கண்டேயர் மகாபாக்கியசாலியாயும், தயவுள்ளவராயும், தருமத்தில் ஆசக்தியுள்ளவராயும், தைரியசாலியாயும், திடமான பிரதிஞ்ஞையுள்ளவராயும், சூரியனுக்குச்சமமான தேஜஸ்பொருந்தினவராயும், இந்திரியங்களை நிக்கிரகித்தவராயும், பொறுமையுள்ளவராயும், விசேஷ ஞானமுள்ளவராயும், சமஸ்த தத்துவார்த்தங்களை யறிந்தவருமாய் பகவத் பிரீதிகரமான சிரேஷ்டமாகிய தவம்புரிந்தார். இவ்விதம் மகாபுத்திமானான மார்க்கண்டேய மகரிஷியின் தவத்தினால் ஆராதிக்கப்பட்ட ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் பிரசன்னராய் புராண சம்ஹிதைசெய்யும்படி அவருக்கு வரமளித்தார். சிரஞ்சீவியாயும் தேவதேவனான ஸ்ரீசக்கரபாணியின் பரம பக்தனுமான மார்க்கண்டேயமகரிஷி சாக்ஷாத் நாராயணாம்சமென்றே சொல்லப்படுகிறாராகையால் மகாப் பிரளயத்திலும் ஜனார்த்தனனான பகவான் தமது மகிமையைக் காண்பிக்கும்பொருட்டு அவரை சம்ஹரிக்கவில்லை. மகாபயங்கரமான அந்த ஜலத்திலே உலர்ந்த சருகைப்போல் மிதந்துகொண்டு ஸ்ரீபகவான் சயனித்துக்கொண்டிருந்தவரையில் ஸேவித்துக்கொண்டிருந்தார். அவ்வண்ணம் அவர் இருந்தகாலத்தை இவ்வளவென்று சொல்லுகிறேன் கேளும் பிரமக்ஞனே, பதினைந்து நிமிஷங்கள் ஒரு காஷ்டை; காஷ்டை முப்பதானால் ஒரு கலை; கலை முப்பதானால் ஒரு க்ஷணம்; க்ஷணம் ஆறானால் ஒரு நாழிகை; அந்நாழிகை இரண்டானால் ஒரு முகூர்த்தம்; முப்பது முகூர்த்தம் இரவும் பகலுமாகிய ஒருநாள்; முப்பதுநாள் ஒரு மாதம்; அம்மாதம் இரண்டுபக்ஷ

முள்ளது இரண்டுமாதம் ஒரு இருது, மூன்று இருது ஒரு அயனம, இரண்டு அயனம் ஒரு வருஷம். இந்த மனுஷவருஷம தேவாகளுககு ஒரு நாள். அதில் உததராயணம பகல், தக்ஷிணாயனம் இரவு மனிதாகளின் ஒரு மாதமானது பிதாககளுக்கு ஒரு நாள் சூரியசங்கிரமங்கைளால உத்தமமான கற்பத்தைத தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு தேவயுகமென்பது பனனீராயிரந் தேவவருஷஙகூடியது தேவமானத்தில இரணடாயிரம் யுகங்கள் பிரமனுடைய தினம் என்றும், அவைகளே மனிதாகளுககு இரணடு கற்பஙகளென்றும் சொலலபபடுகின்றன. எழுபத்தொரு தேவயுகங்கள் ஒரு மனவந்தரம். பதினனகு மனவந்தரஙகள் பிரமனுக்கு ஒரு பகல். பகல எவ்வளவோ அவ்வளவே யிரவும அவ்விராததிரிகாலததில மூவுலகுகளும நாசமுறுகினறன இததனமையான பிரமதேவனுடைய ஒரு தினமானது மனுஷவருஷததால எத்தனை ஆயிரஙகொணடதோ அநதகணக்கைச சொலலுகிறேன் கேளும மனுஷமானததில ஆயிரம சதுாயுகம சதுாமுகனுக்கு ஒரு பகல. இம்மாதிரியாக மாதமும வருஷமும் அறியவேணடும இந்த சதுர்முகனுடைய இரணடு பராாததகாலம ஸ்ரீமகாவிஷ்ணுவுககு ஒருபகலபோலாகும் இரவும இதே அளவுள்ளது இநத கணககுளள இராததிரிகாலமவரையில மகா பயஙகரமான ஜலபபிரளயததில் ஸ்ரீமந்நாராயணனுடைய சக்தியால ரக்ஷிக்கப்பட்ட மாாக்கணடேய மகரிஷி அபபரமாத்துமாவைத் தியானமசெய்து கொணடு அநதசனனிதானததில முனகூறிய வாஙகு உலாந்த சரகைபபோல விருந்தாா. பினனா அமமகாவிஷ்ணுவுககுப பகல் ஆரம்பித்தவுடன யோக நித்திரையைவிட்டு பிரமரூபியாய் ஸதாவரஜஙகமரூபமான இவவுலகததை சிருஷ்டிததார். இவ்வணணம சமஸத ஜலஙகளையும உபசம்ஹரிதது சராசரமான இவ்வுலகததைச சிருஷடிசெய்ததை மாாக்கணடேயா பாாதது ஆச்சரியமடைநது பரமபகதியுடன பகவானை நமஸகாரமசெய்து அவனுககுப பிரீதிகரமான வாககுகளால் துதிககலாயினா அனேக சிரசுள்ளவனாய், ஜலசாயியாய், வாசுதேவரூபியாய், ஆதாரமற்றவனாய், திவ்விய தேஜோமயனாய், சகல லோகாதாரனாய், பரிசுததனாய, சமஸதாகளாலுமறியப் படவேணடியவனாய், எலலாவஸதுககளிலும எலலாவிடஙகளிலும எல்லா காலங்களிலும் ஒரேவிதமானவனாய், சச்சிதானந்தரூபியாய், பரர்களான பிரமருத்திராதிகளுக்குப பரனாய், சகலரூபியாய், அனாதியாய், சிரேஷ்டனாய், அனந்த கல்லியாணகுண பரிபூரணனாய, ஹேயகுணரகிதனாய், சாந்தரூபியாய், பிரகிருதியைக் கடந்தவனாய், மாயாதிகாரியாய், பிராகிருதரூபமில்லாதவனாய், பக்த சமரக்ஷணார்த்தம் வெகுரூபத்தைத் தரிபபவனாய் விளஙகாநினற தேவரீருக்குத் தண்டனசமாப்பிககிறேன இந்த சமஸதலோகஙகளையும் சிருஷ்டி திதி சம்ஹாரமாகிற திருவிளையாடல்களைப புரியாநினற பகவானே நீயு தேவரீரை நமஸகரிக்கிறேன். சாவேசுவரா, பரமானந்தரூபா, சரணாகதியடைந்தோரைக் காக்குமெம்பெருமானே, கருணைக்கடலே, தேவரீா அடியேனை ரக்ஷித்தருளவேணடும் என்று இவ்வணணம் ஸ்தோத்திரம் செய்த பிராமணோத்தமரைப் போர உகந்தருளி, சங்கசக்கர கதாபாணி

யான லோகநாதன் திருவாய்மலர்ந்தருள்வாராயினா. ஓ பிராமணசிரேஷ்டரே, உலகத்தில என்னிடத்தில பக்தியுள்ள மனமுடைய பாகவதரிடத்து நான் பரமதிருப்தியுள்ளவன். எப்போதும் நான் அவர்களை ரக்ஷிப்பேன் நானே அந்தபாகவதரூபியாய் சகல ஜந்துக்களையும் பாதுகாககிறேன. ஆனதால் பரமபாகவதரான உம்மை ரக்ஷிககயாது தடையுள்து? என்றிவ்வாறு திருவாய்மலர்ந்தருளின பகவானைபபார்த்து, பாகவதர்கள் என்ன லக்ஷணமுள்ளவாகள்? எந்தகருமத்தினால பாகவதர்களாய் ஜனிககிருர்கள்? இவைகளை அறிந்துகொள்ள ஆவல்கொண்டிருக்கிறேன் சாதிககவேண்டும் என்று பிரார்த்தித்தாா அபபோது பகவான் சொலலததொடஙகினர்

பாகவதருடைய லக்ஷணத்தைதச சொலலுகிறேன கேளும் மாாக்கணடேயரே, அவர்களுடைய மகிமையை கோடிவருஷங்கள் சொனனாலும முடியாது. சாவஜந்துக்களிடத்தும் ஹிதமுள்ளவரும, குணதூஷணைபுரியாதவரும, பொருமையறறவரும், மாறசரியமில்லாதவரும, இநதிரியநிககிரகம் செய்தவரும, ஆசையிலலாதவரும, பொறுமையுள்ளவரும, மனோவாக்குக் காயங்களால ஒருவருககும் பீடைசெய்யாதவரும, பறறற்றவரும, ஸத்கதைகளைக கேட்க விருபபஙகொணட ஸ்ரீ விஷ்ணுபக்தியுள்ள ஸாதுககளும பாகவதரெனபபடுவர் எவாகள கஙகையினிடத்தும சாவேசுவரனிடத்தும பகதி செய்வதுபோல மாதா பிதாககளிடததில பகதியுடன சிசருஷை செய்கிருாகளோ அவர்களும, தேவாாசசனையை பகதியுடனசெய்பவரும, தேவாாச்சனை செய்பவருக்குச் சகாயம்செய்பவரும், தேவாாசசனையைப்பாாததுசந்தோஷிபபவரும, பிரமசாரிகளுககும சநநியாசிகளுககும உபசாரமசெய்பவர்களும், பாநிநதை செய்யாதவாகளும, எவாகளிடததிலும இனசொல் பகாவோரும், ஒருவனுடைய குற்றம் நோககாது குணம் நோககுபவரும், சத்துருமித்திராிடத்தில வெறுபபு விருபபற்று சமமாயிருபபவரும, தருமசாஸதிரம் சொலலுபவரும், உணமை பகாவோரும், ஸாதுககளுககு சிசருஷைசெய்பவரும், புராணாததஙகளைச் சொலலுபவரும், அவைகளைக கேட்பவரும, புராணார்ததம் சொலலுகிறவரிடம் பக்தியுடையவரும, கோ பிராமணபூஜைசெய்டவரும, தீர்த்தயாத்திரைசெய்பவரும், பிறாசம்பததைக்கண்டு சந்தோஷிபபவரும், பகவந்நாமசஙகீர்த்தனம்செய்பவரும், நந்தனவனமவைபபவரும, குளஙகளைவெட்டிக் காப்பவரும், தோபபுவைபபவரும, கிணறுவெட்டுபவரும், கோவில்கட்டுபவரும், காயத்திரி ஜபிபபவரும் பகவந்நாமங்களைக்கேட்டு மயிாக்கூச்செறிய ஆனந்திப்பவரும், துளசிவனஙகளைக்கணடு நமஸ்காரம்செய்பவரும், அதின் கட்டையினால காதில அலங்கரித்துககொள்பவரும், துளசியின்கந்தத்தாலமோந்து சந்தோஷிப்பவரும், துளசி மிருத்திகையை எடுத்துக்கொள்பவரும், வருணாசிரமாசாரங்களை வழுவுதலின்றி அநுஷ்டிபபவரும், அதிதிபூஜைசெய்பவரும், வேதார்த்தங்களைச்சொல்பவரும், மங்களத்துக்கெல்லா மங்களமான ஸ்ரீவிஷ்ணுவின் திவ்விய திருநாமங்களைக் கீர்த்திப்பவரும், தாமரைமணியைத் தரித்துக்கொள்பவரும், சிவனை அன்புடன் அர்சசிக்கவிரும்புவரும், திரிபுண்டரதாரிகளும், ருத்திராக்ஷதாரிகளும், சிவனையாகிலும் விஷ்ணுவையாகிலும்

தமக்கிஷ்டமான ரூபத்தை யாகங்களினால் ஆராதிப்பவரும், சாஸ்திரார்த்தங்களை செவ்வையாயறிந்து பிறர்களுக்கு உபதேசிப்பவரும், சமகுணம் பொருந்தியவரும், ஸ்ரீமந்நாராயணமூர்த்தி பேதங்களான பிரம விஷ்ணு ருத்திரர்களிடம் சமபுத்தியாயிருப்பவரும், தண்ணீர்ப்பந்தல்வைப்பவரும், அன்னதானம் செய்பவரும், ஏகாதசிவிரதம் அநுஷ்டிப்பவரும், கோதானம் கன்னிகாதானம்செய்பவரும், என்னை உத்தேசித்து கருமங்களைப்புரிபவரும் பாகவதராவார். இவர்களின் மகிமையை நான் நூறுகோடிவருஷம் சொல்லினும் முடியாது. ஓ பிராமணோத்தமரே, நீர் எப்போதும் நல்ல சீலமுள்ளவராயும், சமஸ்தபிராணி ஹிதராயும், பொறுமையுள்ளவராயும், விவேகமுள்ளவராயும், தருமசீலராயும் மறுபடி யுகாந்தம்வரையில் சிரஞ்சீவியாய் நம்முடைய மூர்த்தியை தியானம்செய்துகொண்டு ஸாத்துவீகதருமத்தை அநுஷ்டித்து யுகாந்தத்தில் பரமபதத்தை யடையக்கடவீர் என்று மார்க்கண்டேயருக்கு வரமளித்து அங்கேயே அந்தர்த்தானமாயினார். மகாபாக்கியசாலியான மார்க்கண்டேயர் ஹரிபக்தியுடன் ஸாத்துவீகதருமங்களையும் ஸாத்துவீகயாகங்களையும் செய்துகொண்டு சாளக்கிராமம் என்னும் புண்ணியக்ஷேத்திரத்தில் மேலான தவம் புரிந்து பகவத்தியானத்தினால் ஆயுளைக்கழித்து பரமானந்தசுகத்தையடைந்தார். ஆகையால் ஓ மகாரிஷியே, சமஸ்தஜனங்களிடத்திலும் ஹிதபுத்தியுடையவனாய் ஹரிபக்திசெய்பவன் சந்தேகமில்லாமல் தன் மனதில்கோரியவெல்லாவற்றையுமடைகிறான் நீர்கேட்ட பாகவதமகிமையை உமக்குரைத்தேன் இன்னும் என்னகேட்கவேண்டுமோ அதைக்கேளும் சொல்லுகிறேன் என்று நாரதபகவான் சொல்லியருளினார்

௯-வது அத்தியாயம்.

கங்கையின் பிரபாவம்.

இவ்விதமாக பாகவதர்களின் மகிமையைக் கேட்டு ஸநத்குமாரர் ஆனந்தபரிதராய் நாரதபகவானைப்பார்த்து மறுபடியும் பிரசினம் பண்ணுகிறார். ஓ சுவாமி தேவரிஷிசிரேஷ்டரே, புண்ணியக்ஷேத்திரங்களுள் உத்தமமான க்ஷேத்திரம் எது? தீர்த்தங்களுக்குள் உத்தமமான தீர்த்தம் எது? இவைகளை அடியேனிடத்து கிருபைகூர்ந்து சாதித்தருளவேண்டுமென்று பிரார்த்தியாநின்ற ஸநத்குமாரரைப்பார்த்து நாரதபகவான் உரைப்பாராயினர். பிராமணோத்தமரே, பரமரகசியமான சங்கதியைச் சொல்லுகிறேன் கேளும்? இதைக்கேட்கின் சகலசெல்வங்களும் உண்டாகும், கெட்டகனவுகள் உண்டாகா, சமஸ்தபாபங்களும் நசித்து புண்ணியபலமுண்டாகும். அது சமஸ்தவியாதிகளையும் நிர்மூலப்படுத்தும், ஆயுளை விருத்திசெய்யும், துஷ்டசுபாவமுடைய பிசாசங்களை நிவர்த்திசெய்யும். இத்தகைய மகிமைவாய்ந்த

விஷயத்தை நியமத்துடன் கேட்கவேண்டும். மகரிஷிகள் தீர்த்தங்களிலும் க்ஷேத்திரங்களிலும் கங்கை யமுனை இவைகளின் சங்கமஸ்தலத்தை உத்தமமென்றுரைக்கிறார்கள். வெளுத்தும் கறுத்தும் இருவிதமான நிறமுடைய இந்த தீர்த்தத்தை பிரமாதிதேவர்களும் ரிஷிகளும் மனிதர்களும் ஆவலுடன் அடைகிறார்கள். ஸ்ரீமகாவிஷ்ணுவின் திருவடிகளிலிருந்து உண்டானதால கங்காநதி புண்ணியநதியாகும். சூரியனிடத்திலிருந்து உண்டானதால யமுனையும் அத்தன்மையதே. ஆகையால இவ்விரண்டின் சங்கம உத்தமமானது. எவ்வாறெனில், நினைத்தவர்களின் கஷ்டத்தை நாசம்செய்வதும், சுபத்தை உண்டுபண்ணுவதும், சமஸ்தர்களுடைய பாபத்தை க்ஷீணப்படுத்துவதும், சமஸ்தமான உபத்திரவங்களை போக்கடிக்க வல்லதுமாம் இக்கடற்கலையுடுத்த ஞாலத்தில் எத்தனை புண்ணியக்ஷேத்திரங்கள் இருக்கின்றனவோ அவைகளெல்லாவற்றுள்ளும் இந்த கங்கா யமுனா சங்கமமாகிய பிரயாகையென்கிற க்ஷேத்திரமானது மகாபுண்ணியகரமானது. இந்த க்ஷேத்திரத்தில் நான்முகக்கடவுள் ஸ்ரீமந்நாராயணனை உத்தேசித்து அநேக யாகங்கள் செய்தார் அத்தன்மையாகவே ரிஷிகளும் இங்கு யக்ஞங்கள்செய்தார்கள். உலகங்களிலிராநின்ற மற்ற தீர்த்தங்களெல்லாவற்றிலும் அபிஷேகம் செய்துகொள்வதினால் எப்பலன்கிடைக்குமோ அப்பலன் இந்தகங்காநதியின் ஒரு திவலையினால் நனைக்கப்பட்டவனுடைய புண்ணியத்தில பதினாறில ஒருபாகத்திற்குச் சமமாகாது. இந்த கங்காநதிக்கு ஆயிரம பதினாயிரம காதவழிக்கு அப்புறமிருப்பினும் மகாபாபியானவன கங்கை கங்கையென்று சொன்னால் பாபரகிதனாகிறானென்றால இந்த கங்கையின சமீபத்தில இருப்பவர்கள்விஷயத்தைக் கேட்கவேண்டுமோ? ஸ்ரீமகாவிஷ்ணுவின திருவடிகளில் உற்பத்தியாகி விசுவேசுவரருக்கருகில செல்லும இந்த கங்காநதியைத்தவிர வேறெந்த நதிதான் ரிஷிகள்முதலானவர்களால அடையத்தகுந்த உத்தமநதி? இவ்வாறின்மணலை நெற்றியில்தரிப்பவனுக்கு நெற்றியில விழியும சிரஸில சந்திரகலையும உண்டாகின்றன. மங்களகரமான இந்நதியில ஸ்நானம்செய்பவனுக்கு விஷ்ணு சாரூப்பியமே கிடைக்கிறதாயின மற்றோர்விசேஷம் விளம்பவேண்டுமோ? இந்நதி பாபிகளுக்குக கிடைப்பதருமையே இந்த நதியில் ஸ்நானம்செய்தால பாபிகளும் பரிசுத்தர்களாய திவ்யவிமானாரூடர்களாய் ஸ்ரீவிஷ்ணுலோகத்தை அடைகின்றார்கள். மேலும் இதில புனலாடிய புண்ணியபுருஷர்கள் தங்கள் மாதாபிதாக்களுடைய குலங்களை உத்தாரணம் செய்வித்து ஸ்ரீவைகுண்டத்தில விளங்குகின்றார்கள். கங்கையை தூய்மையான மனதுடன ஸ்மரிக்கிறவன் சகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து சகல புண்ணியக்ஷேத்திரங்களிலும் வாசஞ்செய்த பலத்தை அடைகிறான். இந்த கங்கையில தீர்த்தமாடியவனைப் பார்த்தபாபியும் சுவர்க்கத்தை அடைகிறான், ஸ்பரிசித்தவன் இந்திரபோகத்தை அடைகிறான. இந்த நதியின் மிருத்திகையை சிரஸில் தரிப்பவன் ஜடாதாரனாகவும், தேகத்தில் தரிப்பவன் சிவசாந்நித்தியத்தை அடைபவனுமாகிறான். இந்த மிருத்திகையைத் தரிப்பவனைப பார்ப்பவன் பிரமமான நித்தியசூரிகள்ஸேவிக்கும் ஸ்ரீ

வைகுண்டத்தையடைகிறான் துளசிவேரிலும் ஸ்ரீவிஷ்ணுபக்தர்களுடைய திருவடிகளிலும் கங்கையிலும இருக்கும தூளியானது ஸ்ரீவிஷ்ணுசாயுஜ்ஜியத்தை யடையச்செய்யவல்லது. மனிதர்களுக்குக கஙகையும, துளசியும, ஸதிரமான விஷ்ணுபக்தியும, தருமம் சொல்லுபவர்களிடம் பக்தியும் மிக துர்லபமானவை பாகவதர்களின திருவடி தூளியும், கங்கை மிருத்திகையும், துளசியின வேரமண்ணும, தருமோபதேசிகளிடதது பக்தியும் மனிதனை விஷ்ணுலோகததை யடையசசெய்கிறவைகள நான கஙகைக்கு எபபோது போவேன, எபபோது கஙகையைத தரிசிபபேன என்று கவலையுற்றிருக்கும் மனிதன விஷ்ணுலோகத்தை அடைகிறான ஓ ஸநதகுமாரரே! இன்னும் விஸதாரமாகச சொலலவேணடியதென்ன? இநத கஙகையினமகிமையை அநேக நூறுவருஷங்கள் ஸாக்ஷாத் ஸ்ரீஹரிபகவானால சொல்லபபட்டாலும முடியாது பகவானமாயை ஜகததை மோகிககிற ஆச்சரியததைபபாரும். கஙகையெனற பெயர இருககுமபோதே மாயாபீடிதர்களாய இந்நாமததை ஸ்மரிககாமல ஜனங்கள நரகததை அடைகிறார்கள. கஙகையென்கிற நாமமும் துளசியும பகவதகுணானுபவம செய்கிறவர்களிடதது பக்தியுமாகிய விவைகள் சமுசாரமாகிற வலையை அறுககும கததிகள ஒருதரமாகிலும் கங்கையை ஸமரிககிறவன சகலபாபஙகளினின்றும விடுபட்டு பரிசுத்தனாய் ஸ்ரீவைகுணடததை யடைகிறான கங்கைககுபபோகிறேனெனகிற உறுதியுடன மூன்றுயோஜனைவழியாவது போகிறவன சமஸதபாபஙகளற்று சாவலோகாதிபதியாகிறான இநத மகாபுணணியமானதும் நதிசிரேஷ்டமானதும சுபகரமானதுமான கஙகாநதியானது எபபோதும சமஸதலோகஙகளையும பரிசுததமசெய்கிறது இநத கஙகாநதியானது கோதாவரி, துஙகபத்திரை, பீமா, கிருஷ்ணா, நருமதை, சரஸவதி, காவேரி, யமுனை, பாகுதைவேத்திரவதி, தாமிரபரணி, சததருமுதலிய சமஸத நதிகளிலும எப்போதுமிருந்துகொணடிருககிறது ஓ பிராமணர்களே, சாஸதிரஙகளில் மகரிஷிகளால எந்தவெந்த புணணியநதிகள் சொலலபபட்டிருககினறனவோ அவைகளில் எலலாஜலஙகளிலும இருந்துகொணடு சமஸதலோகங்களையும பரிசுத்தப்படுத்துகிறது. ஸ்ரீமகாவிஷ்ணு சமஸதங்களிலும் வியாபித்திருக்கிறதுபோலும, ஆகாசம் எஙகும தோறறுகிறதுபோலும, இந்த கங்கையும் எலலாவிடங்களிலும் பாபததை நாசமசெய்துகொணடு வியாபித்திருக்கிறது. சமஸ்தலோகங்களையும் ஸநானபானஙகளால் பரிசுத்தபபடுத்தும இந்த கங்கையை ஜனங்கள ஏன அடைவதிலலே? அந்தோ! வாராணசி என்னும் க்ஷேத்திரமானது சகல தீர்த்தஸதலஙகளிலும் க்ஷேத்திரங்களிலும் உத்தமமானது. சாவதேவர்களாலும் ஸேவிக்கப்படுகினற உத்தம க்ஷேததிரம். கங்கை, யமுனைகள் சஙகமஸதலமான பிரயாகை அதினும் சிறந்தது. இதைக் கண்டமாத்திரத்திலேயே மனிதர்கள் மோக்ஷத்தையடைகிறார்கள். இந்த கஙகையானது மகரமாததில சகலஜலங்களிலும் இருந்து எல்லா உலகங்களையும் பரிசுத்தபபடுத்துகிறதுமனறி சுவர்க்கத்தையுமடையச்செய்கிறது. இத்தன்மையான கஙகையை ஜகத்துக்கு சுகத்தை உண்டு

பணனின்ற சங்கரபகவான் எப்போதும் தரித்திருக்கிறார். அவருடைய மகிமையைச் சொல்ல யாரால்தான சாத்தியமாகும்? லிங்கரூபியான சிவனும், ஸ்ரீஹரியும ஒருவர்தான், சற்றேனும பேதமின்று. ஆகையால் பேதத்தைக் கற்பிக்கிறவர் மகா பாபிகளாகிறார்கள். ஆதியந்தமில்லாத பகவான் ஒருவரே ஹரியென்றும் சங்கரனென்றும் சொல்லப்படுகிறார். புத்தியற்ற மூடர்களான பாபிகள் பேதபுத்தி யுடையவராகிறார்கள். ஆதிகாரணமாயும் லோககாரணனுமாகின்ற ஸ்ரீமந்நாராயணனே யுகாந்தகாலத்தில் இந்த ஜகத்தை ருத்திரரூபியாயாகி பக்ஷிக்கிறான். சிருஷ்டிகாத்தாவான பிரமனும சம்ஹாரகாத்தாவான ருத்திரனும், ஸ்திதிகாரணனான விஷ்ணுவும ஒருவரே; பேதமின்று. இம்மூவர்களை பேதமாய் எண்ணுகிறவன சந்திர நக்ஷத்திரங்களிருக்குமளவும நரகவாசமபண்ணுபவனாகிறான். பிரம விஷ்ணு ருத்திரர்களை எவன ஒருரூபமாகவே பாவிக்கிறானோ அவன் மோக்ஷத்தை யடைகிறான் என்பது சகலசாஸ்திர அபிப்பிராயம். அப்படிப்பட்ட அனாதியாயும் சர்வக்ஞனுயும ஜகத்காரணனுயும் சர்வவியாபியாயுமிருக்கிற ஸ்ரீமந்நாராயணனே அந்த கங்காநதியில லிங்கரூபியாய் எழுந்தருளியிருக்கிறா. இந்த காசியிலிருக்கும் லிங்கம ஜ்யோதிர்லிங்கமென்று சொல்லப்படுகிறது ஆகையால் அதை தரிசித்தவன பரப்பிரமமத்தையடைகிறான். சிலை, மிருத்திகை, மரம, கல், படம் இவைகளில செய்யப்பட்ட சிவபிம்பமாவது விஷ்ணுபிம்பமாவது எதுவாகிலும் உத்தமமானதுதான். அதில ஸ்ரீஹரியானவர் சாந்நித்தியமாயிருக்கிறா துளசிக்காடும், தாமரைத்தடாகமும், புராண பாராயணமும் எங்கெங்கிருக்கிறதோ ஆங்காங்கு ஸ்ரீஹரி சாந்நித்தியமாயிருக்கிறார். ஓ பிராமணோத்தமர்களே, எவன தனக்காவது பிறருக்காவது புராணம படிக்கிறானோ அவனை சந்தேகமில்லாமல ஹரியென்றே எண்ணவேண்டும எவன் மனோவாக்குக்காயங்களினால பக்தியுடன சிவனையாகிலும் ஸ்ரீமந்நாராயணனையாகிலும் பூஜிக்கிறானோ அங்கும பகவான எழுந்தருளியிருக்கிறா. புராண சம்ஹிதைசொல்லுகிறவன் ஸ்ரீ ஹரியென்று சொல்லப்படுகிறான். அவனிடத்தில பக்திசெய்பவன பிரதிதினமும கங்காஸ்நானஞ்செய்தபலனடைகிறான. புராணங்கேட்பதில் உண்டாகும் பக்தி கங்காஸ்நானத்துக்கும், புராணஞ்சொல்பவரிடத்து பக்தி பிரயாகையில்செய்யும் கருமங்களுக்கும் சமமானவை. புராணங்களை உபதேசிப்பதினாலும தர்மோபதேசஞ்செய்வதினாலும ஜனங்களை சம்சாரசாகரத்தினின்று கரையேற்றுபவனை சந்தேகமில்லாமல ஹரியாகவே பாவிக்கவேண்டும். கங்கைக்குச்சமமான தீர்த்தமும், தாயுக்குச்சமமான குருவும், விஷ்ணுவுக்குச்சமமான தெய்வமும், ஆசாரியனுக்கு அதிகமான தத்துவமும் இல்லை [இதிலசொல்லியவாறு குருக்களுக்குள் மாதா முக்கியமென்பதும், தீர்த்தங்களுக்குள் கங்கை முக்கியமென்பதும்போல் தெய்வங்களுக்குள் ஸ்ரீஹரிமுக்கியரென்பதும் திண்ணமுரில் இதற்கு முன்னும்பின்னும் ஹரியையாவது ஹரனையாவது பூஜிப்பது சமமென்றும், அவ்விருவரும் சமரென்றும், அவர்களுள் வேற்றுமை நினைப்பவனுக்குக் குற்றமுண்டென்றும் சொல்லியவற்றின் கருத்து என்னவெனில் ஹரிக்

குச் சமமான தெய்வமில்லையென்பதேயாகிலும் சிவாதிபூஜைசெய்பவரும் சர்வாந்தராத்மாவான ஸ்ரீமந்நாராயணனுகவே பாவித்துச் செய்யவேண்டுமென்பதேயாம்] மந்திரங்களுக்குள் வேதத்தைப்போலும், தெய்வங்களில் பரமாத்மாபோலும், தனத்தில் வித்தைபோலும், நதிகளில் கங்கையாகும். வருணங்களுக்குள் பிராமணவருணமெப்படியோ, நக்ஷத்திரங்களுக்குள் சந்திரனெப்படியோ, சமுத்திரங்களுக்குள் திருப்பாற்கடலெப்படியோ அப்படியே தீர்த்தங்களுக்குள் கங்கையாகும் பொறுமையினுமுயர்ந்த பந்துவும், சத்தியத்தினுமுயர்ந்த தபமும், மோக்ஷத்தினுமுயர்ந்த பேறும், கங்கையினுமுயர்ந்த நதியும் கிடையாது. சிறப்புள்ள கங்கையின் நாமம் பாபமாகிய காட்டைகொளுத்தும் நெருப்பு, சமுசாரமாகிற ரோகத்தை நிர்மூலமாக்கும் ஔஷதம் ஆகையால் பிரயத்தினத்துடன் கங்கையை யடையவேண்டும். கங்கையும் காயத்திரியுமாகியவிரண்டும் பாபமனைத்தையும் நாசம்செய்யத்தக்கவை, ஆகையால் இவ்விரண்டிலும் பக்தியில்லாதவன் பதிதன என்றறியவேண்டும். காயத்திரி சந்தஸ்களுக்கு மாதா. கங்கை இந்தவுலகமாதா. இவையிரண்டும் சகலபாவநாசத்துக்கும் காரணமானவை விஷ்ணுபக்தியுடன்கூடிய இவையிரண்டும் சாவாபீஷ்டங்களையும் சாதிக்கத்தக்கவை. காயத்திரி எவனிடத்தில் பிரசன்னமாயிருக்கிறளோ அவனுக்கு கங்கையும் பிரசன்னமாகிறுள் சதுர்விதபுருஷார்த்தங்களுக்கும் பலன்களாய், நிஷ்களங்கமாய், உத்தமமாயிராநின்ற இந்தகாயத்திரி கங்கைகள் சகலலோகங்களையும் அநுக்கிரகிப்பதற்காகவே பிரவாதித்தனா இந்தகங்கையும், காயத்திரியும், துளசியினிடத்தும் விஷ்ணுவினிடத்தும் பக்தியும் மனிதர்களுக்குக் கிடைப்பது அருமை. இந்தகங்கை நினைத்தமாத்திரத்தில பாபத்தை நாசம் செய்யும், தரிசனமாத்திரத்தில விஷ்ணுலோகத்தை அடைவிக்கும், பானம் செய்தால விஷ்ணுசாரூப்பியத்தைத்தரும, இந்நதியில ஸ்நானம்செய்தவாகள் சிலாக்கியமான விஷ்ணுலோகத்தையடைவார்கள் அநாதியாயும், வாசுதேவனுயும், லோகசிருஷ்டிகாத்தாவுமான ஸ்ரீமந்நாராயணமூர்த்தி கங்காநாமத்தை உச்சரிப்பவர்களுக்குக் கோரியபலனைக் கொடுக்கிறுர் மனிதசிரேஷ்டனுன எவன்மேல கங்காநதியின ஜலத்திவிலைபடுகிறதோ அவன் சகலபாபங்களினின்றும் விடுபட்டவனுய் மோக்ஷத்தையடைகிறுன் பூர்வம் இந்த கங்காநதியின் நீர்த்திவிலைப்பட்டதினுல் சகரவம்சஸதர்கள் ராக்ஷதத்தன்மையைவிட்டு பரமபதத்தையடைந்தார்கள்

௭-வது அத்தியாயம்.

பாகு உபாக்கியானம்.

சௌனகாதிரிஷிகள் சூதபௌராணிகரை நோக்கி கூப்பினகையராய் ஓ பௌராணிகரே, சகரவம்சத்தில் ராக்ஷசத்தன்மையிலிருந்து விடுவிக்கப்பட்டவர் யாவர்? சகரனென்பவன் யாவன்? எங்கே உண்டானவன்? பகீரதனன்றோ கங்கையைக் கொண்டுவந்தவன்? இவையெல்லாவற்றையும் அடியேங்களுக்கு விஸ்தாரமாகச் சாதித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அப்போது சூதபௌராணிகர் பின்வருமாறு விளம்பலாயினர்.

ரிஷிகளே கேளுங்கள் முன்னம் நாரதமகரிஷியால் ஸநத்குமாரபகவானுக்கு உபதேசிக்கப்பட்ட உத்தமமான இந்தச்சரித்திரத்தைச் சொல்லுகிறேன். நீங்கள் அனைவரும் இந்தக்கங்கையின் பிரபாவத்தைப் பக்தியுடன்கேட்க உத்தேசித்திருப்பதால் சந்தேகமின்றி மகானுபாவர்களும் கிருதார்த்தர்களுமாயினீர்கள். பிரமவாதிகளான மகரிஷிகள் இந்தக்கங்கையின் பிரபாவத்தை சிரவணம்செய்வது புண்ணியசாலிகளுக்கும் கிடைத்தல் மிக அரிது என்கிறார்கள். ஓ மகரிஷிகளே, சகரவம்சமானது எவ்விதம் இந்த கங்காஜலாபிஷேகத்தினால் மோக்ஷத்தையடைந்ததோ அப்படிப்பட்ட உத்தமமானதாய் மகத்தான ஆச்சரியத்தை உடைத்தானதாய் அதி அற்புதமாய் விளங்காநின்ற சரித்திரத்தைக்கேளுங்கள். சூரியன்வம்சத்திலே விருகன் என்பவனுக்கு பாகுவென்றொரு புத்திரனுதித்தனன் தர்மபரனான அவன் அறநெறி சிறிதும் தவறுதலின்றி பூமண்டலாதிபத்தியம்செய்துகொண்டுவந்தனன் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திராதிய சதுர்வர்ணத்தினரையும் ஏனையோர்களையும் அவரவர் குலாசாரக்குறைவு நேரிடாவண்ணம் பரிபாலித்துவந்ததால் அந்தபாகுராஜனுக்கு லோகாதிபதியென்கிற பெயர் தகுந்ததாயிற்று ஓ பிராமணோத்தமர்களே, அந்தபாகுராஜா சப்தத்வீபங்களிலும் எழுபது அசுவமேதயாகம் செய்ததுமன்றி தனது கிரகத்தில் புஷ்பமுதலிய மங்களத்திரவியங்களினால் சமஸ்ததேவர்களையும் பூஜித்துவந்தான் நீதிசாஸ்திரவிசாரத்தினால் காலத்தைக்கழித்து சத்துருக்களை ஜயித்ததினால் கிருதார்த்தனென்றும் சகல ஜனங்களுக்கும் உபகாரம் செய்கிறவனென்றும் நினைக்கப்பட்டான். அவனது ஆக்ஷியிலுள்ள பிரஜைகளுக்கு விசனமென்பதே தெரியாது. சதாகாலமும் சுகிகளாய் சந்தனாதிகளை பூசிக்கொண்டு ஆபரணாலங்கிருதராயிருந்தார்கள். அந்தகாலத்தில் பூமி உழாமலே விளைந்தது. மரங்கள்முதலியன பூரணமாய் பழங்களுடனும் புஷ்பங்களுடனும்கூடியிருந்தன. அந்தந்தகாலங்களில் தேவேந்திரன் மழையை வருஷித்துவந்தான். ஓ மகரிஷிகளே, பிரஜைகளின் மனது பாபத்தில் பிரவேசித்ததேயில்லை. தர்மபரிபாலனம்செய்துவந்தமையால் ரிஷிகள் நிர்விக்கினமாய் தபம்புரிந்துவந்தனர். சமஸ்தசாஸ்திரங்களின் மெய்ப்பொருளை உணர்ந்தவனும், நன்றியறிந்தவனும், சுபலக்ஷணமுடைய

வனுமான பாகுமகாராஜன் தனது குணஙகளால பிரஜைஜகளை நட்புறச்செய்து கொணடு இநத அவனிமுழுதும அரசுபுரிந்துவநதான இவ்விதமாய் பரிபாலித்துவநத அமமகாராஜனுககு சமஸத சமபததையும நாசமசெய்யவல்லதாய பொறுமையுடனகூடிய பேராசைககுக காரணமான அகஙகாரமுணடாயிறறு அதாவது நான் அரசன், சமஸதவுலகஙகளையும ஆள்பவன, பலிஷ்டன, நான அநேக மகஙகளியற்றினேன, ஆகையால் என்னைவிட யாவராலும் பூஜிக்கததக்கவன யாவனுளன? மேலும் நான் பணடிதன்; வனப்பு வாய்ந்தவன, சமஸத சத்துருககளையும ஜயித்தேன, சகல துவீபஙகளையும் ரக்ஷிக்கிறேன், சகல துஷடாகளையும சிக்ஷிதது அடககியிருககிறேன், நானே குணமுள்ளவன, வேதவேதாஙகஙகளை பரிசீலிதது அவைகளின் உணமையை அறிநதிருக்கிறேன, நீதிசாஸதிரததிலோ பணடிதன, ஒருவராலும் ஜயிககமுடியாதவன, குறைவிலலாத சமபத்துடையவன, ஆகையால என்னையன்றி பிரபு எவனிருககிறான? என்று இவவிதமான அஞ்ஞானததினு லுணடான அகஙகாரமானது சகலசமபததும நாசமாகவேணடியநிமிததம உணடாயிறறு எவனிடததில அகஙகாரமிருககிறதோ அவனிடததில காமககுரோதாதிகளும அவசியமாயிருககும இவைகளினால மனிதன நசிபபது திணணம. மனிதாகளுககு யௌவனம, விசேஷதனம, பிரபுததன்மை, புததியினமை இவை நானகில ஒனறிருநதாலே கெடுதியைககொடுககும. நானகும ஒனறுகூடியிருநதால கெடுதிககுக கேட்கவேணடுமோ? ஆகையால் சமஸதஜனஙகளிடததும விரோததததையும தேகநாசததையும சகல சமபத்துநாசததையும தராநினற அசூயை பொறுமைமுதலிய துாக்குணங்கள் பாகுராஜனுககு உணடாயிறறு அது சரியானதே ஏனெனில விவேகமிலலாத மனிதனுககு உணடாகும சம்பததானது சரதகால நதிபோல குறையுமேயலலது ஸதிரமாயிராது அசூயையுளளவாகளிடமிருக்கும் தனமானது பெருஙகாறறில அகபபடட உமியும நெருபபும்போல இருந்தவிடம் தெரியாதுபோய்விடும ஆகையால பிறரைககண்டு சகியாமையாகிற அசூயையுடைய்வாகளுககும, டமபமான ஆசாரமுடையவாகளுக்கும், எவருக்கும் குரூரமானவாாததை சொலலுகிறவாகளுககும் இகலோகததிலும பரலோகத்திலும சுகமே கிடையாது அசூயை குடிகொணட மனததினரும், குரூரவார்த்தை சொலலுபவரும், பெணடாகளுக்கும பிளளைகளுக்கும பந்துக்களுக்கும் சததுருககளாகவேயிருபபாாகள் ஒருவனுககு பிறருடைய சம்பததைபபாாததுணடாகும் அசூயையானது தனககுள்ள யாவற்றையும் அடியோடு வெட்ட சம்பாதித்த கணடகோடாரியென்று எண்ணவேண்டும். இந்தவிஷயத்தில் சற்றேனும ஐயமிலலை பிறா சமபத்தைககணடு அசூயைப்படுபவன் தனசொந்த சிரேயஸின நாசத்துக்கு முயற்சிசெய்பவனே. ஓ பிரமமோத்தமாகளே, தன மிததிரா, புததிரா, ஸதிரீ, நிலங்கள், தனம், தானியம, கீர்த்தியாகியவிவைகள நசிக்கவேணடுமென்கிற எண்ணங்கொணடவன்தான், பரசமிருத்தியைக் கணடு பொறுமை யடையவேணடும். ஆகையால் பொறுமை குடிகொணட சித்தனான இந்த பாகு அரசனுககு

வெகு பலவான்களான ஹேஹய தாலஜங்காதிகள் சத்துருக்களானார்கள். அதனால் பெருத்த ஆபத்து உண்டாயிற்று. ஸ்ரீய:பதியின் அருளுடையோனுக்கே சகல ஐசுவரியமும் உண்டாகின்றன அவர் பராமுகமாயிருக்கப் பெற்றோனுக்கு சகலமும் நாசமடைகின்றன. அப்பகவானது கடாக்ஷமிருக்கும்பரியந்தமே பாரியாபுத்திர பந்துமித்திர கிருகக்ஷேத்திர தனவாகனாதிகள் நிலைகின்றன. முரடர்களும், குருடர்களும், செவிடர்களும், மூடர்களுமாகிலும் மாதவன் கடாக்ஷம்பெற்றவராகில சூரர்களும் விவேகிகளுமாய்ப் புகழப்படுவார்கள் சம்பத்து நசிக்கவேண்டியவனுக்கே அசூயைமுதலிய துர்க்குணங்களும், பிராணிகளிடத்து துவேஷமும் உண்டாகின்றன. அவை விஷ்ணுகடாக்ஷமின்மையையறிவிக்கும் அகங்காரம் விவேகத்தை நாசஞ்செய்கிறது, அதாவது அவிவேகமுண்டாகிறது பின்பு அவிவேகத்தின் பரிஜனங்களான ஆபத்துகள் உண்டாகின்றன ஆகையால் ஆபத்துக்கு ஆதிகாரணமான அகங்காரத்தை நீக்கிவிடவேண்டியது. அகங்காரம் உண்டாகும்போதே அசூயைமுதலிய துர்க்குணங்கள் உண்டாவதால் அகங்காரமுள்ளவன் உடனே நாசத்தை யடைகிறான் அசூயையுடன்கூடிய அந்த பாகுராஜனுக்கு சத்துருக்களுடன் ஒருமாதகாலம் இடைவிடாமல் மகாபயங்கரமான யுத்தம் உண்டாயிற்று. அவ்யுத்தத்தில் சத்துருக்களால் ஜயிக்கப்பட்டு அந்த பாகுராஜன் தனது பத்தினியுடன் ராஜ்ஜியத்தைவிட்டு வனம்போயினன். அங்கு அந்த ராஜபத்தினியினது கர்ப்பத்துக்கு பயந்த சத்துருக்களான ஹேஹயாதிகளால் அந்த கர்ப்பநாசநிமித்தம் அவளுக்குவிஷம் கொடுக்கப்பட்டது. இவ்வாறு விஷத்தைப் பக்ஷித்து விசனப்படும் கர்ப்பிணியான தனது ஸ்திரீயுடன் அந்த பாகுராஜன் மகாவிசனாக்கிராந்தனாகி காட்டில் அலைந்து, கொடும்வெயிலில் அடிபட்டு, பசியாலும் தாகத்தாலும் பீடிக்கப்பட்டு, தன் பிராரப்தகருமங்களைக் குறித்து அழுதுகொண்டு, அவுர்வமகாமுனிவருடைய ஆசிரமத்தையடைந்து, அத்தபோவனத்தில் ஒரு பெரிய தடாகத்தைக்கண்டு மகத்தான ஆனந்தத்தையடைந்தான். மகா அசூயையுள்ள அவனுடைய சுபாவத்தையறிந்து அத்தடாகத்திலிருந்த பக்ஷிகளெல்லாம் மறைந்து பின்வருமாறு சொல்லிக்கொண்டன. ஓ பக்ஷிகளே, வெகு கஷ்டம். மகாபாபியான இந்த பாகு வருகிறான்; இவனைக்கண்ணுற்றுத் தத்தமிருப்பிடங்களில் மறையுங்கள் என்றன. இவ்விதம் பக்ஷிகளும் அசூயையுடைய சித்தனான அவனைப்பார்த்து நிந்தித்ததால் ஜகத்துக்கு வெறுப்பையுண்டுபண்ணுகின்ற மகாகஷ்டமான அசூயையை விட்டுவிடவேண்டுமன்றோ? பாகுராஜன் அந்த சரசிலிறங்கி ஸ்நானம்செய்து, வேண்டுமளவு பானம் செய்து, மரத்தடியில் உட்கார்ந்து, தனது ஸ்திரீயுடன் சிரமபரிகாரம் செய்துகொண்டிருந்தான். இவ்வாறு வனத்தையடைந்து மகா கஷ்டத்தையநுபவிக்கிற ராஜனுடைய துர்க்குணங்களை எண்ணி அவனுடைய ஆக்ஷிக்குட்பட்டிருந்த பிரஜைகளும் அவனை நிந்தித்தார்கள். எப்படிப்பட்டவனாயினும் நல்லகுணமுள்ளவனே சிரேஷ்டன். அகண்ட ஐசுவரியத்தையுடையோனாயினும் துர்க்குணமுடையவன் சகல ஜனங்களாலும் நிந்திக்கப்படு

வான். உலகத்தில் அபகீர்த்திக்குச் சமானமான மிருத்தியுவும் கீர்த்திக்குச் சமானமான தாயும் இல்லை. பாகுராஜன் வனமடைந்ததனால் அவனுடைய தேசத்திய ஜனங்களில் ஒவ்வொருவரும் தங்களுடைய சத்துருக்கள் கொல்லப்பட்டால் எவ்வளவு சந்தோஷத்தையடைவார்களோ அவ்வளவு சந்தோஷமடைந்தார்கள். ஓ பதிவ்ரதாசிகாமணிகளே, இவ்விதமாய் நிந்திக்கப்பட்ட பாகுராஜன் வனத்தில் நடைபிணமாயினன். அபகீர்த்தி எவனையும் நாசஞ்செய்துவிடும். அபகீர்த்திக்குச் சமானமான மிருத்தியுவும், கோபத்துக்குச் சமானமான சத்துருவும், நிந்தைக்குச் சரியான பாபமும், மோஹத்தையொத்த பயமும், அசூயைக்கு ஒப்பான அபகீர்த்தியும், காமத்துக்குச் சரிசமான நெருப்பும், ஆசைக்குச் சரியான பாசமும், சங்கத்தைப்போன்ற விஷமும் இல்லையென்று நினைத்து துக்காக்கிராந்தனாகி அழுது மனோவியாதியால் தேகம் மெலிந்து ரூபபையடைந்து இவ்விதமாய் அவ்வாவாசிரமத்தில் வருத்தப்பட்டுக்கொண்டிருந்து, வியாதிபீடிதனாய், வெகுகாலஞ்சென்று மரணத்தையடைந்தான். கர்ப்பிணியாயிருந்த அவனது மஹிஷியும் நிர்ஜனமான காட்டில் அதிக துக்கத்துடன் அழுது சககமனஞ்செய்ய உத்தேசித்து, விறகுகளைச் சம்பாதித்து, சிதையை அடுக்கி, அதில் தன் பர்த்தாவை வைத்துத் தானும் ஏறப்போனாள்.

அப்போது மகாதபஸ்வியும் தேஜோவானுமான அந்த அவ்ர்வமகாரிஷியானவர் ஞானதிருஷ்டியில் இந்த விருத்தாந்தமெல்லாம் அறிந்து, மகாபதிவ்ரதையான அந்த ராஜமஹிஷி ரோதனம்பண்ணிக்கொண்டிருந்த ஸ்தானத்தையடைந்தார். மகானுபாவர்களாயும் தேஜோநிதிகளாயுமிருக்கிற ரிஷிகள் பூத, பவிஷ்யத், வர்த்தமானமென்கிற முக்காலங்களையும் அறிவார்களாகையால் இந்த மகரிஷி இதை அறிந்தவராயினார். ஓ பிராமணோத்தமர்களே, இவ்விதமாகச் சிதையில் அக்கினிப்பிரவேசஞ்செய்ய முயலாநின்ற ராஜபத்தினியைப்பார்த்து மகரிஷி தருமமானமொழிகளைப் பின்வருமாறு உரைப்பாராயினர்: ஓ ராஜசிரேஷ்ட பத்தினியே, மகாபதிவ்ரதையான நீ இத்தன்மையான சாஹசகாரியத்தைச் செய்யலாகாது. ஏனெனில் நினது கருப்பத்தில் சத்துருக்களை அதோஹதஞ்செய்யத்தகுந்தவனும், சக்கிரவர்த்தியாகும்படியானவனுமான புத்திரன் இருக்கிறான். ராஜஸ்திரீகளும், இளங்குழந்தைக்காரிகளும், கர்ப்பவதிகளும், ருதுவாகாதபெண்களும் சககமனஞ்செய்யலாகாது. உத்தமரிஷிகளால் பிரமஹத்திமுதலிய மகாபாபங்களுக்கும் பிராயச்சித்தம் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் டம்பனுக்கும், யாவரையும் நிந்திப்பவனுக்கும், கர்ப்பத்தைச் சேதஞ்செய்பவனுக்கும், நாஸ்திகவாதஞ்செய்பவனுக்கும், செய்ந்நன்றி கொன்றோர்க்கும், தருமத்தில் உபேக்ஷைசெய்கிறவனுக்கும், சினேகிதத்துக் கெடுப்பவனுக்கும் பிராயச்சித்தமில்லை என்கிறார்கள். ஆகையால் இவ்விதமான காபகாசமாகிற மகாபாபத்தைச் செய்யலாகாது. தற்காலம் உண்டாயிருக்கும் துக்கமெல்லாம் சீக்கிரத்தில் சமனத்தையடையுமென்றிவ்வாறு கூறச் செவியுற்ற பதிவ்ரதாசிகாமணியான ராஜபத்தினி அம்மகரிஷியின் அனுக்கிரகத்தை நம்பி அவர் திருவடி

களில் பணிந்து அழுதாள் சகலசாஸதிரங்களையும் ஐயந்திரிபறவுணர்ந்த அவர்வமகரிஷியும் அந்த ராஜபத்தினியைப்பார்த்து அம்மா, அழாதே, நல்ல சமபததை யடையப்போகிறாய், கணணீர் விடவேணடாம். அபபடிவிடும கணணீர் உண்மையில் பிரேதமானவாகளை கெடுத்துவிடும் ஆகையினால் விசனததைவிட்டு இபபோது செய்யவேணடிய கருமஙகளைசசெய் பணடிதனிடத்திலும, மூடனிடத்திலும, தரித்திரனிடததிலும, சம்பத்துளளவனிடததிலும், கெட்டநடகையுள்ளவனிடததிலும, யதியினிடததிலும, எவ்விடத்திலும் மிருததியு சரியாகவே இருக்கிறான அவனுககு வித்தியாசமே இல்லை ஒவ்வொருவனும் பட்டணததிலாயினும், காட்டிலாயினும், சமுததிரத்திலாயினும், மலையிலாயினும, இன்னும எஙகேயாயினும் அவனவனசெய்த கருமபலனகளை அனுபவிததே தீரவேணடும. மேலும மனிதாகளுககு துககஙகள் எப்படி அபேக்ஷிககபபடாமலே உணடாகின்றனவோ அபபடியே சுகஙகளும உணடாகினறன ஜனமாநதரததில எநதெநத கருமஙகளைச் செய்கிறோமோ அவைகளையே இஙகு அனுபவிககிறோம இதறகு தெய்வம்தான் காரணம. வேறு காரணமொனறுமிலலை ஓ அரவிநதம், போன்ற வதனத்தையுடைய நஙகாய்! பிறநத ஒவ்வொருவனும் காபபத்திலாகிலும், பாலலியததிலாகிலும, பருவததிலாகிலும, முதுமையிலாகிலும், எபபோதாகிலும அவசியமாய மிருததியுவுக்கு சுவாதீனமாகவேண்டும. சாக்ஷாத் கோவிநதனாகிய பகவான அதனதன கருமானுசாரமாக ஒவ்வொரு ஜந்துவையும் ரக்ஷித்தும் சமஹரிததுமவருகிறா இபபடி இருகக பிறப்புக்கும் இறப்புக்கும ஹேதுமாததிரமாயிருககும ஜநதுககளை அந்த பிறபபு இறப்புகளுக்கு முதற்காரணமாய் மூடாகள தெரியாது கூறுவர். ஆகையால் இந்த துக்கததைவிட்டு பாத்தாவுககுச செயயவேணடிய உததரகிரியைகளைச்செய்து விவேகவிஷயததால தைரியமாயிருததலவேணடும துககஙகளை அனுபவிதது வருந்துவதற்கு ஹேதுவான கருமபாசததினால் கட்டுணட இந்த உடல் பலதுனபஙகளாலும பிணிகளாலும் சூழபபட்டிருக்கிறது. இநத தேகததுககாக தகாதகாரியததைச செய்யலாகாது, எனறு இவ்விதமாய் ராஜபத்தினியைத் தேற்றி கருமஙகளை விதிபபடி இயறறுவிததார்.

இவ்விதம் ரிஷியினால் தேற்றபபட்ட ராஜமகிஷியும் தனது துக்கத்தையொழித்து மகரிஷியை நமஸகரித்துச சொல்லலாயினள் ஓ மகரிஷியே, தேவரீரைபபோன்ற ஸாதுககள் பரோபகாரத்தையே செய்கிறாகளென்பதில என்ன ஆச்சரியம. ஏனெனில் மகாவிருக்ஷஙகள் தஙகளுடைய உபயோகத்தின்பொருட்டு பலிக்காமல் இதாருடைய உபயோகநிமித்தமாகவே பலிக்கின்றனவன்றோ? அப்படியே ஸாதுக்களும் ஆகிறார்கள். எவன் துக்கத்தை அனுபவித்துக்கொண்டிராநினற பிறரைப்பார்த்து அவர்களுடைய துக்கநிவர்த்தியாகும்வணணம் பிரியவசனங்களை மொழிந்து துக்கநிவர்த்திசெய்கின்றானோ அவன் ஸ்ரீவிஷ்ணுபகவானுடைய குணமாகிய ஸத்துவகுணநிஷ்டன். ஏனெனில சர்வஜன ஹிதனானதால் சுத்த ஸாத்துவீகனாகின்றான்.

பிறாதுக்கத்தில துக்கிப்பதும் பிறாசுகத்தில சுகிப்பதுமான உத்தமகுண முடையோனை மனுஷ்யரூபம்பூண்ட ஹரியென்றே எண்ணவேண்டும ஸாதுக்கள் சாஸதிரங்களை தங்களுடைய துக்கநிவாரத்தின்பொருட்டு கற்கின்றாரில்லை, இதாருடைய துக்கநிவாரத்தின்பொருட்டே. சூரியனிருக்கிறவிடத்து இருட்டில்லைபோல் ஸாதுக்களிருக்குமிடத்து துக்கபாதை உண்டாவதில்லை, என்று இன்னும் அனேகவிதமாய் மகரிஷியை சிலாகித்தபின்பு பாத்தாவுக்குக கருமமியற்றினாள அந்த பாகுராஜனுடைய பிரேதம் அவ்வாமகரிஷியின கடாக்ஷம பெற்றதால அவ்வரசன் சகலபாவங்களும தொலைந்து பரிசுத்தனாய் அமரேசனைபபோல் அனேககோடி விமானங்களுககு அதிபதியாய் ஸ்ரீவைகுண்டத்தை யடைந்தான ஒ ஸாதுக்களான மகரிஷிகளே, சேஷர்கள் மகாபாபியினுடைய பிரேதசரீரத்தையாகிலும, அதை தகனம்செய்த சாம்பலையாகிலும், புகையையாகிலும, புண்ணியபுருஷன கடாக்ஷித்தால் அந்த பிரேதசரீரத்தையுடைய ஜீவன் பரமபதம எய்துகிறான. பஞ்சமகாபாதகம் செய்தவனாயினும் மற்றும அனேகவிதமான உபபாதகம செய்தவனாயினும் மகான்களால கடாக்ஷிக்கப்பெற்றானாகில பரமபதத்தை யடைகிறானென்பதில் ஐயமில்லை. அவ்வாமகாரிஷியினியமனப்படி தனது பாத்தாவின உத்தரகிரியைகளை நடத்தியபின்பு அம்மகரிஷியின ஆசிரமம்சென்று தினந்தோறும அவருககு ஆதரவுடன் சிசுருஷைசெய்துவந்தாள்.

௮-வது அத்தியாயம்.

சகரசரித்திரமும் சாகரர் கடல்தோண்டியதும்.

பதிவிரதாசிரோமணியான அந்த ராஜபத்தினி களங்கமற்ற சித்தமுடையளாய் பரமபக்தியுடன் ஆசிரமத்தை மெழுகல முதலான பணிவிடைகளை அம்மகரிஷி சந்தோஷமுறச செய்துவந்தனள் இவ்வாறிருக்கையில சிசுருஷை மகாத்மியத்தால சமஸ்தபாபமும் தொலைத்தவளாய் மகாபுண்ணிய தினத்தில விஷத்துடன்கூடிய ஓர்புத்திரனை ஈன்றனள். ஓ மகரிஷிகளே, ஸாதுசங்கமானது மிகுந்த ஆச்சரியமுடைத்து. அது எந்த விஷத்தைத் தான் நாசஞ்செய்யமாட்டாது? எந்த சுபத்தைத்தான கொடுக்கமாட்டாது? எதைத்தான மனிதருக்குச் செய்யமாட்டாது? மகானுபாவர்களுக்குச்செய்யும் சிசுருஷையானது தனக்கு தற்செயலாய் நேரிட்ட பாபத்தையும், தான் தெரிந்துசெய்ததையும், ஒருவனைக்கொண்டு செய்வித்திருந்ததையும, மற்றைய விதமானதையும் நாசம்செய்துவிடும். எப்படி ஒரு கலையளவிருந்தாலும் சந்திரன் ஈசுவரனால் அங்கீகரிக்கப்பட்டதனால் விருத்தியையும பூஜை

யையும் பெறுகின்றனே அப்படி ஸாதுக்களால் பரிக்கிரகிக்கப்பட்டவன் ஜடனுயிருந்தாலும் சமஸ்தர்களாலும் பூஜிக்கத்தகுந்தவனாகிறான். ஓ பிராமணோத்தமர்களே, ஸாதுசங்கமானது இகம்பரமாகிய இரண்டு உலகத்திலும் பரமமான சமிருத்தியைக் கொடுக்கிறது. ஆகையால் ஸாதுக்கள் பூஜிக்கத் தகுந்தவர்கள். மகான்களது குணங்களைப்புகழ யாரால்தான் சாத்தியமாகும்? ஏனெனில் கர்ப்பத்தில் இருந்த விஷமும் கஷ்டமாய்ப்போய்விட்டதன்றே? மகாதேஜஸ்வியான அவுர்வமுனிவரும் விஷத்துடன்கூட உதித்த குழந்தையைக் குளிரக்கடாக்ஷித்து ஜாதகருமமுதலியவைகளை விதிப்படி இயற்றி விஷத்துடன் பிறந்த காரணத்தால் அதற்கு சகரனென்கிற நாமதேயமளித்து தம் தபோமகிமையால் உண்டாகும் தேன் பால் அமுதுமுதலானவைகளால் அதை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்துவந்தார். மந்திரசாஸ்திரத்தில் வல்லவரான அம்மகரிஷி அக்குழந்தைக்கு தகுந்தவயதில் சௌளம்செய்வித்து ராஜநீதி தண்டநீதி முதலான தருமசாஸ்திரங்களை ஓதிவைத்தார். பாலியம் நீங்கி தாருண்ணியபருவத்தை யடைந்து சமர்த்தனாய் விளங்கிய சகரனுக்கு சகல மந்திரபாகங்களுடன்கூடிய தனுர்வேதத்தை உபதேசித்தார். இவ்வண்ணம் அவுர்வமுனிவரால் உபதேசிக்கப்பெற்ற சகரன் பலிஷ்டனாயும், தனுர்வித்தையில் சிறந்தோனாயும், குணசாலியாயும், பரிசுத்தனாயும், தருமசாஸ்திரத்தில் வல்லவனாயும், மகாபராக்கிரமசாலியாயும் விளங்கி அம்மகரிஷிக்குக் காலைதோறும் சமித்து தருப்பை முதலானவைகளை சேகரித்துக் கொண்டுவந்து கொடுத்துவந்தான். இவ்வாறு ஒருநாள் ரிஷி சிச்ருஷையில் விருப்பங்கொண்ட சகரன் தனது மாதாவை சாஷ்டாங்கமாய் தண்டமசமர்ப்பித்து வெகுவணக்கத்துடன் கைகளைக் கூப்பிக்கொண்டு பின்வருமாறு விண்ணப்பம் செய்யலாயினன். அம்மா, எனது பிதா எங்கிருக்கிறார்? அவருடைய நாமம் யாது? ஜாதி என்ன? இவைகளை அடியேனுக்குச் சொல்லவேண்டும். உலகத்தில் பிதாவில்லாமல் ஜீவிப்பவர் இறந்தவர்களோடொப்பர். தரித்திரனாயினும் பிதாவுடையனாயின் அவன் குபேரனுக்குச் சமானமானவனே. தருமமில்லாதவனுக்கு இகபரலோகங்களில் சுகமில்லாததுபோல மாதா பிதாக்களில்லாதவனுக்கு சுகமே கிடையாது ஓ மாதாவே, தந்தையில்லாதவன், ஞானமற்றவன், விவேகமற்றவன், பிள்ளையில்லாதவன், கடனுள்ளவன் இவர்களுடைய ஜன்மம் அப்பிரயோசனமானது. சந்திரனில்லாத இரவுபோலும், தாமரை இல்லாத தடாகம்போலும், பதி இல்லாத ஸ்திரீபோலும், தருமமில்லாத பிராணிபோலும், தனமில்லாத சமுசாரிபோலும், குழந்தையில்லாத வீடுபோலும், விஷ்ணுபக்தி இல்லாத தருமம்போலும், வேத அத்தியயனம்செய்யாத பிராமணன்போலும், அதிதிபூஜையில்லாத கிரகஸ்தனபோலும் தானம்செய்யப்படாத திரவியம்போலும், சத்தியமில்லாத வாக்கியம்போலும், மந்திரி இல்லாத சபைபோலும், தயை இல்லாத தபம்போலும், சற்குணமில்லாத ஸ்திரீபோலும், நீரில்லாத நதிபோலும், பொறுமையை பயக்காத வித்தைபோலும் பிதாவில்லாதவன் பிரயோசனமற்றவன். இரந்துதிரிபவன்போல்

பிதாவற்றவன் எளியவனும் பலதுன்பப்படுபவனுமாவான் என்று சொல்லி முடித்தான்.

இவ்விதமாய் தனபுத்திரனால் சொல்லப்பட்ட வார்த்தையைக்கேட்டு அதிகதுக்கத்துடன் பெருமூச்சுவிட்டு சகரனைப்பார்த்து ஆதிமுதல்நடந்த விருத்தாந்தங்களைச் சொன்னாள். அதைக்கேட்டு கோபத்தினால் கண்கள் சிவந்து இப்போதே சத்துருக்களைக் கொல்லுகிறேனென்று பிரதிஞ்ஞைசெய்து தனது மாதாவையும் மகரிஷியையும் பிரதக்ஷணஞ்செய்து சேவித்து அவர்களால் நியமிக்கப்பட்டவனாய், சத்துருக்களை ஜயிக்கும்பொருட்டு தன் வாக்கு பழுதுபோகாது தான் சுத்தனாகும்படியாக சகரன் அவுர்வாசிரமத்தை விட்டு புறப்பட்டு, குலபுரோகிதரான வசிஷ்டமகரிஷியை யடைந்து, அவர் ஞானதிருஷ்டியால் யாவற்றையும் அறிந்திருந்தும் சகலசமாசாரங்களையும் ஆதியோடந்தமாகத் தெரிவித்தான். அப்போது வசிஷ்டரும் தனது சிஷ்யனுக்கு ஐந்திராஸ்திரம், வாருணாஸ்திரம், பிரமாஸ்திரம், ஆக்கினேயாஸ்திரம் முதலிய அஸ்திரங்களையும், சக்தியையும், சிரேஷ்டமான தனுசையும் ஈந்து அவனை நன்கு ஆசீர்வதித்து விடைகொடுத்தனர். மகரிஷியின் அனுமதி பெற்று சத்துருக்களையடைந்து ஒரேவில்லினால் சத்துருக்களையும் அவர்களின் புத்திரபௌத்திராதிகளையும் தொம்சம் செய்தனன். அந்தத்தனுசினால்விடப்பட்ட பாணங்களாகிற நெருப்பினால் கொளுத்தப்பட்டு சிலர் இறந்தார்கள். சிலர் பயந்து ஓடிப்போய்விட்டார்கள். சிலர் தலைவிரிகோலமாய் மேடான புற்றுகளின்மேலேறி எதிரில் நின்றனர். சிலர் புல்லைக்கடித்தார்கள். நிர்வாணிகளாய் சிலர் ஜலத்தில் பிரவேசித்தார்கள். சகயவனாதிகளும் இன்னும் சிலரும் தங்களைக் காக்கவேண்டுமென்று அந்த சகரனுடைய குலகுருவான வசிஷ்டமகரிஷியை சரணமடைந்தார்கள். ஜயசாலியான சகரன் தன்னால் ஜயிக்கப்பட்ட சத்துருக்கள் வசிஷ்டரை சரணமடைந்தார்கள் என்பதை யறிந்து உடனே அவர் சமீபத்தை அடைந்தான். வசிஷ்டமகரிஷி சகரராஜன் வருவதையும் அவனுடைய சத்துருக்கள் சரணமடைந்திருத்தலையும் பார்த்து தன்னது சிஷ்யனுடைய அபீஷ்ட பூர்த்திக்கும் சரணாகதரக்ஷணத்துக்கும் அனுகூலமாக அப்போதே ஆலோசித்து, சிலரை மொட்டைகளாகவும், சிலரை விரிதலையராகவும், சிலரை தலைமொட்டையாய் தாடிமட்டும் உள்ளவர்களாகவும், சிலரை வேதபாஹ்யர்களாகவும் செய்தார். இவ்வண்ணம் செய்யப்பெற்று பிணங்களைப்போலிருக்கிற சத்துருக்களைப்பார்த்து சிரித்து தபோநிதியான வசிஷ்டரைநோக்கி ஓர்விசேஷம் விளம்பினான்.

ஓ ஆசாரியரே, துராசாரர்களான இவர்களை ஏன் வீணாக ரக்ஷிக்கவேண்டும்? எனது ராஜ்ஜியத்தை அபகரித்த இவர்களை நான் எவ்விதமாயினும் கொல்லவேபோகிறேன்; தருமவிரோதிகளைக்கண்டு அவர்களை ஹதம்செய்யாது உபேக்ஷைசெய்கிறவன் சகலநாசத்துக்கும் காரணமாகிறான் என்பதில் சந்தேகமில்லையன்றோ? துஷ்டர் பலாதிகராயின் உடம்புமறந்து சகல லோகத்தையும் உபத்திரவம் செய்கின்றார்கள். அவரே பலஹீனராயின் மிக ஸாதுக்கள்போலாகின்றார்கள். ஆச்சரியம்! மாயையின் மகிமையைப்பாருங்

களை. பாபபுத்திகளான துஷ்டர்கள் தங்களுக்கு நல்லபலம் உண்டாகிறவரையில் மோசக்கருத்தை உட்கொண்டு அடங்கியிருக்கிறார்கள். க்ஷேமப்படவேண்டியவன் சத்துருக்கள்செய்யும் அடிமைத்தனத்தையும், வேசிகளின் சிநேகத்தையும், பாம்புகளின் ஸாதுத்தனமையையும் நம்பலாகாது. துஷ்டர் முதலில் எந்த பல்லைக்காட்டி சிரிக்கிறார்களோ அந்தபல்லையே தங்கள் சாமர்த்தியம் கெட்டபிறகும் காண்பிக்கிறார்கள். எந்தநாவுடன் குரூரமான வாக்கியங்களை மொழிகின்றார்களோ பலம்கெட்டபிறகு அதேநாவினால் தாழ்மையாய்ப் பேசுகிறார்கள். நீதிசாஸ்திரங்களை அறிந்தவன் தனக்ஷேமத்தை உத்தேசித்தால் துஷ்டர்களின் ஸாதுத்தனமையையும், அவர்கள் அடிமையாகுதலையும் நம்பாதிருக்கக்கடவன். எவ்வளவு வணங்கினாலும் துஷ்டர்களினிடத்து அன்புசெலுத்தாதிருக்கக்கடவன். துஷ்டர்கள் சமயமறிந்து உயிரை அபகரிப்பார்கள். சமயத்தில் வணங்கும் துஷ்டனையும், கபடமுள்ள மித்திரனையும், துஷ்டையான ஸ்திரீயையும் விசுவசிப்பவன் மரணமடைந்தவனே. இதில் சற்றேனும் சந்தேகமில்லை. ஆகையால் பசுவேடம்பூண்டு புலித்தொழில்புரியும் இவர்களை ரக்ஷிக்கவேண்டாம். தேவரீருடைய அநுக்கிரகத்தினால் இந்த சத்துருக்களெல்லோரையும் கொன்று பூமியை அநுபவிக்கிறேன் என்று உரைத்தான். அதுகேட்டு மிகுந்த கிருபையடைந்த வசிஷ்டமகரிஷி சகரனிடம் சரீரத்தைத் தடவிக்கொடுத்து ஓர் விசேஷம் விளம்பலுற்றனர். ஓ மகாபாக்கியவானான சகரனே, நன்று, நன்று. உண்மை புகன்றனை, ஆயினும் எனது வார்த்தையைக்கேட்டு பொறுமையடையவேண்டும். இவர்களை நான் முன்னரே உன் பிரதிஞ்ஞைக்கு விரோதமின்றி கொலையொத்த அங்கப்பழுது செய்திருக்கிறேன். இவர்களைக்கொல்வதினால் உனக்கு என்னகீர்த்தி உண்டு? கருமமாகிற வலையினால் கட்டப்பட்ட சகல ஜந்துக்களும் தத்தம் பாபங்களால் ஹிம்சிக்கப்படுகின்றன. ஆகையால், அப்படிப்பட்டவர்களை நீ ஏன் மாய்த்தல்வேண்டும்? பாபத்தினால் உண்டான இந்த தேகம் முந்தியே பாபத்தினால் ஹதமாயிருக்கிறது. ஆத்துமாவைக்கொல்ல ஒருவனாலும் சாத்தியமாகாது. ஏனெனில் அது நித்தியமும் ஞானபூரணமுமானது என்பது சாஸ்திர உறுதி. அவரவர்கள் செய்தகருமங்களின் பலன்களை அநுபவிப்பதற்கு அவரவரே காரணமாகின்றனர். அக்கருமங்கள் தெய்வமூலமானவை. இந்த ஜகத்து தெய்வாதீனமானது. ஆகையால் தெய்வமே துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் புரிவது. பராதீனர்களான மனிதர்களால் என்னகாரியம்தான் செய்யற்பாலது? இந்த சரீரம் பாபத்தினாலே உண்டானது; பாபத்தினாலே வளர்கின்றது. கொலை பாபமூலமென்று அறிந்தும் ஏன் கொலைக்கு எத்தனம்செய்கிறாய்? ஆத்துமா பரிசுத்தமாயினும் தேகசம்பந்தத்தால் தேகியென்று கூறப்படுகிறது. ஆகையால் இந்தகொலை சந்தேகமில்லாமல் பாபமூலமாகவே யிருக்கிறது. பாபமூலமான இந்த தேகத்தைக் கொல்வதால் உனக்கு என்னகீர்த்தி உண்டாகிறதென்று நிச்சயித்துக்கொண்டு பிறகு இவர்களைச் சம்ஹரித்தல் ஆவசியகமாயின் சம்ஹரி; அவ்விதமின்றேல் விட்டுவிடு என்ற வசிஷ்டமகரிஷியின் வார்த்தையைக்கேட்ட சகரன்

கோபத்தினின்றும் நீங்கினன் வசிஷ்டரிஷியும் சகரனைத் தமது அஸ்தங்க
ளால் தடவி ஆனர்கித்தார். அதர்வணவேதங்களை அறிந்தவரான அம்மகரிஷி
நல்ல விரதசீலர்களான ரிஷிசமூகங்களுடன் மகா பலம்பொருந்திய சகர
னுக்கு மகுடாபிஷேகம் செய்வித்தனர். அச்சகரன் காசியபபுத்திரியான
சுமதியையும் விதர்ப்பராஜன் புத்திரியான கேசினியையும் விவாகம்செய்து
இல்லறம் நடாத்திவந்தனன் இவ்வாறு ராஜ்ஜிய பட்டாபிஷேகமடைந்த
சகரமகாராஜனைப் பார்க்கவேண்டி தபோநிதியான அவுர்வமகாமுனிவர்
எழுந்தருளி ராஜனுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்துவிட்டு தமது ஆசிர
மம் சென்றனர். பின்பு அனேகவருஷங்கள் சென்றும் புத்திரப்பேறின்மை
யால் அவுர்வமகரிஷியையடைந்து கற்புவாய்ந்த அச்சகரபத்தினிகள் புத்தி
ரார்த்தம் பிரார்த்தித்தார்கள் பார்க்கவமந்திர மறிந்த அவுர்வரும் யோகநிலை
யாலுணர்ந்து அவ்விரண்டு ஸ்திரீகளையும்நோக்கிச் சொல்லுவாராயினர் பெண
கள்! வமிசவிருத்திகரனான புத்திரனொருவன் ஒருத்திக்கும் அப்படியல்
லாத அறுபதினாயிரம் புத்திரர்கள் மற்றொருத்திக்கும் உண்டாவார்கள், இவை
களில் எது எவளுக்குவேண்டுமோ அதைக்கேளுங்கள் என்றார். உடனே சமர்
த்தையான கேசினி வமிசவிருத்திகாரணனான ஓர் பிள்ளையையும் மூடையான
சுமதி அறுபதினாயிரம் புத்திரர்களையும் வேண்டினர் ரிஷிவாக்கியத்தின்படி
கேசினி அசமஞ்சஸனென்னும் ஓர் மகவை ஈன்றனள் சுமதியின் உதரத்
தில் அறுபதினாயிரம் பிள்ளைகள் ஜனித்தார்கள் கேசினி புத்திரனான அசமஞ்
சஸன் பாலியத்திலே பயித்தியம்பிடித்தவனைப்போல தகாதகாரியங்களைச்
செய்துவந்தனன் அப்படி கெட்டகாரியங்களைச் செய்துவந்த அசமஞ்சஸன்
சகவாசத்தால் சுமதிபுத்திரர்களாகிய அறுபதினாயிரவரும் துர்நடத்தையுள்ளவ
ர்களாயினார்கள் தந்தையான சகரர் தனதுபுத்திரர் பாலியத்தினால் இவ்வி
தம் செய்கின்றனரென்று நினைத்திருந்தார் துஷ்டர்களுடைய சகவாசம் மிக
வும் கொடியது. அக்கினி சர்வபூஜ்ஜியமானதாயினும் இரும்பைச்சார்ந்த
தோஷத்தால் கருமான் சம்மட்டியால் அடிக்கப்படுகிறதுபோல அசமஞ்
சஸசகவாசம் அறுபதினாயிரவர்க்கும் துர்நடத்தையைக்கொடுத்தது. இந்த
அசமஞ்சஸனுக்கு அம்சுமான் என்ற ஸாதுஜனபக்ஷபாதியும், சுகுணசாலி
யும், தருமநிஷ்டனும், பிதாமகனான சகரமகாராஜனுக்கு ஹிதம்செய்வதில்
பிரியமுள்ளவனுமான ஓர் புத்திரன் உண்டானான். துர்நடத்தையுடையவர்
களும் லோககண்டகர்களுமான அச்சகரபுத்திரர் ஸத்கருமானுஷ்டானம்
செய்யும் ஸாதுக்களுக்கு விக்கினம்செய்துவந்தனர். பிராமணர்களால் யதா
விதியாக ஹோமம்செய்யப்பட்ட ஹவிஸ்ஸுக்களை அந்த சாகரர் தேவதை
களை நிராகரித்து தாங்களே புசித்துவந்தார்கள் சுவர்க்கலோகத்திலிருந்து
அரம்பைமுதலான அப்சரசுக்களை அபகரித்துவந்து பலாத்காரமாய் அளகபா
ரத்தைப்பற்றி யீர்த்து அநேகந்தடவை அவமதித்தார்கள். எப்போதும் கட்
குடியே தொழிலாகக்கொண்ட அந்த துஷ்டர்கள் சுவர்க்கத்திலிருக்கும் பாரி
ஜாதமுதலிய புஷ்பங்களை அபகரித்துவந்து அப்புஷ்பங்களால் தங்களுடைய
தேகங்களை அலங்கரித்துக்கொண்டும் ஸாதுஜனங்களின் தனங்களை அபகரித்

தும் சகல ஸத்கருமங்களையும் நாசம்செய்தும் வந்தார்கள். மகாபலசாலிகளும் பாபிகளுமான அவர்கள் தங்கள் தந்தையாகிய சகரராஜனுடனும் யுத்தம்செய்ய ஆரம்பித்தார்கள். இவ்விதமாய் இவர்கள் துர்நடத்தையைக் கண்டு மகாதுக்கத்துடன்கூடிய இந்திரன்முதலிய தேவர்கள் இச்சாகரருடைய நாச உத்தேசியமாய் ஆலோசித்து பாதலமத்தியத்தில் தன்மகிமை தெரியாவண்ணம் நிஷ்களங்க பரமானந்தரூபியான ஸ்ரீமந்நாராயணனைத் தியானம்செய்யும் விஷ்ணுதுல்லியரான கபிலரையடைந்து தண்டம் சமர்ப்பித்து பின்வருமாறு ஸ்தோத்திரம்செய்தார்கள். ராகத்வேஷாதிரகிதராய் விளங்கி மனுஷ்யரூபியாய் மறைந்திருக்கும் விஷ்ணுரூபியும் தபோநிதியுமான தேவரீரை தண்டம் சமர்ப்பிக்கிறோம். பரமபுருஷரான ஸ்ரீமந்நாராயணனுடைய பக்தரும், உலகானுக்கிரகம் செய்பவரும், சமுசாரமாகிற காட்டைக்கொளுத்தும் தீயாய் விளங்குபவரும், ஞானமுள்ளவரும், மகானும், நிஷ்காமனுமான தேவரீரை அநேகந்தரம் நமஸ்கரிக்கின்றோம். சகரபுத்திரர்களால் உபத்திரவிக்கப்பட்டு தேவரீரை சரணமடைந்திருக்கிற அடியேங்களை ரக்ஷித்தருளவேண்டும் சுவாமியென்று ஸ்துதிசெய்த தேவர்களை சகலசாஸ்திரார்த்தங்களையறிந்த கபிலமகரிஷி யதாவிதியாக பூஜித்து அத்தேவர்கள் சந்தோஷிக்கும்படியான ஓர் விசேஷம் திருவாய்மலர்ந்தருளினார். அமரர்காள்! நீங்கள் இது விஷயத்தில் கஷ்டத்தையும் ஆச்சரியத்தையும் அடையவேண்டியதில்லை. ஏனெனில் சம்பத்து, ஆயுள், கீர்த்தி, பலம் இவைகளின் நாசத்தையடைய வேண்டியவர்களே உலகங்களை உபத்திரவிப்பார்கள். பிரபராதிகளை உபத்திரவிக்கிறவன் சமஸ்தலோகங்களிலும் பாபத்தை அநுபவிக்கிறதில் ஆசையுள்ளவனென்று அறியவேண்டும். எவன் மனோவாக்குக்காயங்களினால் இதரர்களை எப்போதும் உபத்திரவிக்கிறானோ அவனை தெய்வமே சீக்கிரத்தில் கெடுத்துவிடும். இதுவிஷயத்தில் சந்தேகமில்லை. எவன் ஆயுள், சந்ததி, காந்தி இவைகளின் நாசத்தை சீக்கிரத்தில் அடையவேண்டியவனோ அவன்தான் பிறர்களை பீடிப்பான் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அச்சாகரர்கள் இன்னும் சிலதினத்துக்குள்ளேயே நாசமடையப்போகிறார்கள். ஆதலால் அந்த சாகரர்களால் உண்டான துக்கத்தை விட்டுவிட்டு சுவர்க்கத்தை அடையுங்கள் என்று கபிலமுனிவர் சொல்ல, தேவர்கள் அம்மகாமுனிவரை தண்டம்சமர்ப்பித்து சுவர்க்கலோகத்தையடைந்தார்கள்.

இத்தருணத்தில் சகரமகாராஜன் வசிஷ்டர்முதலிய மகரிஷிகளுடன் உத்கிருஷ்டமான அசுவமேதமென்கிற யாகத்தைச்செய்ய வாரம்பித்ததலும் யாகக்குதிரையை அமரேசன் அபகரித்து கபிலமகரிஷி எழுந்தருளியிருக்கின்ற பாதல உலகில் ஒருவர்க்குந் தெரியாமல் கொண்டுபோய்விட்டுவிட்டான். சகரபுத்திரர் அறுபதினாயிரவரும் யாண்டும் தேடியும் குதிரையைக் காணாது வியப்புற்று பாதலத்தையும் பார்க்கவேண்டி ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனைதூரம் பூமியைத்தோண்டி மண்ணைக்குவித்து அவ்வழியாய் பாதலம் அடைந்தனர். அங்கு கோடிசூரியப்பிரகாசமுள்ளவராய் தியானநிஷ்டராயிருக்கும் மகாத்துமாவான கபிலமுனிவரையும் அவரருகில் குதிரையை

யுங்கண்டு, மதிமோசங்கொண்டு, பாபத்தொழிலுக்குத் துணிந்து, அம்முனிவரைக் கட்டபார்த்து இவனை அடி அடி கொல்லு கொல்லு பிடி பிடியென்று அவர்கள் ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். ஆ ஆ இவன் குதிரையைத் திருடிக்கொண்டுவந்துவிட்டு வெகு நல்லவன்போல் எண்ணப்படுதற்காக கொக்குபோல தியானம்செய்கிறான், உலகத்தில துஷ்டர்கள் நல்லவர்போல் வேஷமாத்திரந்தான தரிப்பார்கள் என்று சொல்லிக்கொண்டு அம்முனிவரைக்கண்டு நகைத்தும, சகல இந்திரியங்களையுமடக்கித் தனக்குள் தன் சுவரூபத்தைக் கண்டுகொண்டிருந்த கபிலர் அவர்களது தொழிலை அறியாதுபோலிருந்தார். கேடுகாலம் கிட்டி மதிகெட்டவர்களான அவர்களிற்சிலர் அமமுனிவரை நெருங்கி அவரது கையைப்பிடிக்க சிலர் அவரைப் புடைத்தனர். அப்போது தியானநிலையைவிட்ட அம்முனிவர் உலகத்துக்கு தீங்குசெய்பவர்களான அவர்களைப்பார்த்து வியப்புற்று ஆழ்ந்த கருத்துடனே ஒருவார்த்தை விளம்பலாயினார் செல்வச்செருக்குடையோராகும், பசித்தோராகும், காமவெறிகொண்டோராகும, அங்காரிகட்கும் பகுத்தறிவுண்டாவதில்லையன்றோ? நிதியைவைத்திருந்த பொறையுடைய பூமியே நெருப்புபோலிருக்குமாயின மனிதன அப்பொருளைப் பெற்றவனுக்கில் கேட்க வேண்டியதென்ன? துஷ்டர்கள் நல்லோர்களை பாதித்தால ஆச்சரியம என்னவிருக்கின்றது? ஆற்றுப்பெருக்கு கரையினகணுள்ள மரங்களை வீழ்த்தாமலிருக்குமோ? செல்வமும் பருவமும பிறமனையாளினக்கண் விருப்பமுமாகிய இவைகளிருந்தால் ஒன்றுந்தெரியாமல் மதியுங்கண்ணும் கெட்டுப்போகும். பொனனின் பெருமையைச்சொலல யாராலுமாகாது. ஏனெனில் அதன்பெயர்கொண்ட *ஊமத்தைகூடவன்றோ மதிமயக்குண்டாக்குகின்றது. துர்ஜனனது செல்வம தீக்குத்துணைபபட்ட காற்றுபோலும், பாமபுக்குவார்த்த பாலபோலும உலகத்துக்குக் கெடுதிசெய்யும. பொருட்செருக்கினால, மனிதன் கண்ணிருந்தும கண்கெட்டவனாகிறான. கண்தெரிந்தவனாகில அவன தனக்கு நலத்தைத் தேடிக்கொள்ளாது தீங்குவிளைத்துக்கொள்ளுவனோ? என்று இவ்விதமாக உரைத்து கோபமூண்டு தமது கண்ணினின்றும் அக்கினியை விடுத்தார் அந்த அக்கினி அச்சகரபுத்திரர்களைவரையும் அப்போதே நீறாக்கியது. அவ்வக்கினியைக்கண்டு பாதலலோகத்திலிருக்கும சகலஜந்துக்களும் அகாலபபிரளயம நேரிட்டதாக நினைத்து பரிதபித்தன. அத்தீயால சாபபங்களும் ராக்ஷதர்களும் வருந்தப்பட்டு சமுத்திரத்துக்குட் சென்றனர். ஸாதுக்களுக்குக் கோபம்வந்தால அதைத் தாங்கவல்லவரில்லையன்றோ?

இவ்வமையத்தில் நாரதபகவான் அசசகராஜனது வேள்விச்சாலையை நணுகி அவர்களெல்லோரும் மடிந்தசெய்தியை அவ்வரசனுக்குத் தெரிவித்தனர். எல்லாமறிந்த சகரசக்கிரவர்த்தியார் இசசெய்திகேட்டு மகிழ்ந்து அக

* பொன்னின்பெயர் யாவும் ஊமத்தையையும உணர்த்துமென்று அமரகோசம் கூறுகின்றது.

கொடியவர்களை தெய்வமழித்ததென்று சொன்னார். நாடோறும் தருமவிரோதமான கருமங்களைச்செய்பவர் தாய் தந்தை சகோதர புத்திரராயினும் சத்துருக்களாவார்கள் தனக்குரிய தருமத்தில் விருப்பமற்றவனுடைய உலகத்தார்க்கு இடர்செய்துகொண்டிருக்குமவனை சத்துருவென்றே உணரவேண்டுமென்று சாஸ்திரங்கள் உறுதியாயுரைக்கின்றன. துர்ஜ்ஜனர்களழிவது ஸாதுக்களுக்கு நன்மையாதலால் சகரரானவர் தமது பிள்ளைகளின் அழிவைப் பற்றி சோகமுறவில்லை புத்திரனில்லாதவர்களுக்கு யாகத்தில் அதிகாரமில்லாமையால் அந்த சகரசக்கிரவர்த்தி தனது பேரனும், அசமஞ்சஸன் புத்திரனும், நல்லபுத்திமானும், பேசவல்லவனுமான அம்சுமானென்பவனை புத்திரனிடமாக வைத்துக்கொண்டு குதிரையைக் கொண்டுவரும்படி ஆஞ்ஞை செய்தார் அவனும் அப்பள்ளவழியாக பாதலஞ்சென்று தேஜோராசியான கபிலரைக்கண்டு வந்தனைவழிபாடியற்றி அதனால் சீற்றமற்றிருக்கும் அம்முனிவரருகில் கைகுவித்துநின்று விண்ணப்பஞ் செய்தனன் ஓ சுவாமி, ஸாதுக்கள் பிறரிழைத்த பிழைகளை பொறுப்பதுமன்றி அவர்க்கும் நற்புத்தியளிக்கவல்லவரன்றோ? ஆதலால் தேவரீர்விஷயத்தில் என் தந்தைகள்செய்த கடுந்தொழிலைப் பொறுத்தருளவேண்டும் ஸாதுக்கள் துஷ்டர்கள்விஷயத்திலும் அருள்செய்வதே திண்ணம் சந்திரன் தனது பிரகாசத்தைச் சண்டாளன் வீட்டிற் செலுத்தாமலிருப்பனோ? நல்லவன் தான் வருத்தமுற்றினும் யாவருக்கும் அருளேபுரிகுவன் தேவர்களால் உண்ணப்பட்டும் சந்திரன் சந்தோஷத்தையே வழங்குகின்றான். சந்தனமரம் வெட்டப்படினும், அறுக்கப்படினும், அரைக்கப்படினும் மணமே கொடுக்கும் அதுபோல நல்லோர்கள் தாம் வருந்தியும் பிறர்க்கு இன்பமே விளைவிப்பர். மகாமுனிவர்கள் தமது பொறுமை, தவம், நல்லொழுக்கம் இவைகளால் உலகங்களையெல்லாமாளவல்ல மகாபுருஷர்களென்று சான்றோருரைக்கின்றனர் வேதவடிவாய், பரமாத்துமாவுக்கு உகப்பான ஒழுக்கமுடையோராய், எப்போதும் பரமாத்துமாவைத் தியானஞ்செய்பாநின்ற மகரிஷியே, தேவரீருக்கு அநேகநமஸ்காரம் செய்கின்றேன், என்றிவ்வாறு தோத்திரஞ்செய்ய கபிலர் பிரசன்னராகி அம்சுமானைப்பார்த்து உனக்கென்னவேண்டும் அதைக்கேள் கொடுப்பேனென்று அன்புடன் வினவினர். கபிலரிங்ஙனம் திருவாய்மலர்ந்தருள அம்சுமானும் சுவாமி, எனது தந்தைமார்கள் பிரமலோகஞ்சேரும்படியான கிருபை புரியவேண்டும் எனப் பிரார்த்தித்தனன். கபிலமுனிவரும் அவனது வேண்டுகோளுக்கிணங்கி சந்தோஷித்து உரைப்பாராயினர். உனது பௌத்திரன் கங்கையைக்கொண்டுவந்து இவர்களை பிரமலோகம் சேர்ப்பான். அப்புண்ணிய தீர்த்த கங்கை இவர்களுடைய பாவத்தைத்தீர்த்து பரமபதமளிக்கவல்லது பின்னர், இக்குதிரையை உனது பிதாமகன் புரிகின்ற யாகத்துக்கு உதவியாகும்படி கொண்டுபோ, எப்போதும் தருமத்தில் சிரத்தையுடையவனாயிரு; உனக்கு மங்களமுண்டாகுக, என்று சொல்லக்கேட்டு அம்சுமான் அவருக்கு வந்தனையியற்றி குதிரையைக் கொண்டுவந்து பாட்டனாரிடத்தில் ஒப்புவித்து நடந்தசெய்தியையும் சொன்னான்.

அந்த அம்சுமானுக்குத் திலீபனென்று ஓர் புத்திரனுதித்தனன். திலீபனுக்குப் பகீரதன் பிறந்தான். இந்தப் பகீரதன்றான் கங்கையைக்கொண்டுவந்தவன். பகீரதன் வம்சத்தில் மகாபலம்பொருந்திய சுதாசனென்பவன் பிறந்தான். அவன்குமாரன் சௌதாசன், இவன் உலகின்கண் பிரசித்தமான கீர்த்திபெற்றவன். இவன் மகரிஷி வசிஷ்டருடைய சாபத்தால் ராக்ஷசவுருவடைந்து கங்கைத்துளிகள் நனைத்தமாத்திரத்தில் அவ்விராக்ஷசரூபம்நீங்கி சுயரூபமடைந்தான்.

௯-வது அத்தியாயம்.

சௌதாச உபாக்கியானம்.

சௌனகாதிரிஷிகள் புராணஞ்சொல்லிவந்த சூதபௌராணிகரை நோக்கி, ஓ தெளிவான அறிவுள்ள பௌராணிகசிரேஷ்டரே, சௌதாசனென்னும் அரசன் வசிஷ்டமுனிவராலேன் சாபமடைந்தனன்? பின்னர் எவ்வாறு கங்கைத்துளிகளால் சாபத்தினின்று நீங்கினன்? கங்கையின் பெருமை கேட்பவர்க்கும் சொல்பவர்க்கும் பாவமகற்றுமாதலால் இச்சரித்திரமுழுதும் எங்கட்குச் சொல்வீராகவென்று வினவினர். அப்போது பௌராணிகர் சொல்லலுற்றார்.

சகலதருமங்களையும் உலகநடைகளையும் அறிந்தவனும் மனோவாக்குகாயங்களிற் பரிசுத்தனுமான சௌதாசனென்னுமரசன் தருமத்தில் இச்சையுடையவனாய் எழுகடலுக்குட்பட்ட பூமியைச் சகரசக்கிரவர்த்தியார் ஆண்டுவந்தாற்போலவே அறமுறை பிறழாது தேகவலுக்குன்றாது புத்திரபௌத்திராமுதலியவெல்லாச் செல்வங்களுடன் முப்பதினாயிரவருஷம் ஆக்ஷிபுரிந்துவந்தனன். அவன் தன்னரசாக்ஷிகாலத்திலொருநாள் வேட்டையாடவிருப்பங்கொண்டு மந்திரிமார் புடைசூழ சேனைகளுடன் வனம்புகுந்து, விலங்கு முதலியவற்றைக்கொன்று, நடுப்பகலில் மிகுந்த தாகங்கொண்டு நருமதையாற்றையடைந்து, அவ்வாற்றில் ஸ்நானஞ்செய்து, அநுஷ்டானமுடித்து, போஜனஞ்செய்து மந்திரிகளுடன் அன்றையயிரவு அவண்தங்கியிருந்தனன். மறுநாட்காலையிலெழுந்து காலைக்கருமங்களை முடித்து வேட்டை விருப்பத்தால் வெளிப்பட்டுக் காட்டில் திரிந்தான். இப்படி வெகுநாள் திரிந்துவருங்காலத்திலொருநாள் அக்காட்டைவிட்டு மறுகாட்டுக்குச்சென்று அம்பு தொடுத்துக் களவிழுந்து ஓர் மானைத் துரத்தி மந்திரிகளைவிட்டுத் தன்னந்தனியனாய் அம்மான் சென்றவழியே ஏகுகையில் ஓர் குகையில் புணர்ச்சிகெத்தனித்த மிதுனமான புலிகளைக்கண்டனன். பாணமந்திரத்தில் திறவானான அவன் அவைகளைக்கண்டவுடன் முன்துரத்திப்போன மானின் வழியைவிட்டு அப்புலிகளுக்கெதிர்சென்று தன்னம்பினால் அவற்றில் பெண்புலியைக் கொன்றுவீழ்த்தினன். அப்புலி விழும்போது முப்பதுயோசனை உயரமுள்ள பயங்கரசரீ

ரத்துடன் பிரளயகால மேகமுழக்கம்போன்ற தொனியுடன் ஓர் ராக்ஷதனுகி வீழ்ந்தது. இவ்வாறுவீழ்ந்த ராக்ஷதனைப்பார்த்து மற்றொருபுலி இதற்கு பதில செயவேனென்று சொல்லி அதிகவேகத்துடன் ஓடி மறைந்தது. இவ்வாச்சரியத்தைககண்ட அரசன பயத்தினுல் நடுககமுறுகையில தனது சேனைகள் வந்துசேர்ந்தன. அவன நடந்த ஆச்சரியசெய்தியை மந்திரிகளுக்குச் சொலலிக்கொணடு, சகல அலஙகாரஙகளுடன்கூடிய தன்னகரஞசென்று மனதில் அசசததுடனே முனபோல அறவழிபிறழாது பூமியை ஆக்ஷி புரிந்துவநதனன். இவ்வாறு அனேகநாள் சென்றபினனா அவ்வரசன வசிஷ்டாதிகளான பிரம்மவித்துககளுடன மிகுந்த சிரத்தையோடு அசுவமேதமென்னும் வேள்வி செய்யத்தொடஙகினுன். அவ்வேள்வியில யதாவிதியாக பிரமனமுதலிய தேவாக்கு ஹவிசு அளிககபபட்டது. வேளவிமுடிந்தவாறே வசிஷ்டமுனிவர் ஸநானததுககாக வெளியேபோயினர் அசசமயததில முனனம புலிவடிவாய் புணாசசிககாலததது அவ்வரசனுல பெணடிழவடைந்த ராக்ஷதன அவ்வபராதத்திற்காக கோபஙகொணடு அபபகையை ஒறுககும் வணணம் வசிஷ்டரைபபோல வேஷமபூணடு அரசனிடஞசென்று "ஓ அரசனே, என் போஜனத்துககாக மாமிசம சமைபபையாகில இதோ வந்துவிடுவேன" என்றுசொல்லி மறைந்து அவ்வேஷமாற்றி சமையற்காரன வேஷம் பூணடு மனிதமாமிசததைககொணடு அரசனிடததில கொடுத்தான். அரசனும் அம்மாமிசத்தை தஙகபாத்திரததில வைததுககொணடு குருவின வரவுக்கெதிர்பார்த்துககொணடு நினறுன் குருவான வசிஷ்டர் வநதவுடன் அம்மாமிசத்தை அவருககு சமாபபிததலும அவருமதைக்கணடு அஃதெனனவென்று வியபபுற்று, அதை நரமாமிசமெனககணடு, இவ்வரசன என்ன தியககைடயுளளுயினுன்! உணணவொண்ணுததை எனக்கு ஈந்தானேயென்று ஆச்சரியத்துடன் மிகுந்த கோபமடைந்து ராஜனைநோககி ஓ அரசனே, தின்னவொண்ணுத நரமாமிசத்தை எனபோன்றாக்கு அளிக்கத துணிந்தாயனறே? ஆதலால உனக்கு இதுவே உணவாகக்கடவது ராக்ஷதர் புசிககததக்க நரமாமிசத்தை எனக்குக் கொடுத்ததனுல அமமாமிச முணணைககுத்தகக ராக்ஷதத்தன்மையை இனி நீ அடைவாயாகவென்றார். இவ்வண்ணம் வசிஷ்டர் சாபங்கொடுகக அரசன் அஞ்சி இந்த மாமிசம் தேவரீருடைய உத்திரவினுல்தானே ஈந்தது எனறும், வசிஷடர் சிந்திதது அரசன் ராக்ஷதனுல் வஞ்சிக்கப்பட்டானென்று ஞானதிருஷடியாலறிந்தார். இதற்குள் அரசன் இவ்வசிஷ்டர் பகுத்தறிவின்றி அநியாயமாய் என்னை சபித்தாரேயென்று சீறி ஜலத்தைக் கையிலேந்தி வசிஷ்டருக்கு சாபஙகொடுக்கத் தொடங்கினுன். இத்தருணததில் மதயந்தியென்று பெயர்வாய்ந்த அந்தராஜனது பத்தினி தன பாத்தாவைநோககி விளம்பலாயினள். ஆகற்பாலதான தீவினைப்பயனுமக்கு நேரிட்டது. அதுநிறக வேறு கல்வினைப் பயன் இப்போது வருமோ வராது. ஆகையால கோபத்தை அடக்குவதே தக்கதாகும். எந்தமனிதன் மதிகெட்டவனுய் குருவை அதட்டிப் பேசுகிறுனே அவன் நிர்ஜலருஷியமான காட்டில் பிரமராக்ஷதனுகப் பிறக்கி

ருன் ஐம்புலன்களை வென்று தவம் புரிபவரும் குருவுக்குப் பணிவிடை செய்திருந்தாலதான் பிரமலோகமெய்துவரென்பது சாஸ்திரமுடிபு என்ருள். இவ்வண்ணம் மனையாள் சொல்லக்கேட்டு, அரசன் கோபத்தைவிட்டு, பத்தினியைமெச்சி, சாபத்துக்கென்று கையிலேந்தியநீரை எங்குவிடுவேனென்று மனதில் சிந்தித்து, அந்தஜலம் விடப்பட்ட இடம் நீறாய்ப்போவது திண்ணமென்று எண்ணி, அந்நீரால் தனது பாதங்களை நனைத்துக்கொண்டனன். அந்நீர் பட்டவளவில் அவன்கால்கள் நிறமாறிப்போயின. அதுமுதல் அவ்வரசனுக்கு கல்மாஷபாதனென்று இவ்வுலகில் ஓர் பெயருண்டாயிற்று. இயற்கையிலேயே புத்திமானான கல்மாஷபாதன் மனையாட்டியால் கோபமாறப்பெற்று நெஞ்சில் அஞ்சி அடங்கி கைகுவித்து குருவைநோக்கி ஓ பகவானே, நான் அறிந்து அபசாரப்படவில்லை, எல்லாம் தேவரீர்கள் பொறுத்தருள வேண்டுமென்று சொன்னான். பின்னர் வசிஷ்டபகவானும் துக்கித்துப் பெருமூச்செறிந்து விவேகமில்லாது சாபங்கொடுத்த தன்னைவெறுத்து அரசனுடன் பின்வருமாறு உரைப்பாராயினர்: பகுத்தறியாமைதான் சகலமான ஆபத்துகட்கும் முக்கியமான இடமாகின்றது. உலகத்தில் பகுத்தறிவில்லாதவன் விலங்கோடொப்பான், சந்தேகமின்று. அரசனறியாமலே இக்காரியம் சடுதியில் நேரிட்டது. அங்ஙனமிருக்க அறியாதவனைக்குறித்து நான் விவேகமின்றி இவ்வாறு தீங்கிழைத்துவிட்டேன். எவ்வளவு தாழ்மையானவனாயினும் பகுத்தறிவுள்ளானாகில் சுகத்தையடைவன், அதில்லாதவனோ எவ்வளவு மேலானவனாயினும் துன்பமேயடைவன், அரசனே, எனது சாபத்தால் உனக்கு ராக்ஷசத்தன்மைவரினும் அது என்றுமுள்ளதன்று. பன்னிரண்டுவருஷமட்டுமே யிருக்கும். பின்பு கங்கைத்துளிகளால் நனைந்து, ராக்ஷசவடிவைவிட்டு மறுபடி சுயரூபத்தைப்பெற்று இந்த பூமியை ஆளக்கடவாய். அந்த கங்காஜலத்துளிகள் சரீரத்திலூறுவதால் மெய்யறிவுண்டாகி அதனால் அனுதி கருமக்களிம்பற்று ஸ்ரீ ஹரிக்குத் தொண்டுபூண்டு மோக்ஷானந்தத்தையுமடைவாயாகுக என்று சொல்லி தர்மாத்துமாவான வசிஷ்டபகவான் தமதாசிரமம் சென்றனர்.

உடனே அரசனும் கோரமான ராக்ஷசரூபத்தையடைந்தான். அடைந்ததுமுதல் எப்போதும் தீராப்பசியுந் தாகமுமுண்டாகி அதனால் வருத்தமுற்று கடுங்கோபங்கொண்டு பார்ப்போர்க்கு பயங்கரமான உருவமும் செய்கையுமுள்ளோனாய் ஜனசஞ்சாரமில்லாத அரண்ணியத்தில் திரிந்து, அங்குள்ள மனிதர்கள், பலவிதமிருகங்கள், ஊர்வன, பறப்பன, குதிப்பன என்னுமிவ்வகையான ஜந்துக்களில் அகப்பட்டவைகளையெல்லாம் ஆராய்ச்சியின்றிக் கொன்று தின்றுகொண்டிருந்தான். கேளுங்கள் பிராமணோத்தமர்களே, இவ்விதமாக அவன் திரியுங்காட்டில் சிலவிடத்தில் எலும்புகளும், சிலவிடத்தில் புலவாணமுள்ள பிணங்களும், சிலவிடத்தில் உதிரமும், சிலவிடத்தில் நரம்புகளும் மயிர்களுமாய் அப்பூமியெங்கும் பயங்கரமாயிருந்தது. அவனிவ்வாறு ஆறுமாதத்துக்குள் நூறுயோசனை சதுரமுள்ள காட்டை எங்கும் எலும்புமயமாக்கி மற்றோர்வனத்துக்குச் சென்றான். அந்தக் காட்டிலும்

விசேஷமாய் எப்போதும் நரமாமிசத்தைப் புசித்துக்கொண்டு எலும்புமயமாக்கி, ஒருநாள் தபசிகள், சித்தர்முதலானவர் சேரிடமாகிய நருமதையாற்றங்கரைக்குப் போயினன். அவன் தம் தன் செய்கையாலும், வடிவத்தாலும் யாவருக்கும் பயம்விளைத்துத் திரியும்போது அங்கு ஒரு பிராமணன் தனது மனையாளுடன் கலந்திருக்கக்கண்டு தன்பசி பொறுக்கமாட்டாதவனாய் உடனே ஓடி, ஒரு புலியானது மான்குட்டியைப் பிடிப்பதுபோல அந்தப்பிராமணனைப் பிடித்துக்கொண்டான். அப்போது அந்த பிராமணஸ்திரி தன்பர்த்தா ராக்ஷதன்கையிற் சிக்குண்டதைக்கண்டு, மிகுந்த பயமடைந்து, தலைமேல் கைகுவித்துச் சொல்வாளாயினள். ஓ க்ஷத்திரியவம்சத்திற்பிறந்த மகாராஜாவே, மிகுந்த பயத்தால் வருந்தி உம்மையே சரணமடைகின்ற எனக்கு என் நாயகன் பிராணனைக் கொடுப்பதாகிய மகாவரத்தைக் கொடுப்பீராக. நீர் ராக்ஷதனன்று, சூரியவம்சத்திற்பிறந்த மித்திரசகர் என்னும் பெயருள்ள மகாராஜன். ஆதலால் இந்தப் பாழுங்காட்டில் உம்மைச்சரணமடைந்த ஏழையானவென்னைக் காப்பது உமக்குக் கடமை. பகைவரைவெல்லுந் திறமுள்ள மகாராஜனே, புருஷனில்லாத ஸ்திரி பிழைத்திருந்துஞ் செத்தவட்குச் சரியானவள். பின்னுமிளமையில் விதவையாவதை என்னென்று சொல்லுவேன்! நான் தாய் தந்தையரையும் மற்றெவ்வகைப்பட்ட சுற்றத்தையுமறியேன். என்னாயகனே எனக்கு மேலான சுற்றம், எனதுயிர்க்குயிருமவர்தான். சகலதருமங்களையும் ஸ்திரிகளின் பிழைப்புமுதலியவெல்லாம் நீரறிந்தேயிருக்கிறீர். ஆதலால் யாதொரு பந்துஜனமுமில்லாமல் சிறுகுழந்தையுங் கையுமாய் பரிதபிக்கிற ஏழையானவென்னை ரக்ஷிக்கவேண்டும் மகாராஜாவே. இப்பாழுங்காட்டில் நாயகனில்லாமல் எப்படி இருக்கவல்லேன். உமக்கு நான் மகளென்னுமுறையுறவள். எனக்கு என் நாயகனை அளித்து ரக்ஷிப்பீராக. உயிரைக்காத்தளிப்பதினும் சிறந்த தானம் எக்காலத்துமில்லையென்று சான்றோர் கூறுகின்றனராதலால் எனக்கு பிராணதானம் செய்வீராக. சந்தேகமின்றி நான் உமக்கு மகள்தான். என் கொழுநனை உயிருடன் எனக்குக்கொடுத்து ரக்ஷிப்பீராக, என்றிவ்வாறு சொல்லிக்கொண்டு அந்த பிராமணஸ்திரியானவள் ராக்ஷதத்தன்மையையுடைய மகாராஜனது பாதங்களின் மேல் வீழ்ந்தாள். இவ்வாறு அவள் வேண்டிக்கொண்டும் அவன் சிறிதுமிரக்கமின்றி மான்குட்டியைப் புலி தின்பதுபோல அந்தப்பிராமணனை அநியாயமாய்க் கொன்று தின்றுவிட்டான். பின்பு பதிவிரதையாகிய அம்மாது பர்த்தாவையிழந்ததால் மகத்தான துக்கத்தையடைந்து புலம்பி கோபத்தையடைந்து முன்னம் வசிஷ்டசாபத்தால் அடிபட்டிருக்கும் அவ்விராக்ஷதனுக்குப் பின்னும் சாபங்கொடுப்பாளாயினள். ஓ ராக்ஷதனே, புணர்ச்சிக்குரிமையியிருந்த எனது நாயகனை அநியாயமாய்க் கொன்றாயாதலால் நீ ஸ்திரீசம்போகத்துக்குத் தொடங்குவையாகில் அப்போதே இறக்கக்கடவாய். நீ என் பிரார்த்தனைக்கு இரங்காமல் என் நாயகனைக் கொன்றமையால் நீ என்றும் ராக்ஷதனாகவே யிருக்கக்கடவாய், என்று இரண்டு சாபத்தை ஈந்தனள். அவள்கொடுத்த இரண்டுசாபத்தையுங்கேட்டு மிக்கோபங்கொண்டு வாயால்

நெருப்புப் பொறிகளைக் கக்கிக்கொண்டு உரைப்பானாயினன் ஓ துஷ்டை, நான் ஒரு பிசகுசெய்திருக்கிறேன், இதற்கு ஒரு சாபம் நீ கொடுக்கலாமே யன்றி நியாயமின்றி இரண்டுசாபம் எப்படிக்கொடுத்தாய்? இப்போது என் பிழை ஒன்றுக்கு ஒருசாபமேற்றுக்கொண்டேன். மற்றொரு சாபம் நீ கொடுத்தமையால் இப்போதே நீ யுன்மகனுடன்கூட பிசாசப்பிறவியாகக்கடவாய் என்றான் இவ்விதமாக அவனால் சாபத்தையடைந்து அந்த பிராமணி உடனே தன்பிள்ளையுந் தானும் பிசாசவடிவத்தை யடைந்து பசியால் மிக வருந்தி மிகவும் நடுக்கத்துடன் உரத்த குரலுடன் ரோதனம்பண்ணிக்கொண்டு அவ்விராக்ஷதனும் இவர்களும் ஒருவர்க்கொருவர் பழித்துக்கொண்டு நருமதையாற்றங்கரையில் மற்றொருபிராக்ஷதன்வசிக்கின்ற ஆலமரத்தைச்சேர்ந்தார்கள் அவ்விராக்ஷதன் முன்னால் குருவை அசட்டைசெய்த பாபத்தால் அவ்வடிவத்தை யடைந்து துயரப்பட்டு உலகவிரோதமான காரியங்களைச் செய்துகொண்டு அங்கு வசித்துவந்தான். இவ்வாறு தானவசிக்கு மரத்தண்டைக்குவந்த ராக்ஷதனையும் பிசாசங்களையுங்கண்டு மகாகோபங்கொண்டு பயங்கரமான வடிவுள்ள நீங்கள் இங்கேன்வந்தீர்கள்? என்னைப்போல நீங்களு மிந்த வடிவெடுத்ததாகக் காணப்படுகிறது. நீங்களிந்த உருவமடைவதற்கு ஏதுவாக என்னபாபஞ்செய்தீர்கள்? அதை முழுதுஞ்சொல்லுங்கள் என்று வினவினான் கலமாஷபாதன் அந்த பிரமராக்ஷதன் சொல்லைக்கேட்டுத் தான் செய்தபாபத்தையும் அந்த பாபபிணிசெய்த பாபத்தையும் ஆதியோடந்தமாக அவனுக்குரைத்து பின்னுமொன்று சொல்லலுற்றனன். ஓ மங்களகரனான புண்ணியபுருஷா, நீயார்? நீ இவ்வடிவமாம்படிக்கு என்னசெய்தாய்? நானுனக்கு மித்திரன், எனக்கு உன்வரலாறெல்லாஞ் சொல்லவேண்டும், எவன் மித்திரன்விஷயத்தில் வாய்மையின்றி வஞ்சகம்பேசுகிறானோ அவன் மற்றெவ்வளவு மேன்மைபெற்றவனாகிலும் மனிதருள் மிக இழிவானவனே, அவன் கோடிகோடி யுகபரியந்தம் பாபபலத்தை அநுபவிக்கினும் அந்த மித்திரவஞ்சனைப் பாபமுழுதுந் தீராது மனிதர்கட்கு எத்தனை துயரங்களிருப்பினும் அவையெல்லாம் மித்திரனைக்கண்டவளவில் விலகிப்போகும் ஆதலால், நல்ல புத்தியுடையவன் மித்திரரிடத்தில் எப்போதேனும் வஞ்சகம்புரியத் தகாது. தீராப்பிணி, வறுமை, பொருளிழவு, சோகமுதலிய துன்பமுற்று வருந்துபவனும் தன்மித்திரனைக்கண்டால் உடனே தன் வருத்தமாறிச் சுகமடைவன் என்று இப்படி கலமாஷபாதன் சொல்லக்கேட்டு, ஆலமரத்திலிருந்த பிரமராக்ஷதன் சந்தோஷித்து அறத்துக்குரிய வசனங்களைச் சொன்னான் (அவைகளைக்கேளுங்கள் முனிசிரேஷ்டர்களே,) நான் மகததேசத்து பிராமணன், முன்னால் நான் வேதமுழுதுமோதி தருமமே பெருந்துணையாகக் கொண்டிருந்தேன். என்பெயர் சோமதத்தன் என்பார்கள். நான் எனது வித்தை, பருவம், செல்வ முதலியவைகளால் இறுமாந்து என்குருவுக்கு அகௌரவம் செய்தபாபத்தா லித்தன்மையான சரீரத்தைப் பெற்றிருக்கிறேன். இவ்வுருவம் வந்ததுமுதல் ஒரு க்ஷணப்பொழுதும் எனக்குச் சிறிதேனும் சுகங்கிடையாது. எனக்குப் போதுமான உணவுகிடைக்காமல் அதிக

துன்பப்படுகிறேன். ஆனால் நூறு ஆயிரமென்கிற கணக்கான பிராமணர்களைக் கொன்று தின்றேயிருக்கிறேன். ஆகிலும் என் பசியடங்குவதைக் காணேன். என்னைக் கண்டோரெல்லாம் அஞ்சவும் அருவருக்கவுந் தக்கதாக எப்போதும் மாமிசபக்ஷணமே கதியாயிருந்தும் தீராப்பசியுந் தாகமும் அதனாலுள்ளத்தில் எரிச்சலும் என்னை வருத்தப்படுத்திக்கொண்டேயிருக்கின்றன. எப்படிப்பட்ட மனிதருக்கும் குருவை மதியாமையாகிற பாபம் ராக்ஷதத்தன்மையையுண்டாக்கும் அது எனக்கே உள்ளங்கை நெல்லிக்கனிபோலிருக்கின்றது. ஆதலால், புத்தியுள்ளவன் இந்தப்பாபம் செய்யலாகாது என்று சொல்லக்கேட்ட கல்மாஷபாதன், நேசனே, நீ குருவென்று மெச்சுகிறையே அந்தகுரு எப்படிப்பட்டவர் என்று சாஸ்திரஞ்சொல்லுகிறது, இதைக் கேட்க நான் மிகுந்த ஆவல்கொண்டிருக்கிறேனாதலால் அதை விஸ்தாரமாக எனக்குச் சொல்லவேண்டும் என்று வினவ, சோமதத்தன் சொல்லலுற்றான்.

மித்திரா, அன்போடு பூஜிக்கவும் வந்திக்கவுந் தக்கவர்களான குருமார் பலருளர், அவர்களைச் சொல்லுவேன் உன்மனது புறஞ்செல்லாவண்ணங் கேட்பாயாக. வேதங்களை ஓதுவித்தவரும், அவற்றின்பொருட்களைத் தெரிவித்தவரும், தருமசாஸ்திரமுதலியவற்றின் பொருட்களைச்சொன்னவரும், மந்திரப்பொருளை விளக்குவித்தவரும், நீதிநூலின்பொருளைத் தெரிவித்தவரும், தருமங்களைச் சொன்னவரும், மந்திரங்களிலும் வேதவாக்கியங்களிலும் சந்தேகமவந்ததைத் தீர்த்தவரும், விரதங்களைத் தெளிவித்தவரும், ஆபத்தில் காத்தவரும், பசிவேளைக்கு அன்னங்கொடுத்தவரும், உபநயனஞ்செய்வித்தவரும், நீங்கு அனுகூலமான மந்திரத்தை ... தந்தவரும், தருமபத்தினியின் தந்தையும், தாயுடன் பிறந்தவரும், மூத்தசகோதரரும், தந்தையும், நிஷேகமுதலிய கருமங்களை இயற்றுவித்தவருமாகிய இவர்கள் குருமாரென்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. இப்போது உனக்கு நான்சொன்ன இவர்கள் எல்லாரும் பூசைக்கும் வந்தனைக்கும் உரியவர்களென்பதில் சந்தேகமில்லையென்பதைக்கேட்டு கல்மாஷபாதன் பின்னுங்கேட்கிறான். பலபேர் குருமாரென்று கூறப்பட்டனர் இவர்களுக்குள் யார் சிறந்தவர்? எல்லாரும் சரியானவர்கள்தானோ? உள்ளபடி சொல்லவேண்டும் என்பதைக்கேட்டு, சோமதத்தன் நன்றுநன்று, ஓ புண்ணியாத்துமாவே, நன்றாய்க்கேட்டாய் நீ கேட்டவிஷயத்தைச் சொல்லுகிறேன். நமக்கெல்லாம் சீக்கிரத்தில் பெருநன்மையுண்டாகும். ஏனெனில், நாம் ராக்ஷதத்தன்மையுள்ளவரும் பசிதாகத்தால் பீடிக்கப்படுபவருமாகயிருந்து குருவின்பெருமையைக் கேட்கவுஞ் சொல்லவும் விருப்பமுள்ளவர்களாயிருக்கிறோம். முன் சொல்லப்பட்டவர்களெல்லாம் வந்தனைவழிபாட்டுக் குரியவர்கள்தாம், இவ்விஷயத்தில் சந்தேகமில்லை. ஆகிலும் இதில் மேலான சாஸ்திரமர்மத்தைச் சொல்லுகிறேன்கேளாய், வேதங்கள் கற்பித்தவனும், மந்திரப்பொருளுணர்த்தவனும், தந்தையும், தருமமுபதேசித்தவனும் விசேஷமான ஆசாரியரென்று சாஸ்திரம் கூறுகின்றது. ஆகிலும் சகலசாஸ்திரங்களிலும் மெய்ப்பொருளுணர்ந்தவர்கள் மேற்சொல்லப்பட்டவர்களைவிட மேலான ஒரு ஆசாரியர் உண்டென்று உரைக்கிறார்கள். அவர் யாரெனில், அகாதியரீன

சமூசாரத்திலுண்டான பாபங்களை அறுக்கும் கருவிகளாய்த் தருமவாக்கியங்களுடன்கூடிய புராணங்களைச் சொல்லுகிற வித்துவான்களேயாவர். வேதங்களுக்கு வழிபட்டுச்செய்யும் நற்கருமங்களையும், ஈசுவராராதனம் செய்வதிலுள்ள பயனையும், அவரவர் சக்திக்குத்தக்கபடி தருமங்கள்செய்யுமுபாயத்தையும் சொல்லுபவன் மேலான குருவாவான். சகலவேதப்பொருளின் சாரமானவை புராணங்களென்று சகலமான தேவர்களும் முனிவர்களும் சொல்வதால் அப்புராணங்களைச் சொல்லுகிறவனே மேலான குருவாகிறான். எந்த மனிதன் பிறவிக்கடலைக் கடக்க முயற்சிசெய்கிறானோ அவன் புராணங்களைக் கேட்கக்கடவனென்பது சாஸ்திரங்களின் முடிபு. பிராமணசிரேஷ்டர்கள் சகல தருமங்களையுஞ் சொல்லுவன புராணங்களே என்பார்கள். ஆதலால் அப்படிப்பட்ட புராணங்களைச் சொல்லுபவர்களே பரமகுருக்களென்று திறவோர்கள் அறிந்துகொள்ளல்வேண்டும். வேதங்களைப் பகுதிசெய்த தருமசுரூபியான வேதவியாசபகவான் புராணங்களமூலமாய் சகலதருமங்களையும் வெளியிட்டிருக்கிறார். கேளாய் புத்திமானான அரசனே, தருக்கசாஸ்திரம் பிரசங்கத்துக்குதவியாகும், நீதிசாஸ்திரம் இம்மைக்குதவியான பொருளின்பங்களை சம்பாதிக்க உதவியாகும், புராணங்களோ இம்மைமறுமையாகிய விரண்டிலும் இன்பம்பெற உதவியாகும். எவனெப்போதும் அன்புடன் புராணங்களைக்கேட்கிறானோ அவனது புத்தியானது தருமமே மேலானகதியென்று தெளிவுள்ளதாகும். ஓ அரசனே, இன்னுங்கேள், எப்போதும் விசுவாசத்துடன் புராணங்களைக் கேட்கிறவனுக்கு சகல நற்குணங்களையுமளிக்கத்தக்க ஹரிபக்தி உண்டாகும். புராணங்களைக்கேட்பதனால் மனிதர்களுக்குத் தருமங்களைச்செய்ய மனமுண்டாகும், தருமங்களைச்செய்தால் பாபங்கள் நசிக்கும், தெளிவான அறிவுண்டாகும். அறம் பொருளின்பம் வீடென்னும் நான்குபயன்களையும் விரும்பும் ஸாதுக்கள் புராணங்களைக்கேட்கவேண்டும். அப்படி கேட்டுக்கொண்டுவருவதால் மேற்சொன்ன நான்கும் கூடிவருமென்பதில் ஐயமில்லை. நானோ பிரமசுரூபமறிந்து பேசவல்ல கௌதமரென்னும் முனிவர் கங்கைக்கரையில் சொல்ல சகலதருமங்களையும் கேட்டு, அவைகளை வழுவின்றி அநுஷ்டித்துவந்தேன். ஒருநாள் நான் பரமேசுவரருக்கு பூஜை செய்துகொண்டிருக்கும்போது அந்த குருவானவர் அருகில் எழுந்தருளியும் அவருக்கு தண்டனிடாமல் தேவபூஜையிலிருந்தேன். பிரமதேஜசுக்கிருப்பிடமாய், மிகுந்த ஞானமுள்ளவராய், சாந்தகுணசீலராய் விளங்கும் அக்கௌதம முனிவர் தாம் சொன்னபடி நற்கருமங்களை நான் அநுஷ்டிக்கிற விஷயத்துக்கு சந்தோஷித்தாரேயன்றி தம்மை நானுபசரிக்கவில்லையென்று கோபங்கொள்ளவில்லை. ஆனால் அப்போது என்னால் பூஜிக்கப்பட்ட சகல லோககர்த்தாவாகிய பரமேசுவரர் குருவை அசட்டைசெய்த பாபியாகியவென்னை ராட்சதனாகும்படி செய்தார். உலகத்தில் தெரிந்தாவது தெரியாமலாவது பெரியோர்களிடத்து மதிப்பில்லாமல் இருப்பதாகிய அபசாரம் செய்பவர்களுக்கு கிடைக்கவேண்டிய பேறுகளும் அவைகளுக்கு ஹேதுவான நற்கருமங்களும் சந்ததியும் அழிந்துவிடுகின்றன. பெரியோர்களுக்கு அன்புடன்

பணிவிடை செய்பவனுக்கோ நல்ல செல்வமெல்லாம் கைகூடுமென்று வித்துவான்கள் சொல்லுகிறார்கள் அந்த குருவுக்கு அபசாரப்பட்ட பாபத்தினால் தான் நான் பசியென்னும் தீயாலுள்ளே வேகின்றேன். ஓ மகாராஜனே, நானெப்போது இப்பாபத்தினின்று நீங்குவேனோ அறியேன்.

பௌராணிகர் சொல்லுகிறார். ஓ பிராமணோத்தமர்களே, இவ்வாறு ஆலமரத்துப் பிரமராக்ஷதன் சொல்ல இந்த தருமசாஸ்திரவிஷயமான வினாவிடை கேள்விகளால் அவர்களுடைய பாபம் கரைந்துவிட்டது. அச்சமயத்தில் தமது தோளில் கங்காசலத்தைச் சுமந்துகொண்டு, மகா பிரபுவான விசுவநாதனைத் துதித்து அவரது திருநாமங்களை சங்கீர்த்தனம் செய்துகொண்டு, மகத்தான சந்தோஷத்துடன் மகாதருமசீலரான கர்க்கரென்னும் பெயருள்ள கலிங்கதேசத்து பிராமணரொருவர் அங்கு வந்தார் அவரைக் கண்டு பிசாசியும் அவ்விரண்டு ராக்ஷதர்களும் இரைகிடையாமல் பட்டினியாய்க்கிடக்கிற நமக்கு ஆகாரம் கிடைத்ததென்று கைகளைத் தூக்கிக்கொண்டு அவருக்கெதிர்செல்ல, அவர் கீர்த்தனம்செய்துவந்த பகவந்நாமங்களைக்கேட்டு அவரைக் கொல்லவும் அல்லது நெருங்கவும் வல்லமையற்றவர்களாய் ஒரு வார்த்தை சொல்வாராயினர் ஓ மகாபாக்கியமுள்ள பிராமணரே, ஆச்சரியம்! நாங்கள் முன்னால் ஆயிரங்கோடி கணக்கான பிராமணர்களைக் கொன்று தின்றிருக்கிறோம் ஆயினும் அப்படிப்பட்ட நாங்களும் அஞ்சி விலகி நிற்கும்படி செய்யும் பெருமையுள்ள பகவந்நாமசங்கீர்த்தனம் செய்கிற உமக்கு தண்டனசமர்ப்பிக்கிறோம். பகவந்நாமம் உமக்குக் கோட்டையாயிருந்து ஒருவிதமான தீங்கும் அணுகாவண்ணம் உம்மைக் காக்கின்றது பகவானுடைய நாமங்களைச் சொல்லுகின்றதிலேயே நேரிட்ட ராக்ஷதர்களும் அடங்குகிறார்களென்றால் அந்தபகவானுடைய பெருமை இவ்வளவென்று எப்படி சொல்லலாகும். நீர் விருப்பு வெறுப்பற்ற மகா பிராமணராயிருக்கிறீர். கங்காஜலத்தால் எங்களுக்கு ஸ்நானம்செய்வித்து மகாபாபிகளாகிய எங்களை ரக்ஷித்தருளவேண்டும் ஸ்ரீஹரிக்கு அடிமைசெய்ய உறுதிகொண்டதனால் தான் சமுசாரத்தினின்று தான் கரையேற வல்லவனான பாகவதன் உலகத்தாரில் தன்னையடுத்த யாவரையுங் கரையேற்ற வல்லவனாகிறான் என்று வித்துவான்கள் விளம்புகின்றார்கள். பாபங்களைப் போக்கவல்ல ஸ்ரீஹரிநாமமே பிறவிப்பிணிக்கு மருந்தாகும். அதையே உபாயமாகக்கொண்டு அறிவுடையோன் தனக்கு மோக்ஷத்தைப் பெற்றுக்கொள்ளுகிறான். இரும்பாலாகிய தெப்பத்தைக்கொண்டு நீரைக்கடக்க எண்ணி அதில் ஏறி அதனுடன் முழுகிப்போவதுபோல புண்ணியஞ்செய்யாதவர் மற்றொருவரைக் கரைசேர்ப்பதில்லையென்பது திண்ணம். சகலலோகங்களுக்கும் சந்திரன் சந்தோஷங்கொடுப்பதுபோல நல்லவரும் பிறருக்குச் சுகமே விளைக்கின்றனர். அவர்களுடைய சரித்திரம் மிகவும் அற்புதமானது ஓ பிராமணசிரேஷ்டரே, இப்புவியில் பரிசுத்தமான புண்ணியதீர்த்தங்கள் எத்தனை உளவோ அவையெல்லாங்கூடி கங்காநதியின் ஒரு துளிக்கு நிகராகமாட்டா. திருத்துழாய் தளத்தோடுகூடிய கங்காஜலமானது கடுகத்தனை சிறிது கிடைத்தாலும் அந

னால் ஏழுபதரெண்டு தலைமுறைக்குப் பரிசுத்தியுண்டாகுமென்பது உறுதி. ஆதலால் சகலசாஸ்திரப்பொருளுணர்ந்த மகா புண்ணியவானே, கொடிய பாபஞ்செய்து வருந்துமெங்களை கங்காதீர்த்தங்கொடுத்து ரக்ஷித்தருளவேண்டுமென்று இவ்வண்ணம் அந்த ராக்ஷதர்களால் சொல்லப்பட்ட மேன்மை பொருந்திய கங்காநதியின் மகிமையைக் கேட்டு அந்தபிராமணசிரேஷ்டர் அதி ஆச்சரியத்தையடைந்து உலகங்களுக்கு அன்னைபோன்ற கங்காநதியினிடத்து இவ்விராக்ஷதர்க்கே இத்தன்மையான பக்தியுளதாயின் அந்தகங்கையின் பெருமையையறிந்த புண்ணியவான்களான பெரியோர்களுக்கு பக்தியிருக்குமென்று சொல்லவேண்டுமோவென்று நினைத்து, எல்லாப்பிராணிகளுக்கும் நன்மைசெய்ய மனமுள்ளவன் பரமபதம்பெறுவன் என்று மனதில் தருமத்தை யுறுதிசெய்துகொண்டு, இரக்கமுள்ளவராகி, துளவத்துடன்கூடின திவ்வியமான கங்காதீர்த்தத்தை அவ்வரக்கர்மேல் தெளித்தார். அவ்வரக்கர்கள் அந்த கங்கைத்தீர்த்தத்தினை சிறிதான துளிகள் மேற்பட்டமாத்திரத்தில் ராக்ஷதத் தன்மையைவிட்டுத் தேவரைப்போல விளங்கினார்கள். பிள்ளையோடுகூடின அந்த பிராமணஸ்திரீயும் சோமதத்தனென்னும் மகததேசத்து பிராமணனும் கோடிசூரியப்பிரகாசமுள்ளவராய், சங்கு சக்கரம் கதை முதலியவற்றைத் தரிப்பவராய், ஸ்ரீஹரிக்குச் சமானமான திருமேனியைப் பெற்றவராய், அந்த கலிங்கதேசத்துப் பிராமணனை வாழ்த்திக்கொண்டு ஸ்ரீவிஷ்ணுலோகத்துக்குச் சென்றனர். கல்மாஷபாதராஜனோ தனது முன்வடிவைப் பெறாமல் அவர்களைப்போல பரமபதங் கிடைக்கவில்லையேயென்று மிக்க கவலையுறுமளவில் ஒருவருக்குந்தெரியாத வடிவினளாய் சரசுவதிதேவி தருமத்துக் கேதுவான நல்வார்த்தை ஒன்று சொல்லலாயினள். அஃதென்னென்னில் ஓ மகா பாக்கியவந்தனான அரசனே, நீ துயரப்படவேண்ணாது, இன்னும் ராசசியத்தில் நீ மேலானபோகங்களை அனுபவிக்கவேண்டியிருக்கிறது அதற்குப்பின் உனக்கு முத்தி கைகூடும். நற்கருமங்களால் பாபங்களைத்தீர்த்து விஷ்ணு பக்தியே கதியென்றிருப்பவரெவரோ அவர் வேதவாக்கியங்களால் துதிக்கப்படும் ஸ்ரீவிஷ்ணுபகவானுடைய உலகமெய்துவது திண்ணம் எல்லாப் பிராணிகளிடத்திலும் இரக்கமுள்ளவர்களாய், வேதமோதியவழி நடப்பவர்களாய், ஆசாரியபக்தியே பெரும்பேறாக எண்ணினவர்களான ஸாதுக்கள் பரமபதம் சேர்வது ஸ்திரமன்றோ? என்று இவ்வாறு சரசுவதி தோன்றாவடிவினளாய்ச் சொன்ன வார்த்தையைக்கேட்டு, கல்மாஷபாதராஜன் சாந்தமடைந்து, பூர்வத்தில் தனது ஆசாரியன்சொன்ன வார்த்தையை நினைத்து, கங்காநதியையும் அந்த பிராமணரையும் விசுவேசுவரரையுந் துதித்து, அந்த கலிங்கதேசத்து பிராமணருக்குத் தனது சரித்திரத்தை ஆதியோடந்தமாக மிகவும் சந்தோஷத்துடன் சொன்னன். பின்பு அவ்வரசன் பரமோபகாரியான பிராமணரை முறைப்படி பிரதட்சண நமஸ்கார முதலிய உபசாரத்தால் சந்தோஷிப்பித்து ஸ்ரீவிஷ்ணு திருநாமங்களைச் சொல்லிக்கொண்டே காசிநகரடைந்து அங்கு ஆறுமாதம் வாசஞ்செய்து விசுவநாதனைத் தரிசித்ததனால் பாபரகிதனாய் மகத்தான சந்தோஷத்துடன் தனது ராசசியத்தையடைந்து வசிஷ்டரால் அபி

க்ஷேமசெய்யப்பெற்று மனோரமமியமான போகங்களை அநுபவித்துக்கொண்டு பூமியை ரக்ஷித்து மோக்ஷமடைந்தான் கேளுங்கள் முனிவரரே, ஆதலால் கங்கையின் மகிமைக்கடலின் கரையறியத் திரிமூர்த்திகளாலுமாகாது. கங்கையின்பெயரைக் கேட்பதனால் மனிதன் தனது சகலபாபங்களும் நீங்கி பரமபதத்தையடைவானென்பதில் சந்தேகமில்லை. கங்கை கங்கையென்று அம்மகாநதியின் பெயரை ஒருகால் சொன்னாலும் அப்போதே பாபங்கள் அகலும், பரமபதம் கைகூடும். இந்த அத்தியாயத்தை அன்போடு படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் ஐயமின்றி கங்கையில் ஸ்நானஞ்செய்த பலனுண்டாகும்.

---

௧௦ - வது அத்தியாயம்.

தேவாசுரயுத்தமும் அதிதிதேவியின் தவமும்.

இந்தப்படி சூதபௌராணிகர் அருளிச்செய்யக்கேட்டு, சௌனகாதிகள் ஓ மகாத்துமாவான சூதபௌராணிகரே, இந்த கங்கை ஸ்ரீமந்நாராயணன் திருவடிக்குப் பூஜைசெய்த தீர்த்தத்தால் உற்பத்தியானதென்று முனிவர்களால் சொல்லப்படுகிறதே அதை அடியோங்களுக்கு சாதித்தல்வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். அப்போது பௌராணிகர் ஓ ரிஷிகளே, ஸ்ரீஹரியைத் தியானிப்பதே பெரும்பயனாகக்கொண்டிருக்கிற நீங்கள் எல்லீரும் கேளுங்கள் என்று சொல்லத்தொடங்கினார்.

பூர்வம் மகாத்துமாவான நாரதபகவான் ஸநத்குமாரயோகிகருக்குச்சொன்ன மகாபுண்ணியகரமான சரித்திரமானது சொல்பவர்க்கும் கேட்பவர்க்கும் சகலபாபங்களையும் நீக்கி மோக்ஷபரியந்தமான சகலசுகங்களையும் அளிக்கும். அத்தகைய மகிமைபொருந்திய சரித்திரத்தைச்சொல்லுகிறேன். தக்ஷப்பிரஜாபதிபெண்களும் கசியபப்பிரஜாபதி பத்தினிகளுமான திதி அதிதியென்பவர் இருவருள், திதியென்பாளுடைய உதரத்தில் அசுரர்களும், அதிதியினது கர்ப்பத்தில் தேவர்களும் உதித்தனர். சகக்களத்திமக்களாகிய இவர்கள் ஒருவர்க்கொருவர் பொறாமைகொண்டவர்களாய் ஒருவர் மற்றொருவனைவெல்ல விரும்பிக்கொண்டிருப்பார்கள். பிரஹலாதாழ்வான் புத்திரனான விரோசனனுடைய குமாரனாகிய பலியென்னும் அசுரராஜன் அசுரர்களுக்கெல்லாம் தலைவனாய் மிகுந்த செல்வம்பொருந்திய இப்பூமிமுழுதுந் தனதாக்கிக்கொண்டதுமன்றி சுவர்க்கலோகத்தையும் ஜயிக்க மனம்வைத்திருந்தான். ஓ ரிஷிசிரேஷ்டர்களே, அந்த பலிசக்கிரவர்த்திக்கு பதினாயிரங்கோடி யானைகளும், அவ்வளவு குதிரைகளும், தேர்களும், ஒவ்வொருயானைக்கு ஐந்நூறுவீதுக்காடு காலாட்களுமான பெரும்படையுண்டு. அவனுக்கு அநேக

மந்திரிகளுக்குள் தலைவராகிய கும்பாண்டன் கூபகர்ணன் என்னும் இருவருண்டு அவனுடைய நூறுபிள்ளைகளில் மூத்தானாகிய பாணாசுரன் நீதிநூலறிவிலும் எதிரிகளைவெல்லும் சக்தியிலும் தந்தைக்குநிகரானவன். இவ்வண்ணமான செல்வத்தா லிறுமாந்த அந்த பலிசக்கரவர்த்தியானவன் தனது கொடிகளாலும் குடைகளாலும் ஆகாயத்தில் மின்னல் மின்னுவதுபோலவும், ஆகாயமென்னுங்கடலில் அலைமோதுவதுபோலவும் செய்துகொண்டு தேவர்களை வெல்லுவதற்காக பிரயாணமானான் இவ்வாறு புறப்பட்டு இந்திரபட்டணத்தருகிற்சேர்ந்து தனது சிங்கம்போற் குரூரத்தன்மையுடைய அசுரர்களால் அந்நகரை முற்றுகைபோட்டான். இச்செய்திகேட்டு, இந்திரன்முதலிய தேவர்கள் யுத்தகோலத்துடன் வெளியில்வந்தார்கள். பின்பு சுராசுரர்களுக்கு பிரளயகால மேகமுழக்கம்போன்ற பெருங்கூச்சலுடன்கூடிய பயங்கரமான சண்டையுண்டாயிற்று மிகவும் பயங்கரமான அந்த போர்க்களத்தில் அசுரர்கள் தேவர்கள்மீதும், தேவர்கள் அசுரர்கள்மீதும் கும்பல்கும்பலாக பாணங்களையெய்தார்கள் அப்போது இந்த அசுரர்களைக் கொல்லுகொல்லு, குத்துகுத்து, கிழிகிழி, இவனை வதைக்குரியவன் என்னும் இரைச்சல்கள் உண்டாயின தேவர்களின் பேரிமுழக்கங்களாலும், அசுரர்களின் அட்டகாசங்களாலும், ரதங்களின் சக்கரவொலிகளாலும், அம்புகள்பறக்கிற சப்தங்களாலும், குதிரைகளின் கனைப்புகளாலும், யானைகளின் பிளிறல்களாலும், வில்லுக்களின் டங்காரங்களினாலும் உலகமெங்கும் சப்தமயமாகவேயிருந்தன தேவாசுரர்கள் எய்த படைகளிடித்துக்கொண்டதனால் பெருந்தீயுண்டாய் பயங்கரமாயிருப்பதைக்கண்டு, உலகத்தாரெல்லாம் இதேதோ அகாலத்தில் அக்கினிப்பிரளயம் வந்துவிட்டதெனறெண்ணினார்கள். பளபளப்பாய்விளங்கும் ஆயுதங்களைக் கைக்கொண்டிருக்கும் அசுரர்களின் படையானது இரவில் மேகங்கள்கூடி மின்னல்மின்னுவதுபோலக் காணப்பட்டது. அந்த பயங்கரமான போரில் அசுரர்கள் மலைகளைக்கொண்டுவந்து தேவர்கள்மேல்போட, அவற்றையெல்லாம் இந்திரனானவன் மேகம்போல் காசித்துக்கொண்டு வலுவுள்ள நாராசங்களையெய்து பொடிபடப்பிளந்தான் சிலர் யானைகளால் யானைகளையும், சிலர் தேர்களால் தேர்களையும், சிலர் குதிரைகளால் குதிரைகளையும், சிலர் தடிகளால் தடிகளையும் அடித்தொழித்தனர் சிலர் இருப்புத்தடிகளாலடிபட்டு இரத்தக்குழம்பில் வீழ்ந்தனர். சிலர் அங்கிருந்து கிளம்பி விமானங்களிலேறினார்கள். தேவர்களால் மடிந்த அசுரர்கள் உடனே தேவவடிவைப்பெற்று தேவருடன்கூடி அசுரர்களையே வருத்தினார்கள். பின்பு சுரர்களாலடிப்பட்ட அசுரர்களெல்லோரும் சோர்ந்து பெருமுயற்சியுடன் பலவிதமான ஆயுதங்களால் தேவர்களை அடித்தார்கள் இருப்புலக்கைகள், கேடகங்கள், வாட்கள், கோடரிகள், ஈட்டிகள், இருப்புழலைகள், கத்திகள், தடிகள், தோமரங்கள், இருப்பாணிகள், உலக்கைகள், மரவெட்டிகள், கலப்பைகள், பட்டயங்கள், வேல்கள், கற்கள், பீரங்கிகள், பாலாக்கள், இருப்புத்தடிகள், கைப்பிடிகள், சூலங்கள், கட்டாரிகள், பாசங்கள், சிற்றம்புகள் இன்னுமிவ்வகையான பலகருவிகளால் தாக்கியும், யானை குதிரை முதலியவற்றால் தாக்கியும்,

பயங்கரமான போரை அசுரர்கள் நடத்தினார்கள். அப்போது தேவர்களும பலவிதமான அஸ்திரங்களை அசுரர்மேலெய்தார்கள் இப்படியாக பலவாயிர வருஷங்களு மடங்காமல பயங்கரமான சண்டை நடந்தது. பின்பு தேவர் படை இளைத்து அசுரர்படை வலுக்கவே தேவர்கள் தோற்று தேவலோகத தைக் கைவிட்டு எல்லோரும் ஓடிப்போயினர். ஓடியும் அசுரர்கள் பின் தொடர்ந்துவந்தடிப்பார்களென்ற பயத்தினால் மானிடவடிவம்பூண்டு பூமி யின்மேல திரிந்தார்கள்.

ஸ்ரீமந்நாராயணனேகதியென்று நம்பின மகாத்துமாவும் விரோசனபுத் திரனும அதிக பலமுள்ளவனுமான பலிசக்கரவர்த்தி எங்கும் தடைபடாத ஆளுகையுடையவனாய் நாளுக்குநாள் செல்வம் வளர்ந்துவர, இம்மூன்று உல கங்களையும ஏகசக்திராதிபத்தியம் செய்துகொண்டு, இந்திராதி திக்குப்பால கர் காரியங்களையெல்லாம் தானே செய்துகொண்டு, ஸ்ரீஹரிக்குப பிரீதிபண் ணுவதில் அதிக நோக்குடையவனாய், பலவிதயாகங்கள செய்துவந்தான். இந்திரன்முதலிய தேவர்களவிஷயமாகப பிராமணர்கள் எந்தயாகங்களைச்செ ய்தாலும் அவற்றில அந்த பலிசக்கரவர்த்தியே தேவர்களுக்குச சேரவேண்டிய ஹவிசுக்களை கைக்கொண்டான்

அதிதிதேவியின தவப்பெருமை

அப்போது தேவர்களின் தாயான அதிதியெனபவள் தமமக்கள் தோற்றுப்போய ஒளிந்து திரிவதைக்கண்டு நான வீணுக்குப பிள்ளைகளைப பெற்றவளானேனேயென்று மிகவும கிலேசித்து, இமயமலைக்குப போய், அங்கு இந்திரனுக்குச செல்வமும், அசுரருக்குத தோல்வியும உண்டாக வேண்டுமென்ற விருப்பத்துடன் ஸ்ரீமந்நாராயணனை தியானிப்பதிலூற்ற முள்ளவளாய், முதலில் கொஞ்சகாலம உட்கார்ந்திருந்தும, பின்பு நின்ற வண்ணமாகவும, பின்பு ஒருகாலநிலையாகவும, அதனமேல ஒருகால பெருவிர லால நின்றுகொண்டும, சிலகாலம பழங்களைப புசித்தும, பின்பு சருகுகளை உண்டும, பின்பு ஜலபானமாத்திரமசெய்தும, அதனபிறகு வாயுபக்ஷணம் செய்தும, அதனமேல ஓர்வித ஆகாரமின்றியும் இருந்துகொண்டு, சதஜபித்து ஆனந்தமூர்த்தியாய் எல்லாவுயிர்க்குமுயிராய்விளங்கும எமபெருமானைத தன க்குள தியானித்துக்கொண்டு, ஆயிரந் தேவவருஷகாலமளவாக மிக அருமை யான தவமசெய்துகொண்டிருந்தாள் இவ்வாறு அதிதி தவஞ்செய்கிறசெய்தி கேள்வியடைந்து பலிசக்கரவர்த்தி மாயரூபங்கொள்ளவல்ல பல அசுரர்களை யேவ அவர்கள் தேவர்கள்போலுருக்கொண்டு, அதிதியண்டைக்கு வந்து சொல்லலுற்றார்கள். தாயே, ஏனிந்தக் கடுந்தவந் தொடங்கியிருக்கிறாய், உனதுசரீரம் உலர்ந்துபோயிற்றே, இதனை அசுரர்களறிந்தால நமக்குப பெ ருந்துன்பம் சமபவிக்குமே, உடமபுலர்ந்துபோகக காரணமாய் பசிபியாதி முதலிய துனபங்களுக்கிடமான இக்கடுந்தவத்தை விட்டுவிடக்கடவாய், அதிக பிரயாசைப்பட்டு புண்ணியமதேடுவதைப் பண்டிதர்கள் மெச்சுவாரல்லர். ஆத்துமா உஜ்ஜீவிக்கத்தக்க உபாயத்தைததேட விருப்பமுடையவன தன்சரீ

ரத்தை எப்படியாவது ஜாக்கிரதையாய்க் காத்துக்கொள்ளவேண்டும் அப்படி சரீரத்தைக் காத்தலில் கவனிக்காதிருப்பவர்களே ஆத்துமாவை அழிக்கிறவர்களாகிறார்கள் அதுபோகட்டும் ஓ நற்குணமுள்ள மாதாவே, உனது மைந்தர்களாகிற எங்களை விட்டிருப்பதால் எங்கட்குத் துன்பமுண்டாகின்றது அப்படி யெங்கட்குத் துன்பமுண்டாகாவண்ணம் இத்தவஞ்செய்தலை ஒழித்து எங்களிடம் வரவேண்டும் தாயில்லாதபிள்ளைகள் இறந்தவர்களுக்குச் சமானமேயென்பதிற் சந்தேகமில்லை ஒருவனுக்குத் தாய்வீட்டிலில்லாமலும் பாரியை கடியன் பேசுபவளுமாயிருந்தால் அந்தவீடு காடாகுமாதலால் அவன் காட்டுக்கேபோயவிடலாம் பசு பக்ஷி பாம்பு முதலியவைகூட தாயில்லாவிடின் சுகம்பெறுவதில்லை ஆகலால் அவை செத்தவைபோலாகும் மனிதன் மிகுந்த வறுமையடையினும், பிணிகளால் வருத்தமுறினும், நாடுவிட்டு மறுநாடுபோய் கிலேசமுறினும் தாயாரைப் பார்த்துக்கொண்டிருக்கப் பெற்றால் துன்பங்களனைத்தும் நீங்கி இன்பத்தைப் பெறுபவனாகிறான் அன்னம் பானம் பொருள் பெண்டிர் முதலியவற்றின்மேல் ஒருகால் ஒருவனுக்கு வெறுப்புவருவதுண்டாகிலும் ஒருகாலும் தனது தாயின்மேல் வெறுப்புவாராது எவன் தனதுவீட்டில் தாயிருக்கப்பெற்றிலனோ, பிள்ளைகள் தருமசிந்தையுள்ளவரல்லரோ பதிவிரதையானவள் கணவனை தனதுயிராகக்கருதியிருக்கும் தன்மையாயினவளல்லளோ அவன் காட்டுக்கே ஓடிப்போகவேண்டும் ஸ்ரீமந்நாராயணபக்தியில்லாத தருமங்களும், சுகமனுபவிப்பதற்குதவாத பொருளும், பெண்டுபிள்ளைகளில்லாத வீடும் எப்படியோ தாயில்லாத மனிதனும் அப்படியே வீணானவன் ஆதலால் அம்மா! துன்பப்படுகின்ற உனது மக்களாகிய எங்களைக் காத்தளிக்கும்பொருட்டு எழுந்துவா என்றிப்படி தேவரூபர்களான அசுரர்கள் தேவவாக்கியமாகச்சொல்லி வேண்டவும், அதிதியானவள் தவநிலையைவிட்டுச் சிறிதும் பேசாமல் பரமாத்துமாவைத் தியானிப்பதே பொருட்டாகக்கொண்டிருந்தாள் அப்போது அந்த அசுரர்கள் அவளைக்கொல்ல வெண்ணங்கொண்டு, பிரளயகாலமேகமுழக்கம்போல் கர்ஜித்துக்கொண்டு, கோபத்தால் கண்கள் மிகச்சிவந்தவர்களாய், தங்கள் பற்களைக் கடித்தவாறே அந்த காடுமுழுதும் க்ஷணப்பொழுதிலெரிந்துபோம்படியாய் பெருந்தீயையுண்டாக்கினார்கள் அந்தத் தீயானது நூறுயோசனை விஸ்தாரமுள்ள அந்த இமயமலைக்காட்டை எரித்துவிட்டது அதனால் அந்த அசுரர்களும் வெந்துபோனார்கள். இதில் யாதொன்றும் அந்த அதிதியம்மனுக்குத் தெரிந்ததன்று எம்பெருமானிடத்தில் மனத்தைவைத்திருக்கும் அந்த தேவமாதா ஒருத்தியே அந்தத்தீயில் வேகாதிருந்தனள் அப்படி யாதொரு தீங்கும் அணுகாவண்ணம் எம்பெருமானுடைய திருவாழியாழ்வான் காத்துக்கொண்டிருந்ததால் அவள் எம்பெருமானை தியானித்துக்கொண்டு சுகமேயிருந்தனள்.

கக-வது அத்தியாயம்.

பகவானுடைய திரிவிக்கிரமாவதாரசரித்திரம்.

சௌனகாதிகள் பிரச்னம்.

ஓ சூதமாமுனிவரே, அந்த அக்கினியானது அதிதியைமாத்திரமெரிக்காமல் அத்தனைபெயர் அசுரரையும் கணப்பொழுதிலெப்படி எரித்ததோ அதைக் கேட்க எங்களுக்கு மிக வியப்புண்டாகின்றது இவ்வளவு வியப்புக்குக் காரணமாகிய அதிதியின் பெருமையை இப்போதெங்களுக்குத் தெரியச்சொல்லவேண்டும் ஸாதுக்களான முனிவர்கள் பிறருக்குத் தெரியாதவற்றைத் தெரியவுரைப்பதில் எப்போதும் இஷ்டமுள்ளவர்களன்றோ? என்றிவ்விதமாய் பிரசனம் செய்த ரிஷிகளை நோக்கி சூதபௌராணிகர் சொல்லலுற்றார்.

ஓமுனிவர்களே, கேளுங்கள் அந்த அதிதிமாத்திரமன்று, எம்பெருமான்விஷயத்தில் தொண்டுபூண்டவர்களாய் அவரைத் தியானிப்பதே காரியமாயிருக்கும் புண்ணியவான்களின்பெருமையே அவ்வண்ணமானது அவர்களை ஹிம்சிக்க வல்லமையுள்ளவர் ஒருவருமில்லை ஓ ஸாதுக்களே, ஸ்ரீஹரி பக்தன் வாசம்பண்ணுமிடத்தில் பிரமன் விஷ்ணு சிவன் என்னும் திரிமூர்த்திகளும் இன்னுமுள்ள தேவர்களும், சித்தர்களும் எப்போதும் வாசம்பண்ணுகிறார்கள் தாவிஷயத்தில் மனதைச் செலுத்தாதவர்களின் மனதிலும், "பகவந்நாமங்களை அன்புடன் உச்சரிப்பவர்களின் மனதிலும் அந்தபகவானான ஸ்ரீஹரியானவர் குடியிருக்கிறாரென்றால் ஓயாதசிந்தையாகிய தியானத்தைச் செய்துகொண்டிருப்பார்களுக்குச் சொல்லவேண்டியதென்ன! சிவபூஜையிலாவது ஹரிபூஜையிலாவது ஊற்றமுள்ள மனிதனெங்கிருக்கிறானோ அவ்விடத்தில் லோகமாதாவாகிய ஸ்ரீமகாலக்ஷ்மியும் மற்றெல்லா தேவர்களுமிருக்கிறார்கள். எவ்விடத்தில் யாரேனும் ஸ்ரீஹரிபூஜைசெய்ய முழுமனதுடன் தொடங்கியிருக்கிறாரோ அவ்விடத்தில் அசனியாவது திருடனாவது பிணிகளாவது இடையூறு செய்வதில்லையென்பது பிரசித்தந்தானே. பிரேதங்கள், பிசாசங்கள், கூச்மாண்டங்கள், கிரகங்கள், பாலகிரகங்கள், டாகினிகள், ராக்ஷதர்கள் இப்படிப்பட்டவைகள் ஸ்ரீஹரிபூஜைசெய்பவரை வருத்தப்படுத்துவதில்லை. பின்னும் ஸ்ரீஹரிபூஜையில் மனம் வைத்திருப்பவர்களிருக்குமிடத்தில் பிறருக்குப் பீடைசெய்வதே தொழிலாகக்கொண்ட பூதம், பேதாளம் முதலிய துஷ்டஜந்துக்கள் இருக்கமாட்டாமல் அழிந்துவிடுகின்றன. புலன்களைவென்றவரும், எல்லார்க்கும் நல்லவரும், மெத்தெனுந்தன்மையுள்ளவரும், விஷ்ணுபூஜையில் மனவிருப்பமுள்ளவருமான ஸாதுக்கள் வசிக்குமிடத்தில் சகலதேவர்களும் தத்தம்பெண்டிர்களுடன் அவருக்கு அனு

கூடலராயிருக்கிறார்கள். பகவானையே தியானிக்கும் பாகவதர்கள் ஒரிமைப பொழுதேனும் அல்லது அதில பாதிபபொழுதேனு மெஙகிருககிறாரகளோ அஙகு சகலபுண்ணியதீர்த்தஙகளுமிருப்பனபோலாகும். அல்லது அவவிடமே எல்லாபபுண்ணியதீர்த்தஙகளும எல்லாப புண்ணியக்ஷேத்திரஙகளுமாயிருககும். பகவான திருநாமததைச சொன்னமாத்திரததிலேயே சகலமான இடர்களுந் தீருகின்றன. அவனைத் துதிப்பதிலும அவனைப் பூசிப்பதிலும அவனைத் தியானிப்பதிலுமுள்ள மகிமையைச சொல்லவேணடியதென்ன? ஓ ஸாதுக்களே, ஆதலால அப்படிப்பட்ட பாகவதையான அதிதிக்கு அசுரர்களாலாவது அக்கினியாலாவது ஒருதீஙகும உணடாகவிலலை

அதிதிதேவிக்குப் பகவான் பிரத்தியக்ஷமாய் வரம்தல.

பின்பு அருளவிளஙகுந திருமுகமும, செநதாமரையிதழ்போற பரநத திருக்கண்களும, திருவாழி திருச்சஙகு முதலிய திவயாயுதஙகளுமுள்ளவெம பெருமான அதிதிககுச சமீபத்தில தோன்றி மநதஹாஸவிலாசத்தால திசையெஙகும விளஙகச்செய்துகொணடு சகல புணணியபலனகளையுமளிககவலல திருக்கையால கசியபர மனையாளான அதிதியை தடவிககொடுத்துச் சொலவாராயினா. ஓ தேவமாதாவான அதிதியே, நெடுஙகாலம வருநதிக கடுந்தவம புரிந்தாய் உன்தவத்தால சநதுஷ்டியடைநது உனமேல மிகுநத அருள்கொணடுவந்தேன் இனி உனககு பெருநனமை உணடாகுமெனபதில ஐயமிலலை நீ எதைவேணடி யிவ்வளவுதவம செய்தனையோ அதைககேள கொடுபபேன ஓசுகுணமுள்ள பாககியவதி, அஞ்சாதே உனககு நனமைஉணடாவது நிசசயம என்று சொலலக்கேட்டு அதிதியமமாள சகலலோகஙகளுககு மினபநதருதருளும அநத வெமபெருமானை நமஸகரிததுத துதிபபாளாயினள

பகவத் ஸ்தோத்திரம்

ஸததுவரஜஸதமஸெனனும மூனறுகுணஙகளைககொணடு உலகஙகளை அளிக்கவும அமைக்கவும அழிககவுங காரணமாய், தேவாக்குந தேவராய், தனனை ஒப்பாரும தன்னில மிககாருமிலலாதவராய், எஙகுமபரந்துளள ஓபகவானே, தேவரீருககு நமஸகாரம கருமவசியமான வடிவொனறுமினறி உலகஙகளை ரக்ஷிககவேணடிய சஙகற்பத்தால பலவடிவஙகளைகொணடவரும, தீயகுணஙகளிலொனறுமிலலாமல சகலகல்யாணகுணஙகளும நிறைந்திருக்கும தன்மையுடையவருமான தேவரீருககு நமஸ்காரம் தமககுக கடடளையிடுபவனொருவனுமின்றித் தாமே யாவரையுமாளுபவராய் மேலான அறிவே வடிவாகவுள்ளவராய், அப்படியெலலாமறிநதிருநதும பக்தாகளின குறறததைக காணமாட்டாதவாபோல அவாககு நலமேசெய்யுந தனமையுள்ளவராயிருக்கும் தேவரீருக்கு நமஸகாரம. மகாமுனிவாகள் எந்த வுமது அவதாரத் திருமேனிகளைப் பூஜிக்கிறார்களோ அப்படிப்பட்ட அபபிராகிருதசுவரூபராய், ஆதிமூலபபொருளாய், எலலாவுயிாககுமுயிராயிருக்கும் உம்மையெனனிய

டபபொருள் கைகூடவேணடித தொழுகிறேன ஸநகாதியோகிகளுக்கும அநநதகருடாதி நிததியசூரிகளுககும முறறுமுணரவரிதான தனமையுடைய வராய, உலகஙகளுககுக காரணராய, மாயைககுத தாம உள்ளாகாமல மாயையால எலலாம நடததுபவராயுளள எமபெருமானைத தொழுகிறேன சகல மாயாபிறவிகளையும அழிககவலல திவயதரிசனமுளளவராய, உலகமெனனு முடலுககுயிராய், உலகஙகளுககு விததானவராய, யாவராலும வணஙகப பட்டவராயுள்ள பரமபுருஷனைத தொழுகிறேன எவனுடைய திருவடித தாமரைததாது தஙகளமுடிமேல தாஙகுவதே பெருமபேறெனறு மகாததுமாக்கள பெறுகிறாாகளோ அபபடிபபடட பெருமைககிடமான தாமரையாளகலாத தனமையுளளவனைப பணிகிறேன. வேதஙகளுமுளளபடி யறியமாட்டாதொழியுமதனமையான மகிமையுடையவராயினும பகதிககு வசபபட்டு அடியாரிடந் தேடிவருபவரான எமபெருமானை வநதிககிறேன. நசுவரமான பொருளகளினமேற பறறறு முகருணைசசெய்கையொழிநத முனிவாகள் எபபோதும பற்றுதறகுரிய கருணைமுதலிய நறகுணஙகளுககுக கடலபோனறவராய் விருபபு வெறுபபறறவராயுள்ள தேவனை வநதிககிறேன யக்ஞஙகளைத் தடைபடாது நடத்துபவரும அவைகளால ஆராதிககபபடுபவரும, அவைகளைநடததும யஜமானனமுதலியவாகடகு ஆததுமாவானவரும, அவைகளுககுப பலனளிபபவரும, அவைகளசெய்யவேணடிய விதிகளை வேதமூலமாக வெளியிடுபவருமான சுவாமியை ஸேவிககிறேன அதிபாபிஷடனான அஜாமிளனெனபவனகூட எநதபகவானுடையநாமததைத அசதியில சொனனமாததிரததில் பாபக்கடலைககடநது பரமபதததைப பெறறானோ அநத சாவலோகசாக்ஷியை ஸேவிககிறேன உலகஙகளுககு நனமைஉணாததுங குருவும நற்பயனளிககும பிரபுவுமானவெமபெருமானே, ஹரியெனபதும சிவனதான், சிவனெனபதும ஹரிதானெனறு தெரிநது உனனையே தொழுகிறேன் பிரமனமுதலிய சகலதேவாகளும எவனதுமாயையெனனும வலையிற சிக்கினவாகளாய் அவனது மேலான தனமையை அறியமாட்டாதிருககிறாாகளோ அபபடிபபட்ட சாவேசுவரனைப பணிகிறேன எபபோதும இருதய கமலததில வசிபபவனாயிருநதும மூடாகளுககு எட்டாதவனாய், காலததாலும இடததாலும் வஸதுவாலும அளததலரியதனமையுடையவனாய், ஞானத்துக கேசாக்ஷியாய் விளங்குபவனை வநதிக்கிறேன முகததில பிரமணரையும், தோளில க்ஷத்திரியரையும, தொடையில வைசியரையும, பாததில சூத்திரரையும், மனதில சநதிரனையும, நேததிரததில சூரியனையும, முகததில இநதிரனையும் அககினியையும, காதில காற்றையும் படைததவனும, மூன்றுவேதஙகளும் ஆறுவேதாஙகஙகளும, ஏழுசுரங்களும வடிவாககொணடவருமான தேவரீருககு இனனும இனனும பலநமஸ்காரஙகள செய்யககடவேன இந்திரன அககினிமுதலிய அஷடதிக்குபபாலகரும சூரியசநதிராகளும் உமது அமிசத்தால விளஙகுதலபறறி நீரே அவரெலலாருமெனறு சொல்லும்படி வீற்றிருககிறீா தேவாகளும, செடி முதலியவையும, பிசாசராக்ஷஸர்களும், மலைகளும, சிததரும், கநதருவரும, நிலமும, கடலும, இன்னுமுள்ளயாவும்

உமது சரீரமேயல்லது பரமாத்துமாவாகிய உமக்குப் புறம்பானதொன்றுமில்லை. ஆதலாலப்படி சர்வேசுவரனாய், சர்வகாரணனாய், சர்வாந்தர்யாமியாயிருக்கும் உம்மை சர்வகாலத்திலும் சர்வதேசத்திலுந் தொழப்பெறுவேனாக நாதனற்றவர்களுக்கு நாதனாய, எல்லாமறிந்தவனாய், ஆதிமூலப்பொருளாய, வேதசுவரூபியாயிருக்கும் ஆண்டவனே, அசுரர்களால் வருத்தப்பட்ட என்மக்களை தேவரீர் காத்தருளவேண்டும்

இவ்வண்ணமாக அதிதியானவள் எம்பெருமானைத்துதித்து பலமுறை சேவித்துக் கைகளைக்குவித்துக்கொண்டு நின்று ஸதனங்கள் நனைந்துவிடும்படி ஆனந்தக்கண்ணீர்சொரிய ஒருவசனஞ் சொன்னாள் ஓ சர்வகாரணனான தேவதேவனே, அடியேன்மேல் கிருபையுண்டாயிருந்தால் என்பிள்ளைகளான இந்திராதிதேவர்களுக்குச் சத்துருபாதையில்லாத ஐசுவரியத்தைத் தந்தருளவேண்டும். ஓ சுவாமியே, சர்வலோகமும் உமதுசரீரமன்றோ? சராசரங்களுக்குள் நீரிருக்கிறீரன்றோ? எல்லாமுமக்குத் தெரிந்ததன்றோ? நீரெல்லாவற்றையுஞ் சங்கற்பத்தாலாக்கவுமளிக்கவுமழிக்கவும் வல்லவரன்றோ? ஆதலால் உமக்குத்தெரியாதவிஷயமென்ன? அடியேனை மயங்கப்பண்ணுவானேன். சுவதந்திரரான நீர் பரதந்திரரான வெம்போலியர்களை ஆட்டுவது உமக்கு விளையாட்டாயிருக்கிறது ஓ தேவதேவா, நீரெல்லாமறிந்திருந்தும் அடியேன் மனதிலுள்ள இஷ்டத்தைக் கேட்டுக்கொள்ளும்படி நியமித்தருளியபடிக்கு விண்ணப்பஞ்செய்வேன் நான் வீணுக்குப் பிள்ளைகளைப்பெற்றேனென்னும்படிக்கு அசுரர்களால் வருத்தமடைந்தேன் ஆகிலும் அந்த அசுரர்களுமென் பிள்ளைகளே ஆதலால் அவர்களைக் கொல்லத்துணிகிறேனல்லேன் அவர்களைக் கொல்லாமலே என்பிள்ளையாகிய இந்திரனுக்குச் செல்வத்தைத் தந்தருளவேண்டும், என்றிவ்வாறு பிரார்த்தித்த அதிதியைநோக்கிப் பரமாத்துமாவான ஸ்ரீமந்நாராயணன் பின்னும் அதிகப்பிரீதியடைந்தவராய் நல்ல சுபாவமுள்ள அந்த அதிதிக்கு அதிகானந்தமுண்டாகும்படி மிகுந்த அன்போடு அவளைத் தழுவிக்கொண்டு சொல்வாராயினர் ஓ அதிதிதேவி, சந்தோஷமாயிற்று உனக்கு மங்களமுண்டாகும். நீ சக்களத்திபிள்ளைகளிடத்திலும் குற்றம்பாராட்டாமல் அன்புள்ளவளாயிருப்பதால் இவ்வளவு நல்லதன்மையுள்ள உனக்கு நான் புத்திரனாகக்கடவேன் இப்போதென்விஷயமாக நீசெய்த இந்த ஸதோத்திரத்தைப் படிக்கிற எந்தமனிதருக்கும் மக்களும் பொருளும் போகமும் ஒருபோதுங் குறைவுறுவதில்லை தம்பிள்ளையிடத்திலும் பிறர்பிள்ளையிடத்திலும் வேற்றுமையின்றிச் சரியான அன்புடன் யார்நடப்பாரோ அவர்களுக்குப் பிள்ளைகள்விஷயமான துன்பமொன்றுமுண்டாகாதென்று இவ்வாறு எம்பெருமானருளிச்செய்தார் (அப்போது அதிதி) எல்லாப்பொருளுக்கும் வித்தாய், அழிவற்றவராய, எல்லாவுயிர்க்குமுயிராயுள்ள எம்பெருமானே, உமது ஒவ்வொரு ரோமத்திலும் ஆயிரங்கோடி பிரமாண்டங்களடங்கியிருக்கின்றன, அப்படிப்பட்டவும்மை உதரத்தில் தாங்க அடியேன் வல்லவளல்லேன் வேதங்களாலும் தேவர்களாலும் சிறிதுமுணரலாகாத தன்மையுடைய சர்வேசுவரரே, உம்மை ஆராதிப்பதேயன்றிக் காப்பதில் தரிப்பதற்கு

என்றுசொல்லப்படியாகும் அணுவினுமணுவான சிறுவடிவுள்ளவராயிருந்தாலும் மகத்தினும் மகத்தாய எங்குமநிறைந்து எல்லாவுலகங்களையும் படைத்தல் முதலியவற்றால் விஹரித்துக்கொண்டிருக்கும் பரமபுருஷனாகிய உம்மை அடியேனெவ்வண்ணந் தாங்கமாட்டுவேன் மகாபாபங்கள்செய்தவனும் உமது திருநாமத்தை நினைத்தமாத்திரத்தாலே பரிசுத்தனாகி மோக்ஷமும் பெறுவானன்றோ? அத்தனை பரிசுத்த சுவரூபரான உம்மை மிகவுமிழிவானதன்மையுள்ள அடியேன் எப்படித் தாங்குவேன், என்ற அதிதியின் வார்த்தைகளைக்கேட்டு லீலாவதாரங்களைச்செய்தருளுமெம்பிரானானவர் அவளையஞ்சாதேயென்றுசொல்லி ஒரு விசேஷம் விளம்பலுற்றார்

மகாபாக்கியவதியான அதிதி, நீ சொன்னதெல்லாம்மெய்தான் சந்தேகமில்லை ஆகிலும் அதிரகசியம் ஒன்று உனக்குச்சொல்லுவேன் கேட்பாயாக. தம்தென்பதனால் ஒன்றின்மேல் விருப்பமும் பிறரதென்பதனால் வெறுப்புமில்லாதவர்களாய், பிறர்குணங்களைக் குற்றமாகவுந் தம்குற்றத்தைக் குணமாகவும் காட்டுந்தன்மையில்லாதவர்களாய், என்னிடத்தில் மகத்தான அன்புவைத்து என்னையே பரமகதியாய் நம்பியிருக்கும் பாகவதர்களும், பிறரை வருத்தப்படுத்த உடன்படாதவர்களாய், சிவபூசையில் விருப்பமுள்ளவர்களாய், என் சரித்திரங்களைக்கேட்பதில் பற்றுள்ளவர்களாயிருப்பவர்களும், கணவனுக்கொக்க நடப்பதே தமக்கு விரதம் கணவனே தமக்குயிர் கணவனுக்கு அடிமைசெய்வதே தமக்குப் பரமலாபமென்று உறுதியாக நடப்பவர்களும், பிறர்செல்வமுதலியவற்றைக் கண்டு பொறாமைப்படாதவர்களுமான ஸ்திரீகளும் என்னைத்தாங்குவார்கள் எவன் தாய்தந்தையர்க்குப் பணிவிடைசெய்பவனும், குருவின்மேல் மெய்யான அன்புள்ளவனும், விருந்தினர்களுக்கு நன்மைசெய்பவனும், பிராமணருக்கு உபகாரஞ் செய்பவனுமாயிருப்பானோ அவனும், புண்ணிய கதாசிரவணத்தில் பொழுது செலுத்துபவனாய் யதிகளுக்குப் பணிவிடைசெய்பவனாய்த் தன்னாசிரமத்துக்குள்ள ஆசாரத்தில் நிலைபெற்றவனாயிருப்பவனும் என்னை யெப்போதுந் தாங்குகிறார்கள் புண்ணியதீர்த்த ஸ்நானத்திலும் ஸாதுக்கள் சகவாசத்திலும் எப்போதும் விருப்பமுள்ளவர்களாய் உலகத்தாரவிஷயத்தில் கிருபைசெய்யும் தன்மையுள்ளவர்களாயிருப்பவர்களும், பிறருக்குதவிசெய்வதே தொழிலாகக் கொண்டவர்களாய், பிறர்பொருள் தனக்கு வேண்டுமென்கிற நோக்கில்லாதவர்களாய், பிறர்மனை நயவாதவர்களாயிருப்பவர்களும் எப்போது மென்னைத் தரிக்கிறார்கள் திருத்துழாய்ச்செடியை வைத்திருப்பவர்களாய், எப்போதும் என்னாமங்களையே கதியாகக் கொண்டவர்களாய், பசுமாடுகளை ரக்ஷிப்பதில் பற்றுள்ளவர்களாயிருப்பவர்களும் எப்போதுமென்னை வகிப்பார்கள். தானம்வாங்காதவர்களாய், பிறரன்னம்புசிக்கத் திரியாதவர்களாய், இயன்றமட்டும் அன்னபானங்களளிப்பவர்களாயுள்ளவர்களும் என்னை வகிக்கின்றனர் ஓ அதிதி, நீ கணவனே உயிரெனக்கருதியிருப்பவள், எல்லாப்பிராணிகளுக்கும் நலம்செய்யும் நல்ல எண்ணமுள்ளவள் ஆதலால் நான் உன்உதரத்தில் ஜனித்துப் பகைவராலான சங்கடத்தை அழிப்பேன் என்று இவ்வண்ணமருளிச்செய்து

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

தமது கழுத்திலணிந்திருந்த திருமாலையைத் தந்தருளி, அஞ்சேலென்று சொல்லி அந்தர்த்தானமாயினார். தக்ஷபுத்திரியான அந்த அதிதியும் அந்தத் தாமரையாள் கேள்வனை ஸேவித்து மனக்களிப்புடன் தன்னிடஞ்சேர்ந்தனள். தனது நன்னடக்கையால் பேர்பெற்று உலகத்தாரால் கொண்டாடப்பட்ட அந்த அதிதிதேவியானவள் கர்ப்பந்தரித்துப் பிரசவகாலத்திலேயே சர்வேசுவரனென்று குறிப்பிக்கும் விலக்ஷணமான காந்தியால் விளங்கும் பிள்ளையைப் பெற்றனள். திருவாழி திருச்சங்கு முதலிய திவ்யாயுதங்களைத் தரித்திருந்தும் சாந்தமூர்த்தியாய், சந்திரமண்டலத்தினிடையிலிருப்பதுபோலக் காணப்படுபவராயும், அமிர்தகலசத்தையும் ததிஅடிசிலையும் கையில்கொண்டவராய், வாமனனென்னப் பெயர்பூண்டவராய், ஆயிரஞ்சூரியருதயமானாற்போல விளங்குபவராய், மலர்ந்த செந்தாமரைபோன்ற திருக்கண்களுள்ளவராய், சகலமான திருவாபரணங்களும் பீதாம்பரமுந் தரித்தவராய், மகாமுனிவர்கள்சூழ்ந்து நின்று துதிப்பதற்குரியவராய், சகலலோகங்களுக்கு மொருநாயகராய்விளங்கும் எம்பெருமான் தனக்குப் புத்திரராய், அவதரித்ததையுணர்ந்து கசியபப்பிரஜாபதியானவர் ஆனந்தபரவசராகித் தண்டன் ஸமர்ப்பித்துக் கைகுவித்துத் துதிக்கவாரம்பித்தார்.

வாமன ஸ்தோத்திரம்.

சர்வலோகங்களுக்கும் கர்த்தாவாய், ரக்ஷகராய், நாயகராய், விரோதிகளையழிப்பவராயுள்ள உமக்குப் பலபலவந்தனம்புரிகின்றேன்.

அடியாரைத் தேடிச்செல்லுமனமுடையவராய், ஸத்ஜனங்களைக் காத்துத் துர்ஜனங்களை அழிப்பவராயிருக்கும் சர்வேசுவரருக்குப் பலபல நமஸ்காரங்கள்.

உலகங்களுக்குப் பரமகாரணமாய், அளவிலாச்சக்தியுள்ளவராய், அனைத்துக்கு முள்ளும்புறமும் பரந்திருப்பவராய், சார்ங்கம் சக்கரம் கட்கம் கதையென்னும் திவ்யாயுதங்களைத் தரிப்பவராயுள்ள புருஷோத்தமனை வணங்குகிறேன்.

திருப்பாற்கடலிலும் அன்பருடைய இருதயகமலத்திலும் சூரியமண்டலத்திலும் வசிப்பவரான புண்ணியசரித்திரருக்குத் தண்டம் ஸமர்ப்பிக்கிறேன்.

சூரியசந்திரர்களை நேத்திரங்களாகக்கொண்டவரும், யாகங்களின்பலனை அளிப்பவரும், யாகங்களின்முறைகளை முழுதும் வழுவின்றி நடத்துபவரும், ஸாதுஜனங்களுக்கு அன்பருமான தேவரீருக்கு நமஸ்காரம்.

ஒரு காரணத்தைப்பற்றி வாமனவடிவங்கொண்டவரும், ஒலிமுதலிய குறிப்புகளாலறியவரியவரும், பேரின்பமளிப்பவரும், அன்பர்தம்மனத்திற் குடிகொண்டவருமான சுவாமிக்கு வந்தனஞ்செய்கிறேன்.

மதிமயக்குகளைத் தீர்ப்பவரும், மச்சவடிவுகொண்டவரும், மந்தரமலையைத்தாங்க ஆமையுருவங்கொண்டவரும், யக்கியவராகமூர்த்தியானவரும், இரணியனைப்பிளக்க நரசிங்கவடிவானவரும், வாமனரூபமடைந்தவரும், துஷ்

MAHAMAHOPADHYAYA

டக்ஷத்திரியர்களை அழித்தவரும், இராவணனைச் சங்கரித்தவரும், நந்தகோபன் மைந்தருமான உம்மை நமஸ்கரிக்கிறேன்.

திருமகளார் நாயகராய், நினைத்தவர்க்குத் துன்பங்களைப்போக்கி இன்பங்களைத் தருபவராயிருக்கும் உமக்கு நமஸ்காரம் இன்னும் இன்னும் பலநமஸ்காரங்கள்.

இந்தவாமன ஸ்தோத்திரத்தை எந்தமனிதன் எப்போதும் படிக்கிறானோ அவனுக்குப் பிணிகள் நீங்கிச் சரீரபலமுமிகுந்தபொருளும் நல்லமைந்தர்களும் எப்போதும் மனமகிழ்ச்சியும் உண்டாகும்.

இவ்விதமாகக் கசியபாதிதிக்க உலகத்தையெல்லாங் காக்குறச்செய்யும் வாமனமூர்த்தியான பகவான் கசியபனாரோக்கி மகிழ்ச்சியுடன் சொல்லலுற்றார்.

தேவர்களாற் பூசிக்கப்பட்டவரான் தந்தையே, நான் பிரீதியடைந்திருக்கிறேன், உமக்கு நன்மையுண்டாகும் சகலமான உமது அபீஷ்டத்தையும் சீக்கிரத்தில் நிறைவேற்றுவேன் உங்கள் பூர்வஜன்மத்திலும் இந்தஜன்மத்திலும் நான் உங்களுக்குப் புத்திரனாகப்பிறந்தேன் இன்னுமொரு ஜன்மத்திலும் புத்திரனாகப்பிறந்து உங்களுக்கு இம்மையின்பங்களைத் தந்து அப்பால் மோக்ஷமும் தந்தருள்வேன் இப்படி பகவான் இங்கு வாமனமூர்த்தியாய் அவதரித்து வளர்ந்துகொண்டிருக்குங்காலத்தில் அங்கு அசுரராஜனாகிய பலிச்சக்கரவர்த்தி சுக்கிராசாரியர்முதலிய பிராமணர்களைச் சகாயமாக வைத்துக்கொண்டு தீர்க்கசத்திரம் (நீடித்த வேள்வி) என்கிற பெரிய யாகத்தைச்செய்யத்தொடங்கினன். அந்தயக்ஞத்தில் வேதவித்துக்களான மகரிஷிகள் பெரியபிராட்டியார்சோத்தியுடைய பெருமானை எழுந்தருளும்படிக்குப் பிரார்த்திக்க அப்போது பக்தர்களிடத்திலன்புடையவரான ஸ்ரீ வாமனமூர்த்தியானவர் புன்சிரிப்பினாலே உலகத்தார்களை மெய் மறப்பித்துக்கொண்டு பலிச்சக்கரவர்த்திக்குக் காக்ஷிதந்து ஹவிசு உண்ணும்படி எழுந்தருளினர் ஒருவன் நன்னடக்கையுள்ளவனோ அல்லது தீயநடக்கையுள்ளவனோ மூடனோ அல்லது வித்துவானோ அவன் பக்தியுள்ளவனுயமாத்திரமிருந்தால் அவனுக்கு எம்பெருமான் எப்போதும் கிட்டவே இருப்பன் பிரமத்தையுணரவல்ல ஞானக்கண்ணுள்ள மகாமுனிவர்கள் வாமனாவதாரக்கண்டு ஸ்ரீமந்நாராயணனென்றறிந்து எதிர்கொண்டனர் அசுரகுருவாகிய சுக்கிரர் இதையறிந்து தனிமையில் பலிச்சக்கரவர்த்தியுடன் சொல்லத்தொடங்கினர் (துஷ்டர்கள் தம் திறத்தையுணராமல் ஒவ்வொருதொழிலைச் செய்வார்களன்றோ) ஓ ஓ கபடமில்லாத பலிச்சக்கிரவர்த்தி, விஷ்ணுவானவர் உமதுசெல்வத்தைப் பறிக்கவேண்டி வாமனவடிவாய் அதிதிக்குப் புத்திரனாகப் பிறந்திருக்கிறார் சமர்த்தனாய் தேவர்களையடக்கி ஆண்டுவருகின்ற ஓ பலி, என்வார்த்தையை உனக்கு நலமென்று கேட்டுக்கொள் ஏனெனில் அந்தவாமனர் உனது யாகத்துக்கு வருகிறார் அவருக்கு ஒன்றும் நீ கொடுக்கலாகாது ஒருவன் தன் புத்தியால் ஆலோசித்துச்செய்தால் நன்மை உண்டாகும், குருவின் புத்தியைக் கேட்டுச்செய்தால் பின்னும் அதிக நன்மையுண்டு, எதிரி

புத்தியைக்கேட்டால் அழிவான், பெண்டிர்புத்தியைக்கேட்டால் முழுகிப் போவான். ராஜன் பகைவருக்கு நலஞ்செய்பவனை அவசியம் கொன்றுவிட வேண்டும். ஏனெனில் தனக்குச் சகாயமாயிருப்பானை அவன் கெடுத்துவிடுவான். அப்படிக் கெட்டபின்பு காரியமொன்றும் கைகூடாதன்றோ. இதை யறிந்து பேசவேண்டுமென்றுசொன்னார். அதைக்கேட்டு பலிசக்கரவர்த்தி சொல்லலாயினன்.

ஓ குருநாதா, இப்படி தருமவழிக்கு விரோதமாய் நீர் பேசலாகாது. விஷ்ணுவே நேராகவந்து நம்மிடத்தில் ஏதேனும் பெற்றுக்கொள்ளுகிறாரென்றால் இதனிலும் மேலானபயன் நமக்கென்னவேண்டுவதுண்டு, ஒன்றுமில்லை. வித்துவான்களெல்லாரும் ஸ்ரீஹரி திருவுள்ளவுகப்புக்காகவன்றோ பல யாகாதிகருமங்களைச் செய்கின்றனர். அந்தப்பகவானே நேராகவந்து பெற்றுக்கொள்ளுவாராகில் இதனிலும் சிறந்ததொன்றுண்டோ? ஒருவனிடத்திலொன்று பெறுவாராகில் அவனிலும் சிறந்தவன் உலகத்தில் யாவன் இருக்கின்றான். தரித்திரனாகிலும் விஷ்ணுப்பிரீதிக்காகச் சிறிதேனும் கொடுத்தால் அதுதான் உத்தமதானமாகும். கொடுத்தவஸ்து கொஞ்சமாயினும் அதற்கு உத்தேசியமானவன் அனந்தனாகையால் அதன்பலனும் அனந்தமாகும். ஸமரித்தவர்களுடைய ஆர்த்தியை நிவர்த்திப்பவரான பரமபுருஷனை வெறுமே மெய்யான அன்புடன் ஏதேனும் ஓர்முறைசமர்ப்பித்து ஆசரித்தானாகில் அவன் உத்தமகதியைப் பெறுவது திண்ணம். சுடவேண்டாமென்று நெருப்பைத்தொட்டாலது சுடாதிருக்குமோ? அதுபோல கெடுமனத்தினனாயினும் அந்த ஸ்ரீஹரியை நினைப்பானாகில் அவன்பாவங்களை அகற்றுவர். எவனது நாவினுனியில் ஹரியென்னுமிரண்டெழுத்து குடியிருக்குமோ அவன் பரமபதத்தையடைவான். எவன் பிராகிருதமான பதார்த்தங்களின்மேல் விருப்புவெறுப்பற்று எப்போதும் கோவிந்தாவென்று பகவத் ஸமரணையில் சிந்தையைச்செலுத்துவனோ அவன் நித்தியவிபூதியை அடைவானென்று புத்திமான்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஓ அறிவிற்சிறந்தகுருவே, ஓமமும் தானமும் செய்யும்போது அந்த அக்கினியையும் பிராமணனையும் ஸ்ரீஹரியென்றே கருதிச்செய்தால் பரமாத்துவான விஷ்ணு உகந்தருளுவர். நானோ விஷ்ணுப்பிரீதிக்காகவே மகத்தானயாகம் செய்யாநின்றேன். இதற்கு விஷ்ணுவானவர் தானேவந்தால் நான் சந்தேகமில்லாமல் பயன்பெற்றேனாகின்றேன் என்று இவ்விதமாக அசுரராஜன் சொல்லிக்கொண்டிருக்கையில் வாமனவடிவம் பூண்ட பகவானானவர் ஓமஞ்செய்த அக்கினிகளால் அழகுபொருந்திய யாகசாலைக்குள் பிரவேசித்தார்.

ஆங்கு எழுந்தருளின பகவானுக்கு பலிசக்கரவர்த்தி சாஸ்திரவிதிப்படி அர்க்கியங்கொடுத்து தேகம் புளகாங்கிதமாகி ஆனந்தபாஷ்பம்பெருகச் சொல்லானயினன். இப்போதென்ஜன்மம் சாபல்லியமடைந்தது. எனது யாகமும் இப்போது பயன்பெற்றது. எனக்குத்தேவையானபொருள் எல்லாம் நான் தேடிக்கொண்டேன்; சந்தேகமில்லை. என் ஆத்துமா இப்போது கடைத்தேறியது. தாபமெல்லாவற்றையும் மாற்றிவிப்பதாய் மிகவும் அரு

மையானதாயுள்ள அமுதமழை யென்மேல் பொழிந்ததாயிற்று. பலவாறு பகருவதென்ன தேவரீர் எழுந்தருளினமாத்திரத்தால் பிரயாசையின்றி பேரின்பம் பெற்றேனாயினேன். ஓ பிரபுவே, இந்தமுனிவர்களெல்லாரும் ஐயமின்றிப பேறுபெற்றாராகளானார்கள் இவர்கள் முன்னமே என்னதவங்கள் செய்திருந்தனரோ அவையெல்லாம்பயோது விளைந்து பயனீன்றது. 'ஐயமின்றி நான் கிருதார்த்தனாயினேன்' என்று மூன்றுதர முறுதியாகச் சொல்லுவேன் ஆதலால தேவரீருக்குப பலபலதண்டம சமர்ப்பிக்கிறேன். எங்குமநிறைந்திருக்கும சுவாமியே, தேவரீர் நியமித்தருளினால் தேவரீர்விஷய மான அடிமைத்தொழிலேதேனுமசெய்து உஜ்ஜீவிக்கலாமென்று என்மனம் விரும்புகின்றது ஆதலாலிப்படி விருப்பத்தோடுகூடின அடியேனுக்கு நியமித்தருளவேண்டுமே என்று பிரார்த்தித்தான யாகதீக்ஷிதனான பலிசக்கரவர் த்தி யிங்ஙனஞ்சொல்ல ஸ்ரீவாமனமூர்த்தியானவர் புன்னகைகொண்டு, நான் தவநிலையிலிருப்பதற்காக மூன்றடி அளவுள்ள மண் கொடுப்பாயாகவென்று கேட்டருளினார் இதைக்கேட்டு பலிசக்கரவர்த்தியானவன் என்னரசாக்ஷி முழுதும் கேட்கலாகாதா? அல்லது ஒருபட்டணமாவது ஒரூராவது கேட்க லாகாதா? இவ்வளவு அற்பமானவஸ்துவைக் கேட்கும்படி தேவரீர் திருவுள ளமவைத்ததென்னவென்று வினவினான. இதைக்கேட்டு வாமனமூர்த்தி யான மாதவன அவனுக்கு ராஜ்ஜியந் தவறிப்போகுங்காலம் நெருங்கியிருப்ப தால அதுவிஷயத்திலவனுக்கு ஆசையின்மையையுண்டாக்குவாபோலுரை க்கலாயினார். ஓ அசுரசக்கரவர்த்தி அதிரகசியமொன்று சொல்லுகிறேன் கேளும். எல்லாமபற்று மற்றவர்களுக்குப் பொருள்களாலாகவேண்டிய தென்ன. நான் எல்லாப்பொருள்களுக்குமுள்ளிருப்பவன், இவையெல்லா மென்னுள்ளிருக்கின்றன, இதை நீயறிந்துகொள்ளும் ஆதலால என்னிற்புற புறம்பான வொருபொருளுண்டாகி அதனாலெனக்காவதுமொன்றுண்டோ? உலகப்பொருள்களில் சிலவற்றின்மேல விருப்பும் சிலவற்றின்மேல வெறு ப்புமற்றவர்களாய், அதனால அலைச்சலற்றவர்களாய், துன்பத்துக்கேதுவான மதிமயக்கத்தைத் துறந்தவர்களாய், எப்போதும் ஆனந்தமே தன்மையாயிரு ப்பவர்களுக்கு வேறொருபொருள்களா லாகற்பாலதென்னவுண்டு? ஒன்று மில்லை. எல்லாப்பிராணிகளையுந் தன்னைப்போற்பார்ப்பவர்களாய், கொடுமை யற்ற மனத்தினராயிருக்கும ஸாதுக்களுக்கு தன்னினவேறில்லாமையால் கொடுப்பவனெவன்? கொடுக்கப்படுவதெது? இந்தபூமி தருமராஜாக்கள் வசத்திலிருக்கத்தக்கதென்று சாஸ்திரங்களின் முடிவு. அப்படியிருந்தால் யாவரும் மேலான சுகம்பெறுவார்கள். முனிவர்களும் ஆறிலொருகூறு அர சனுக்குக் கொடுக்கவேண்டும். அரசர்கள் பிராமணர்களுக்கு பூதானம் அவ சியம் செய்யவேண்டும்.

பூதான மகிமை.

ஓ அசுரசிரேஷ்டா, நான் சொல்வதைக்கேள், பூதானத்தின் பெருமை யை யிவ்வளவென்றுசொல்ல வல்லவனொருவனும் உலகத்திலில்லை. பூதா னத்திலும் சிறந்ததானம் எக்காலத்திலும் ஒன்றுமில்லை. பூதானம்செய்தவன்

அருமையான முத்தியைப் பெறுவதற்குச் சந்தேகமில்லை. யாகஞ்செய்தவனும் வேதம்வல்ல பிராமணனுக்குச் சிறிதுபூமியாகிலும் தானஞ்செய்தவனும் பிரம்மலோகத்தைப் பெறுவன். பூமிதானஞ்செய்தவன் சகலதானங்களுஞ் செய்தவனுகிறுன, அவன் மோக்ஷமடையத்தக்கவன் ஆதலால் பூதானத்தினால் சகலபாபங்களுந் தீருமென்றறியத்தக்கது மகாபாதகமுதலிய சமஸ்தபாபங்களுடனகூடியவனாயினும் பத்துமுழமளவு பூமி தானஞ்செய்தால் அப்பாபங்களெல்லாம நீங்கிவிடும். சற்பாத்திரத்தில் பூமிதானஞ்செய்தவன் சகலதானமுஞ்செய்த பலனடைவான் பூதானஞ்செய்தவனுக்கு நிகரானவன மூவுலகிலும் வேறொருத்தருமில்லை. ஏழையாகிய பிராமணனுக்கெவன் பூமியைக் கொடுப்பானே அவனது புண்ணியத்தின்பலனைச் சொல்லவேண்டுமென்றால் பலநூற்றுண்டுகளாகிலும எனனாலும சொல்லிமுடியாது. தேவனைப்பூஜிக்க விருப்பமுள்ளவனுகி ஜீவனத்துக்கு இல்லாதவனாய் சிரமப்படுகின்ற பிராமணனுக்குச சிறிதாகிலும பூமிகொடுக்கவேண்டும் அந்தபிராமணன் விஷ்ணுவே என்பதில சந்தேகமில்லை ஜீவனத்துக்குரிய தொழிலற்றவனாய், குடும்பியாய், வறுமைபபடுகின்ற பிராமணனுக்குச சிறிது பூமியாகிலுமகொடுத்தவன் விஷ்ணுவோடு சமானமானபோகமாயிருக்கும் பரமபதம் பெறுவான் எமபெருமானுக்காபபிதமாக ஸத்கருமங்களைச்செய்து காலங்கழிக்க விரும்புகிற பிராமணனுக்கு குருணிநெல்விளைகிற பூமியைக் கொடுத்தவன் கஙகைக்கரையில மூனறிராபபகல் வாசஞ்செய்துகொண்டு கங்கையில் ஸ்நானஞ்செய்தபலனை அடைவன் தகாததானங்கள்பெறுதல் முதலியவைகளாற்பிழைக்க மனமில்லாமல் நல்லொழுக்கமுள்ளவனாயிருக்கும் பிராமணனுக்கு பதக்குநெலவிளையும பூமியைககொடுத்தவனுக்குள்ள புண்ணியபலன்களைச் சொல்கிறேனகேள். கங்கைக்கரையிலபோய் ஒருபிழையுமின்றி நூறுஅசுவமேதயாகம் செய்தாலெனனபலனே அப்படிப்பட்ட மகாபுண்ணியபலனை அவனடைவான. தரித்திரனான பிராமணனுக்குக் கலநெல்விளையும் பூமியைக்கொடுப்பவனுக்குணடான புண்ணியத்தை நான் சொல்லக்கேட்பாயாக. கங்கைககரையில ஆயிரம அசுவமேதமும நூறுவாஜபேயமும் செய்தபலன் நிச்சயமாயுணடு. பூமிதானமானது சகலபாபங்களையும்போக்கும்; மோக்ஷத்தையுமளிக்கும. ஆதலால் பூமிதானமே மகாதானமெனறும் அதிதானமென்றும் சொல்லப்படுகின்றது. ஓ அசுரகுலநாயகனே, முன்னடந்த கதை ஒன்று சொல்லுகிறேன்கேள். இதை சிரத்தையோடு கேட்டால் பூமிதானஞ்செய்த புண்ணியமுண்டு.

பத்திரமதி சரித்திரம்

ஓ பலிசக்கரவர்த்தி, முற்காலத்தில பிரமாவுக்கு இணையான வேதாத்தியயனவல்லவராய், மகாநியமமுள்ளவராய, தோஷமில்லாத ஜீவனேபாயமொன்றும் புலப்படாமையால வறுமைப்படுகிறவராய பத்திரமதி என்னும் பெயருள்ள ஒரு பிராமணசிரேஷ்டா இருந்தார் [illegible] வேதங்களிலும்

அங்கமாறிலும் புராணங்களிலும் தருமசாஸ்திரங்களிலும் வல்லவர். அவருக்கு சுருதை, சிந்து, யசோவதி, காமினி, மானினி, சோபையென்னும்பெயருடைய ஆறுபத்தினிமாருண்டு ஓ அசுரராஜனே, அந்தபிராமணருக்கு அந்த பத்தினிகளிடத்தில் முந்நூற்றுநாற்பதுபுத்திரர்கள் பிறந்தனர். அவர்களெல்லோரும் எப்போதும் பசித்திருப்பவர்களே. கையிலொன்றுமில்லாத பத்திரமதியென்னுமந்தபிராமணர் தாம் பசியாலவருந்துவதுடன் பெறலரியபிள்ளைகள் பசியாலவருந்துவதைக்கண்டு மனங்கலங்கி புலம்புவாராயினர். பாக்கியமில்லாதஜன்மம் பாழ்த்தது, பொருளில்லாதஜன்மம் பாழ்த்தது, வீணுழைப்புழைக்குஞ்ஜன்மம் பாழ்த்தது, சுகமடையாதஜன்மம் பாழ்த்தது, தருமங்களைச்செய்ய வகையற்றஜன்மம் பாழ்த்தது நல்லொழுக்கங்களுக்குப் பொழுதில்லாதபிறப்பு பாழ்த்தது, இரந்து பிழைக்கத்திரியும்பிறப்பு பாழ்த்தது; உறவினருக்குதவிசெய்தலில்லாபபிறப்பு பாழ்த்தது, நல்லபேறடைகாதபிறப்பு பாழ்த்தது, பலபிள்ளைகளுடையவனும்ப பொருளில்லாதவனும் வருந்தும் மனிதனபிறப்புபாழ்த்தது, அந்தோ! வறுமையெனனுங்கடலில முழுகியிருப்பவனுக்கு நற்குணங்களும் அழகும் கல்வியும் நற்குலப்பிறப்பு, முண்டாயிருந்தும் அவை சிறிதும் விளங்குவதில்லை. பிரீதியுள்ளபிள்ளைகள், பெண்டீர், உறவினர், சகோதரர், சிநேகர்கள், மற்றுமுள்ளயாவரும் பொருளில்லாதவனைத் துறக்கிறார்கள் சண்டாளனுகிலும் பிராமணனுகிலும் பாக்கியவானே உலகத்தில பூசிக்கப்படுவான். தரித்திரனுகியமனிதன் உலகத்தாரால அருவருக்கப்படுதலால் பிணம்போன்றவனே ஆ ஆ செலவமுள்ளவன கொடியவனுயினும் கொடுமையற்றவனுகவும், ஒருகுணமுமில்லாதவனுயிருந்தும் எல்லாக்குணமுமுள்ளவனுகவும், மகாமூடனுயிருந்தும் மகாவித்துவானுகவும் பேர்பெறுகின்றான். கொடியவனுய் நற்குணமுள்ளவனுய் தருமமற்றவனுயிருக்கும் மனிதனுக்குச் செலவமெனனும் குணமாத்திரம இருந்துவிட்டால அவனுக்கு மதிப்புணடென்பதில சந்தேகமில்லை. ஐயோ பொருளில்லாமை துன்பம, அதிலும ஆசையென்பது பெருந்துன்பம் விளைப்பது. ஆசைக்குட்பட்டமனிதர்கள் தாம் எப்போதும் துன்பமேபடுவர். பெரியோர்களுக்கு மானமே அழிவில்லாபபொருளாமென்று சொல்லப்படுகின்றது. ஆசைக்குக்கீழ்ப்பட்டவனே அப்படிப்பட்ட மானத்தையிழந்து யாவர்க்குங் கீழ்மையாவான. சகலசாஸ்திரங்களின மெய்ப்பொருளுணர்ந்தும வறியவன் ஒன்றுமறியாதவனைபோல மானத்தையிழந்து பிழைக்கப்பார்க்கிறான். ஆகையால ஆசையெனனும சத்துருவால் மானமழியும் படிச்செய்கிற வறுமை அந்தோ! கொடியது கொடியது வறுமையென்னும் பெரும்பிணியாற் பீடிக்கப்படுகிறவர்களுக்கு அந்தநோய் தீர்ப்பவனெவன். அந்தோ! வறுமை பெருந்துன்பம் - பெருந்துன்பம் - பெருந்துன்பம். அதிலும பிள்ளைகள் பெண்டிர்கள பலராயிருப்பது அதிலும் பெருந்துன்பமாகும், என்றிவ்வாறுபுலம்பிக் கொஞ்சஞ் செல்வமுண்டாவதற்கேதுவான ஒரு தருமமார்க்கத்தைத் தன்மனதி லெப்போதெண்ணினார் பூமிதானமானது பாபபலன்களையெல்லாம் போக்கும, புண்ணியபலனையெல்லாந் தரும்.

அந்த பூதானஞ்செய்தால் ஏதேதுவேண்டுமோ அதெல்லாங்கிடைக்கும். ஆதலால பூதானமே எல்லாத்தானங்களினும் மேலானதென்று உறுதிசெய்து மிகுந்த அறிவுந்தீரமுமுள்ள பத்திரமதியானவர பததினிமாருடன கௌசாமபியென்னும் நகரத்துக்குச்சென்றார். ஓ பலிசக்கரவர்த்தி, இப்படிச்சென்று அந்நகரத்தில சகலசெல்வங்களுடன்கூடின சுகோஷன் என்னும பிராமணரிடமபோய் ஐந்துமுழப் பரப்புள்ள பூமியை கொடுமென்று யாசித்தார. சுகோஷனென்னும பிராமணா தருமத்தில விருப்பமுள்ளவராதலால் குடும்பியான அந்த பத்திரமதியென்பவரைக்கண்டு மனமகிழ்ந்து பூஜித்துச்சொன்னார ஓ பததிரமதி, தேவரீர எழுந்தருளி அநுக்கிரகிக்கப்பெற்றமையால அடியேன் கிருதார்த்தனாயினேன என்ஜனமம பலனபெற்றது என்குலமும் குற்றமற்றது என்று இவ்வாறுசொல்லி அந்த பததிரமதியைப்பூஜித்து, பூமியானது விஷ்ணுவினுடையது, விஷ்ணுவினாலேயே காப்பாற்றப்பட்டிருக்கிறது, பிராமணன விஷ்ணுரூபன, ஆகையால இந்த பிராமணனுக்கு பூமியை நான கொடுக்கிறவிஷயத்தில சர்வாதாரனான விஷ்ணுவே பிரீதியடையவேண்டுமென்னும பொருளுள்ள மந்திரத்தைச்சொல்லி அந்தப பததிரமதியை பெருமாளாக வெண்ணிப பூஜித்து பூமியைக்கொடுத்தார. மகா புத்திமானாகிய அந்த பததிரமதியென்கிற பிராமணரும இப்படித்தான யாசித்து வாங்கின அந்த பூமியை விஷ்ணுபக்தராய் வேதமவல்லவராய்க குடும்பியாயிருக்கும ஒரு பிராமணருக்கு தானஞ்செயதுவிட்டார சுகோஷனென்னும் பிராமணா பூதானஞ்செயத புண்ணியத்தால கோடிவமிசத்தாருடன் ஒருநாளும் துன்பமணுகாவிடமாகிய விஷ்ணுலோகமசோந்தார. ஓ பலிசக்கரவர்த்தி, பததிரமதியென்பவா ஐசுவரியத்தை இச்சித்தவரானபடியால காரியவைகுண்டத்தில் தன குடும்பத்தோடு பதினாயிரமயுகமவரையில இருந்து, பின்பு பிரமலோகத்தில பத்துலக்ஷம யுகமிருந்து, இந்திரபட்டத்தில ஐந்து கற்பகாலமிருந்து, பின்பு பூமியினமேல் பிறந்து சகலமான ஐசுவரியங்களுடன் கூடி தனது முற்பிறப்புசரித்திரம் தெரிந்தவராய மகாத்துமாவாயிருந்து மேலான பூலோகபோகங்களை அனுபவித்தார இப்படி சிலகால மனுபவித்த பின்பு அந்த பததிரமதியானவா ஒன்றிலும் ஆசையில்லாதவராய் விஷ்ணுவினமேல மனமவைத்தவராய ஜீவனத்துக்கேதுவில்லாதவாகளான பிராமணாகளுக்குத தன பூமியெல்லாங்கொடுத்தார. அந்த பத்திரமதிக்கு ஸ்ரீ பகவானானவா பிரசன்னராய் மேலானபோகமெல்லாம் வேண்டியவளவுக்கு மேலுங்கொடுத்து கோடிவமிசத்தாருடன கூட்டி அவருக்கு மோக்ஷத்தையுந்தந்தருளினார்.

சர்வகாலத்திலும சர்வதேசத்திலும தருமமே பரமகதியென்றெண்ணி நடத்தும் ஓ அசுரமகாராஜாவே, ஆதலால மோக்ஷத்துக்காகத் தவஞ்செய்ய வேண்டியவெனக்கு மூன்றடிமண்கொடும் என்று வாமனமூர்த்திசொல்லக் கேட்டு விரோசனபுத்திரனான பலிசக்கரவாத்தியானவன அவருக்கு பூமிதானஞ்செய்யும்பொருட்டு தீர்த்தம் நிறைந்திருக்கும பாத்திரத்தையெடுத்தான். அப்போதந்த பாத்திரத்திலிருந்த தீர்த்தம விழாவண்ணம சுக்கிரா

சாரியரால் தடைசெய்யப்பட்டது. சர்வாந்தர்யாமியான ஸ்ரீவாமனமூர்த்தியானவர் தீர்த்தபாத்திரத்தைச் சுக்கிரர் தடுத்ததறிந்து அந்த பாத்திரத்தின் முகத்தில தனதைப் பவித்திரநுனியினால் குத்தினார். அந்த தர்ப்பைநுனியானது கோடிசூரியப்பிரகாசமாய் வீணபோகாததாய் சுக்கிரர் கண்ணையழிக்க முயலவதாய் பிரமாஸ்திரமாயிற்று அப்போது சுக்கிரர் ஒரு கண்ணிழப் புண்டு சூராகளான அசுராகளைநோக்கி அந்தத் தர்ப்பைநுனியானது அஸ்திரரூபமாய் விளங்குவதைப் பாருஙகளென்று சொல்லிக் காண்பித்தார். பலிசக்கரவர்த்தியானவன் என்னவந்தாலும் வரட்டுமென்று ஸ்ரீவாமனருக்கு மூவடிமண தானஞ்செய்துவிட்டான அப்போது யாவும் தம சரீரமாயுள்ள அந்த பகவானானவா பிரமலோகமளவாயில தம திருமேனியை வளர்த்தினா· முன்னம வாமனரென்ப பெயர்பெறமப்டி சிறுவடிவுகொண்டிருந்த பரமாத்துமாவானவா இரண்டடிக்குப பூமிமுழுதுமளந்து, மற்றோரடியால் பிரமாண்டத்தினிறுதியளவாக மேலுலகமெலலாயளநது, அளவற்ற தேஜோமூர்த்தியாய் விளஙகினார். அப்போதெம்பெருமானது திருவடி பெருவிரல் நக முனையால பிரமாணடம பிளநது அநதவழியால பிரமாண்டத்தினபுறத்திலுளள ஜலமானது உள்ளே வெள்ளமாய்வநதது. இபபடி அநத ஜலமானது எம்பெருமான் திருவடியை விளக்கிக்கொண்டு நிர்மலமாய் உலகத்துக்கெலலாம் பரிசுத்தகரமான ஆறுகபபெருகியது. புணணியதீர்த்தஙகளெலலாவற்றினுஞ்சிறந்த அந்த எம்பெருமான திருவடித்தீர்த்தமானது பிரமன முதலிய தேவாகளைப பரிசுத்தராக்கிக்கொணடு சப்தரிஷிகளால் கொணடாடப்பட்டு மகாமேருமலையினுச்சியில விழுந்தது. இந்தபபிரகாரம் திரிவிக்கிரமபகவான் ஆச்சரியகரமான ஒரு லீலையைச்செய்ததுகணடு, பிரமன்முதலான தேவாகளும் ரிஷிகளும மனுக்களும் அதிக சநதோஷமுள்ளவாகளாய் அவரைத் துதித்தாாகள்.

பிரமாதிகள் பிரார்த்தனை.

சாவேசுவரராய், சர்வத்துக்கும் உயிராய், பொருதுக்கும் பெரும்பொருளாய், விலக்ஷணமான வடிவங்கள்கொள்ளுபவராய், பிரகிருதிக்கு வசப்படாதவராய், பிரகிருதியைக்கொண்டு விளையாடுபவராய், சித்தசங்கற்பராயிருக்கும் தேவரீருக்கு நமஸ்காரம். பரமேசுவரா, பரமானந்தரூபா, பரமாத்துமா, சர்வோத்தமா, ஆதிமூலமே, அபீஷ்டங்களைக்கொடுத்தருளுபவனே, அளவற்றவனே, தேவரீருககு நமஸகாரம் எஙகுந திருக்கணகளுந் திருக்கைகளும் திருமுடியும் திருவடிகளுமாயிருக்குந தேவரீருக்கு நமஸகாரம், என்று இவ்வணணந் துதிக்கப்பட்ட திரிவிக்கிரமமூர்த்தியான பகவான் பிரமன்முதலிய தேவர்களெல்லாரையும் அவரவரிடங்களில் யாதொரு அச்சமுமின்றியிருக்கும்படி நியமித்தருளினார். ஸ்ரீபகவானானவர் இவ்விதமாகப பலிசக்கரவர்த்தியையடக்கி அவனுக்கு மகாபோகங்களுடன் கூடின பாதலலோகத்தை வாசஸ்தானமாகத் தந்தருளினார்.

சௌனகாதிரிஷிகள் பிரச்னம்.

பயங்கரமான சர்ப்பங்கள் நடமாடுவதால் நிற்கப்பொருந்தாத பாதல லோகத்தில் ஸ்ரீபகவானானவர் பலிசக்கரவர்த்திக்கு உணவுமுதலிய போகங்களை எப்படியாகச் சங்கற்பித்தருளினார்

சூதபௌராணிகர் வாக்கியம்.

மந்திரம்பிசகாய் அக்கினியில் ஓமஞ்செய்வதும் அபாத்திரத்தில்கொடுக்கும் தானமும் அந்த பலிமுதலிய அசுரர்களுக்குப் போகயோக்கியமாகும். பின்னும் ஸ்நானமுதலிய நித்தியகிருத்தியங்களற்றவனாய் ஒருவன்செய்யும் ஓமம் தானம் கிரியைமுதலியவும் அசுரர்க்குப் போகத்தைத்தந்து செய்பவனுக்கு அதோகதியைத் தருவதாகும். இப்படி பகவானானவர் பலிசக்கரவர்த்திமுதலிய அசுரர்களுக்குப் பாதலலோகத்தையும் இந்திரனமுதலியதேவர்களுக்கு சுவர்க்கலோகத்தையும் வாசம்பண்ணுமிடமாகத் தந்தருளினார் தேவர்கள் பூஜிக்கவும், ரிஷிகள் துதிக்கவும், கந்தருவர் பாடவும் எம்பெருமான் மறுபடி வாமனவடிவமாகி உலகத்தாரையகற்றி தவத்துக்காக வனம்சென்றார் வேதப்பொருளுணர்ந்துபேச வல்ல முனிவர்கள் இந்த ஆச்சரியமான காரியத்தைக்கண்டு தங்களுக்குள்வியப்புற்றவர்களாய் எம்பெருமானைத்தண்டனிட்டார்கள். இப்படி விஷ்ணுபதத்தினின்று உற்பத்தியானமையால் அந்த கங்காநதிக்கு இப்படிப்பட்ட பெருமையுண்டாயிருக்கின்றது. அந்த கங்காநதியைநினைத்தாலே மனிதருக்குச் சகலபாபங்களும் விலகும். கங்கைக்குப் போகச் சக்தியில்லாவிடினும் பலநூறுகாதவழிக்கப்புறத்திலிருந்தாவது அன்புடன், கங்கை, கங்கையென்று சொன்னால் அவன் சகலபாபங்களுமற்றவனாய் விஷ்ணுலோகத்தில் கொண்டாடப்படுவான்.

இந்த அத்தியாயத்தைக் கோயிலிலாவது தன்னில்லத்திலாவது நிலையான மனதுடன் எவன் வாசிப்பானோ அல்லது கேட்பானோ அவன் ஆயிரமசுவமேதஞ்செய்தபலனைப்பெறுவான் மனது நிலைத்து இந்த அத்தியாயத்தின் பொருளை யொருவர்க்கு வெளியிடுகிறவர்களுக்குக் கங்கையும் கங்கையையீன்ற கழலானான வெம்பெருமானும் பிரசன்னராதலால் மோக்ஷத்துக்குத் தடையில்லை.

௧௨-வது அத்தியாயம்.

தானப்பிரகரணம்.

சௌனகாதிரிஷிகள் சூதபௌராணிகரைநோக்கி ஓ சுவாமி, தானம் கொடுக்கத்தக்க பாத்திரமெது? தகுந்தகாலம் யாது? தானம்பெறவுரியவர் யாவர்? இவையனைத்தையும் அடியோங்கட்குத் தெளியவுரைத்தல்வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். அப்போது பௌராணிகர் கூறுவாராயினர்.

எல்லாவருணத்தாருக்கும் பிராமணனே மேலான குரு; அவனுக்கே தானங்கள் கொடுக்கற்பாலன, அவன் விதனுவானுயின் விசேஷபலனைக்கொடுக்கும். தானம் வாங்குதலைப் பிராமணனுக்குத் தோஷமென்று சொல்லாமையால் பிராமணன் அஞ்சாமல் எங்கும் தானமபெற்றுக்கொள்ளலாகும். க்ஷத்திரிய வைசியர்கள் ஒருகாலத்திலும் தானம்வாங்கவுரிமையுள்ளவரல்லரென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. கபும்ஸகனுக்கும், பிள்ளையில்லாதவனுக்கும், கபடவொழுக்கங்கொள்ளுபவனுக்கும், வேதத்தைப் பகைக்கிறவனுககும் கொடுத்ததானம் நிஷ்பலமாகும். பிறன்மனையாளை யிச்சிப்பவனுக்கும், பிறன்பொருளை விரும்புவோனுக்கும், சோதிடத்தாற் பிழைப்பவனுக்கும், தெய்வம் பிராமணன் இவர்களைப் பகைப்பவனுக்கும், தனக்குரிய கருமங்களைச் செய்யக்கூடியவனுய்ச் செய்யாது துறப்பவனுக்கும் கொடுத்தவை வீணேயாகின்றன. மேலும குணஙகளைக் குற்றமாக்குதலே யினிதாகக்கொண்டவனுக்கும், நன்மைசெய்தவனுக்குத் தீமைசெய்பவனுக்கும், கருமஞ்செய்யத் தகுதியில்லாதவனுக்குக கருமஞ்செய்விப்பவனுக்கும் கொடுத்தவை அத்தனமையனவே. எப்போதுமிரகசுத்திரிபவனுக்கும, கொலைசெய்பவனுக்கும, கருமஙகளில் சக்திவஞ்சனைசெய்பவனுக்கும், பெயரைவிற்பவனுககும (ஒருபொருளுக்காக பிறனபெயரைத்தனபெயரெனபவனுக்கும), வேதசாஸ்திரஙகளைவிற்பவனுக்கும், தருமததைவிறபவனுக்கும, பிறாவருந்துமபடி செய்வதுதொழிலாககொணடவனுககும் கொடுததததானம பலனற்றதாகினறது. நலலோாகளைபபழிக்கும்படி யெபபோதும பாபஙகள்செய்யததுணிநதவாகளாயிருப்பவாகளிடததில தானமேற்றலும அவாகளுககு தானமீதலும நீககததக்கவைகள் நற்கருமஙகள்செய்யவே மனமுள்ளவனுய், வேதமோதினவனுய், அக்கினிஹோத்திரியாய், ஜீவனுதாரமிலலாதவனுய், வறியவனுய், குடுமபியாயிருப்பவனுக்கே தானஙகொடுககததககது. ஓ முனிவாகளே, தேவபூஜைசெய்தலிலும் புணணியகதைகளால பொழுதுகழிபபதிலும விருப்பமுடையவனுக்கு எப்படியாவது தானஙகொடுககறபாலது. அதினும் தரித்திரனுயிருப்பவனுக்குக்கொடுபபது சிறந்தது.

கஈ-ம் அத்தியாயம்.

புண்ணியபலன்கள்.

தருமராஜ பகீரதசம்வாதம்.

ஓ மகரிஷியே, முன்னுல் பெருந்தகையான பகீரதர் கங்கையின் மகிமையை எவ்வாறறிந்தார்? எவ்வாறு கங்கையை யிங்குகொண்டுவந்தார்? என்றுகேட்க பௌராணிகர் முனிவர்களைநோக்கிச் சொல்லலுற்றுர். ஓபிராமணசிரேஷ்டர்களே, கங்கையின்மகிமையில் பற்றுள்ளவர்கள் உத்தமகதியடைவார்களாதலால் நீங்கள் இதைக்கேட்கமுயன்றது மிகவும்நலமாகனது.

உங்கள்புத்தி மிகவும் நன்மையிற்செல்லத்தலைப்பட்டது மகாத்துமாவான நாரதபகவான் ஸநத்குமாரமுனிவர்க்குரைத்த மகாபுண்ணியகரமான கதையைக் கேளுங்கள். சகலபாபங்களையுமழித்து விசேஷபுண்ணியந்தரத்தக்க இந்த கதையைக்கேட்டால் பிரமஹத்திதோஷமுள்ளவனும் பரிசுத்தனாவானென்று ஸ்ரீநாரதபகவான் சொல்லியிருக்கிறார். சகரகுலத்திற்பிறந்த பகீரதர் யாரால் ஏவப்பட்டு எப்படி கங்கையைக்கொண்டுவந்தாரென்பதை விஸ்தாரமாக வுங்கட்குச்சொல்லுகிறேன். சகலதருமங்களையுமறிந்து எப்போதுமந்த தருமங்களைச்செய்வதில் விருப்பமுள்ளவராய், நல்லோர்களுக்கனுகூலராய், சத்தியந் தவறாதவராய், மகாபாக்கியவந்தராய், மகிமையுறுபவராய், சகலகாரியங்களிலுந் திறமுள்ளவராய், மன்மதனுக்கொப்பான வனப்புவாய்ந்தவராய், சந்திரன் போற் கண்களுக்குக்குளிர்ச்சிதருபவராய், இமயமலைபோல் மனத்திடமுள்ளவராய், நீதியில் தருமராஜனைப்போன்றவராய், சகலமான உத்தமபுருஷலக்ஷணங்கள் நிறைந்தவராய், சகலசாஸ்திரங்களிலும் மெய்ப்பொருளுணர்ந்தவராய், சகலசெல்வங்களுடனுங்கூடினவராய், சகலஜனங்களுக்கும் ஆனந்தகரராய், அதிதிகளைத் தன்னுயிர்போல் உபசரிப்பவராய், எப்போதும் எம்பெருமானாராதனத்தில் நோக்குள்ளவராய், பகைவரைவெல்ல வல்லவராய், சகலபிராணிகளுக்கும் சிநேகிதன்போல நன்றுசெய்வதேதொழிலாகக்கொண்டவராய், இன்னுமுள்ள நற்குணங்களுக்கெல்லாமிருப்பிடமாய், சகரகுலத்தலைவராயுள்ள பகீரதமகாராஜா எழுகடலுந்தீவுகளுமுள்ள இப்புவிமுழுதும் ஆக்ஷிபுரிந்தனர். அந்த பகீரதரைக் காணவேண்டி அறிவிற்சிறந்த தருமராஜன் அவரிடம்வர பகீரதரானவர் அவரை எதிர்கொண்டு தகுந்தமரியாதை பூஜைகள்செய்து பூமியில்விழுந்து தண்டனிட்டார். பின்பு அந்தத்தருமராஜனை உட்காரவைத்து மிகவும்வணக்கத்துடன் வசனிப்பாராயினர்: ஓ சகலபிராணிகளுடையகருத்தையுமுள்ளபடி யறிந்துள்ள மகாத்துமாவே, தேவரீர் விஜயஞ்செய்ததனால் அடியேன் மகாபுண்ணியவானாயினேன். அடியேனை ஒருபொருளாகக்கருதியிங்கு எழுந்தருளின தேவரீருக்குத்தக்கபடி கைம்மாறுசெய்ய வென்னாலாகுமோவென்றுசொல்ல யமதருமராஜன் அருளொடு பரவசமாகி நகைத்துச்சொல்வாராயினர்: தருமங்களையெல்லாமறிந்துநடக்கிற அரசர்களுக்குள் சிரேஷ்டரான ஓ பகீரதரே, மூன்றுலோகங்களிலும் பிரசித்தியுடைய உம்மைக்காணவேண்டியே இங்கு நான்வந்தேன். தேவர்கள் மேன்மைவாய்ந்தகுணங்களில் விருப்பமுள்ளவராதலால் நல்வழியில் நிலைபெற்று சகலபிராணிகளுக்கும் நன்றுசெய்வதேதொழிலாகவுடைய மனுஷனைக்காண விரும்புகிறார்கள். புகழுஞ்செங்கோலும் அருள்முதலியசெல்வமும் யாரிடத்தில் உண்டாயிருக்கின்றனவோ அப்படிப்பட்டவரிடத்தில் நல்லோர்களும் சகலதேவர்களும் வந்து தங்குவார்கள். ஓ மகாராஜனே, உமது நடத்தை ஆச்சரியத்துக்கிடமாகின்றது. ஏனெனில் எம்மைப்போன்றவர்களும் உம்மைப்போல் சகலபிராணிகளுக்கும் நன்மைசெய்ய விருப்பமுள்ளவர்களாயிருப்பது அருமை என்றுசொல்ல அறிவும் பேச்சுத்திறமுமுள்ள பகீரதரானவர் தருமதேவனை முறைப்படிதொழுது வணக்கத்துடன் சொல்லலானார். சகலதருமங்களு

மறிந்து யாவரிடத்தும் பக்ஷபாதமின்றி நீதிநடத்துபவரான ஓகாலபகவானே, அடியேன்கேட்கும்விஷயத்தை மேலானகிருபையுடன் உரைத்தருளவேண்டும். தருமங்கள் எப்படிப்பட்டவைகளென்று சொல்லப்பட்டிருக்கின்றன? அந்த தருமங்கள்செய்பவர்க்கு எந்தலோகங்கள் கிடைக்கும்? நரகவாதனை எத்தனை? அந்தநரகவாதனை எப்படிப்பட்டவர்க்குண்டாகுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது? ஓமகாத்துமாவே, தேவரீரால் கொண்டாடத்தக்கவர்யார்? தேவரீரால் தண்டிக்கத்தக்கவர்யார்? இவையெல்லாவற்றையும் அடியேனுக்கு விவரித்துரைத்தருளவேண்டுமென்றுரா ஓமகாபாக்கியவானான ராஜனே, நன்றுநன்று உமதுபுத்தி தெளிவாய்விளங்குகின்றது தருமங்களையும் அதருமங்களையும் உண்மையாய்ச்சொல்லுகிறேன் கேளும் புண்ணியலோக போகங்களைப்பெறக் காரணமான தருமங்கள் அனேகம் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படியே பாபங்களினுடைய கொடிய நரகயாதனைகளும் கணக்கில்லாதிருக்கின்றன ஓஅரசனே, அவைகளமுழுமையும் விரிவாகச்சொல்லவேண்டுமெனில் பலநூறாண்டுகளானாலும் சொல்லிமுடியாது ஆதலால் தொகுத்துச் சொல்லுகிறேன் நீர் மனந்த மறப்பெங்குஞ்செல்லவிடாமல் கேளும்

பிராமணர்களுக்கு என்றும் ஜீவனம் நடக்கும்படியான பொருளுதவிசெய்தல் மகாபுண்ணியமென்று சொல்லப்படுகின்றது அதுவும் வேதாந்தஞானிகளுக்குச் செய்யப்பட்டால் அதின்பலனென்றுமழிவதுங் குறைவதுமில்லை. சகலசாஸ்திரங்களுமறிந்து பத்தினிமாத்திரமுள்ள பிராமணனையாகிலும், வேதமாத்திரம் ஓதி குடும்பியாதல்முதலிய பாத்திரகுணங்களுள்ள பிராமணனையாகிலும் நிலையான ஜீவனத்துக்கேதுவான வரும்படிகற்பித்துச் சுகமாயிருக்கும்படி செய்கிறவனுக்குள்ள புண்ணியபலனைக் கேளும் தாயின்வழியிலுந் தந்தைவழியிலும் இரண்டுகோடி தரத்தாருடன் விஷ்ணு*லோகத்தடைந்து வேண்டிய போகங்களெல்லாமனுபவித்து அப்படியே மோக்ஷமடைகிறான் பூமியிலுள்ள மட்பொடிகளையும் ஆகாயத்திலிருந்துவரும் மழைத்துளிகளையும் இத்தனையென்று எண்ணினுமெண்ணலாமேயன்றி பிராமணனைச் சுகஜீவனஞ்செய்யும்படி செய்வதாலாகும் புண்ணியத்தை பிரமாவினாலும் எண்ணிமுடியாது. பிராமணன் சகல தேவதாரூபனென்று உரைக்கப்பட்டிருக்கிறானகையால் அப்படிப்பட்ட பிராமணனுக்கு ஜீவனம் கொடுப்பவனது புண்ணியம் எவனால் சொல்லலாகும் பிராமணருக்கு என்றும் நலஞ்செய்து

---

* இத்தன்மையவிடங்களில் சொல்லப்பட்ட விஷ்ணுலோகமென்பது பிரகிருதிமண்டலத்துக்குள்ளிருக்கும் விஷ்ணுலோகமென்று உணரற்பாற்று. ஏனெனில் ''யத்கத்வாநநிவர்த்தந்தே' என்பது முதலிய பிரமாணங்களால் பிரகிருதிக்குப் புறம்பான ஸ்ரீவைகுண்டத்துக்குச்சென்றவர் திரும்புவதில்லையென்றும் அதுவே மோக்ஷஸ்தானமென்றும் உறுதியாய்ச்சொல்லப்பட்டிருக்கிறபடியால் அந்த விஷ்ணுலோகஞ்சென்றபிறகு நூதனமாய் மோக்ஷம் வருவதாகச் சொல்லத்தகாது ஆதலால் இந்த விஷ்ணுலோகம் பிரகிருதிக்கு உட்பட்டதே.

கொண்டேயிருப்பவனெவனோ அவன் சகலயாகங்களும் செய்தவனாகவும், சகல புண்ணியதீர்த்தங்களிலும் ஸ்நானம்செய்தவனாகவும், சகலமான்தானங்களும் செய்தவனாகவுங்கொள்ளப்படுவான். இன்னும் பலவார்த்தைகள் சொல்வானேன் எவன் தான் சக்தியில்லாவிடினும் சக்தியுள்ள ஒருவனிடஞ்சென்று பிராமணருக்கு ஜீவனம் கொடுக்கும்படி சொல்லுகிறானோ அவனும் அந்தபலனையடைகிறான் ஏரியைகட்டுகிறவன் அல்லது கட்டுவிக்கிறவனெவனோ அவனுடைய புண்ணியத்தைச்சொல்லப் பத்துலக்ஷமாண்டுகளாயினுமென்னாலமுடியாது ஓ அரசனே, ஏரிகட்டினமனிதன் ஐந்துகோடி குலத்தாருடன் ஒருகற்பமளவாக விஷ்ணுலோகம் போகங்களனுபவித்து அப்படியே முக்திபெறுவான் ஓ அரசனே, எவனாவதொருவன் வழிநடந்து களைத்து வருந்தும்போது அந்த ஏரியின்நீரைக் குடித்துக் களையாறுவானென்றால்? அப்படிப்பட்ட தருமஞ்செய்தவனுக்குச் சகலமான தீவினைகளும் ஒழிந்துபோவதற்கு ஐயமில்லை எவன் பிறருதவிக்காக ஒருநாளாவது பூமியில் ஜலந்தங்கியிருக்கும்படி செய்வானோ அவன் சகலபாபங்களினின்றும் விடுபட்டவனாகி சுவர்க்கலோகத்தில் நூறுவருஷகாலந் தன்னிஷ்டப்படி சஞ்சரிப்பான் ஏரிகட்டுமவனுக்குத் தன்னாலியன்றவுதவிசெய்பவனும் அல்லது அதற்கு உபாயஞ்சொல்பவனும் அந்த ஏரிகட்டிய புண்ணியபலனை அடைவார்கள் ஏரியில் ஒரு எள்ளில் பாதியளவுள்ள மண்ணாவது எடுத்து வெளியிலபோடுகிறவன் கோடிபாபங்களிருந்தாலும் அவையெல்லாவற்றையு மொழித்து சுவர்க்கலோகத்தில் ஐம்பதுவருஷம் வாசஞ்செய்யப்பெறுவான். சிவன்கோயிலாவது விஷ்ணுகோயிலாவது மண்ணால் எவன்கட்டுகிறானோ அல்லது கட்டுவிக்கிறானோ அவனது புண்ணியபலனைக் கேட்பீராக. தாய்வழியிலும் தந்தைவழியிலும் லக்ஷமகோடி குலத்தாருடன்கூடி மூன்று கற்பகாலம் விஷ்ணுலோகத்திலிருந்து அப்படியே மோக்ஷமடைகிறான். அந்தகோயிலை மரங்களால் கட்டுவித்தால இரண்டத்தனைபலன். செங்கற்களால கட்டுவித்தால மும்மடங்கு கருங்கற்களானால் நான்மடங்காம். ஸ்படிகம் முதலிய கற்களானால மேன்மேலும் பத்துமடங்காகும். தாம்பிரத்தினால்செய்தால நூறுமடங்கும பொன்னினாலசெய்தால் கோடிமடங்கும் பலனுண்டு ஓ அரசனே, கோயில, குளம, கிராமம் இவைகளைக் குறைவற பரிபாலனஞ்செய்பவரெவரோ அவர்களுக்கு அவைகளை உண்டாக்கினவர்களுக்குள்ள புண்ணியத்துக்கு நூறத்தனை புண்ணியமுண்டாகும். இந்த தருமங்களில முழுமனதுடன் உழைக்கிறவர்களெல்லாரும் நிலையான எம்பெருமான திருவடிவாரத்தை அடைகிறார்கள். இந்த தருமங்களில் தானாகவாவது தாக்ஷணியத்துக்காகவாவது வஞ்சனையின்றிப் பாடுபடுபவர்கள் நூறுகோடி மரபினரோடுகூடி விஷ்ணுவினுடன் ஆனந்திப்பார்கள். ஏரியின் பலனில்பாதி குளங்கட்டுவதிலுண்டு. கிணறுகட்டினால காலவாசி. வாய்க்கால் வெட்டுவித்தால அதற்கு நூறத்தனை. கிராமம் உண்டாக்கி தானஞ்செய்யத்தக்க பொருளாளி அவ்வளவு தருமஞ்செய்வதும் எளியவன் வஞ்சனையின்றி ஒரு முழமளவு பூமிதானஞ்செய்வதும புண்

ணியபலன்விஷயத்தில் சரியானவையே பொருளாளிகற்களால் கோயில்கட்டுவதும் வறியவன மண்ணால கட்டுவதும் சரியான பலனுள்ளவை. பொருளுள்ளவன ஏரிகட்டுவதும தரித்திரன கிணறுகட்டுவதும சரிபலனுள்ளவை பலஜந்துக்கள் உபயோகிக்கத்தக்க தோப்புண்டாக்கினவன பிரமலோகமபோய் அங்கிருந்தபடி மோக்ஷத்துக்குச் செல்லுகிறான். தோப்புவைக்க சக்தியில்லாத வறியவனாயிருந்தும உலகத்தாருக்குதவும்படி யொருமரமாவது வைத்து வளாப்பவன மூனறுகுலத்தாருடன பிரமலோகமடைவான் பசுக்களாவது பிராமணராவது இன்னுமெவராவது அரைக்கணபொழுதாகிலும அந்தமாத்தடியிற றங்கபபெறறால அதனாலிவனுக்கு சுவாக்கமுண்டு. தோப்பு, தோட்டங்கள், கோயில, ஏரி, குளம, அக்கிரஹாரம இப்படிப்பட்ட தருமங்களைசசெய்த பாக்கியவநதாகளை ஸ்ரீமந்நாராயணன கொண்டாடுவா யாவருக்குமுதவும்படிக்காவது கோயிலுக்குதவும்படிக்காவது பூநதோட்டம உண்டுபண்ணி நட்டதுபவாகளுடைய புண்ணியபலனைக கேளுமரசனே! அநதத்தோட்டத்தில இலைகளும புஷபங்களுமாய எத்தனை இருக்கினறனவோ அத்தனைவருஷமவரையில நூறுகோடி குலத்துடன சுவாக்கலோகத்தில வசிப்பாாகள். அநத பூந்தோட்டத்துக்கு மதிளெடுப்பித்தவாகளும, முள்வேலிகட்டுவித்தவாகளும பிரமலோகத்தில மூனறு சதுாயுகம வசிக்கினறனா. மேறசொன்ன மதிள அல்லது வேலி உண்டாக்கினவாகள சுவாக்கலோகத்தில தமக்கிஷ்டப்படி நூறுயுகம வாசமபணணபபெறுகிறாகள திருத்துழாய் நட்டுப பாலித்துவருபவாகளின புண்ணியபலத்தைச சொல்லுகிறேன கேளும தாய்தந்தையா வழிகளில ஏழுகோடி குலத்துடன நூறறைமபதுகறபகாலம ஸ்ரீமந்நாராயணனபக்கலில வாசமபணணுவாாகள. எவன் திருத்துழாய் ஹோமமணணையெடுத்து நெறறியில ஊாத்துவபுண்டரந் தரிப்பானோ அவனுக்கு நெற்றியில கண்ணும தலையில பிறையுமான சிவரூபம் உண்டாகும திருத்துழாயடியில எத்தனை புறகளெடுத்துபபோடுவானோ அத்தனை பிரமஹத்திதோஷங்கள அறறுபபோவதற்குச் சந்தேகமில்லை ஒருகைத் தண்ணீராவது திருத்துழாய்க்குப் பாய்ச்சுகிறவன் திருபபாற்கடலில திருக்கணவளரும எமபெருமானுடன சந்திர நக்ஷத்திரங்களுள்ளவும் வாசம்பணணபபெறுகிறான் செழிப்பான திருத்துழாய் தளத்தை பிராமணருக்குக கொடுப்பவன் மூனறுகுலத்துடன விஷ்ணுலோகமடைவான். திருத்துழாய்க் கொழுந்தாவது அதன காம்பாவது காதில் தரித்துக்கொண்டிருப்பவனுக்கு உபபாதகங்கள் நசித்துப்போகும். ஓ ராஜசிரேஷ்டா, திருத்துழாய் தோட்டத்துக்கு முளவேலியாவது மதிளாவது செய்விப்பவன்பெறும் பெருமபுணணியபலனைக கேளும வேலிகட்டுவித்தவன் அந்தவேலி இருக்கிறகாலமவரையில் மூனறுகுலத்துடன் பிரமலோகத்திலிருப்பான மதிள்கட்டுவித்தவன் மூன்றுகுலத்துடன விஷ்ணுவோடு சரியான வடிவமகொண்டு விஷ்ணுலோகத்தில வாசமபணணுவான். செழிப்பான திருத்துழாய்க் கொழுந்துகளால எமபெருமான் திருவடிவாரத்தை அாச்சிப்பவன் பிரமலோகமசென்று அப்படியே மோட்சமடைவன துவாதசி

யிலாவது பருவத்திலாவது ஸ்ரீஹரிக்குப் பால் திருமஞ்சனஞ்செய்வித்தவன்
பதினாயிரங்குலத்துடன்கூடி விஷ்ணு சாரூபமடைவான். ஓ அரசனே, துவா
தசியில் எம்பெருமானுக்கு காழ்நெய் திருமஞ்சனஞ்செய்விக்கிறவன் கோடி
குலத்துடன் விஷ்ணு சாயுச்சியமடைவான். ஏகாதசியில் பஞ்சாமிருதத்தால்
பரமாத்மாவுக்குத் திருமஞ்சனஞ்செய்கிறவனுமப்படியே. ஓ ராஜனே, ஏகா
தசியிலாவது, துவாதசியிலாவது, பருவத்திலாவது விஷ்ணுவுக்கு இளநீர்
திருமஞ்சனஞ்செய்கிறவன் புண்ணியபலனைக்கேளும். நூறுஜன்மங்களிற்செ
ய்துள்ள பாபங்களெல்லாம் நீங்கி இருநூறுகுலத்துடன் ஸ்ரீ விஷ்ணுவோடு
ஆனந்தமனுபவிக்கிறான். தேவதேவனான ஸ்ரீகேசவனுக்குக் கருடபஞ்சாற்
றால் திருமஞ்சனஞ்செய்கிறவன் பதினாயிரங்குலத்துடன்கூடி விஷ்ணுவோடு
ஆனந்தமனுபவிக்கிறான். புஷ்பங்களாவது சந்தனமாவது சேர்த்த பரிமள
நீரினால் தேவபிரானுக்குத் திருமஞ்சனஞ்செய்விப்பவன் ஒருயுகத்தளவு இந்
திரனுக்குவான். வடிகட்டிய சுத்தஜலத்தால் எம்பெருமானுக்குத் திருமஞ்
சனஞ்செய்பவன் சகலபாபங்களும் விட்டகல நூறாண்டுவரையில் சுவா
க்கலோகத்தி லிருப்பான். சௌரமான மாதப்பிறப்புதினங்களில் பெரு
மானுக்குப் பால் திருமஞ்சனஞ்செய்தால் பதினான்குகுலத்தாருடன் விஷ்ணு
லோகத்தில் வாசங்கிடைக்கும். சுக்கிலபக்ஷசதுர்த்தசியிலும், அஷ்டமியி
லும், பருவத்திலும், ஏகாதசியிலும், ஞாயிற்றுக்கிழமையிலும், துவாதசியி
லும், பஞ்சமியிலும், சந்திரசூரியகிரகணத்திலும், மனுவாதிகளிலும், யுகா
திகளிலும், வியதீபாதத்திலும், வைதிருதியிலும், அர்த்தோதயத்திலும், பூச
நக்ஷத்திரத்துடன்கூடின ஞாயிற்றுக்கிழமையிலும், அஸ்தங்கூடின ஞாயிற
றுக்கிழமையிலும், ரோகணிகூடிய புதன்கிழமையிலும், சனிக்கிழமைகூடின
ரோகிணிநக்ஷத்திரத்திலும், செவ்வாய்க்கிழமைகூடின அசுவினிநக்ஷத்திரத்
திலும், சனிக்கிழமை அசுவினியிலும், புதன்கிழமை அசுவினியிலும், வெள
ளிக்கிழமை வியதீபாதத்திலும், ஞாயிற்றுக்கிழமை வைதிருதியிலும், புதன
கிழமை அனுஷத்திலும் ஞாயிற்றுக்கிழமை திருவோணத்திலும், திங்கட்கிழ
மை திருவோணத்திலும், குரு - ஹஸ்தநக்ஷத்திரத்திலிருக்கும்போதும், புத
னகிழமை அஷ்டமியிலும், புதன்கிழமை பூராடத்திலும், வெள்ளிக்கிழமை
ரேவதியிலும், பரிசுத்தனாய் மௌனவிரதத்துடன் விஷ்ணுவுக்காவது சிவனுக்
காவது பாலினால் அல்லது நெய்யினால் அல்லது தேனினால் திருமஞ்சனஞ்
செய்பவனுடைய புண்ணியபலனைக்கேளும். இருபத்தொருவமிசத்துடன்
சகலயாகங்களுஞ்செய்த புண்ணியத்தைப்பெற்று சகலபாபங்களும் நீங்கி ஒரு
கற்பகாலம் விஷ்ணுலோகத்தில் வசிப்பான். அவ்விடத்திலே ஸநகாதிமகா
யோகியர்களுக்குங்கிடைப்பதருமையான மெய்யறிவைப்பெற்று அப்படியே
மோக்ஷத்தைப்பெறுவான். கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியிலும், திங்கட்கிழமை
யிலும் சிவனுக்குப் பாலபிஷேகஞ்செய்தவன் சிவலோகத்தில் சமானபோக
மடைவான். ஓ அரசனே! கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியிலும், அஷ்டமியிலும்
சிவனுக்கு நெய்யால் அல்லது தேனால் அபிஷேகஞ்செய்தவனுமப்படியே.
ஓ மகாபாக்கியவானே, சோமவாரத்தில் சிவனுக்கு புஷ்பரசங்கள் பலரசங்

களை சமர்பித்து அபிஷேகஞ்செய்தவன் நூறு கற்பகாலம் சிவலோகத்தில் வசிப்பான். விஷ்ணுவுக்கு எண்ணெய்யால் அபிஷேகஞ்செய்தவன் மூன்று குலத்துடன் விஷ்ணுவோடு சரூபமாய் விஷ்ணுலோகத்தையடைவான் சிவனுக்கு எண்ணெய் அபிஷேகம்செய்தவன் அப்படியே சிவன்போன்ற வடிவத்துடன் சிவலோகத்தையடைவான். சிவனுக்கு கருப்புரசத்தால் அபிஷேகம்செய்வித்தவன் ஒரு கற்பமளவாக நூறுகோடிகுலத்துடன் சிவலோகத்தில் வாசஞ்செய்யப்பெறுவான். ஓ மகாத்துமாவே, துவாதசியில் லிங்கத்துக்கு பாலாவது நெய்யாவது அபிஷேகம்செய்தவனுடைய புண்ணியத்தைக்கேளும். கோடிகுலத்துடன்கூடி பதினாயிரம்பிறப்புகளிற்செய்த பாபங்களெல்லாம் நீங்கி இம்மையில் மனிதர்களில் மேலாயிருந்து மறுமையில் சிவனோடுகூடி இன்பமடைவான் கார்த்திக சுத்த உத்தான துவாதசியன்று ஸ்ரீஹரிக்கு பாலபிஷேகம்செய்தவனெவனோ அவனுடைய புண்ணியபலத்தைச் சொல்லக்கேளும் பதினாயிரம் முறைபிறப்புகளிற்செய்த பாபங்களிழந்து கோடிகுலத்துடன் பரமபதத்தையடைகின்றான். இதற்குச் சந்தேகமில்லை கிருத்திகை பருவங்கூடியதினத்தில் நாழி தேனால் ஸ்ரீகோவிந்தனுக்கு அபிஷேகம்செய்வித்தால் நூறுகோடிகுலத்துடன் விஷ்ணுவைச் சேருகிறான் மனதுக்கு இன்பமான புஷ்பங்களும் சந்தனமுங்கொண்டு சிவனுக்கு பூஜைசெய்தால் சிவலோகமும் விஷ்ணுவுக்கு பூஜைசெய்தால் விஷ்ணுலோகமும் பெறுவான் விஷ்ணுவையாகிலும் சிவனையாகிலும் தாமரைப்பூவால் அர்ச்சிக்கிறமனிதன் மூன்றுகுலத்துடன் விஷ்ணுலோகத்தையடைகிறான். இரவில் விஷ்ணுவுக்கு தாழம்பூக்களாலும் சிவனுக்கு ஊமத்தைப்பூக்களாலும் பூஜைசெய்பவன் சகலபாபங்களும் நீங்கினவனாய் ஒரு யுககாலம் விஷ்ணுலோகத்தில் வசிப்பான் ஓ மகாபாக்கியசாலி, செண்பகப்பூக்களால் விஷ்ணுபூஜைசெய்பவன் விஷ்ணுபோல உருவங்கொண்டு விஷ்ணுலோகத்தையடைவான் எருக்கம்பூக்களால் சிவபூஜைசெய்பவன் சிவன்போல உருவங்கொண்டு சிவலோகத்தையடைவான். ஜாதிபுஷ்பங்களால் சிவனையும் செவ்வல்லிபுஷ்பங்களால் விஷ்ணுவையும் பூஜிப்பவன் சகலபாபங்களுமொழிந்து ஒருயுகமளவில் மகாமேருவின் சிகரத்தில் வாசஞ்செய்யப்பெறுவான். விஷ்ணுவை சிறுகோவை புஷ்பங்களாலும் சிவனைக் கொக்குமந்தாரை புஷ்பங்களாலும் பூஜித்தால் அவ்வவருடைய லோகத்தையடைவான். சிவனையும் விஷ்ணுவையும் அழகான கிடாரைபுஷ்பங்களினாலும் வன்னிபுஷ்பங்களினாலும் அர்ச்சனைசெய்தால் விரும்பிய இன்பங்களெல்லாம் பெறலாகும் மாயுருவிபத்திரங்களால் சிவனைப்பூஜிப்பவன் சிவசாயுஜ்ஜியத்தைப் பெறுவான். அந்த பூஜையும் சதுர்த்தசியன்று செய்வது விசேஷமானது. சிவனுக்காவது விஷ்ணுவுக்காவது நெய்யும் சாம்பிராணியும் சேர்த்து தூபம் சமர்ப்பித்தால் சகலபாபங்களும் விலகும். ஓ ராஜசேகரா, விஷ்ணுவுக்காவது சிவனுக்காவது நல்லெண்ணெய்சேர்த்து தீபம் சமர்ப்பித்தால் சகல இன்பங்களையும் பெறலாகும் மேற்சொன்னதீபம் நெய்சேர்த்து சமர்ப்பித்தால் சகலமானபாபங்களும் விடப்பெற்று கங்காஸ்நானபுண்ணிய

மும் பெறுவான். ஓ அரசனே எண்ணெய்யினாலாவது நெய்யினாலாவது
சிவனுக்காவது விஷ்ணுவுக்காவது நிலையான திருவிளக்குச் சமர்ப்பித்தலால் உண்
டாகும் பலனைக் கேளும் சகல பாபங்களினின்றும் விடுபட்டவனாகிச் சகல
மான ஐசுவரியங்களுடன் கூடி மூவேழு குலத்தாருடன் தான் எந்தத் தேவனுக்கு
திருவிளக்கு சமர்ப்பித்தானோ அந்தத் தேவனுடைய லோகத்தைப் பெற்று இன்
புறுவான் உலகத்தில் அதிக போக்கியமான பதார்த்தங்களெவைகளோ அவ
ற்றை அந்தத் தேவனுக்குச் சமர்ப்பித்தால் நாற்பது குலத்துடன் அந்தத் தேவ
னிடம் சேருகிறான். அப்படி போக்கியமான வஸ்துவை பிராமணனுக்குக்
கொடுத்தால் பிரமலோகத்தில் போகங்களைப் பெற்றுப் பின்பு மோக்ஷமடை-
வான். ஓ ராஜனே, ஒருவன் கருவை அழித்த பாபியாயிருந்தாலும் அன்ன
தானஞ்செய்தால் பாபமற்றவனாவான் அன்னம் ஜலம் இவை கொடுப்பதற்
குச் சரியான தானம் எக்காலத்திலும் கிடையாது ஓ மகாராஜனே, உலகத்
தில் அன்னங்கொடுத்தவன் உயிரைக் கொடுத்தவனென்று சொல்லப்படுவான்
உயிரைக் கொடுத்தவன் எல்லாம் கொடுத்தவனாகிறான் ஆதலால் அன்னதா
னஞ்செய்தவனுக்குச் சகல தானபலன்களுமுண்டாம் அன்னதானஞ்செய்
பவன் பதினாயிர வம்சத்துடன் பிரமலோகத்தையடைவான் மேலுமவன்
அங்கிருந்தபடி மோக்ஷமடைவதேயன்றி அவனுக்கு மறுபிறவி கிடையாது.
இவ்விதமாக சாஸ்திரங்கள் கூறியிட்டிருக்கின்றன அன்னங்கொடுத்தால் பெ
ற்றுக்கொள்பவன் உடனே சந்தோஷிப்பதுண்டாகையால் அன்னதானமே
எக்காலத்திலும் சிறந்த தானமாம் அதற்கும் மேலானது தாகத்துக்கு நீர்
கொடுப்பதாகும் ஓ மன்னவனே, ஒரு ஆச்சரியங்கேளும் பிரமஹத்தி முத
லிய சகல பாபங்களும் செய்தவராயினும் பசித்தவர்க்கு அன்னமும் தாகங்
கொண்டவர்க்கு நீரும் கொடுத்துவருவாராகில் வேறொரு பிராயசித்தங்க
ளின்றியே சுத்தராகுவார்கள். ஓ ராஜனே, மனிதர்களின் உடம்பு அன்னத்
தால் உண்டாகி நிலைத்திருக்கின்றதென்பார்கள் அன்னந்தான் உயிர் என்
பார்கள் ஆகையினால் அன்னங்கொடுப்பவன் உயிர்கொடுப்பவனாக உன்ன
லாம் உடனே திருப்தி செய்விப்பதாய சகல இன்பங்களும் தருவதாயிருக்
கும் அன்னத்துக்குச் சரியான தானம் எக்காலத்துங்கிடையாது அன்ன
தானஞ்செய்த மகாபுருஷன் குலத்தில் ஆயிரந்தரமளவாகப் பிறந்தவரெல்லாம்
நரகத்தைப் பார்ப்பதுமில்லை. ஆதலால் அன்னங்கொடுப்பவனே சிறந்தவன்
ஓ ராஜனே, எவன் அதிதியாக வந்தவனை அன்போடு உபசரித்து அன்னங்
கொடுப்பானோ அவன் மோக்ஷமடைவான் ஆதலால் அதிதிகளுக்கு அன்
னங்கொடுத்துக்கொண்டிரும். அதிதிக்கு அன்போடு பாதங்குளிரும்படியா
வது எண்ணெய் இடுபவன் கங்கை முதலிய சகல புண்ணியதீர்த்தங்களிலும்
ஸ்நானஞ்செய்த பலனைப் பெறுவான். ஓ மகாராஜனே, எவன் அன்பாய் பிரா
மணர்களுக்கு எண்ணெயிட்டு ஸ்நானஞ்செய்விக்கிறானோ அவன் நூற்றுப்
பத்துவருஷம் கங்கையில் ஸ்நானம் செய்தவனாகிறான். இதில் ஐயப்படவே
ண்டாம். ஓ மண்டலாதிபதியே, நோயாளிகளான பிராமணர்களைக் காப்பா
ற்றுகிறவன் கோடிகுலத்துடன் ஒரு சதுர்யுகம் பிரமலோகத்தில் வசிக்கப்

பெறுவான். ஓ அரசனே நோயாளியான ஒருமனிதனையாவது தன்னியல்புககு ஏற்றபடி வஞ்சகமின்றிக் காப்பாற்றுகிறவனுக்கு ஸ்ரீமகாவிஷ்ணுவானவா கிருபைகூர்ந்து சகலமான இனபங்களையும தநதருளுகிருர். பிணியாளியான மனிதனைக் காப்பாற்றுகிறதற்குத தனனாற்கூடியவளவு செய்கையினலாவது வாயினலாவது மனதினலாவது முயலுகிறவன சகலபாபங்களுமொழிந்து சகலவினபங்களுமடைகிருன ஓ அரசனே, பிராமணனுககு இடம்கொடுப்பவனவிஷயத்தில எமபெருமான கிருபைசெய்வார, ஆகவே சகலதேவதைகளும அவனுககு அனுகூலராவாாகள் வேதங்கற்ற பிராமணனுக்குக கறவைப்பசுதானஞ்செய்தவன் மறுபிறப்பில்லாதவனுகி விஷ்ணுலோகத்தையடைகிருன மறறெருவரிடத்தில தானமவாங்கியாவது பசுவைத தானமசெய்யவேணடுமெனகிற சிரத்தையுடன தானஞ்செய்பவனுககுளள புணணியமிவவளவென்றுசொலல எனககுச சகதியும அறிவும போதாது வேதமவலல பிராமணனுககுக கறவையுளள காராமபசு,தானஞ்செய்பவன சகலபாபங்களுமநீங்கி ருதத்திரனுமாவான வேதாநதமவலல பிராமணனுக்கு கனறை யீன்றுகொணடிருககும பசுவை தானஞ்செய்பவனுககுள்ள புணணியத்தை யளவிட பலநூறருணடுகளிலு மெனனலாகாது. ஏதாவது பயஹேதுவினல மனங்கலங்கியிருப்பவாகளுக்கு தனனுடைய வலலமைககேறறபடி அஞசேலென்று வாககு கொடுப்பவனுடைய புணணியபலனை யறிநதுசொலலத் திறமுளளவனெவன ? ஒருவனுமிலலை. சமபூரணமான தக்ஷிணைகொடுத்துச சகல யாகங்களுஞ்செய்வது ஒரு தட்டிலும பயநதபிராணியின பிராணனைககாப்பது ஒரு தட்டிலுமாகவைத்துச சரியாகநிறுக்கலாம ஓ அரசனே, பயப்பட்டிருககிற பிராமணனை அநத பயத்தைத தீரத்து ரக்ஷிக்கிறவன நூற்றுப்பத்துவருஷம கங்கையில ஸ்நானஞ்செய்தவனுகிறுனெனபதற்குச சநதேகமிலலை சகல தருமங்களுக்குள்ளும அபயங்கொடுப்பதே மேலானதென்று சானருேருரைககிருாகள் ஆதலால் அபயங்கொடுத்துக் காப்பவனநேரிட விஷ்ணுருபனெனனத் தடையிலலை வஸ்திரங்கொடுத்தவன ருத்திரலோகத்தையும, கன்னிகையைக கொடுத்தவன பிரமலோகத்தையும, பொனகொடுத்தவன விஷ்ணுலோகத்தையும தனகுலத்தாருடன அடைவா வேதாநதம் வலலவனுககு அலங்கார கனனிகாதானஞ்செய்தவன நூறுவமிசத்தாருடன பிரமலோகத்தையடைவான. அனபோடு தாம்பூலதானஞ்செய்பவனுககு விஷ்ணுவானவா கிருபைகூாநது செலவங்களுடனகூடின ஸதானத்தைத தருகிருா. பால், நெய், தேன், தயிா இவைகளில ஏதேனும தானமசெய்பவன தேவயுகமளவாக சுவாககலோகத்தில சுகமனுபவித்துககொணடிருப்பான கருமபு கொடுப்பவன சநதிரலோகத்தையும, சநதனபுஷ்பங்களிலேதேனும கொடுக்கிறவன பிரமலோகத்தையு மடைவான வெல்லமுதலிய கருமபுரசங் கொடுக்கிறவன திருப்பாற்கடலை யடைகிருன. சாப்பாடும தணணீரும கொடுப்பவன் சூரியலோகத்தையடைகிருன. வித்தியாதானம் எலலாவற்றினும் சிறந்ததாதலால் வித்தியாதானஞ்செய்பவன பாமபதமடைவான்.

கோதானம் பூதானம் வித்தியாதானம் இம்மூன்றும் நரகத்தினின்று நீக்கத்தக்க மகாதானங்கள் என்னப்படும். அவற்றுள்ளும் வித்தியாதானம் மேலானது. ஞானத்தையளிப்பதினாலும், சத்தியந்தவறாமையினாலும், கோபமில்லாமையினாலும் உள்ளும் புறமும் ஒத்திருப்பதனாலும் மோக்ஷமுண்டாமென்பார்கள் பண்டிதரெல்லாரும் ஓ அரசனே, தானியதானஞ்செய்கிறவன் பிரமலோகத்தில் சுகத்தையடைவான் தானியங்கொடுத்தலினால் ஜனங்கள் உபபாதகங்களினின்று விடுபட்டுச் சுத்தராகிறார்கள் ஒரு சிவலிங்கதானஞ்செய்தால் கோடிபிரமாண்டங்களைத் தானஞ்செய்தளவு பலனுண்டு விஷ்ணுவானவர் சாளக்கிராமவடிவாயிருக்கிறாரென்பதில் சந்தேகமில்லை சாளக்கிராமதானஞ்செய்தால் சிவலிங்கதானபலனுக்கு இரட்டித்தபலனுள்ளது. தேவனுக்கு நெய்விளக்கு சமர்ப்பிப்பவனுக்குக் குறைவின்றியே கங்காஸ்நானஞ்செய்தபலமுழுதுமுண்டாம் ரத்தினமிழைத்த தங்கம் தானஞ்செய்தால், அருமையான மோக்ஷம் பெறலாகும் ஆதலால் அது மகாதானமென்னப்படும். மாணிக்கதானத்தாலும் மோக்ஷமடையலாம். வயிரதானத்தால் துருவலோகமடையக்கூடும் பவளங்கொடுத்தால் சுவர்க்கலோகத்தையும், முத்துக்கள்கொடுத்தால் சந்திரலோகத்தையும், பதமராகமும் வைடூரியமும் கொடுத்தால் ருத்திரலோகத்தையும், மாணிக்கம் கொடுத்தலால் பிரமலோகத்தையும், ஆபரணங்கொடுத்தலால் சகலலோகங்களையும் சுகமாகப்பெறலாகும் வாகனதானத்தினால் விமானமேறும் புண்ணியமுண்டாகும். பசுமாடுகளுக்குப் புலமுதலியவை கொடுத்தலால் உத்தமமான ருத்திரலோகத்தையடையலாம் லவணதானத்தினால் வருணலோகத்தை அடையப்பெறுவான் தம்வருணத்துக்கும் ஆசிரமத்துக்குமுரிய ஒழுக்கங்களில் எப்போதும் நிலைபெற்றவர்களாய், பிறர் தம்மைப்புகழ விரும்பாதவர்களாய், பிறர் குணங்களின்மேல் பொறாமைகொண்டு குற்றமேற்றாதவர்களாய் இருக்கும்வர்கள் பிரமலோகத்தையடைகிறார்கள். சிலர்மேல் விருப்பும் சிலர்மேல் வெறுப்புமின்றித் தமக்குத்தெரிந்துள்ள மெய்ப்பொருளைக் கேட்பவர்களுக்குள்ளபடி தெரிவிக்க விரும்புபவர்களாய் எப்போதும் எம்பெருமான்திருவடிகளை ஆராதிப்பவர்களாயிருப்பவர்கள் பிரமலோகத்தையடைவார்கள் நல்லோர் கூட்டுறவினால் சந்தோஷித்துக்கொண்டிருப்பவர்களாய், எல்லாப்பிராணிகளுக்கும் நலஞ்செய்வதில் இச்சையுள்ளவர்களாய், பிறர்குற்றந்தூற்ற உடன்படாதவர்களாயிருப்பவர்களும், பிராமணர்களுக்கும் பசுக்களுக்கும் என்றும் நன்றுசெய்வதே தொழிலாகக்கொண்டவர்களும், பிறர்பெண்டிர் புணர்ச்சிக்கு சம்மதியாதவர்களாயிருப்பவர்களும் யமலோகஞ் சேர்வதில்லை. தகாதபுலன்களிற் பொறிகள் செல்லவிடாமல், தகாத உணவுகளை உட்கொள்ளாமல், கோபத்துக்குள்ளாகாமல் நற்செயலையுள்ளவர்களாய், பிராமணருக்கு நலஞ்செய்பவர்களாயிருப்பவர்கள் பரமபதத்தையடைகிறார்கள் அக்கினிகாரியங்களிலும், குருவுக்கும் யதிக்கும் பணிவிடைசெய்வதிலும் தவறாதவர்கள் யமனால் வாதிக்கப்படமாட்டார்கள், தேவன்பூஜைகளிலும், அவன் திருநாமங்களைச் சொல்லுதலிலும் எப்போதும் பற்றுள்ளவர்களாய் தானம்

வாங்கி பொருள்சேர்க்க மனமில்லாதவர்களாயிருக்குமவர்கள் பரமபதத்தை யடைகிறார்கள் நாதனற்ற பிராமணப்பிணத்தைச் சமஸ்காரஞ்செய்யு முத்தமபுருஷர்கள் சாஸ்திரவிதிப்படி ஆயிரமசுவமேதயாகஞ்செய்த பலனையடைகிறார்கள் ஓ அரசசிகாமணி, பூஜையில்லாமலிருக்கும் லிங்கத்துக்கு பத்திரங்கள், புஷ்பங்கள், கனிகள், தீர்த்தம், இவைகளிற் கிடைத்ததுகொண்டு அர்ச்சிப்பவர்களின் புண்ணியபலனைக்கேளும் பூஜையின்றிப் பாழ்பட்டிருக்கும் லிங்கத்துக்குத் தனசக்திவஞ்சனையின்றி ஒருகை நீராகிலும் எடுத்து அபிஷேகஞ்செய்தால் லக்ஷம் அசுவமேதஞ்செய்த புண்ணியபலன் சித்தமாய் உண்டாகும் பாழாயிருந்த லிங்கத்துக்குப் பத்திரபுஷ்பங்களினாலாவது பூஜை நடந்துவரும்படி செய்தவன் கோடி அசுவமேதங்களின் புண்ணியமடைகிறான். பாழாயிருந்த லிங்கத்துக்கு பக்ஷணம் அன்னம் கனிகள் முதலியவற்றோடு பூஜைநடப்பிப்பவன் சிவசாயுஜ்ஜியமடைவான் பூஜையில்லாமலிருந்த விஷ்ணுவுக்குப் பூஜை யெவன்செய்வானோ அவனது புண்ணியபலனைச் சொல்லுகிறேன் கேளும். பூஜையில்லாதிருந்த பெருமானுக்கு சுத்தஜலத்தினால் திருமஞ்சனஞ்செய்விக்கிறவன் எழுபது மரபினருடன் விஷ்ணுலோகமடைகிறான் பக்ஷணம் அன்னம் முதலியவற்றுடன் பூஜைசெய்கிறவன் பதினாயிரங்குலத்துடன் பரமபதமடைகிறான் சிவன்கோயிலாவது விஷ்ணுகோயிலாவது பழுதுபோனதைச் செம்மைப்படுத்துபவனுடைய பலனைக்கேளும் நூறுஜன்மங்களிற்றேடிய பாபங்களினின்று விடுபட்டு மூன்றுகுலத்துடன் ஒரு கற்பகாலம் காரியவைகுண்டத்தில் இருந்து அங்கிருந்தபடி மோக்ஷம் பெறுகிறான் ஓ ராஜனே, கோயிலில் மெழுகி விளக்கும்படி செய்கிறவனுடைய பலனைச் சொல்லுகிறேன் கேளும், அவனால் எத்தனை மட்பொடிகள் போக்குவிக்கப்பட்டனவோ அத்தனை ஆயிரங்கற்பம் விஷ்ணுலோகத்தில் கொண்டாடப்படுகிறான் அவன் மெழுகுவித்தலில் எத்தனை மட்பொடி நனைந்தனவோ அத்தனை முற்பிறப்புகளில் செய்துள்ள பாபங்களெல்லாம் உடனே விலகிப்போகின்றன கோவில்களில் அனபோடு சந்தனமுதலிய வாசனைசேர்ந்த நீரைத் தெளிப்பிக்கிறவன் அடையத்தக்க புண்ணியபலனைக் கேளும் எத்தனை மட்பொடி அந்தஜலத்தால் கரையுமோ அத்தனை ஆயிரங்கற்பகாலத்துக்கு விஷ்ணுசாரூபியம் கிடைக்கும் கோவிலுக்கு மண்ணாலாவது காவிக்கல் குழம்பினாலாவது பூச்சுசெய்விப்பவன் இரண்டுகுலத்துடன் விஷ்ணுலோகத்தில் கொண்டாடப்படுவான் கோயிலிற் கற்சுண்ணாம்பினால் கட்டடங்கள்கட்டுகிறவன் எவ்வளவு சுண்ணாம்புப்பொடி பூமியில் போட்டிருப்பானோ அத்தனை ஆயிரம்யுகத்துக்கு விஷ்ணுசாரூப்பியமடைகிறான் சொந்தனை, மாமுதலியவற்றால் தீபஞ்செய்து சமர்ப்பிப்பவன் புண்ணியத்தை பல நூறுவருஷத்திலாவது நான் சொல்லவல்லேனல்லேன் விஷ்ணுவுக்காவது சிவனுக்காவது அகண்டவிளக்கு செய்விக்கிறவன் நாளதோறும் அசுவமேதயாகப்பலனை அடைகிறான் ஓ அரசனே, பூசிக்கப்பட்டிருக்கிற சிவனையாவது விஷ்ணுவையாவது தரிசித்துத் தண்டனிடுகிறவன் விஷ்ணுலோகஞ்சேர்ந்து நூறுவருஷம் வாசமபண்ணுவான் விஷ்ணுவுக்கு மூன்றுபிரதக்ஷ

ணஞ்செய்கிறவன் சகலபாபங்களுந் தொலைந்து தேவேந்திரபட்டம்பெறுவான். பரமாத்துமாவான ஸ்ரீ ஹரிசந்நிதியில் ஒரு பிரதக்ஷணஞ்செய்து கொண்டால் பூரணமான அசுவமேதபலனைப் பெறலாகும் சிவனுக்கு முறைப்படி ஒரு பிரதக்ஷணஞ்செய்தால் பிரமஹத்திமுதலான பாபங்கள் நீங்கும் இரண்டு பிரதக்ஷணஞ்செய்தால் சக்கிரவர்த்தியாகலாம் மூன்று பிரதக்ஷணஞ்செய்தால் இந்திரன்செல்வமடையலாம் சிவனைப் பிரதக்ஷணஞ் செய்யுமிடத்து சோமசூத்திரத்தைக் கடக்கலாகாது கடப்பானாகில் ஒவ்வொருதடவையிலும் கடக்கவொண்ணாததைக் கடந்ததோஷம் முப்பதினாயிரமளவாக வளரும் சர்வலோகநாயகனாய், சர்வாதாரனாய், குறைவற்றவனாயிருக்கும் எம்பெருமானை மனப்பூர்வமாக வாயினால் வாழ்த்தினால் அபீஷ்டங்களெல்லாம் கைகூடும் கோயிலில் எவனொருவன் பக்தியோடு கூத்தாடுகிறானோ அல்லது பாட்டுகள்பாடுகிறானோ அவனுடைய பலனைக்கேளும். பாட்டுபாடுகிறவன் கந்தருவர்களுக்கு ராஜனாகவும், கூத்தாடுகிறவன் இந்திரன்சேனைக்குத் தலைவனாகவும் ஆகி எட்டுகுலத்துடன் கற்பகாலமளவு போகங்களனுபவித்துப் பின்பு மோக்ஷத்தையடைவான். குழல்முதலியவாத்தியங்களைக் கோயிலில் பக்தியோடுவாசிப்பவன் நூறு விமானங்களுடன் கற்பகாலமளவாயில் சுவர்க்கத்தில் வாசம்செய்வான் கோயில்களில் கைத்தாளம்போடுகிறவர்கள் சகலபாபங்களும் நீங்கி இரண்டுயுகம் விமானம் ஏறப்பெறுவார்கள் கோயிலில் திருமணிவாசிப்பவர்களின் புண்ணியத்தைத்தெரிந்து சொல்லவல்லவர் ஒருவருமில்லை மணலாவது, காவிகளாலாவது, கோமயத்தினாலாவது கோயில் மெழுகுபவர்கள் விமானத்துக்குரியவராவார்கள் பகவானுக்காப்பிரமாக பேரி, மத்தளம், தப்பட்டை, கொம்பு, தவல் இப்படிப்பட்ட வாத்தியங்கள் வாசிப்பவர்கள், பலதேவமாதர்களுடன்கூடினவர்களாய், சகல புண்ணியகருமங்களாலும் கிடைக்கத்தக்க சகலலோகங்களிலும் தமதிஷ்டப்படி எங்கேவேண்டினாலும் அனேககற்பகாலமளவாயில் சந்தோஷமாய்ச் சஞ்சரிக்க உரியவராவார்கள் ஓ அரசனே, கோவிலில் சங்குவாசிப்பவன் சகலபாபங்களும்நீங்கி பிரமனோடுகூடி இன்பமடைவான். கோயிலில் திருச்சின்னம் முதலியவை வாசிப்பவன் சகலபாபங்களும் நீங்கி தேவேந்திரபட்டமடைவான் எம்பெருமான்சந்நிதியில் வெண்கலத்தாளம் முதலியவற்றின் ஒலிசெய்பவன் சகலபாபங்களுநீங்கி பல விமானங்களேறத்தகுதியவனாய் கந்தருவர் தன்னெதிரில் பாடப்பெற்று விஷ்ணுவோடு சந்தோஷமடைகிறான் ஓ ராஜேந்திரனே, இதுமுதலியதருமங்கள் நூறு ஆயிரம் கணக்காயிருக்கின்றன சிலவற்றைச் சொன்னேன், அவையெல்லாவற்றையுஞ்சொல்ல எவனாலாகும், ஒருவராலுமாகாது எல்லாவற்றையுந் தன்னிலடக்குபவராய், எங்கும் நிறைந்தவராய், இச்சித்த உருவந் தரிப்பவராய், ஒரு குற்றமுமில்லாதவராயிருக்குந் தேவனான ஸ்ரீமந்நாராயணனே சகலகருமங்களுக்கும் பூரணமான பலனைத்தந்தருளுகிறார். சகலதேவர்களாலுந் தொழப்படுபவராய், எல்லாருக்கும் இடர்களைநீக்கும்படி ஸ்ரீசக்கராயுதந்தரித்தவரான எம்பெருமானை நினைத்தாலே சகலமானகருமங்களும்

பலனுள்ளனவாகும் பரமாத்துமாவாய், குறைவற்றவராய், முடிவில்லாதவராய், புண்ணியகருமங்களுக்குப் பலனைகொடுப்பவராய், சகலதுன்பங்களையும் போக்குபவராயிருக்கும் எம்பெருமானைநினைத்தே ஸத்கருமங்களைப் பெரியோர் செய்துகொண்டிருக்கிறார்கள் தருமங்களெல்லாம் விஷ்ணுதான். கருமங்களும் அவற்றின் உத்தேச தேவதையும் விஷ்ணுவே. சகல செய்கைகளும் அவற்றின்கருவிகளும் விஷ்ணுவே அவரினும் புறம்பான பொருளொன்றுமில்லை

---

௧௪ - வது அத்தியாயம்.

பாபபலன்கள்.

தருமராஜ பகீரதசம்வாதம் (தொடர்ச்சி).

பாபங்களின் பிரிவுகளையும், மொத்தமான நரகவேதனைகளையும் சொல்லுவேன் அந்த நரகங்களைக்கேட்கும்போதே பயமுண்டாமாதலால் அஞ்சாமல் தைரியத்துடன் இருக்கவேண்டும் பாபஞ்செய்தவர்கள் வேகும்படியாய் நடுங்கும்படியான பயனளிப்பனவாயுள்ள அந்த நரகங்களைக்கேளும் வெய்யிலிறப்படுத்தல், பானையிற்கிடத்தி அப்பானைகிரம்ப மணல்சொரிதல், பெருமிருகங்களாலடிக்கப்படுதல், சிறுமிருகங்களாலடிபபுண்டல், பானையிறபோட்டு வேகுவிக்கப்படுதல், மூச்செறிதற்கிடமில்லாமற் செய்யப்படுதல், கயிற்றிறபிணைத்து அலைப்புண்ணப்படுதல், நசுக்கப்படுதல், வாட்காடு, எசிலுண்ணல், பனியிறப்படுத்தல், எவ்வழியும் போகக்கூடாமை, சவாக்கினறு, வைதரணியெனனும் ரதத ஆறு, நாய்களாற்கௌவப்படுதல், மூத்திரங்குடித்தல், மலப்பள்ளம், காய்ச்சியசூலத்தால் குத்துதல், காய்ச்சியசிலையினமேல் தள்ளுதல், முள்மரத்திலேறுதல், இடிக்கக்கிணறு, உதிரமுண்ணல், தன்மாமிசத்தையேயுண்ணல், தீப்புகுதல், கல்மழை. ஆயுதமழை, நெருப்புமழை, பாலைக்காட்டி நீரைக்குடிப்பிக்கப்படுதல், சுடுநீர், மழுவுண்ணல், தலைகீழாக்குதல், வறறலாக்கப்படுதல், பெருங்காற்றில் தள்ளுண்டல், சறகாணம், புழுவுண்ணல், காரநீர்குடிக்கத்திரிதல், கைவாளாலறுப்புண்டல், மலத்தைப்பூசல், மலமுண்ணல், இரேதஸ்ஸைக்குடித்தல், உடல்சந்திப்பெல்லாந் தீப்படுதல், தழறபடுக்கை, உலக்கையிடியுண்டல், செக்கிலரைப்படுதல், கலப்பையால் கீறப்படுதல், அறுக்கப்படுதல், கீழுமேலு மெறியப்படுதல், தடிகளாலடியுண்டல், யானைத்தந்தங்களாலிடியுண்டல், பாம்புகளால் கடியுண்டல், புகைகுடித்தல், கயிற்றினாலிறுக்கப்படுதல், கழுவேறல், செவி வாய் மூக்குகளில் காரநீர் சொரியப்படுதல், காரநீர்குடித்தல், உப்பையுண்ணல், நரம்பறுப்புண்டல், நரம்புகளால் கட்டுண்டல், எலும்பறுப்புண்டல், இறைச்சியுண்ணல், பித்தமுண்ணல், கோழையினணல்,

மரநுனியிலிருந்து தள்ளப்படுதல், நீசகுள் அமிழ்த்தப்படுதல், கல்சுமத்தல், முள்மேல்படுக்கை, எறும்புகடியுண்டல், தேளெறியுண்டல், புலியால்வருந்தல், நரியால்வருந்தல், எருமைக்கடாவினால் வருந்தல், கெடுநாற்றம்நிறைந்த உளையில்படுக்கை, கத்திகளின்மேல் படுக்கை, அதிக வெப்பமுண்ணல், அதிக வெப்பமான எண்ணெயைக் குடித்தல், அதிககாரம்புசித்தல், துவர்நீர் குடித்தல், வெப்பமான கற்களையுண்ணல், கொதிமணலில் முழுகுதல், பல்லுடைக்கப்படுதல், மழுவிற்படுக்கை, உடல்மேல் கொதிநீர் தெறிக்கப்படுதல், உடல்மேல் குளிர்நீர் தெறிக்கப்படுதல், கண்வாய்முதலிய இடங்களில் ஊசிகளால் குத்துண்டல், குறியிலும் அண்டத்திலும் பளுவான இரும்பு கட்டப்படுதல்

ஓ பகீரதரே, இவைமுதலிய நரகத்துன்பங்கள் கோடிகோடி கணக்கிலிருக்கின்றன அவற்றைச் சொல்லவேண்டுமென்றால் ஆயிரம்வருஷமாயினும் எண்ணமுடியாது ஓ மன்னவனே, எந்தபாபியின் எந்தபாப மெத்தன்மையானதோ அதையெல்லாம் சொல்லுகிறேன்கேளும் பிரமஹத்தி, கட்குடி, பொன்திருட்டு, குருமனையேகல், இந்நான்கும் மேற்கண்ட நால்வகைப்பாபமுள்ளவர்களின் கூட்டுறவும் ஆக ஐந்துபாபமுள்ளவர்கள் மகாபாதகராவார்கள். போஜனபந்தியில் வேறுபாடுசெய்கிறவன், அதிதிக்குபயோகிக்காத விதமாய்ச் சமையல்செய்விப்பவன், பிராமணரைப் பறிப்பவன், பெரியோராசாரத்தை மாற்றுபவன், வேதத்தைவிற்பவன், இந்த ஐவரும் பிரமஹத்திபாவமுள்ளவர்கள் தானங்கொடுப்பேனென்று பிராமணரை வரச்சொல்லி, பின்பு அவர்களுக்கு இல்லையென்றுசொன்னவனும் பிரமஹத்தியுள்ளவனென்கிறார்கள் தனக்குத் தருமத்தை உணர்த்தின குருவைப் பகைக்கிறவனும் அல்லது அலக்ஷியஞ்செய்கிறவனும் பிரமஹத்தியுள்ளவனென்று சொல்லப்படுவான். தாகங்கொண்டு தண்ணீர்குடிக்கப்போகிற பசுக்களுக்குத் தடைசெய்பவனும், ஸ்நானஞ்செய்யவாவது போஜனஞ்செய்யவாவது போகின்றபிராமணருக்குத் தடைசெய்பவனும், சாஸ்திரங்கற்காமல் சாஸ்திரப்பொருளின்னதென்று சொல்லுபவனும், தெரிந்தவர்சொல்வதைக்கேளாமல் அகங்கரிப்பவனும், பிராயச்சித்தமாகிலும் மருந்தாகிலும் சோதிடமாகிலும் தருமதீர்ப்பாகிலும் சாஸ்திரமறியாமல் சொல்லுகிறவனும், அதிகாரத்தினாலாவது கல்வியினாலாவது பொருளினாலாவது பிராமணரையிகழ்பவனும், பிறரையிகழ்தலிலும் தன்னைப்புகழ்வதிலும் பொய்சொல்லுவதிலும் விருப்பமுள்ளவனும், பிறர்கெடும்படியான காரியஞ்செய்பவனும், கோட்சொல்பவனும், பிறர் தன்னை மெச்சுவதற்காகக் கபடவொழுக்கத்திற் பற்றுள்ளவனும், என்றும் தானங்கிடைக்குமாவென்று திரிகின்றவனும், உயிர்க்கொலை செய்யத்துணிகிறவனும், தருமவிரோதமான காரியத்துக்கு உடந்தையானவனும், இத்தன்மைய் பலவிதமான பாபங்கள் செய்கிறவர்களும் பிரமஹத்திக்குச் சரியான பாபமுள்ளவர்கள் அப்பால், கட்குடிக்குச்சரியாயுள்ள பாபங்களைச் சுருக்கமாய்ச்சொல்லுவேன், கூட்டத்துச்சோறுண்ணலும், விலைமாதர்சோறுண்ணலும், பதிதனுடைய அன்னத்தையுண்ணலும் கட்குடிக்குச்சரியாகும். ஒவ

பாசனத்தை விட்டுவிடுதலும், கோவில் சம்பளக்காரன்சோறுண்ணலும், கட்குடிப்பவளைப் புணர்தலும், கட்குடிகக்குச்சரி. சூத்திரனாலழைக்கப்பட்டுப் போஜனஞ்செய்யும் பிராமணன் சகலகருமங்களுக்கும் புறம்பாகிய கட்குடியனென்றறியத்தக்கவன். சூத்திரனிடத்தில் அனுமதிபெற்றுக்கொண்டு போஜனஞ்செய்பவனும் மேற்சொன்னபடியே. இப்படியாக கட்குடிக்குச்சரியான பாபங்கள் பலவுண்டு. இனி பொன்திருட்டுக்குச்சரியான பாபத்தைச் சுருக்கமாகச் சொல்லுவேன். கிழங்குவகைகள், வோவகைகள், பழவகைகள், கஸ்தூரி, பட்டுவஸ்திரங்கள், இரத்தினங்கள் இவைகளைத்திருடுதல் பொன்திருட்டுக்குச் சரியானது. பாக்கு, பால், சந்தனம், காப்பூரம், இவைகளைத் திருடுதலும்மப்படியே. செம்பு, இரும்பு, தாமிரம், வெண்கலம், நெய், தேன், வாசனைப்பண்டங்கள், இவைகளைத்திருடுதலும்மப்படியே. வெல்லம், எண்ணெய்முதலியனவும், தானியங்களும் ருத்திராக்ஷமும் திருடுதலுமத்தன்மையதே. இனி குருபத்தினி சங்கமத்துக்குச்சரியான பாவங்களைச் சுருக்கமாகச் சொல்லுவேன், உடன்பிறந்தவள், மருமகள், புதைபவதி, இப்படிப்பட்ட ஸ்திரீகளைப்புணர்ந்தால் குருபத்தினிசங்கமத்தோஷமுண்டு. சகோதரன் மனைவி, சிநேகிதன்மனைவி, விதவை இவர்களைப்புணர்தலும்மப்படியே. தகாத காலத்திற் புணர்ச்சிசெய்வதும், மகளைக் காமுறுதலும், ஜாதிகெட்டஸ்திரீ பிறன்மனையாள் இவர்களைப்புணர்தலும், வேதத்தில் விசுவாசமில்லாமையும்மப்படியே. சிராத்தத்தைவிட்டவனும், தருமகாரியத்தைக்கெடுப்பவனும், யதியைப்பழிக்கத்துணிபவனும், குருபத்தினியைப் புணர்ந்த பாவமுள்ளவனாவான். ஓ அரசனே, இவ்வாறான தீவினைகள் மகாபாதகங்களெனப்படும். இப்படிப்பட்டபாபிகளுக்குள் எவனேனாகிலும் சேர்க்கையுள்ளவனும் மகாபாதகமுள்ளவனென்றே எண்ணப்படுவான். மகான்களான ரிஷிகள் சாஸ்திரங்களில் பிராயச்சித்தமுதலியன விதித்திருப்பதால் பாபங்களுக்கெல்லாமொருவாறு பரிகாரம் காணப்பட்டிருக்கிறது. அவ்வாறு பிராயச்சித்தம் விதிக்கப்பெறாத பாபங்களைக்கேளும் அரசனே. அவையெல்லாப்பாபங்களுந்திரண்டொன்றாயிருப்பனபோன்றவைகளாய் மிகுந்தநரகம் விளைவிக்கத்தக்கவைகளாயிருக்கின்றன. சூத்திரன்பூஜித்த லிங்கத்தையாகிலும் விஷ்ணுவையாகிலும் தொழுபவனுக்கு பதினாயிரம் பிராயச்சித்தங்கள்செய்தும் அப்பாபந்தீரவதில்லை. சூத்திரனால் பரிசிக்கப்பட்ட சிவலிங்கத்தையாகிலும், விஷ்ணுவையாகிலும் தொழுகிறவன் சந்திரநக்ஷத்திரங்கள் உள்ளளவும் சகலவித நரகங்களையு மனுபவிக்கதற்குரியவன். ஓ ராஜனே, ஒருவன் வேதமும் சகல சாஸ்திரங்களின் மெய்ப்பொருளும் நன்குணர்ந்தவனாகிலும் வேதவிரோதி பூஜித்த சிவலிங்கத்தைத் தொழுதால் தானும் வேதவிரோதியேயாவன். இடையன்பூஜித்த லிங்கத்தைத்தொழுதால் நரகமடைகிறான். ஸ்திரிகள் பூஜித்துவரும் சிவலிங்கத்தையாகிலும் விஷ்ணுவையாகிலும் தொழுதவன் கோடிகுலத்துடன் ஒரு கற்பகாலமளவாக ரௌரவநரகத்திலிருப்பான். மந்திரம்வல்ல பிராமணர்களால் விதிப்படி பிரதிஷ்டைசெய்யப்பெற்ற லிங்கத்தை அதன்பிறகு ஸ்திரியும் சூத்திரனும் தீண்டத்தகாது. ஸ்திரிகள், உப

யனமாகாதவர்கள், சூத்திரர்கள் ஆகிய இவர்கள் விஷ்ணுபிம்பத்தையாகிலும் சிவபிம்பத்தையாகிலும் தீண்டற்குரியவர்களல்ல. ஓ ராஜசிரேஷ்டா, தம்மாசிரமத்துக்குரிய வொழுக்கமற்றவர்கள் பூஜித்த விஷ்ணுவையாகிலும் சிவனையாகிலும் கனவிலும் பணியவொண்ணாது. சூத்திரன் பிரதிஷ்டைசெய்த மேற்சொல்லியமூர்த்திகளைத் தொழுகிறவன் இம்மையிலேயே பெருந்துன்பங்களடையக்காணலாம் மறுமையில் கேட்பானேன் இடையன்பூஜித்த மூர்த்திகளைத் தொழுதால் அவன் ஒருநாளும் உருப்படான் இன்னும் பல பேசுவதாலாயபயன் யாது? சூத்திரனும், உபநயனமில்லாதவனும், ஸ்திரியும், பதிதனும் விஷ்ணுவையாகிலும் சிவனையாகிலும் தொடுவார்களாகில் நரகத்தையடைவார்கள் பிரமஹத்திமுதலிய பாவங்கள் ஒருகாலம் தீரினுந் தீரும் பிராமணனைப் பகைத்தவனுக்கு ஒருநாளும் அந்தப்பாவந் தீரவில்லை நம்பினவனைக் கெடுத்தவர்களும், நன்றிகொன்றவர்களும், சூத்திரஸ்திரீயைப் புணர்ந்தவர்களும் எவ்விதத்திலும் அந்தப்பாபங்களைத் தீர்த்துக்கொள்ளமாட்டார்கள் சூத்திரன்சோற்றால் உடல்வளர்த்தவர்களுக்கும், வேதத்தைப் பழிப்பவர்களுக்கும், குருவைப் பழிப்பவர்களுக்கும் தமது பாவந் தீர்க்கும்வகை யொன்றுமில்லை சிவனையாவது விஷ்ணுவையாவது, புண்ணியகதைகளையாவது பழிப்பவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் பாவந்தீரும்வகையில்லை மேற்சொல்லப்பட்டவர்களுக்கு பாபம் அதிகமாய் இருக்கின்றமையால் இவர்கள் பாஷண்டிகள் இவர்களுக்குப் பாபமொழிவதில்லை இவர்கள் பலகோடி கற்பங்களிலும் நரகவேதனையே பெறுவார்கள் பிராயச்சித்தத்தால் தீரமாட்டாத இந்தப்பாபங்களை யுமக்குச்சொன்னேன் இனி அவற்றால் வரும் நரகங்களைச் சொல்லக்கேளும் அரசனே, இப்படிப்பட்ட பாபிகள் பதினாயிரங்குலத்துடன்கூடி நூறாயிரங்கோடி கற்பகாலங்களில் முன்னால் சொன்னநரகங்களில் அவிகிறார்கள் இப்படிப்பட்ட நரகவேதனைப்பட்ட பிறகு மூன்றுகற்பம்வரையில் செடிகளாகப்பிறந்து, பிறகு புழுக்களாவார்கள் அந்தப்புழுக்களுமெவ்வகைத்தானவையென்றால் மலத்திற்பிறந்தவை, மலத்தையே ஆகாரமாகக்கொண்டவை பின்பொருகற்பம் பாம்பாயிருந்து மறுபடியும் ஆயிரமயுகம் புழுக்களாயிருந்து அதன்மேல் மிலேச்சசாதியிற் பிறப்பார்கள். பின்பு அந்தப்பாபத்தொடர்ச்சியில் கோளகர்கள்* ஆவார்கள். அந்தஜன்மத்துக்குப்பின் குண்டர்கள்† ஆகப்பிறந்து அதன்பின்பு அதிகவறியவரான பிராமணராயப் பிறப்பார்கள், அப்படிப்பிறந்த ஒவ்வொருவனும் எப்போதும் வறுமையில்வருந்தி தானம்வாங்குதலே கதியாகக் கொண்டிருந்து அந்ததானங்களை வாங்கினமையால் திரளான பாபங்களைத் தேடி அந்தப்பாபத்தால் நரகமடைவான். ஓ மகாத்துமாவே, உமக்குச்சொல்லியிருக்கும் நரகவேதனைகளனைத்திலும் மேற்சொல்லிய மகாபாபிகள் ஒவ்வொருகற்பகாலம் வாசம்செய்தற்குரியவர்கள் அப்படிப்பட்ட நரகங்களி

---

* கணவனிறந்தபின் விபசாரத்தாற் பிறப்பவர்கள்.

† கணவனிருக்கும்போது விபசாரத்தால் பிறப்பவர்கள்.

விருநதபிறகு பூமியின்மேல எழுதரம கழுதைபபிறபபெடுத்து, பிறகு நாயும் மலபபனறியுமாக பத்துஜனமமெடுதது, பினபு நூறுவருஷம மலபபுழுகக ளாய, பினபு எலிகளாய் நூருணடிருநது, பனனிரணடு பாம்புபிறபபெடுதது பினபு மான்முதலிய விலஙகுகளாய பதினறு பிறப்பெடுதது, நூறுவருஷம் மரஙகளாகி, அதனமேல மாடாகி, பினபு எழுதரம சணடாளாகளாகபபிற நது, பினபு பதினறுபிறபபுககளில முறையே தாழநதஜாதிகளிற சிறிதுசிறி தாக உயாநது முடிவிற்சூதகிரஜாதியாகி, பினபு வைசியனும க்ஷததிரியனு மாய இரணடுபிறபபெடுதது, அநத க்ஷததிரியபபிறபபிலும் வலியபகை வாகளால எபபோதும பாதிககபபட்டவனாகி, மிகுநத பிரயாசததால பிழை ததுககொணடிருந்து, அநதபபிறபபுககுபபிறகு வறியபிராமணனாப்பிறந்து, பலபிணிகளால வருததபபட்டு, வயிறுவளாகக வழியறறு, பலவிதமான கொடியதானஙகளை வாஙகி அநதபபாபததால நரகம்போய்சசேருவான. பிறா குணஙகளைககணடு பொறாமைபபட்டுக குறறமேற்றும் பாபிகள் மூன்றுகற்ப காலம ரௌரவநரகததிலிருநது ;பினபு கோடிஜன்மம் சணடாளாகளாவாா கள தேவாலயததுககாகிலும யாகததுக்காகிலும பிராமணனுக்காகிலும் ஒருவன பொருளகொடுககபபார்ககுஞசமயத்தில அவனைககொடுககவிடாமல தடைசொலபவன நூறுபிறபபு நாயாகபபிறந்து, பினபு பலமுறையும சண டாளபபிறவியாகுவான அதனபினபு ஒருகற்பம் மலபபுழுவாகி, அதன மேல மூனறுபிறபபுப புலியாகி, அதனமேல இருபத்தொருயுகம் நரகவாசம செய்வான். பிறரைபபழிபபவரும, திட்டுபவரும, தானத்துககுததடைசெய் பவரும் அடையுஙகதியைககேளும அவாகளை யமதூதாகள்பிடிதது மழு வுணடைகளை அவாவாயிலடைதது, கணணிலறைய ஊசிகளைககுததி, தலை கீழுங காலமேலுமாகநிறுத்தி அடிபபாாகள் இபபடி நூறுணடுவரையில அவாகள் அடிபட்டுப பினபு கழுததில கல கட்டபபட்டு, உதிரமடுவில நூறு ணடிருககுமபடி தளளப்படுவாாகள் பினபு நூறுவருஷம்வரையில சகல நரகஙகளிலும துன்பபபடடு, அதனபிறகு அநத பாபககுறைவினால் இறை சசியுணணும பிறப்பெடுபபாாகள். பிறாபொருளைத திருடுபவர்கள் உரலிற போடபபட்டு, உலக்கைகளாலே குததபபட்டு, பிறகு மூன்றுவருஷம் வெபப மானபாறைகளைச் சுமந்துகொண்டிருநது பின்பு எழுவருஷம் காலசூததிரமுத லியவைகளால் பிடிககபபட்டு தமது கருமங்களைபபற்றித் துயரபபட்டுக்கொ ணடு, நரகத்தீக்களில ஒவ்வொனறிலும் வரிசையாக வேகுவாாகள் பிறர் பொருளைத்திருடுவதற்கு வழிகாட்டியவாகள் ஆயிரம யுகமவரையில பழுக்கக் காய்சசிய இருமபுருணடைகளைத் தினபவர்களாகி, கூாமையான குறடுகளால பறகள் பிடுங்கபபெறுவாாகள் பினனும் ஒருகற்பமுடியுமளவும் மூச்சுவிட வுங்கூடாத நெருக்கமான இடததில அடைக்கப்படடு கிலேசபபட்டுக்கொ ணடிருப்பார்கள். ஓ அரசனே, , பிறர் பெண்டிரைக்கருதி புணரும்பாபி களை நரகலோகத்தில் படுததும்பாடுகளைச் சொலலுகிறேன்கேளும். செம பினால் பெண்வடிவமாகசசெய்த பதுமைகளை நன்றாக நெருப்பிற்காய்ச்சி, அவைகளைத்தழுவி புணரும்படி அந்தபாபிகளைக் கட்டாயபபடுத்துவார்கள்

* வேண்டாமென்றோடினும் விடமாட்டார்கள். இப்படிப் பலகாலம் வருத்தப்படுத்தியபின் ஒவ்வொன்றாக எல்லா நரகங்களிலுந் தள்ளுவார்கள். ஓ அரசனே, கணவனைவிட்டு மற்றொருவனைப் புணரும் ஸ்திரீகள்படும் நரகவேதனைகளைச் சொல்லுகிறேன் கேளும். மிக்க சூடான மழுவினாலாகிய புருஷபிம்பங்களின்மேல் அந்த ஸ்திரீகளை வலியக்கிடத்தி, இறுகப்பிடித்து, மிகுந்த வலுவுடன் ஒரு கற்பமவரையில் புணரச்செய்வார்கள். பின்பு அவர்களால்விடப்பட்டு மிகுதியான நெருப்பிட்டுக்காய்ச்சப்பட்ட எஃகுக்கம்பத்தைத் தழுவிக்கொண்டு ஆயிரவருஷகாலமிருப்பார்கள். பின்பு காரநீரில்முழுகி அதையே குடித்துக்கொண்டு பலகாலங்கழித்துப் பின்னர் மற்றுமுள்ள நரகங்களெல்லாவற்றிலும் ஒவ்வொன்றாகப் புகுந்து வருந்துவார்கள். பிராமணஸ்திரியையும் க்ஷத்திரிய ஸ்திரியையும் பசுவையுங்கொல்லுபவன் மேற்சொன்ன நரகங்களில் ஐந்து கற்பமவரையில் சகலமான துன்பங்களையும் நுகர்வான். பெரியோர்களை ஒருவன் பழித்தால் அதைத் தன் மனமகிழ்ந்து கேட்டுக்கொண்டிருப்பவன் காதுகளில் நன்றாய்க்காய்ச்சிய பல எஃகாணிகளைச் சொருகுவார்கள். பின்பந்த ஆணிகளாற்குத்திய சந்துகளில் நெருப்புபோற் காய்ச்சிய எண்ணெய்யை மிகுதியாகப்பெய்து, பின்பு கும்பீபாகமென்னு நரகத்துக்குப் போகவிடுவார்கள். தெய்வமில்லையென்றும் வேதசாஸ்திரங்கள் பொய்யென்றும் சொல்லுபவர்கள் ஆயிரங்கோடி வருஷம் நரகத்தையனுபவித்து பின்பொரு கற்பமளவாக மலத்தைத்தின்றுகொண்டிருந்து பின்பொருயுகம் ரௌரவத்திலிருந்து பின்பு வெப்பமான மணலையுண்ணப்பெறுவார்கள். பிராமணர்களைச் சினந்து பார்க்கும் கீழானவர் கண்களிற் நிறைய காய்ச்சிய ஆயிரமூசிகள் போத்தப்படும். பின்பந்தக்கண்களில் காரநீர் மிகுதியாகப்பெய்யப்படும். பின்னும் அந்தப்பாபிகள் கூரியவாட்களாலும் அறுப்புண்ணப்படுவார்கள். நம்பிக்கைக்குக் கேடுசெய்தவர்களும், வரம்பழித்தவர்களும், தனக்கன்னமிருக்கவும் பிறர்சோற்றுக்கு விரும்பித்திரிகிறவர்களும், நாடோறும் நாய்மாமிசந்தின்பவர்களாய், நாய்களாலுண்ணப்படுகின்றவர்களாய், சகல நரகங்களிலும் தனித்தனி ஒவ்வொருயுகமிருந்து வருந்துவார்கள். தானம் வாங்குவதே தொழிலாகக்கொண்டவர்களும், ஜோதிடத்தால் பிழைப்பவர்களும், சம்பளத்துக்குக் கோயில் பூஜைசெய்பவனின் சோற்றைத்தின்பவர்களும் ஒரு கற்பமளவும் சகலநரகங்களிலும் துன்பப்பட்டுக்கொண்டு, பின்பு பூமியில் வந்து சண்டாளர்களாய் நூறுபிறப்பெடுத்து வறியவர்களும் பிணியாளிகளுமாய் பலவாறு துன்பப்படுவார்கள். எப்போதும் பொய்சொல்லுபவர்களும்,

---

* இதன்கருத்தையே

"வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து பிறர்பொருள் தாரமென்றிவற்றை
நம்பினா ரிறந்தால் நமன்றமர் பற்றி யெற்றி வைத் தெரியெழுகின்ற
செம்பினா லியன்ற பாவையைப் பாவீ தழுவென மொழிவதற் கஞ்சி
நம்பனே வந்துன் றிருவடி யடைந்தேன் நைமிசா ரணியத்து ளெந்தாய்"
என்கிற பாசுரத்தால் விளக்கியருளினார் திருமங்கையாழ்வாரும்.

கொடுஞ்சொல்லுரைப்பவர்களும், கொடியதுறடுகளால் பற்கள் பிடுங்குஞ் காலசூத்திரத்தினால் பிணிப்புண்டு, பின்பு சூடான எண்ணெய்யால் ... பட்டு, பின்பு காரநீரில் குளித்து, மலந்தின்று, மூத்திரங்குடித்து, பலகால வாறிருந்து பின்பு பூமியில் மிலேச்சர்களாகப்பிறப்பார்கள் பிறர் நடுங்கும்ப யான காரியஞ்செய்பவர்கள் வைதரணியாற்றை யடைவார்கள் பஞ்சயக் யங்களைவிட்டவர்கள் பலவிதமான இன்பமற்ற உணவுகொள்ளுவார்கள். ஓ பாசனஞ்செய்யாவிட்டவர்கள் ரௌரவநரகத்தை யடைவார்கள். சந்தியா தன முதலியவற்றை விட்டவர்கள் புழுவுண்ணுவார்கள் ஓ அரசனே, மே சொல்லிய நால்வகைப்பாபிகளும் மேற்சொல்லியபடி ஐந்துயுகமவரை துன்பப்படுவார்கள் பின்பு பூமியில்பிறந்து பிறரிடத்தில் தாழ்மையான ஊ யஞ்செய்து காலங்கழிப்பார்கள் ஓ பூபதியே, பிராமணர்களின் கிராமத் தில்வரிமுதலியவை மிகுதியாக வாங்குபவன் சகலநரகங்களிலும் சந்திரநக் திரங்களுள்ளளவும் வேககாடு அடைவான் பிராமணர்கிராமத்துக்கு மிகு யாக வரிவிதிப்பவன் ஆயிரங்குலத்துடன் கோடிகற்பங்களளவாகச் சகலந ங்களையுமனுபவிப்பான். பிராமணர்கிராமத்தில் அதிகவரிவிதிக்கும்படி அனு திசெய்பவன் பத்துகோடி பிரமஹத்திசெய்தவனாவான் அதிதிகளையுபச யாமல் உண்கின்றமனிதர்கள் கொடுமையான காலசூத்திரநரகத்தில் நாயி மலத்தைத்தின்றுகொண்டு நாலுயுகமளவும் வாசஞ்செய்வார்கள், யோ யல்லாதவிடத்திலும், தான் புணரத்தகாத ஸ்திரீயோனியிலும், பசுக்களி யோனியிலும், ரேதஸ்ஸைவிட்ட கொடியபாபியானவன் நரகலோகத்தி சென்று ரேதஸ்ஸையே உண்ணப்பெறுவான். பின்னும் எழுபது தேவவ ஷங்களளவு சவாநீரகங்கிணறிலிருந்து துன்பப்பட்டு, அதன்மேல் பூலோக தில் யாவராலும் பழிக்கப்பட்டவனாய், ரேதஸ்ஸைக்குடிக்கும் மனிதனாக பிறப்பான். உபவாசமிருக்கவேண்டியநாளில் பலதுலக்குமவன் நாலுயு மளவும் புலிகளாலுண்ணப்படுமிடமாகிய கொடுநரகத்தையடைந்திருப்பான். ஒருவனுக்குரித்தாகும்படியாகத் தன்னாலாவது மற்றொருவனாலாவது கொ க்கப்பட்ட நிலத்தை வலியக் கைப்பற்றிக்கொள்ளுமவன் கோடிகுலத்துடன் அழுகலமண்ணைத்தின்றுகொண்டு இந்த நரகங்களிலெல்லாம் தனித்தனி கோ டிகற்பகாலமிருந்து பின்பு அறுபதினாயிரமவருஷமளவாக மலந்தின்னும் ஜ துக்களின் ஜன்மமெடுப்பான். தன் நிலம் அதிக அளவுள்ளதாகப் பொய் சொல்லி பிறன்நிலத்தைக் கவருபவன் கோடிகுலத்துடன் வெப்பமானசேற் றில் முழுகிக்கிடந்து அங்கிருந்து மலமடுவில்முழுகி ஆயிரயுகங்கிடப்பான் பிறகு மற்றுமுள்ள நரகங்களிலெல்லாவற்றிலும் பதினாலு இந்திரபட்டமசெ ல்லுமளவும் துன்பப்பட்டுக்கொண்டிருந்து பின்பு பூலோகத்தில் நூறுபிறப் பளவாகக் குஷ்டரோயும் புண்களுமுண்டாகி வருந்தப்படுவான். தன் குல முதலியவற்றுக்குரிய நற்கருமங்களைத் துறந்தவன் பாஷண்டியென்னப்படு வான். அவன் கூட்டுறவுசெய்பவனு மவ்வாறே அவ்விரண்டு மகாபாபி களும் ஆயிரத்து நூறுகோடிகற்பமளவாக ஆயிரவமிசத்துடன் நரகத்தில் வா சம்பண்ணுவார்கள். சம்பளத்துக்காக வேதங்கற்பிப்பவரும், சம்பளத்துக்

காக வேதங்கற்பவரும், ஒரு கற்பமவரையில நரகத்தில் துன்பமனுபவித்து அப்பால் மிலேச்சஜன்மமெடுப்பார்கள் ஸதிரீகளின் பக்கத்திலும் சூத்திர பக்கத்திலும வேதமோதுகின்றவன் ஆயிரங்கோடி கற்பமளவும வரிசையாய் எல்லாநரகங்களையுமடைவான கோவிற்பொருளையாகிலும குருவினபொருளையாகிலும் அபகரிப்பவர் பதினாயிரம பிரமஹத்திபாபமடைவார். நாதனற்ற ஏழையின பொருளைப்பறிப்பவரும், அப்படிப்பட்ட ஏழையை பகைக்கினறவரும, தலைகீழுங் காலமேலுமாக இரணடுகம்பங்களில ஆணிகளால தைக்கப்பட்டு, பிரமாவின பகலளவாகப் புகையையே குடித்துக்கொணடிருப்பார்கள தேவபூஜைக்குத்தவும்படி வைக்கப்பட்டிருக்கும தோட்டத்திலுள்ள புஷ்பங்களைக்கொணடு போகும்வர்கள நரகத்திற்சென்று கொடியதீயில ஸ்புக்கப்பெறுவர் தண்ணீரிலாவது கோயிலிலாவது தனனுடலின மலத்தை விடுபவன கருவழித்தவளவு கொடும்பாவத்தையடைவான பல, எலும்பு, மயிர், உகிர், எச்சில, இவைகளைக கோயிலகுளங்களில போடுபவன ஈட்டிகளால குத்துணடு கூக்குரலிட்டுக்கொணடு அதிகவெப்பமான எணணெயைக்குடிக்கப்பெற்று பினபு உலையிலும சமைக்கப்படுவான உமியாகிலும, சுள்ளியாகிலும பிராமணனுடைமையை அபகரிப்பவன சந்திரநக்ஷத்திரங்களுள்ளளவும கொடு நரகவேதனைகளைப்படுவான பிராமணனபொருளைக் களருபவனுக்கு இம்மையில செலவமழியும மறுமையில நரகங்கிடைக்கும் ஆதலால அரசனே, பிராமணன பொருளைக்கவர்தல இருமையிலுங் கொடியதாகும பொய்சாக்ஷியமசொலபவன பதினனகு இந்திரகாலமளவாக சகல நரகவேதனைகளையுமடைவான பின்னுமப்படிப்பட்ட பாபியினகிருகத்திலும பிள்ளை பேரனமுதலிய சந்ததிகளெல்லாமழிந்து அதனால் துனபப்படுவான் இறந்தபினபோ நரகமடைதல சித்தந்தான அதிககாமமுள்ளவர்கள்வாயிலும, பொய்யாக வந்தனைசொலபவர்வாயிலும, பாமபத்தனை பெரிய அட்டைகள நிரப்பப்படும அவர்களிப்படி அறுபதுவருஷமிருந்து பின்பு காரநீரிலகுளித்து பினபு நாயிறைச்சியைததினறுகொணடு காரசசேற்றில்புகுவார்கள. அதற்குபபிறகு நீரிலலாக்காட்டிலவிழும்படி யானைகளாலதூக்கியெறியப்படுவார்கள பினனர் பூலோகத்தில முடவர்களாய்ப்பிறப்பார்கள். ஓ நிருபனே, தனமனையாளை ருதுகாலத*தில புணரக்கூடுமாயிருந்தும புணராமலவிட்டவன் ரௌரவநரகத்தையும பிரமஹத்திபாபத்தையும அடைவான். ஒருவன் கெட்டநடைநடக்கும்போது அதைத தடுக்கவல்லவனாயிருந்தும், அதில மனஞ்செலுத்தாதவனாயிருந்துவிட்டவன அந்த கெட்டநடைநடந்தவ

* "ஸ்திரீகளுக்கு ரஜஸ்வு உணடான நாள்தொடஙகிய பதினாறுதினஙகள் ருதுகாலமாம" என்று மாதவீயசகிதமான பாராசரஸமிருதியும "மாதவிடாயான்றுமுதல நாலுநாள் பெரியோர்களாலே நிந்திக்கப்பட்டிருக்கின்றது மேற்சொன்ன நாலுநாளுடன் ஏகாதசி திரயோதசி இவ்விரண்டையும் நீக்கி மற்றப் பத்துதினத்தில சேர்வதே உயர்ந்ததாகச சொலலுகிறார்கள்" என்று மனுஸ்மிருதியும் கூறுகின்றன.

னுக்குள்ள பாபத்தில் பாதிபெறுவான். அவனந்த பாபஞ்செய்தா னிவனிந்த பாபஞ்செய்தானென்பதாக வீணுகப் புறங்கூறிப்பேசுபவன் தான் பேசிய படிக்கு ஒருவன் பாபஞ்செய்திருந்தால் அவனோடு சரியாகப் பாபியாவான். தான்பேசியது பொய்யாகில் அந்தபாபத்துக்கு இரண்டத்தனைபாபஞ் செய்தவனுவான் பாபமில்லாதவன்மேல் பொய்ப்பாபங்களையேற்றித் தூற்றுபவன் சந்திரசூரியர்களுள்ளளவும் சகல நரகங்களிலும் துன்புறுவான். பாபஞ்செய்தவர்களின்பாபத்தை வெளிப்படையாகப்பேசித் தூற்றுபவன் அப்பாபிகளோடொப்பாவான். ஆனால் அந்தப் பாபிகளுக்குமாத்திரம் அவன்பேசியதினால் பாதிப்பாபம் தொலைந்துவிடும். கன்னிகையை (ருதுவாகாதபெண்ணை) புணருபவன் நாய்களினால் எப்போதும் கடித்துண்ணப்பட்டு புகைகுடித்துக்கொண்டிருந்து பின்பு வரிசையாய் எல்லாநரகங்களிலும் வசிப்பான். ஒருவிரதத்தைத்தொடங்கி அதைமுடிக்காமல் விட்டுவிட்டவன் வாட்காட்டில் புரட்டப்பட்டு பின்பு பூலோகத்தில் அங்கப்பழுதுள்ளவனுகப் பிறப்பான். பிறர் தொடங்கிய விரதங்களைமுடியாவண்ணங் கெடுத்தவன் இருபத்தொருகுலத்துடன் கோழையைத்தின்னப்பெறுவான். நீதியிலும் தண்டனையிலும் ஓரஞ்செய்பவனுக்குப் பலநூறு பிராயச்சித்தஞ்செய்யினும் பாபந் தீரவில்லை. உண்ணலாகாத பண்டங்களையுண்டவன் பதினுயிரமவருஷம் பித்தங்குடித்துக்கொண்டிருக்கும்படி தண்டனையடைந்து, பின்பு சண்டாளனுகப்பிறந்து, எப்போதும் மாட்டிறைச்சியைத்தின்று பிழைத்திருப்பான். பிராமணரை வாயினால் அவமதிப்புச்சொல்லியவன் பிரமஹத்திபாபமடைவான், எல்லாநரகங்களையுமனுபவித்து பத்து சண்டாளப்பிறப்பெடுப்பான். பிராமணருக்கு தானங்கொடுக்குஞ்சமயத்தில் தடைசெய்பவன் நூறுகோடி பிரமஹத்தி பாபமுள்ளவனுவான். ஒருவன் மற்றொருவன்பொருளை அபகரித்துத் தானதருமஞ்செய்தால் அந்தப்புண்ணியம் அந்தப்பொருளுடையவனுக்குச்சேரும். அந்த தானஞ்செய்தவனே நரகத்துக்குரியவனுவான். ஒருவனுடைமையை மற்றொருவன் தாவழக்கிலவென்று அதைத் தருமவிஷயத்தில் விநியோகிக்கினும் முன்போலவே பொருளுடையவனுக்குப் புண்ணியமும் தருமஞ்செய்தவனுக்கு நரகமுமுண்டாகும். ஓ அரசனே, ஒருவனுக்கொன்றுகொடுக்கிறதாக உறுதிசொல்லி அப்படி கொடுக்காமல் தப்பிப்போனவனை எச்சிலைத்தின்னும்படி யமகிங்கரர் தண்டிப்பார்கள். யதியைப்பழிக்குந்தன்மையுள்ளவனைக் கறகாணத்திலாடுவார்கள். தோப்பழிப்பவர்கள் இருபத்தொருயுகம் நாயூனைத்தின்றுகொண்டிருந்து, பின்பு மற்றெல்லாநரகங்களையு முறையே அனுபவிப்பார்கள். கோயிலையிடிப்பவர்களும், குளத்தைத்தூர்ப்பவர்களும், நந்தவனத்தையழிப்பவர்களும், கோடிகோடிகுலங்களுடன் சகலமானநரகங்களிலும் தனித்தனி அறுபதினுயிரங்கோடி கற்பகாலமளவாக வேதனைப்படுவார்கள். பின்பு கோடிகற்பகாலம் மலத்திலபுழுக்கும் புழுக்களாகப்பிறந்து; -பின்பு இருபத்தொருகற்பம் மலமுண்ணும் ஜந்துக்களாகப்பிறந்து, அப்பால் இருபத்தொருயுகம் புழு உண்ணுஞ் ஜந்துக்களாகவிருந்து, அதன்மேல் கோடிஜன்மம் சண்டாளராகவும் பிறப்பார்கள். ஊரைப்பாழாக்கும் கொடியவ

னுடைய பாபததை இவ்வளவென்றுசொலல பலநூறுகோடி ஜனமங்களெடுததாலும போதாது. கோயிலைச கொளுததுகிறவரும, ஊரைககொளுததுகிறவரும, பிரமகறபமளவாக நரகததையடைநதிருபபாாகள எநதபாபமாகிலும ஒருவனசெய்யுமபடி அனுமதிகொடுபபவன அந்தபாபததில பாதியும அதறகேறற நரகததையுமடைவான குணடனைகசசோறுணடவனும, கோளகனைகசசோறுணடவனும, ஊாககு வேளவிசெய்விபபவனும, தகாதவனுககு வேளவிசெயவிபபவனும, மகாபாபிகளெனனபபடுவாாகள ஊரழைபபவன, கோயிலதொழிலாளி, ஊாசசேவகன, ஊாபபுரோகிதன மகாபாதகமசெய்கிறவன ஆகிய ஐவரும பிராமணசணடாளரெனனபபடுவாாகள் இவாகளுககு இருபததொருயுகமவரையில எலலாநரகவேதனைகளுமுணடாகும. பினபு பூலோகததில எழுஜனமம சணடாளபபிறபபுணடாகும. எசசிலுணபவாகளும, சிநேகிதனுககு துரோகமசெயபவாகளும, சநதிரசூாயககிரஙகளுளளவும எலலாநரகஙகளிலும துனபுறததககவாகள பஞசயககியம செயயாதவாகள பாஷணடாகள எனனபபடுவாாகள அவாகளுககுப பல நரகவேதனைகளுணடு இவவாறுகப பல மகாபாதகஙகளும, உபபாதகஙகளும, அவறறாலாகும நரகவேதனைமுதலியனவும சொலலபபட்டன. அநலைவறறினைகணககிவவளவென்று முடிவாகசசொலலவதரிதாகும. பாபஙகளையும அவறறாலவரும நரகமுதலியதுாககதிகளையும, புணணியஙகளையும, அவறறாலாகும நறகதிகளையும, உளளபடி கணககிட்டுச்சொலல எமபெருமானொருவனேயன்றி மற்றொருவன வலலவனனறு இநதபாபஙகளுக்கெலலாந தருமசாஸதிரத்திற்சொலலிய முறைபபடிககுப பிராயசசிததஙகளைச்செயதால திரணடபாபஙகளுமழியும. அபபடி பிராயசசிததஙகளைசசெயவதும ஸ்ரீயபபதிஸந்நிதானததிலே முககியமானது அவ்விடததிலசெயதால ஏதகுறையிருநதாலும தோஷமவராமல பலனும் குறைவினறிககிடைககும கஙகையும், திருததுழாயும, ஸாதுசகவாசமும, ஹரிநாமகீாததனமும, துாஷிககாமையும, கொலலாமையும, எலலாபபாபஙகளையும போககுவன. ஸ்ரீஹரிககு அாபபிதமாக நறகருமஙகளைசசெயதால பலனுணடு. அவருக காபபிதஞசெயயாவிட்டால செயதகருமஙகளெலலாம சாமபலில ஓமஞசெய்ததுபோல பயனற்றனவாகும். நிததியஞசெய்வனவும, ஒவ்வொரு காலதேசஙகளிறசெய்வனவும், இமமைமறுமையினபஙகளை விருமபிசசெய்வனவும, மோக்ஷாபாயமாய் இருபபனவுமாகிய சகல கருமஙகளும, எமபெருமானுககு காபபிதமாகசசெய்தாலதான நலலபலனைததரும ஓ மகீபாலனே, மனிதாகளுககு விஷ்ணு பக்தியிருநதால அது சகலபாபஙகளையுமழிககும. அந்த பகதியுடையவாகள செய்த கிரியைகள்யாவும் அநநதமான பலனுளளனவாகும். பாபககாட்டுக்குத் தீபோனற அந்தபகதி தாமதம ராஜஸம ஸாததுவீகம என மூவகையாய் உட்பிரிவுகளால் பததுவகையாயிருககும, அவறறைச்சொலலுகிறேனகேளும அரசனே. எவனுகிலுமொருவன கேடுறவேணடுமெனறுகருதி வேறொருவன் பகவானைபபூஜித்தால் அவன சுவாமிவிஷயத்தில் செய்யும பகதியானது தாமதத்தில் அதமமானது. விபசாரியானவள் கொண்டவனை உபசரிபபதுபோ

ல ஒருவன் கபடமானவெண்ணத்துடன் சாவேசுவரனான நாராயணனைபூஜி த்தால அந்த பக்தியானது தாமதத்தில மத்திமம மற்றொருவா பகவானுக்கு பூஜைசெய்வதுகண்டு, பொறாமைகொண்டு, ஒருவன ஹரிபூசைசெய்தால அநத பக்தியானது தாமததில உததமமாம. தனம தானனியம முதலியவற றைவிரும்பி மிகுந்த அனபோடு ஸ்ரீஹரிககுப பூஜைசெய்தால, அந்தபகதி ராஜஸததில அதமமானது சகல லோகஙகளிலும தன புகழவிளஙகவேணடு மெனறு எணணி ஸ்ரீயஃபதியைப பூஜிததால அநதபகதி ராஜஸததில மத்திம மானது சாலோககியமுதலிய போகஙகளைககருதிப பூஜிததால அது ராஜ ஸததில உததமமானது தானசெய்தபாபஙகள தீரவேணடுமெனறு பூஜித தால அது ஸாததுவீகததில அதமம பெரியோாகளமுதலியவரை உபசரித தால எமபெருமான திருவுளளம உகக்குமெனறு எணணிசசெய்தால அது ஸாததுவீகததில மததிமமானது எமபெருமான கடடளைபபடி நடபபதே கட மையெனறு அடிமைததொழிலாக அவனுககுப பூஜைசெய்வது சிறநததாகை யால ஸாததுவீகததில உததமமாம எமபெருமானது பெருமையைககேட்டு தான அவன வடிவமெனறு உறுதியுடனகளிததிருபபது அதிலுஞ்சிறநதது நானே பரமாததுமாவான விஷ்ணுவின சரீரமாயிருபபதால இவ்வுலகமெல லாம எனனிலும வேற்றுமையுளளதனறு எனறு எபபோதும காட்சிகொ ளளுபவனை யாவரினும மிகச சிறநதவனெனபாாகள இபபடிப பதது விதமான பகதியானது பிறவிததுனபததை அறுககவலலது ஆகிலும அவற றில ஸாத்துவீகமானபகதியானது சகலமான விருமபியபலனகளையு மளிகக வல்லது ஆதலால கேளுமரசனே, பிறவிததுனபந தீரவேணடுமெனறு விருபபமுளளவன தனது வருணாசிரமஙகளுககு விரோதமனறியே சாவேசு வரனான நாராயணனிடததில பகதிசெய்யவேணடும அவனவனுககுரிய வொ ழுககஙகளைச செயவதெலலாம எமபெருமானுககே பூஜைசெயவதாகும ஆதலால அபபடிபபடட ஒழுககஙகளைவிடடு பகதிசெய்பவன பககலில பர மாததுமாசந்தோஷிபபதிலலை சகலவேதஙகளிலும ஒழுககமே தலைமையாக விதிககபபடுகினறது, ஒழுக்கததால தருமமுணடாகும், தருமத்துக்கு உததே சியமும பலனளிபபவனும், எனறுநதாழசசியினறி விளஙகுபவனும் எம்பெரு மான தான். ஆதலால அவரவருககுரிய நலலொழுககததாக அனுகூலமாக ஸ்ரீபகவானிடததில பகதிசெய்யவேணடும. நலலொழுககமறறவாகள் செய் ததருமமும தேடியபொருளும இமமை மறுமை யினபத்துககேதுவாகமாட் டா. ஓமனவறுதிமாறுதிருக்குமரசனே, நீாகேட்ட விஷயஙகளெலலாமுரை ததேன் ஆதலால எபபோதும தருமததில நாடடஙகொணடு, இமமையு மறு மைகளிலினபமபெறுவீராக. சகலவிடாகளையுந தீாககவலல ஸ்ரீமநநாரா யணனை முயறசியுடன பூஜிபபீராக அநதபகவானை பூஜிததுவருவீராகில சகலவினபஙகளையும பெறுவீா ஓ அரசனே, சிவனையும விஷ்ணுவையும் ஒருவஸதுவெனறே உறுசெய்து பூஜிபபீராக. வேற்றுமையாக எணணுதல் பத்துகோடிபிரமஹத்திபாவததுககு நிகராகும சிவனேவிஷ்ணு விஷ்ணு வே சிவன அவாகளுக்கு வேற்றுமை செய்பவன் கோடி கோடி நரகங்களை

யடைவான். ஒ அரசனே, உமது பாட்டனமார் கபிலாகோபத்தால் தற்கொலைப்பாவமடைந்து கோரமான நரகத்தில்வாசஞ்செய்கின்றனர். அவர்களையெல்லாம் கங்கைதீர்த்தத்தால் முத்திக்கரையேற்றுவீராக. கங்கையானது சகலபாபங்களையுந் தீர்க்கவல்லது. மயிர், எலும்பு, உகிர், பல், நீறு இவற்றிலெதுவேனும் கங்கையிற் சேருமானால் அவை யாருடையனவோ அவர்களுக்குப் பரமபதமுண்டாகும். ஒருவன் மகாபாபங்களைச் செய்திருந்தாலும் அவனது எலும்பையாகிலும் சாம்பலையாகிலும் மனிதரெடுத்துக் கங்கையில் போடப்பெற்றால் அவ்விறந்தவன் பரமபதமேயடைவான். உண்மையான ரகசியம் சொல்லுகிறேன் கேளும், கங்கையானது பாபங்களையழிப்பது, அதன் நீர்த்துளிகள் பட்டாலும் பரமபதங்கிடைக்கும். உமக்குச்சொல்லிய பாபங்களெல்லாம் கங்கைத்துளிகளால் நனையப்பெற்றவளவிலே தீர்ந்துபோகும்.

நாரதர் வாக்கியம்.

ஓமுனீசுவரர்களே, இந்தவிதமாகத் தருமராஜனானவர் பகீரதராஜனுக்குச் சொல்லிவிட்டு மறைந்துபோனார். ராஜனும் உடனே தவம்புரியவேண்டுமென்று மனத்திலுறுதிகொண்டு தன்னிராசசியமுழுதும் மந்திரிகள் வசத்தில் ஒப்புவித்துவிட்டு தவஞ்செய்வதற்காக இமயமலைக்குச் சென்றான்.

௧௫-வது அத்தியாயம்.

பகீரதர் கங்கையைக்கொண்டுவருதல்.

பகீரதர் ஹிமகிரியையடைந்து என்னசெய்தார்? எப்படி கங்கையைக்கொண்டுவந்தார்? இவைகளை யடியேங்கட்கு உரைக்கவேண்டுமென்று பிரார்த்தித்த சௌனகாதிகளை நோக்கி சூதபௌராணிகர் விளம்பலாயினர்.

பிருகுமகாரிஷி ஆசிரமவர்ணனை.

கேளுங்கள் சௌனகாதிகளே, பகீரதர் ஜடை மரவுரிமுதலியவைகளைத் தரித்துக்கொண்டு ஹிமகிரியைநோக்கி கோதாவரி தீரத்தையடைந்தார். மகாரண்ணியமான அந்ததீரத்தில் கிருஷ்ணசாரமென்னும் மான்கூட்டங்களாலும், யானைத்திரள்களாலும், உழன்றுகொண்டிருக்கும் வண்டுக்கூட்டங்களாலும், செவிக்கின்பமூட்டும் பக்ஷிக்கூட்டங்களாலும், அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கும் பன்றிக்கூட்டங்களாலும் சிரமப்பட்டும், சௌரி மிருகங்களின் வாலினால் வீசப்பட்டும், தோகைகளைவிரித்து நாத்தனம் செய்யும் மயில்களோடு கூடியும், முனிபுத்திரிகளால் அன்புடன் ஆதரிக்கப்பட்ட செடி கொடிகளையுடையதும், ஆச்சா, பனை, பச்சிலை, ஸ்ரீதாளம், இச்சில், அத்தி, மலையகத்தி, வன்னிமுதலிய மரங்களால் விளங்கியும், விகசித்த

ஜாஜி, யூதிகை, குருக்கத்தி, சண்பகம்முதலிய புஷ்பங்களால் நிறைந்தகொடிகளால் அலங்கரிக்கப்பட்டும், ரிஷிசமூகங்களால் வாசஞ்செய்யப்பட்டும், வேதசாஸ்திர கோஷங்களோடு கூடியும் இருக்கிற பிருகுமகரிஷியின் ஆசிரமத்தை யடைந்து, சிலாக்கியமான வேதபாராயணம் செய்துகொண்டும், சிஷ்யவர்க்கங்களால் சூழப்பட்டும், சூரியனுக்கொப்பான தேஜஸ்ஸுடனும் விளங்கும் பிருகுமுனிவரை தரிசித்து முறைப்படி நமஸ்கரித்தார் அதிதியாய்வந்த ராஜாவை அன்புடன் ஆதரித்து க்ஷேமம் வினவலும் அவர் மிகுந்த விநயத்துடன் சொல்லலுற்றார் சகலதருமங்களையு மறிந்து சகலசாஸ்திரங்களின் மெய்ப்பொருளுமுணர்ந்த ஓ மகரிஷியே சமுசாரசாகரத்தினின்று சேதனர்களைக்கரையேற்றும் பகவான் எதனால் சந்தோஷிக்கிறார்? எந்தகருமத்தால் பூஜிக்கப்படுகிறார்? இவைகளை அடியேனுக்கு ஆதரவுடன் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தார் அப்போது ஓ அரசனே, நீர்புண்ணியவான்களுக்குள் சிறந்தவரன்றோ? இல்லாவிட்டால் எவ்வாறு குலமுழுமையும் பாபத்தில் நின்று கரையேற்றத் தகுந்தவராவீர்? எவன்கிலும் தனபிதாக்களை கங்கையின் தீர்த்தத்தால் நனைத்தல்முதலியவற்றால் நற்கதி அடைவிக்க விரும்புகின்றானோ அவனைமானிடரூபம் தரித்திருக்கும் விஷ்ணுவாகவே அறியவேண்டும் தேவதேவனான பகவான் எந்தகருமத்தால் மனிதர்களுக்குக் காமியபலனளிப்பரோ அதைச்சொல்லுகிறேன் கேளும் ஓ ராஜேந்திரா, சத்தியத்திலும் அஹிம்சையிலும் விருப்பமுடையவராய் எல்லாப்பிராணிகளுக்கும் ஹிதராய், பொய்யையும் துஷ்டர்களின் கூட்டுறவைத்துறந்தவராயிருந்து ஸாதுசகவாசத்தைச் செய்து இராப்பகலிலும் புண்ணியங்களையேசெய்து பொழுதுபோக்கி அனாதியான விஷ்ணுவை அஷ்டாக்ஷரத்தால் ஜபம் செய்யக்கடவீர் அவ்வாறுசெய்தால் பெருமையையும் க்ஷேமத்தையையும் அடைவீர் என்று சொன்ன பிருகுமுனிவரை நோக்கி பகீரதர் பிரசனம்பண்ணுகிறார் சத்தியம் எத்தன்மையது? அஹிம்சையாவதென்ன? சர்வபிராணிகளிடத்தும் எப்படி ஹிதமாயிருக்கிறது? பொய் எவ்வகைத்து? துஷ்டர்களின் சுபாவமென்னை? ஸாதுக்களுடைய லக்ஷணம் என்ன? புண்ணியமாவதென்ன? ஸ்ரீவிஷ்ணுபகவான் எவ்வாறு தியானிக்கத்தக்கவர்? அவருக்கு பூஜைபுரிவது எங்ஙனம்? சாந்தியாவதென்ன? அஷ்டாக்ஷரமாவதென்ன? இவைகளை அடியேனுக்கு புத்திரவிசுவாசத்துடன் விளங்க உரைக்கவேண்டுமென்று பிரார்த்தித்த பகீரத மகாராஜனை நோக்கி, பிருகுமுனிவர் சொல்லலுற்றார் ஓ பேரறிவாளரான வேந்தே, உம்முடையபுத்திமிகவும் சிலாக்கியமுடைத்து, நீர்கேட்டவிஷயங்கள் முழுமையும் நன்றாய்ச்சொல்லுகிறேன். உண்மைபுகலவதே சத்தியமெனப்படும், அந்தச்சத்தியமும் தாமிஷ்டர்களால் தருமவிரோதமன்றி சொல்லப்படவேண்டும் மேலும் இடம் காலமுதலிய இவைகளையறிந்து தனது தருமத்துக்கு விரோதமின்றி சொல்லப்படுகிறதை சத்தியமென்றே ஸாதுக்களுரைக்கிறார்கள் சர்வஜந்துக்களுக்கும் உபத்திரவம் உண்டாக்காமலிருக்கும் செய்கையே அஹிம்சையெனப்படும். அதுவே இஷ்டார்த்தத்தை கொடு

தத்பாலது தருமகாரியங்களுக்குச சகாயமாயிருததலும, அதருமகாரியங்களுக்கு விரோதமாயிருததலும லோகஹிதத்வ மென்று தாமசாஸதிரவல்லோா கூறுகினறனர் தருமாதருமஙகளின சுரூபமறியாது தன்னிஷடப்படி சொலலுதல அனேககனமைககுவிரோதமான பொய்யாகும. லோகவிரோதிகளும, மூட்டாகளும கெடுவழிசெலுததும மதியுடையோரும், தாஜ்ஜனரெனறு கூறபபடுகினறனா இவா சாவகருமஙகளுககும நீககபபடுபவராா தருமாதருமஙகளின சுரூபமறிநது வேதவிதிபிசகாது சாவலோகஹிதமனமுடையவா ஸாதுககளெனச சானறோா சாறறுகினறனா. எது விஷ்ணுவுககுப பிரீதியைச செயகினறதோ ஸாதுககளாலே சந்தோஷிககபபடுகிறதோ தனககும ஆனநதம விளைவிககிறதோ அதுவேபுணணியமெனபபடும. இவவுலகமெலலாம விஷ்ணுமயம, விஷ்ணுவே எலலாவுலகஙகளுககுஙகாரணம, நான விஷ்ணுவே, எனகிற எணணமானது விஷ்ணுஸமரணமெனபபடும விஷ்ணுசாவதேவஸவரூபமானவா, முறைபபடி அவரைப பூஜிபபது அவசியமசெயயவேணடியது எனறு மனதுககுணடாகிற பிரீதியானது பகதியெனறு சொலலபபடுகினறது பரமபுருஷனான ஸ்ரீஹரி எலலாபபிராணிகளுககும அநதராதமாவாய எஙகும நிறைநதிருககிறாரென்று உணாநது வேறறுமையினறி எலலாபபிராணிகளிடததும நேசமுறறிருபபது ஹரிபூஜையெனபபடும சததுரு மிததிராகளிடததில சமபுததியுடைமையும, இநதிரியஙகளைஜயிததலும, கிடைததவரையில சநதோஷிபபதும சாநதியாகும ஓ அரசனே, கீழசசொலலியயாவும் தவபபயனளிககவலலவை சாவபாபஙகளையும சீககிரததில நாசமசெய்யும திறமையுடையது மகிமைபொருநதிய அஷடாக்ஷரமநதிரமானது, எலலாபாபஙகளையும ஹரிககததககது, சதுாவிதபுருஷாாததசாதனமானது. அததகையமகிமைவாய்நத மநதிரததை உமககு உபதேசிககிறேன. விஷ்ணுவினபிரீதியானதும எலலோருககும் இஷடபலனகளைககொடுபபதுமான நமோ நாராயணாயநம எனனும் மநதிரததைப பிரணவபூாவமாக உசசரிதது ஜபமசெயயவேணடும சஙக சகரஙகளை திருககைகளில தரிபபவரும, சாநதகுணமுடையவரும, ஜலசயனரும் சமுசாரரோகததைத தீாபபவரும, தமது இடதுமடியில ஸ்ரீமகாலக்ஷமி ீறறிருககபபெறறவரும, எலலோருககும அபயமளிபபவரும. பிரபுவும், கிரீடகுணடலாதி திவ்யாபரணஙகளைத தரிபபவரும, கௌஸ்துபரதனம விளஙகும திவ்யமாலையுடையவரும, ஸ்ரீவதசமெனனும திருமறுவுபொருநதிய திருமாாபையுடையவரும, பீதாமபரமெனனும திவயவஸதிரதாரியும, ஆதியநதமிலலாதவரும, சாவாபீஷடஙகளையம கொடுககிறவருமாகிய ஸவாமியைத தியானிககவேணடும இவவைபவாதிசயஙகளையுடைய மகாவிஷ்ணுவாகிய பரமாதமனை தனனிடததிலிருககிறவராக எவனகாணகிறானோ அவனே எலலாக்ஷேமஙகளையுமடைவன ஆகையால ஓ அரசனே, விசுவஸியும அநத நாராயணனே அநதமநதிரததுககு வாசசியன, அநதமநதிரமே அந்தபகவானுககு வாசகம. மிகுநதமகிமைதஙகிய அநத மநதிரததுககும பகவானுககும வாசகவாசசிய சமமநதமானது எனறுமுளளது பயஙகரமான இந்த சமுசாரசாகர

மானது அநாதியாக வளர்ந்துவருகிறதைப்போல ஸ்ரீவிஷ்ணுவும் அநாதியாக ஜனங்களை அச்சாகரத்தினின்றும் கரையேற்றுகிறார். அந்தவிஷ்ணுவே லோகங்களை விருத்திசெய்கிறவர், எல்லோகமும் அபீஷ்டபலனை யளிப்பவர், எல்லாரிடத்திலும் அந்தர்யாமியாயிருப்பவர், ஞானஸ்வரூபர், புராணபுருஷர், நீர்கேட்டயாவற்றையும் சொல்லிவிட்டேன். உமக்கு க்ஷேமமுண்டாகும், தவப்பேறு பெறுவீர், சுகமாய்ப் போகலாமென்று பிருகுமுனிவர் அனுக்கிரஹித்தார். இவ்வாறு அனுக்கிரஹம்பெற்ற பூபதி மகிழ்ந்து சந்தோஷத்துடன் தபம் புரிவதற்காக வனஞ்சென்று யோகசக்தியையடைந்து மகிமைமியமான கங்கைக்கரையில் நாகேசுவரமென்னும் மகாக்ஷேத்திரத்தில் ஒருவராலும் செய்தற்கரிய தபம்புரிந்தார்.

பகீரத் தவச்சிறப்பு.

எவ்வாறென்னில் மூன்றுகாலமும் ஸ்நானஞ்செய்து காய்கிழங்குமுதலியவைகளையே ஆகாரமாகக்கொண்டு, அக்கினிகளை வளர்த்து நித்தியஹோமஞ் செய்துகொண்டு, எல்லாப்பிராணிகளுக்கும் உபகாரியாய், ஸ்ரீமந்நாராயணனையே கருத்திற்கொண்டு, பத்திரம் புஷ்பம் பழம் முதலியவற்றால் அந்த பிரமமத்தையே பூஜித்துக்கொண்டிருந்தார். இவ்வாறு வெகுகால கழித்தும் சலியாத தைரியத்துடன் அந்தப்பகவானையே விடாமன முடையோராய் மரத்திலிருந்து உதிரும் சருகுகளை ஆகாரமாய்க்கொண்டிருந்தார். இவ்விதம் சின்னாளைச் சென்றபின்னர் பிராணாயாமஞ் செய்துகொண்டு அறுபதினாயிரம்வருஷம் தவம்புரிந்தார். இவ்விதம் தபம்பூண்டிருந்த அந்தராஜாவினுடைய நாசிகைவழியாய் பயங்கரமான புகையுண்டாயிற்று. அந்தப்புகையைப்பார்த்து தேவர்கள் பீதியடைந்து, அதிசயமுற்று நேரிதேமோவென்ற சங்கையினால் நடுக்கமுற்று, உடனே திருப்பாற்கடலின் உத்தரதீரத்தையடைந்து, தேவதேவனும் ஈசுவரனும் சமுசாரமோசகனுமான ஸ்ரீமகாவிஷ்ணுவைத் துதிக்கலாயினர்.

பகவத் ஸ்தோத்திரம்.

உலகங்களுக்கு ஒப்பற்ற ரக்ஷகனும், தன்னை ஸ்மரிக்கிறவர்களது உபத்திரவத்தைப் போக்குகிறவனும், பரமேசுவரனும், ஸ்வபாவத்திலேயே சுத்தனும், பரிபூரணமான ஷட்குணங்களையுடையவனுமான பகவானை நாங்கள் நமஸ்கரிக்கிறோம். அவரது சுவரூபத்தையறிந்த பெரியோர்கள் அந்தப்பகவானை அறிவில் நிறைந்தவராய்க் கூறுவாரன்றோ? தார்மிகஜனங்களால் எப்போதும் தியானிக்கப்படுபவனும், பரமாத்மனும், தன்னிச்சைக்கிசைந்த சரீரங்களையடைந்து தேவகாரியங்களைச் செய்பவனும், ஜகன்மூர்த்தியும், ஜகரக்ஷகனும், புருஷோத்தமனுமாய் விளங்குகின்ற தேவரீரை பிரணாமம் செய்கின்றோம். முரனென்னும் அசுரனுக்குச் சத்துருவாகிய எந்தப்பகவானுடைய திருநாமங்களை ஸ்மரித்தால் எல்லாப்பாபங்களும் நாசமடைகின்றனவோ அந்தப்புராணபுருஷனை பகவானை அறம்பொருளின்பம்வீடென்னும் நான்கு புரு

நக்ஷத்திரங்களும் சித்திக்கவேண்டிப் பிரார்த்திக்கின்றோம். சூரியன் முதலிய வர்கள் எந்தப்பகவானுடைய தேஜஸ்ஸினால் விளங்குகிறார்களோ, சமுத்திரம் நதிகளை எந்தப்பகவானுடைய ஆஜ்ஞையைக் கடப்பதில்லையோ, அந்த காலரூபியும் தேவதேவனும் தர்மமுதலிய புருஷார்த்தரூபியுமான பகவானை தியானிக்கின்றோம். எந்தவிஷ்ணுவினுடைய ஆஜ்ஞையால் பத்மசம்பவனான பிரமன் உலகசிருஷ்டி செய்கின்றானோ, எவனால் வேதங்களும் பிராமணர்களும் உலகத்தைப் பரிசுத்தமாக்குகின்றார்களோ, தேவர்களுக்கெல்லாம் முதலவனாய் நற்குணங்களுக்கிருப்பிடமாயிருக்கின்ற அந்தவிஷ்ணுவை பிரணாமஞ்செய்கின்றோம். எல்லோருக்கும் சிரேஷ்டனும், எல்லாராலும் ஆசிரயிக்கத்தக்கவனும், மதுகைடபர்களைச் சம்ஹரித்தவனும், தேவாசுரர்களால் பூசிக்கப்பட்ட பாதபங்கஜத்தையுடையவனும், ஸாதுக்களான பக்தர்களின் இஷ்டசித்திக்குக் காரணபூதனும், ஞானமொன்றாலேயே அறியக்கூடியவனுமான ஸ்ரீவிஷ்ணுவை நமஸ்கரிக்கின்றோம். அனந்தனும், ஈசுவரனும், பீதாம்பரதாரியும், பிரமன்முதலான தேவர்களால் சேவிக்கப்பட்டவனும், யாகத்தில் பிரியமுள்ளவனும், யாகத்திலுண்டாகும் ஹவிசுக்களைப் புசிப்பவனும், சுத்தஸ்வபாவமுடையவனும், சர்வோத்தமனும், சர்வப்பிரியனுமான நாராயணனை உபாஸிக்கின்றோம். சத்துசித்தானந்தமான சுரூபத்தையுடையவனும், பக்தஞானிகளாலறியப்படாதவனும், ஆதிமத்தியாந்தரகிதனும், கர்மசம்பந்தத்தால் ஜன்மமில்லாதவனும், தேவதேவனும், பிராகிருதரூபமில்லாதவனுமான ஸ்வாமியை நமஸ்காரம் செய்கின்றோமென்று இவ்வாறு ஸ்தோத்திரஞ்செய்யும் இந்திரன்முதலான தேவர்களைக் கடாக்ஷித்து ராஜரிஷியான பகீரதனுடைய சரித்திரத்தை அறிவித்து, தேவர்களுக்குச் சமாதானஞ்சொல்லி அபயப்பிரதானமீந்து, பகீரதமகாராஜா தபம்புரிந்துகொண்டிருந்த ஸ்தானத்தையடைந்து அவருக்குப் பிரத்தியக்ஷமாயினார். சங்கசக்கரங்களை இருகைகளிலும் தரிப்பவரும் சத்துசித்தானந்தமயமான வடிவுள்ளவரும், ஜகத்குருவும், திசைகளெல்லாம் ஒளிர்கின்ற திருமேனியுடையவரும், காசாம்பூப்போன்ற தேககாந்தியுடையவரும், அப்போதலர்ந்த தாமரையிதழ்களைப்போன்ற திருக்கண்களையுடையவரும், ஒளிவீசும் கிரீடம் முதலிய திவ்வியாபரணங்களால் அலங்கிருதரும், ஸ்ரீவத்ஸகௌஸ்துப பீதாம்பரதாரியும், பிரபுவும், நீண்ட திருக்கைகளையுடையவரும், வனமையார்ந்த உருவினரும், தேவர்களால் அர்ச்சிக்கப்பட்ட பாதாரவிந்தங்களையுடையவருமான பகவானைத் தரிசித்தவுடனே தண்டம்போல பூமியில் விழுந்து, சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, சிலிர்க்கக்களிப்பார்ந்து, மயிர்சிலிர்த்து, நாத்தழுதழுத்து, திரும்பத்திரும்பக் கிருஷ்ணா, கிருஷ்ணா, கிருஷ்ணா, கிருஷ்ணாவென்று சொன்னார். அப்போது தயாளுவாய், சர்வபிராணிவர்க்கங்களிலும் உள்வசிப்பவராய், ஜகத்ரக்ஷகராய், சர்வஜந்துக்களையும் சிருஷ்டிப்பவராய் விளங்கும் பகவான் ராஜாவை விளித்துத் திருவாய்மலர்ந்தருளினார். ஓ மகாபாக்கியசாலியான பகீரதமகாராஜாவே, உம்முடைய அபீஷ்டம் நிறைவேறும். உம்முடைய பூர்வபிதாமகர்களாகிய சகரர்கள் எனதுலோகத்தையடைவார்கள். எனது சாரூப்யமான

சிவபெருமானை உமது சக்திக்குத்தகுந்த ஸ்தோத்திரங்களால் பூஜைசெய்யும், உமக்கு எல்லாக்ஷேமங்களையும் கொடுப்பார், சந்தேகமில்லை. ஆகையால் ஸ்தோத்திரயோக்கியரும் சுகமளிப்பவருமான அந்த சிவபெருமானை ஸ்தோத்திரம்செய்யும் ஆதியந்தமில்லாதவராய் எல்லாஇஷ்டத்தையுங் கொடுப்பவராயிருக்கும் அந்ததேவர் உமக்கு க்ஷேமத்தைக்கொடுப்பார் இவ்வாறு திருவாய்மலர்ந்தருளின ஆசரிதபாலனனபகவான அநாதத்தானமாயினார் உடனே பகீரதர் எழுந்து இது சுவட்பனமோ? இல்லாவிடின் உண்மைதானோ? யாதுபுரிவேனென்று திகைத்து வியாகுலத்துடனிருந்தார் அப்போது ஆகாயத்தில் உயர்ந்த சுரத்துடன்கூடிய ஒர்வாக்கானது இதை உண்மையென்றறி, யோசிக்கவேண்டாமென்று கலங்கினமனமுடைய அந்தராஜாவினுடைய செவியில் பட்டது அப்போது ராஜாவும் மகத்தான குதூகலத்தையடைந்து சங்கரபகவானை ஸ்துதிசெய்வாராயினர்.

சிவஸ்தோத்திரம்.

ஜகந்காதரும், பக்தருடையபீடையை நிவர்த்திப்பவரும், பிரத்தியக்ஷமல்லிய பிரமாணங்களுக்கு எட்டாதவரும், பிரணவஸ்வரூபரும் சராசரலமத்னும், அயோநிஜரும், சிருஷ்டியாதிகளுக்குக் காரணரும், ஜிதேந்திரியரும் கேவிரூபாக்ஷரும், அக்கினிஜொலிக்கின்ற நேத்திரத்தையுடையவரும், அநேகஸ்வரூபத்தை யுடையவருமான சிவபெருமானை நமஸ்காரம்செய்கின்றேன் ஆன்மத்தியாந்தரகிதராகவும், வேறுபாடில்லாதவராகவும், உற்பத்திக்ஷயமில்லவிவராகவும் எந்தபெருமானை யோகிகள் கூறுகிறார்களோ அந்தசங்கரனை பஜிக்கிறேன். உலகங்களுக்கு ரக்ஷகரும், ஆசையையும் திருப்தியையும் உண்டுபண்ணுகிறவரும், கறுத்த கண்டத்தையுடையவரும், பிரமத்கணங்களுக்கு அல்லது பிராணிகளுக்கு பதியுமான சுவாமிக்கு வந்தனம்புரிகின்றேன் ஞானஸ்வரூபியும், லோகசாக்ஷியும், பாபஹரரும், கலமனத்தையுடையவரும், ஜடாபூஷிதருமாய் விளங்கும் ருத்திரதேவனுக்கு நமஸ்காரம்செய்கின்றேன்; பினாகபாணியும், சூலாயுததாரியும், சர்வாந்தர்யாமியும், மணிவிளங்கும் அஸ்தமுடையவரும், ஐந்துமுகத்தையும் பத்து திருக்கைகளை யுடையவருமான, உமக்கு நமஸ்காரம் கபாலம் பாசம் இருப்புலக்கை இவைகளை திருக்கையிலுடையவரும் சர்வபாபங்களைப் போக்குகிறவரில் அதிபருமான சுவாமிக்கு வந்தனம். பிரமத்கணங்களுக்கு அதிதேவரும், ஜீவாத்துமாக்களுக்கு ஈசுவரனும், ஹிரண்யத்தைக் காப்பத்திலுடையவரும், பிரமாண்டங்களுக்கு அதிபதியாயுமிருக்கிற சுவாமிக்கு நமஸ்காரம்செய்கின்றேன் தங்கமயமான வீர்யத்தையுடையவரும், அநேகரூபம் தரிப்பவரும், தியானத்தினால் பிரத்தியக்ஷமாகும் ரூபத்தையுடையவரும், தியானத்துக்கு சாக்ஷியும், தியானநிலையிலேயே இருக்கிறவருமான அஹிர்ப்ரதனென்று சொல்லப்படாநின்ற சுவாமிக்கு நமஸ்காரம்புரிகின்றேன் ஜங்கமம் ஸ்தாவரம் இவைகளால் விளங்கிக்கொண்டிருக்கும் இந்த ஜகத்தெல்லாம் மூலபிரகிருதிபுருஷன் இவர்களுடன் மேகத்திலிருக்கும் மழைபோல் எந்தசுவாமியால் உண்டுபண்ணப

பட்டதோ அந்தச்சுவாமிக்கு பிரணாமம் செய்கின்றேன். சுவயம்பிரகாசரும், லோகைகஸ்வரூபியும், சிரேஷ்டமான தேஜோரூபியும், புராணபுருஷரும், ஜகத்தை யுண்டுபண்ணுகிறவரும், மனிதர்களுக்குக் கண்ணளிப்பவருமான அந்தச்சுவாமிக்கு வந்தனம்புரிகின்றேன். பார்வதிமனோகரனும், விரூபாக்ஷனும், நீலகண்டனும், எப்போதும் மங்களத்தைக்கொடுப்பவனும், காலகாலனும், திரம்பின பாக்கியசாலியுமான சுவாமியே எனக்கு என்ன க்ஷேமமுண்டோ அதைக்கொடுக்கவேண்டும். கவாசதமொன்றும் ஜடையைத்தரித்தவரும், கறுத்த கழுத்தையுடையவரும், அக்னிமயமான வீரியத்தையுடையவருமான சிவன் எனக்கு கிருபைபுரிவாராக. எந்தச்சுவாமியினிடத்திலிருந்து சமுத்திரங்களும் பர்வதங்களும், கந்தர்வர் யக்ஷர் தேவர்கள் சித்தர்கள் இவர்களது கூட்டங்களும் உண்டாயினவோ, எவனுள்ளிருந்து பிராணிகள் தத்தம் வியாபாரத்தைச் செய்கின்றனவோ அந்ததேவன் நமக்கு க்ஷேமத்தைக் கொடுக்கவேண்டும். சுத்த சுபாவமுடையவராகவும் சர்வஸ்வதந்திரமானவராகவும் சொல்லப்படுகிற எந்தச்சுவாமியை யோகிகள் தியானஞ்செய்கின்றார்களோ அந்தசுதந்திரனும் சிரேஷ்டனும் நற்குணநிதியுமான சுவாமியை அடிக்கடி நமஸ்கரிக்கிறேனென்று ஸ்துதிசெய்தார்.

இத்தன்மையாய் பகீரதமகாராஜாவால் செய்யப்பட்ட ஸ்தோத்திரத்தை மூன்றுசந்தியிலும் படனஞ்செய்கிறவன் சர்வ இஷ்டங்களையும் பெறுகிறான்.

தபசித்தி.

இந்தப்பிரகாரம் ஸ்தோத்திரஞ்செய்யப்பட்ட தேவசிரேஷ்டனான சங்கரபகவான் ராஜா தவம்புரிந்துகொண்டிருந்த ஸ்தானத்தையடைந்து அவருக்குப் பிரத்தியக்ஷமாயினார். பஞ்சமுகமும், தசஹஸ்தங்களும், அர்த்தசந்திர சிரோபூஷணமும், திரிநேத்திரமும், பருத்தசரீரமும், ஸர்ப்பாபரணமும், விசாலமார்பும், ஒவ்வோர்காலத்தில் அஷ்டதி[illegible]ஜங்களும், மகாதேஜசும் உடையவரும், யானையுருவமுள்ள அசுரனை வதஞ்செய்து அதின்தோலை வஸ்திரமாகத்தரித்தவரும் தேவர்களால் பூஜிக்கப்பட்ட அரவிந்தமலர்போன்ற பதங்களையுடையவருமான தேவனைப்பார்த்து வாய் தழதழத்து தண்டாகாரமாய் மண்மிசைவீழ்ந்து மகாதேவ மகாதேவவென்று நமஸ்கரித்தார். அப்போது சந்திரசேகரப்பெருமான் ராஜாவினுடைய பக்தியின்திறத்தை யறிந்து, அவரைவிளித்து, உமது தபஸால் நான் அதிக சந்தோஷமடைந்தேன். உமக்கு வேண்டியவரங்களைக்கேளும் தருவேன் நீர் ஒப்பற்றசுகங்களை அனுபவித்து முடிவில் பரமபதமடைவீர், என்று திருவாய்மலர்ந்தருளினார். அப்போது ராஜா ஓ மகேசனே என்பாலருளுள்ளதாகில் கங்கையைத்தந்தருளி என் மூதாதைகளுக்கு நற்கதி யளிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார். அப்போது சங்கரபகவான் தயாரசம்பெருகி ஓ வேந்தே, உமக்குக் கங்கையைக்கொடுத்தேன் உமது முன்னோர்களுக்கும் நற்கதிதந்தேன் உமக்கு மோக்ஷங்கொடுப்பேன் என்றுசொல்லி அந்தர்த்தானமாயினர்." அச்சிவபெருமானுடைய கிரீட

த்திலுறைந்து ஜகத்தை பரிசுத்தஞ்செய்யும் கங்காதேவியானவள் உடனே ஜகங்களை பரிசுத்தஞ்செய்துகொண்டு பகீரதனைப் பின்றொடர்ந்தாள். அந்நாள் முதல் அந்த கங்காதேவிக்கு பாகீரதியென்று பிரசித்தமாக ஒருபெயர் வழங்குகிறது. பகீரதமகாராஜனைப் பின்றொடர்ந்த கங்கையானவள் சகரர் அறுபதினாயிரவரும் தகிக்கப்பட்டிருந்த ஸ்தானத்தில் பிரவகித்தாள். உடனே நரகவாசஞ்செய்துகொண்டிருந்த சகரபுத்திரரனைவரும் பாபத்தினின்று விடுபட்டவர்களாய்விட்டார்கள். முன்னம் இவர்களைக்கொண்டு தண்டித்த யமதருமராஜன் பாபவிமுக்தர்களான அச்சகரரைப்பார்த்து மிகுந்த வணக்கத்துடன் நமஸ்கரித்து, விதிப்படி பூஜித்து, சொல்வானாயினன். ஓ ராஜபுத்திரர்களே, நீங்கள் இதுகாலபரியந்தம் உங்களுடைய தீவினையால் மகாபயங்கரமான நரகபோகங்களை அனுபவித்தீர்கள். உங்களுடைய வம்சத்திலே மகாத்தனியனான பகீரதனென்னுமோரரசன் உண்டானான். அவனால் நீங்கள் நரகத்தினின்று கரையேற்றப்பட்டீர்கள். இப்போது சர்வாபீஷ்டங்களையும் ஸாதிக்கும் விமானங்களிலேறி சர்வோத்கிருஷ்டமான ஸ்ரீவிஷ்ணுலோகத்தை யடையுங்கள் என்றுசொல்ல, அந்த சகரபுத்திரர் நூறுகோடிவம்சத்தோடுகூடினவராய் ஸ்ரீவிஷ்ணுலோகத்தை யடைந்தார்கள். ஸ்ரீவிஷ்ணுடகவானுடைய பாதத்திலிருந்து உண்டான கங்கையானவள் இப்படிப்பட்ட பிரபாவமுடையவள். எல்லாவுலகங்களிலும் மகாபாதகங்களையும் விலக்குந்தவளென்று பிரசித்தையானவள். மகாபுண்ணியத்தைக் கொடுப்பதும், த்யுனை விருத்திபண்ணுவதும், பஞ்சமகாபாதகங்களையும் நாசஞ்செய்ய வல்லதுமான இக்கதையைப் படிப்பவனும் கேட்பவனும் கங்காஸ்நானபலத்தை யடைவான். இந்த பரிசுத்தமான சரித்திரத்தை பகவத்சந்நிதியில் படிப்பவன் பதினான்கு இந்திரபட்டபரியந்தம் விஷ்ணுசாலோக்கியத்தை யடைவான்.

இவ்விதமாக பூர்வபாகத்தை நாரதர்க்கவான ஸநத்குமாரயோகிக்கு திருவாய்மலர்ந்தருளியவண்ணம் நைமிசாரண்ணியவாஸிகளுக்கு சூதமுனீந்திரர் உரைத்தருளினார்.

முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி.	பிழை.	திருத்தம்
க	கரு	லறிய	லரிய
உ	கூ	லோம	ரோம
,,	,,	புத்திரனை	புத்திரரான
எ	கக	தனது	தமது
	[illegible]	மனே	மனச
கூ	கக	பாரு	பாரா
ய	உ0	மெனகிற	மென்ற
[illegible]	உகூ	கொண்டவனையும	கொண்டவனையுமிருப்பவனும
கய	உஉ	மகா	மகோ
கரு	கஉ	படாணின்ற	படாகின்ற
,,	கக	பரனையும	பரனையுமிருப்பவனும
	[illegible]	தனனுடைய	தமமுடைய
[illegible]	கஅ	ரிஷயே	ரிஷியே
[illegible]	கூ-கூ	சௌனகாதி ரோகஷி	(சௌனகாதி ரோகஷி)
[illegible]	கஎ	அககிரஷி	அகாஷி
	கஅ	காபபதி	காபபாதி
க	க[illegible]	காமபிரிய	காமபீரிய
[illegible]0	அ	ருபியாயாதி	ருபியாதி
[illegible]	உஅ	திவிலை	திவலை
			(மறறவிடததுமிவவாறே)
உ	கூ	சகா	சகர
	உஉ	துவி	துவீ
	[illegible]	யும	யுத
[illegible]	உஉ	உண்டாயிரறு	உண்டாயின
[illegible]ரு	உஉ	பவிஷயத	பவிஷ்யத
ரு	கஅ	றிவவாறறு	றிவவாறு
[illegible]ரு	உகூ	அவன	அவனை
சா	ரு	ஷை	ஷை
,,	க	ஓராகஷ	ஓரிராகஷ
[illegible]	உகூ	ஷிணபம	ஷிணபம
[illegible]	உஎ	மெயவது	மெயதுவது
சா0	கூகூ	வனும	வரும
[illegible]	கக	உமது	உனது
[illegible]ரு	கஎ	மாறறி	மாறறு
[illegible]	ரு	னீனறது	னீனறன
[illegible]அ	உகூ	துறகுண	தாககுண
[illegible]	[illegible]	திண	திக

3422